கம்பராமாயணப்

# அயோத்தியா காண்டம்

(சுருக்கம்)

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1927

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 14 அணா

5449a

Printed at the "Aurora Press," Madras.

# குறிப்பு

கம்பர் மகாகவி, கவிநயங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற உத்தமக் கவிஞர். அவருடைய புலமையை 'கல்வியிற் பெரியன் கம்பன்', 'கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்' என்னும் வாக்கியங்கள் புலப்படுத்தும். 'கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க் கிதயம் களியாதே' என்று ஒரு புலவர் சிறப்பித்துக் கூறினர். கற்றோரே நெடுங் காலமாய்க் கம்பரை அனுபவித்து ஆநந்தித்து வந்தனர். சர்வகலா சங்கத்தார் வருடந்தோறும் கம்பராமாயணத்தில் ஒவ்வொரு பகுதியைப் பாடமாக அமைத்து வந்தமையால், பி.ஏ., எம்.ஏ., வகுப்புக்களில் வாசிக்கும் மாணவரும் அக் கவிநயங்களை ஒரு சிறிது அறிந்துகொள்வாராயினர். இப்போது சில ஆண்டுகளாக 'ஸ்கூல் பைனல்' வகுப்பினரும் அதன் சுவையைச் சிறிது கண்டு வருகின்றனர்.

(2) கம்பராமாயணத்தை முற்றும் கற்றுணர விரும்பும் தமிழ் மாணவரும், ஸ்கூல் பைனல் வகுப்பில் வாசிக்கும் சிறுவரும் கம்பருடைய கவிநயங்களை ஒருவாறு உணருமாறு ஒவ்வொரு காண்டத்தையும் சுருக்கமாகத் தொகுத்து, கதைப் போக்கு விளங்குமாறு உரையிடை

யிட்டு வெளியிட வேண்டும் என்னும் நோக்கத்துடன் இரண்டு வருடங்களுக்குமுன் பால காண்டத்தை வெளியிட்டேன். அதனை ஸ்கூல் பைனல் வகுப்புக்களுக்குப் பாடமாக அமைத்த தலைமை உபாத்தியாயர்கட்கும், போதனு பாடசாலையில் எலிமென்டரி ஹையர், செகண்டரி என்னும் இரண்டு வகுப்பில் வாசிக்கும் உபாத்தியாயர்கட்கும் பாடமாக ஏற்படுத்திய துரைத்தன அதிகாரிகட்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாகின்றேன். முதற் காண்டத்தை ஆதரித்தது போல் இதையும் அன்னார் ஆதரிப்பார்களென்னும் நம்பிக்கையுடன் அயோத்தியா காண்டத்தையும் வெளியிடலானேன். அவ்வாறு ஆதரிப்பின் மாணாக்கர்கள், கம்பருடைய கவிநயங்களை உணர்ந்து கம்பராமாயணத்தை முற்றும் கற்றுணர அவாவுவர் என்பது எமது கருத்து.

(3) மாணவர் இந்நூலைத் தாமே படித்துணர அனுகூலமாகும்படி, பாட்டுக்களில் கடின சந்திகளைப் பிரித்தும், அனுபந்தமாகக் குறிப்புரை சேர்த்தும் வெளியிட்டிருக்கின்றேன்.

பதிப்பாசிரியன்.

# கம்பராமாயணம்

## (சுருக்கம்)

### அயோத்தியா காண்டம்

உலகம் யாவையும் தாம் உளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் ஆகிய இவற்றையே நீங்கலா அலகிலா விளையாட்டாக உடையவனும், அயர்வறும் அமரர்கட்கிறைவனும், அண்டங்கடந்த நெடுமுடியண்ணலும் ஆகிய திருநெடுமால் திருவிளையாட்டாக எடுத்த அவதாரங்கள் பத்தனுள் இராமாவதாரம் ஒன்று. அவ்வவதாரத்தில் அத் திருநெடுமால் கோசலநாட்டின் கண்ணதாகிய திருவயோத்தியில் சக்கரவர்த்தித் திருமகனாய் அவதாரஞ் செய்து, தான் அணிந்திருந்த சங்கமும் சக்கரமும் பள்ளியாகிய பாயலும் தன் இளையவர்களாய் வந்து அடிபரவும் வண்ணம் அமர்ந்திருந்தனர். அவ்வாறமர்ந்த சீராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன் என்னும் நால்வரில் சீராமனும் இலக்குவனும் நெய்குழலூறும் இழையேபோல் இணைபிரியாமல் திரி-

வாராயினர் ; பரதனும் இளவலும் ஒரு நொடிப்பொழுதும் பிரியாமல் மருவிவாழ்வா ராயினர். இவ்வாறு இச் சிறுவர்கள் நால்வரும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர். அவ்வாறு வளர்ந்து வரும் நாளில் ஒருநாள், தவச்சிரேட்டராகிய கோசிகமுனிவர் அயோத்தியை அடைந்து, தாம் தருவனத்து ளியற்றும் தவவேள்விக்கு இடையூறு புரியும் நிருதர்களை விலக்கற்குக் கரிய செம்மலாகிய சீராமனைத் தருதி என்று உயிரீர்க்குங் கொடுங்கூற்றெனத் தயரதனை வேண்டினர். அதுகேட்ட மன்னர் மன்னவன், 'கண்ணிலான் பெற்றிழந்தான்' எனக் கடுந்துயர் உழந்து, முனிபுங்கவனை நோக்கி, 'தவச்சிரேட்டரே! பணி இதுவாயின், சீராமன் சிறுவன், நிருதர் பெரியர், அவர் செய்யும் இடையூற்றுக்கு இடையூறுகப் பெருவேள்வியை யானே காப்பேன்; எழுந்தருள்க' என்று விடையிறுத்த வளவில், கோசிக முனிவர்க்கு அளவிலாக் கோபம் உதித்தது. விசுவாமித்திர முனிவரர்க்கு உதித்த கோபத்தைக் கண்ட வசிட்டமுனிவர், கோசிக முனிக்குச் சமாதானம் கூறிக் கரிய செம்மலைக் கோசிகமுனிவருடன் அனுப்பும்படி தசரதனுக்கு நற்புத்தி புகட்டினர். குருவின் வாசகம் கேட்ட கொற்றவன், 'திருவின் கேள்வனைக் கொணர்மின்' என்றனன். என்றலும், அறிவின் உம்பரான் அருகு சார்ந்தனன். அவ்வாறு சார்ந்த நம்பியைத் தயரதன் தம்பி தன்னொடும் முந்தை நான்மறை முனிக்குக் காட்டி, 'எந்தையே, இவர்க்கு நற்றந்தை நீ தனித் தாயும் நீ, இவர்களைக் கையடையாகத் தந்தனன், இயைந்த செய்க' என்ருன். நவைக்கண் நீங்கினேன், அவ் விரு மைந்தரையும் அழைத்துக் கொண்டு, சிந்தைமுந்து

எடுத்த சிற்றம்பிடுத்துத் தயாதனை இனிது வாழ்த்தி மேல் அடுத்த கேள்விபோய் நாம் முடித்தும், என்று நடத்தன் மேயினன். முனிவர் பெருமானின் வேள்வினை முற்றுவிக்கச் செல்லும் இராம லக்குமவர்கட்குத் தாடகை என்னும் அரக்கி வழியில் எதிர்ப்பட்டனள். சிராமன், முனிவர் கட்டளையை மேற்கொண்டு தாடகையை வதைத்து மேலே சென்று அம் முனிபுங்கவரின் வேள்வியை முற்றுவித்தனன். பின்னர், சனகன் செய்யும் பெரு வேள்வியைக் காண எழுந்த முனிபுங்கவர், சிராமன் இலக்குவன் ஆகிய இருவருடன் மிதிலையை நோக்கிச் செல்லுகையில், சிராமன், வழியில் கருங்கல்லாய்க் கிடந்த அகலிகை சாபத்தை நீக்கி, அவள் பண்டைய வண்ணத்தாளாம்படி செய்தனன். பின்னர் மூவரும் மிதிலையை எய்தி பெரு வேள்வியைக் கண்டு சாலமகிழ்வெய்தினர். பின்னர் சிராமன் வில்லிறுத்துச் சீதையை மணம்புணர்ந்து தந்தையுடன் அயோத்திக்கு மீளுங்கால், எதிர்ப்பட்ட பரசுராமரின் வில்லை இறுத்து மானபங்கம் செய்து, அயோத்திக்கு மீண்டமையும் பிறவும் பாலகாண்டத்திற் பெற்றும்.

அயோத்திக்கு மீண்டசக்கரவர்த்தி ஒருநாள் அத்தாணி மண்டபத்தை அடைந்து அரசரும் தன் சுற்றத்தவரும் பக்கமாகப் பெயர்க்குக எனக் கட்டளையிட்டு, ஒத்தநின்று உலகோம்பி யோகு செய்யுந் திருமால் போலத் தன்னந் தனியனாய் இமையவர் குருவை யேய்ந்த தன் மந்திரக் கிழவரை வருக என்று ஏவிய போது, மும்மைப் பெருந்தேவரில் நான்காவதாக எண்ணப்படுகின்ற வசிட்டபகவான் வர அவருக்கு இருக்கை உதவி வணங்கியிருந்தான், அப்போது,

## மந்திரப்படலம்

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பலனு மெய்தினார்
நலமுத னலிவினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினார் (1)

வேறு

உற்றது கொண்டு மேல்வந்
துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த
தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப்
பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மானம் நோக்கிற்
கவரிமா வனைய நீரார். (2)

தம்முயிர்க் குறுதி யெண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத்
தேற்றத்தர் தெரியுங் கால
மும்மையு முணர வல்லா
ரொருமையே மொழியு நீரார். (3)

வேறு

முறைமையி னெய்தினர் முந்தி யந்தமில்
அறிவனை வணங்கித்த மரசைக் கைதொழு
திறையிடை வரன்முறை யேறி யேற்றசொல்
துறையறி பெருமையா னருளுஞ் சூடினார். (4)

அன்னவ ரருளமைந் திருந்த வாண்டையின்
மன்னவ னவர்முக மரபி னோக்கினான்
உன்னிய தருட்பெற லுறுதி யொன்றுள
தென்னுணர் வனையநீ ரினிது கேட்கென. (5)

சக்கரவர்த்தி எழுந்தருளிய அத்தாணி மண்டபத்தில் இவ்வாறு அவனருள்பெற்று மந்திரிமா ரிருக்கையில், மன்னர் பெருமான் அவர் முகங்களை மரபின் நோக்கி, 'நான் எண்ணியுள்ள அரிய காரியம் ஒன்றுண்டு; என் அறிவினை யொப்பீர்! அதை இனிது கேண்மின்' என்று உரைப்பானாயினன், 'சூரியகுலத்தரசர்களின் செய்கையின் மாறுபடாது உங்கள் பெருங்குணத்தால் யான் வையமாண்ட வருடம் அறுபதினாயிரம். இப்படி ஆட்சி செய்து வந்த யான், என் ஆருயிர்க்கு உறுதியை நாடுகின்றேனாதலின் இனி இவ்வரசைத் தாங்க விரும்பேன். நம் குலத்தரசர்கள் தங்குலக் குமரரே கடைமுறை யுலகம் தாங்கப்போய் ஐம்புலத்தாறு கடந்து, துறவறமெய்திச் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்ததாகிய அந்தமில் வீட்டினை அடைந்தனர். விண் மண் பாதலம் என்னும் மூவகை யுலகும் வெற்றிகொண்ட யான், காமமாதி அறுவகைப் பகைவரால் வருந்துவேனோ? கைகேசி முட்கோல் கொள்ளக் கொடுங்கோபம் எய்திய அவுணர்களுடைய பத்துத் தேரையும் வென்றேற்கு இழுதையாகிய மன்மேறி நடத்தும் ஐம்புலத்தேரை அடர்த்து வெற்றி கொள்வது அருமையோ!' உலகின் கண்,

ஒட்டிய பகைஞர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்
தெட்டவ ரல்லரேற் செல்வ மீண்டெனை
விட்டவ ரல்லரேல் யாவர் வீடுளார். (6)

இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கு
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
அறப்பெனுந் தெப்பமே துணைசெ யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ. (7)

'இம்முறையைப் பின்பற்றாராயின் வீடுபேறடைந்தவர் யாவர் என்று சொல்வது? அத்தனிமையாகிய முத்திப் பெருஞ் செல்வத்தைத் துய்க்கும் கருத்து இவ்வுலகம் ஆண்டுவருங் களிப்பி லாழுமோ? உங்களை யான் தோழாராக உடைமையின் உலகமுழுதுஞ் செம்மையாகக் காத்தோம்பி நல்லறமுஞ் செய்தேன். இம்மையின் உதவிபுரிந்து நல்லிசையை நடத்திய நீர் அம்மையாகிய முத்திநலம் அளிப்பதற்கும் துணையாக வேண்டும். நானோ மகப்பே றில்லாமையால் வரம்பில் காலம் வருந்தினேன். இராமனோ அந் நோயை நீக்கத் தோன்றினான். இனி, அவன் வருந்த இவ்வரசபாரத்தை அவன் தோளிற் சுமத்தி, யான் உய்ந்துபோக வேண்டுகிறேன்.

பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாந்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமக னிறைகுணத் தவனி மாதெனு
மொருமகண் மணமுங்கண் டுவப்ப தாயினேன். (8)

சீராமபிரானுக்கு அரசை நல்கி, அவித்தையின் காரியமாகிய பிரபஞ்ச வாழ்க்கையைத் துறக்கவேண்டுகின்றேன். அதற்கு உங்கள் கருத்து யாதோ?' என்றனன்.

வேறு

திரண்ட தோளின னிப்படி செப்பலுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய உவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்.

சக்கரவர்த்தி புகன்றவைகளைக் கேட்ட மந்திரக் கிழவர், அரசன் எண்ணிய எண்ணம் தக்கதே எனத் தேறி வாளா விருந்தனர். வசிட்டபகவான் மந்திரக் கிழவர் கருத்தை உணர்ந்து, அரசன் கருத்தினை நெடிது ஆராய்ந்து, 'அரசர் பெருமானே! உன் குலத்தரசர் அனைவரும் அரசாண்டு புகழ் எய்தின ரல்லது யாவரே இராமனை மகனைப் பெற்றனர்? நல்வினை தொடர்ந்த யாகங்கள் யாவையுஞ் செய்து முடித்த பெரியோனே, நீ இனி அருந்தவஞ் செய்யவுந் தகும், அழகிய மேகலையை யணிந்த நிலமடந்தை உன்னை நீங்கிக் கண் இழவாதவளெனச் செய்யும், நீ, பெற்ற கழலை யணிந்த மகனாகிய சீராமன்.' நீ எண்ணியது கற்றுணர்ந்தோர் செய்ய வேண்டிய கடமையே யாகும். அறவொழுக்கமே நினைந்தனை' என்று சொல்ல,

புறத்து நாமொரு பொருளினிப் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லால்
பிறத்த தியாவையுங் காத்தவை பின்னின்று துடைக்குந்
திறத்து மூவருள் திருத்திய திருத்துமத் திறலோன். ()

நீ பெற்ற அருமந்த புதல்வனாகிய சீராமன் சிறப்பு இனையதாகும், என்று வசிட்ட முனிவரர் புகன்றனர். அதைக்கேட்ட தசரதன் சீராமனைப் பெற்றவன்றினும்,

அவன், பின்னுகன் பெருவில்லை ஒடித்தவன்றினும், பரசுராமனை வெற்றி கொண்டவன்றினும் பேருவகை எய்தி, கண்களினின்றும் இன்பக் கண்ணீர் பெருக நின்று 'இனியதே சொல்லினிர். நுமது கருணை பெற்ற எனக்கு யாது குறையுளது, நீர் இதஞ் சொல்லிவர எங்குலத்தரசர் அளவில் புகழ் எய்தி வந்தனர். அவ்வருள் எனக்கும் எய்திற்று' என்று சொல்லினன். தசரதன் கூறியவைகளைக் கேட்ட குற்றமற்ற பெருந் தவத்தையுடைய வசிட்ட பகவான் சிறிதும் உரையாடலனாயிருந்தான். மந்திரக் கிழவர் கருத்துகளெல்லாம் ஒன்றுபட்டிருப்பதையறிந்த சுமந்திரன் என்னும் முதன் மந்திரி சொல்வானாயினன், 'சீராமபிரானுக்கு அரசுறத்தரும் என்பதைநீர் துறக்கின்றீர் என்ற சொல் சுடுகின்றது. உமது குலத்தோர் மறத்தல் செய்தறியாத தருமத்தை மறப்பிப்பது வழக்கே யன்று. உலகத்தின்கண் அறத்தினும் மிக்கது யாது? யானைப் படையையுடைய அரசர்க்கும் நகரமாந்தர்க்கும், மந்திரக் கிழவர்க்கும் உள்ளம் முரசம் ஆர்க்கும்படி உமது முதன்மணிப் புதல்வனாகிய சீராமபிரானை முறையாலரசனுக்கிப் பின் உமக்கு அப்புறத்தில் அடுத்ததாகிய துறவற நெறியை மேற்கொள்ள வேண்டுகின்றோம்.'

என்ற வாசகஞ் சுமந்திர னியம்பலு மிறைவன்
நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டி
நின்று நின்றது செய்வது விரைவினி னீயே
சென்று கொண்டணை திருமகள் கொழுநனை யென்றான்

அலங்கன் மன்னனை யடிதொழு தவன்மன மனையான்
விலங்கன் மாளிகை வீதியில் விரைவொடு சென்றான்
தலங்க ளியாவையும் பெற்றன னெனத் தளிர்ப்பான்
பொலன்கொ டேரொடு மிராகவன் றிருமனை புக்கான்.

பெண்ணி னின்னுயிர் தன்னவ னுடன்பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலு மருங்கினி திருப்ப
அண்ண லாண்டிருந் தானமு தருநற வெனத்தன்
கண்ணு முள்ளமும் வண்டெனக் களிப்புறக் கண்டான்.

கண்டு கைதொழு தையவிக் கடலுடைக் கிழவன்
உண்டோர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன் பொருக்கென வெழுந்தான்
கொண்டல் போல்பவன் கொடிநெடுந் தேர்மிசைக் கொண்டான்.

புண்டரீகக்கட் புரவலனாகிய சீராமன் விரைந்தெழுந்து அச்சுமந்திரன் கொணர்ந்த தேரில் ஏறிக்கொண்டு முரசமார்ப்ப மாதரார் கைச்சங்கங் கழலச் சங்கவாத்தியந் தழங்க 'எங்கள் குறை இன்றுதான் முடியப் போகின்றது' என்று தேவர்கள் களிப்பென்னுங் கடலி லாழ்ந்தனர்.

ஆய தவ்வழி நிகழ்தர வாடவ ரெல்லாம்
தாயை முன்னிய கன்றென நின்றுயிர் தளிர்ப்பத்
தூய தம்பியுந் தானுமச் சுமந்திரன் றேர்மேற்
போய தங்குளிர் புரவல னிருந்துழிப் புக்கான். (15)

புரவலனிருந்த அத்தாணிமண்டப மடைந்த சீராமன் தன் தம்பியுடன் வசிட்டபகவானை முன்னே வரன் முறை வணங்கிப் பின்பு சக்கரவர்த்தி அடிகளையும் அன்போடு வணங்கி நின்றனன்.

நலங்கொண் மைந்தனைத் தழுவின
னென்பதென் னளிநீர்
நிலங்க டாங்குறு நிலையினை
நிலையிட நினைந்தான்

விலங்க லன்னதிண் டோளையு
மெய்த்திரு விருக்கு
மலங்கன் மார்பையுந் தனதுதோண்
மார்புகொண் டளந்தான். (16)

தசரதன், மகனை இருகையாலும் தழுவியணைத்து உச்சிமோந்து முத்தமிட்டு, அருகே யுட்காருவித்து அன்புடன் நோக்கி, 'மழுவாளியாகிய பரசுராமனது தோளாற்றலை வென்ற ஸ்ரீராமா! உன்னை யருமையாகப் பெற்றெடுத்து வளர்த்த நான், உன்னை வேண்டிக்கொள்வது ஒன்று உண்டு. அதாவது, இதுவரையும் மிக வருத்தப்பட்டேன். மூப்போ மிகக் கொடியதாக என்னை வருத்தியது, நானிதுவரையிலும் சுமந்துவந்த அரசபாரமுழுதும் நீயே பொறுத்து என்னைப் புனிதனாக்கவேண்டும்.

ஒருத்த லைப்பரத் தொருத்தலைப் பங்குவி னூர்தி
பொருத்தி னீங்குநின் றியல்வரக் குழைந்திட ருழக்கும்
வருத்த நீங்கியவ் வரம்பறு திருவினை மறுவும்
அருத்தி யுண்டெனக் கையவீ தருளிட வேண்டும். ()

என்று தயரதன் ஸ்ரீராமனை வேண்டிக் கொண்டனன்.

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லித்தில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்து
யாது கொற்றவ னேவின னதுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துதன் பணிதலை நின்றான். (18)

பிறகு சக்கரவர்த்தி தாசரதியின் சிந்தைத் துணிபை யறிந்து, 'எனக் கிவ்வரந் தரவேண்டும்' என்றுமீட்டும் மகனை உயிருறத் தழுவி, வேதமன்ன தன் மந்திரக்

கிழவருஞ் சூழ, மேருவுந் தனக்கு ஒவ்வாத இராச மாளிகையை அடைந்தான்.

தாசரதியும் அரசர் பலர் புடைசூழ நகரமாந்தர் தொடரத் தனது திருமாளிகையைச் சென்று சேர்ந்தான். சக்கரவர்த்தியோ, 'ஸ்ரீ ராமன் மணிமுடிபுனைவதைக் காண வெற்றி வேந்தரை வருக' என்று தன் இலச்சினையிட்ட முடங்கலைப் போக்கி, வசிட்டபகவானை நோக்கி, 'நமது ஸ்ரீராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்ய வேண்டுவனவற்றைச் சித்தஞ் செய்யவேண்டும்' என வேண்ட, வசிட்ட பகவானும் 'அவ்வாறே செய்கின்றேன்' என்று தேரேறி அந்தணர் கூட்டம் புடைசூழச் சென்று, சக்கரவர்த்தியின் ஆணையின் கடைத்தலையில் திறையோடு காத்திருக்கும் அரசரை நோக்கி, 'நமது இராமனுக்குத் திருவும் பூமியுஞ் சிந்தையிற் சிறந்தன' என்று கூறினார். கூறலும், அம்மன்னர் அச்சொல்லாகிய இனிய தேனை அருந்தினராக, யாவரும் முறைதடுமாறி நின்று ஆனந்தக் களிப்பிலழுந்தி, நிறைந்த நெஞ்சில் உவகையானது சென்று மயிர் வழி திமிர, உடலோடு விண்ணில் செல்பவரை யொத்து நின்றனர். யாவரும் ஒத்த சிந்தையுடையராய்த் தாமே அரசு பெற்றாற்போல் கூடி மகிழ்சிறந்து, சக்கரவர்த்தியை மும்முறை வணங்கி, 'இறைவனே! நீர் கொண்ட கருத்து நன்மையை விளைவிப்பதே' என்று அறிவிப்பாராயினர். 'இருபத்தொரு முறை எங்கள் குலங்களை வேரோடுங் களைந்த பரசுராமனை வெற்றிகொண்ட சேவகனுக்கு இவ்வரசு உரிமையாகக் கடவது! இது அறவொழுக்கமே', என்றும் கூறினர். இவ்வாறு மற்றை யரசரும் எடுத்துக் கூறவே, அதனை

மனத்திற் கொண்ட அரசர் பெருமான், 'அரசர்களே ! நான் என் மகன்பால் தலையளிகொண்டு மயங்கிக் கூற நீங்கள் யான் மகிழக் கூறியதோ அல்லது தகுதியாற் கூறியதோ சொல்லுங்கள்' என்று கேட்ப, அங்கிருந்த அரசர் கூட்டம் நின் மகனுக்கு அறிஞர் பலர் தத்தம் வரையிலும் தாங்கள் செய்தொழுகும் தலையளியைக் கேளுங்கள்.

தானமுந் தருமமுந் தகவுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையும்
மானவ வையநின் மகற்கு வைகலும்
ஈனமில் செல்வம்வந் தியைக வென்னவே. (19)

ஊருணி நிறையவு முதவு மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவுங்
கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றார்களியார். (20)

இவ்வாறு அரசர்கள் சொன்னசொற் கேட்ட தசரதன், மனத்தைச் சூழ்ந்து பொழிந்த பெருங்களி சிறந்தானாய்க் காதல் மிகுந்து இடர்கழிந்து, களிக்குஞ் சிந்தையனாய், ஆனந்தக் கண்ணீர் பொழிந்து சொல்வானாயினான் : 'நடுவு நிலையிலும் தருமத்திலும் செய்கையிலும் தீங்கைக்குறித்து வெறுத்தலிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்ட பெரியீர், என் மகன் என்று யான் சொல்வதென், அவன் நன்னெறிபற்றி ஒழுகலில் தவறெய்தின் உங்களதாகவு வேண்டும்' என்றிரந்து, அரசரை யெல்லாம் அவரவர் விடுதிக்கனுப்பி விட்டு, மகுடாபிஷேகத்திற் குரிய நாளை நிச்சயஞ் செய்வதிற் பொழுது போக்குவானாய், சோதிடநூல்

நன்கு தெரிந்த சேர்டினை வருவித்து, ஒரு தனி மண்டபத்திற் புகுந்து, ஆலோசிக்கத் தொடங்கினன்.

அரசன் இவ்வாறு ஆலோசனை செய்துகொண் டிருக்கையில், நான்கு மாதர் சென்று நின்றதைத் தன்- பாகக் கொண்டல் வண்ணனாகிய ஸ்ரீராமனைப் பயந்த கோசலை கண்டு, 'நீங்கள் வந்த கோலங் கண்டால் சந்தோஷ சம்பந்தமான செய்தியா யிருக்கின்றது, சொல்லுங்கள்' என, அதற்கம் மாதர்கள் சொல்லா ராயினர், 'பல அரசரும் வந்து வணங்கப் பலநாளும் பாரை யளிக்கவேண்டுமென்று உன் மைந்தனாகிய ஸ்ரீராமனை உலகமுழுது முடைய இறைவன் தொன்று தொட்டு வந்த மகுடத்தைச் சூட்டப் போகின்றான்- இதுதான் நாங்களறிந்த செய்தி' என்று மிகக் களிப்- புடன் சொல்லினர்.

உலகமுழுதும் ஆளும் பெருஞ் செல்வம் தன் மகன் எய்துவ னென்றதனால் உவகைக் கடலி லழுந்- தியும், மன்னவர் பிரிவை நோக்கி வடவைக் கனல்போல் வருந்தியும், விலை யுயர்ந்த முத்துமாலைகளையும் பொருட் குவியலையும் அவர்க ளுவப்பக் கொடுத்து, தன் காதன் மிகுந்த சுமித்திரையோடுஞ் சென்று ஆயிரமோலி அமலனுதிப்பிரா னெழுந்தருளிய பிரணவ விமானத்தை யடைந்து பூந்தாமரை யாளும்பூமகளென்னுந் தேவியர் இருமருங்கிருப்பத் தேவர்கள் யாவர்க்கும் ஆவியு மறிவு முதலாகிய இறைவனது வாவியின் மலர்ந்த தாமரைப் பாதங்களை வணங்கி, 'என்னிடந் தோன்றிய மகனுக்கு. இனியருள் செய்வது உன்னிடத்தது' என்று சொல்லி எத்தி அத்திருமகள் கேள்வனுக்கு வேத சம்பந்தமான பூசனை புரிந்து, அங்குள்ள மெய் யுணர்ந்தார்க் கெல்லாம்

கன்றையுடைய பசுவைத் தானமாகக் கடல்போலளித்துப் பிராமணர்களுக்குச் சுவர்ணதானமும் நவமணித்-தானமும் கன்னிகாதானமும் பூதானமும் பெருகக் கொடுத்து, அன்னதானமும் அன்பாய்ச் செய்து, மீண்டும் இறைவனை வணங்கி, விமானத்தை வலம் வந்துபலநோன்புகள் செய்யலாயினள். இங்ஙிவ்வாறாக, அரசன்,

### மந்தரை சூழ்ச்சி

கடிகமழ் தாரினுன் கணித மாக்களை
முடிவுற நோக்கியோர் முதன்மை கூறிப்பின்
வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை கடிகைநாண் மொழிமி னென்றனன். (21)

பொருந்துநா ளுளைநின் புதல்வற் கென்றனர்
திருந்தில ரன்னசொற் கேட்ட செய்கழற்
பெருந்திண்மா வியானையான் பிழைப்பில் செய்தவம்
வருந்தினுன் வருகென வசிட்ட னெய்தினுன். (22)

அரசன் விரும்பிய வண்ணம் வசிட்ட முனிவரர் வர, தயரதன் 'குரு சிரேட்டரே நமது சீராமனுக்கு நன்மை யமைந்த மங்கலநாள் நாளையே யெனக் கணித நூல் வல்லார் கணித்தனர், ஆகலின் இங்கு வேண்டுவனவற்றை விரைவினிற் செய்து அவற்கு உண்மையான உறுதிகளையும் சொல்ல வேண்டுகின்றேன்' என்று வணங்கிக் கேட்டுக் கொண்டனன். முனிவரரும் அரசன் வேண்டுகோட்கிரங்கி சீராமன் தங்கியிருக்கும் மாளிகையின் வாயிலையடைந்தனர். சீராமனும் முனிவர் பெருமானை, எதிர்கொண் டழைத்துத் தன் மாளிகையைச் சேர்ந்தனன். வசிட்டமுனிவரர் சீராமனை

நோக்கி, 'ஸ்ரீராமா உன்பாற் பரிவுமிக்க நமதரசன் இக் கடலிட முழுவதும் நினக்கு நாளையே தரப்போகின்றான்' என்று சொல்லி, 'யான் உனக்குச் சொல்லும் உறுதிப் பொருள் ஒன்றுண்டு. அதைக்கேட்டு கடைப் பிடிக்கவேண்டும்,' என்று சொல்வாராயினர்.

வேறு

கரிய மாலினுங் கண்ணுத லானினு
முரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோ ரைந்தினு மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால். (23)

அந்த ணாளர் முனியவு மாங்கவர்
சிந்தை யாலருள் செய்யவுந் தேவரில்
நொந்து ளாரையு நொய்துயர்ந் தாரையு
மைந்த வெண்ண வரம்புமுண் டாங்கொலோ. ()

அனைய ராதலி னையவிவ் வெய்யதீ
வினையி னீங்கிய மேலவர் தாளினைப்
புனையுஞ் சென்னியை யாய்ப்புகழ்ந் தேத்துதி
இனிய கூறிநின் றேயின செய்தியால். (25)

ஆவ தற்கு மழிவதற் கும்மவர்
ஏவ நிற்கும் விதியுமென் றுலினி
யாவ தெப்பொரு ளிம்மையு மம்மையுந்
தேவ ரைப்பர வுந்துணை சீர்த்ததே. (26)

உருளு நேமியு மொண்கவ ரெஃகமும்
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபின் னுவதுண் டாகுமோ. (27)

சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கேது மூல மவையென வோர்தியே. (28)

யாரொ டும்பகை கொள்ளில னென்றபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல்செல் லாதது தந்தபின்
வேரொ டுங்கெடல் வேண்டலுண் டாகுமோ. ()

கோளு மைம்பொறி யுங்குறை யப்பொருள்
நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின்
ஆளு மவ்வர சேயர சன்னது
வாளின் மேல்வரு மாதவ மைந்தனே. (30)

உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பில் நாட்டமோ ரெட்டுடை யானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே. (31)

என்பு தோலுடை யார்க்குமி லார்க்குந்தம்
வன்ப கைப்புலன் மாசற மாய்ப்பதென்
முன்பு பின்பின்றி மூவுல கத்தினும்
அன்பி னல்லதோ ராக்கமுண் டாகுமோ. (32)

வைய மன்னுயி ராகவம் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ. ()

இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையன் றாயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனின்
அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ. (34)

நீல மல்லன நீக்கிச்செம் பொற்றலைத்
தால மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாங்கொலோ. (35)

தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே. (36)

என்பனவாகிய நீதிகளை யெல்லாம் வசிட்டமுனிவர், உலகமுண்ட பெருவாயனுக்கு அறிவுறுத்தி, அவ்விராகவனோடும் ஆயிரமோலி அமலனுதிப்பிரான் கோயிலை யணைந்து, அங்கெழுந்தருளிய பரம்பொருளை வேதவிதிப்படி திருமஞ்சனமாட்டி, அறிவுடையோரால் கொள்ளப்படும் சற்கருமம் அனைத்துஞ் செய்து, வெண்ணிறமுள்ள தருப்பையை விரித்து, அதன்மேற் காகுத்த வம்சோத்தாரனை இருக்கச் செய்து, தான் அரசர் பெருமானுக்கு அறிவித்துச் சென்றான். அதைக்கேட்டுத் தசரதனும் தன் நகரத்தை அலங்கரிக்கக் கட்டளையிடவே, வள்ளுவன், 'நமது ஸ்ரீராமபிரான் நிலமடந்தை நாயகனாக நாளையே மகுடாபிஷேகஞ் செய்து கொள்ளப் போகின்றான்' என்று தேவர்களும் மகிழ்வெய்தும்படி அந் நகரமுழுதும் திரிந்து பறையறைந்தான். புலவர் பலராலும் கூறப்-

படும் வலியமைந்த புகழினையுடைய சீராகவபிரான் நாளையே புவிக்கரசனெனப் பொலிவா னென்றசொல் செவிக் கமுதமாக விளங்குவதேனும் தேவர்களின் அவியமுதமாக விளங்கி அந்நகரமாந்தர்கட் கெல்லாம் இன்பம் பயந்தது. நகரமாந்தரிற் சிலர் ஆரவாரித்தனர், களிப்படைந்தனர், ஆடிப்பாடி நின்றனர், வேர்த்தனர், உடல் பூரித்தனர், மெய்ம் மயிர் பொடித்தனர். சக்கரவர்த்தியைப் புகழ்ந்து வாழ்த்தினர். இச் சுபசெய்தி சொன்னவர்கட் கெல்லாம் நீணிதியைத் தூர்த்தனர். மிக்க ஒளியுள்ள சூரியனைத் திருத்துவது போலவும், அக் கள்ள மாயப்பிரான் மார்பிற் கிடந்து இலங்கும் கவுத்துவமணியை வேகடம் செய்வதுபோலவும், அந் நகரினை, வாழை கமுகு நட்டு, முத்து மாலை நாற்றிப், பூரணகும்பம் வைத்து, மகரதோரணந் தொடுத்துப் பவளத் தூணில் திரைச் சீலையிட்டு, அலங்கரித்தனர்.

குதிரை கட்டிய தேர்க் கூட்டங்கள் நிலவுலகத்தைக் காண விண்ணுலகத்தினின்றும் இழிந்த விமானம்போல் தோன்றின ; நெற்றிப்பட்டம் அசைகின்ற யானைகள் உதயமலையானது சூரியனோடு திரிவதுபோல விளங்கின. இவ்வாறு அவ்வயோத்திமா நகரத்தின் அலங்காரம் பொன்னுடைன்று தோன்றுகையில் உலகத்திற்கே துன்பஞ் செய்துவரும் இராவணன்செய்த தீமையனைத்தும் ஒரு வடிவம் கொண்டது போல் பொருந்துதலருமையான கொடிய மனமுள்ள மந்தரை என்னும் கூனி நெஞ்சு துடிக்கக் கோபமீக் கொண்டு வருந்திய மனமுடையவளாய்க் கண்சிவந்து கொடுஞ்சொற் பேசிக் கொண்டு மூன்று உலகத்திற்கும் ஒரு துன்பம் மூட்டு-

கிற்பாளாய்க் கேகய நாட்டரசன் மகளாகிய கைகேசி-யின் திருமாளிகையை அடைந்து,

நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடற் தாடனை விரைவி னெய்தினாள். (37)

கைகேசி பஞ்சணையிற் கண்ணுறங்கிக் கிடப்பதை யறிந்து அவள் சீறடியைத் தன் கையால் வருடி நின்றனள். கைகேசி உடனே நித்திரை நீங்காதிருக்கக் கூனி தான்கொண்ட பெரும்பழி முடிக்கும் சொற்களைச் சொல்லத் துணிந்து, 'விடப்பாம்பு தன்னைப் பிடிக்க நெருங்கியகாலத்தும் குணம் கெடாமல் விளங்கும் குளிர்ந்த சந்திரனேபோலப் பேரிடர் உன்னைப் பிணிக்க வரவும் நீ அதை எண்ணி வருந்தாமல் உறங்கலாமோ?' என்று சொல்லி நின்றனள்.

வெவ்விட மனையவள் விளம்ப வேற்கணாள்
தெவ்வடு சிலைக்கையென் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறு மறந்தி றம்பலர்
வெவ்விட ரெனக்குவந் தடுப்ப தீண்டென்றாள். (38)

பாரவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள். (39)

ஆழ்ந்த பேரன்பினா ளனைய கூறலும்
சூழ்ந்தத் தீவினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலந் திருவும் வீழ்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள். (40)

கூனி சொல்லியதைக்கேட்ட கைகேசி, 'என் மண மகன் உலகமுழுதாளும் மன்னர் மன்னனே யாயினன்; சொல்லரும் புகழ்படைத்த பரதன் என் மகனாயினன். இவ் வுலகத்தில் அக்கோசலைக்கு என்னினும் மிக்க வாழ்வு யாதுளது?' என்று சொல்லினள். இதைக் கேட்ட கூனியோ,

ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் வீதெனச் சொல்லினாள். (41)

இச் சொல்லைக் கேட்ட கைகேசி மனமும் வெற்றி யமைந்த கோசலை மனமும் ஒத்திருந்தன. இம்மாதின் உள்ளம் அக்காலவரையில் தசரதன் உள்ளத்தை ஒத்திருந்தலின் அவள் உள்ளம் வேறுபாடெய்தா திருந்தது. கைகேசியி னுள்ளம் பேரன்பென்னும் கடல் பொங்கி அதிகரிப்பவும், பூர்ணசந்திரன் போன்ற முகம் பொலிவெய்தவும் உவகையிலழுந்தி எவ்வகைச் சுடர்கட்கும் நாயகம் போல்வதோர் மாமணி மாலையை, 'நாளை இராகவன் மணிமுடி புனைவான்' என்னும் சுபசேதி சொல்லிய கூனிக்குப் பரிசாக அளித்தாள். அதைக் கண்ட மந்தரை, கைகேசியை நோக்கி அதட்டி, முறு முறுத்து, கோப நகைசெய்து வைது, நெட்டுயிர்ப் பெறிந்து, அழுது புரண்டு தனக்களித்த மாலையாற் பூமியைக் குழிசெய்து,

வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியப்
பேதையைப் பித்திநிற் பிறந்த சேயொடும்
நீதுயர் படுகநா னெடிதுன் மாற்றவள்
தாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள். (42)

"சிவந்த வாயையுடைய சீதையும் சீராமனும் சிறந்த சிங்காதனத்திலிருக்க, உன் மகன் பரதன் பயனற்றவனாய் வெறு நிலத்திருக்கையாய் அமைந்தபோது நீ உவந்தவாறு என்னே! இதற்குறுதிப் பொருள் என்ன ?' என்று வினவினள்.

'கோசலைக்கு உறுதியளிக்கும் மகனாகிய சீராமன் சிறந்த செல்வத்துட் செல்வமடைந்தான்; பரதனோ பிறந்தும் பிறவாதவனாயினன், நீ பெற்றதனால்' என்று சொல்லிப் பின்னும் சீராமன் தன் தம்பியுடன் இவ்வுலகத்தை அளித்து வருவானாயின் அளவில் காலம் பரதனும் சத்துருக்கனும் இந்நகரை நீங்கிச் சென்று மாதவம் செய்யப்போவது நல்லது. ஆயினும் மதயானைபோல்பவனாகிய பரதன் நிலமகள் மகிழ அரசாண்டு வரும் அரசர் வரிசையின் மதிக்கப் பிறந்திலன், இதைப்பார்க்கிலும் அவன் இறப்பதே நல்லது. மேலும் வேறொன்று எனக்குப் புலப்படுகின்றது. நல்வினை செய்தறியாத பரதனை நமது சக்கரவர்த்தி, அன்று தன் ஆணையால் தேக்கமரஞ் செறிந்த மலைவழியைக் கடந்து வெகு தூரமுள்ள கேகய நாட்டுக்கு அனுப்பிவிட்ட செய்தி இப்போது தான் தெரியவந்தது' உன்னை நெடுந்தூரம் செல்லச் செய்தமையால் தந்தையுங் கொடியன் உன்னைப் பெற்ற கைகேசியும் அறக்கொடியள் எந்தாய் பரதனே, நீ என்ன செய்வையோ' என்று கூவி, கைகேசியை நோக்கி, 'அரசர் குலத்திற் பிறந்து தன் அரசர் வீட்டில் வளர்ந்து, அரசர் குடியிலே புகுந்து பேரரசியெனச் சொல்லக்கிடந்த நீ, கரையிடற்கரிய பெருந்துயர்க்கடலில் வீழ்கின்றனை; நான் சொல்வ-

தைச் சிறிதும் கேட்டாயில்லை. உனக்குச் சிறிதும் தெரியவில்லையே' என்று சொல்லினள்.

வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய்க னற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்
கேகை யர்க்கிறை திருமகள் கிளரிள வரிகள்
தோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும்.

வெயின்மு றைக்குலக் கதிரவன் முதலிய மேலோர்
உயிர்மு தற்பொரு டிறம்பினு முறைதிறம் பாதோர்
மயின்மு றைக்குலத் துரிமையை மனுமுதல் மரபைச்
செயிரு றப்புலச் சிந்தையா லென்சொனாய் தீயோய். ()

எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
றனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய். ()

கைகேசி இவ்வாறு கடுகடுத்துச் சொல்லக் கேட்டும் கூனி அஞ்சி அகலாமலே நின்று, 'உனக்கு உறுதிப்பொருளை உணர்த்துவது ஒழியேன்' என்று அவளடியில் வீழ்ந்திறைஞ்சிச் சொல்லுகின்றாள், 'அரசு மூத்தவர்க்கு என்னும் முறைமையைப் பார்த்தால் இவ்வுலகங் காத்துவந்த சக்கரவர்த்திக்கு இளையவனன்றோ கடல்போலும் நிறத்தையுடைய ஸ்ரீராமன், அரசன் யாவரும் வந்து வணங்கும் நீண்முடி அவனுக்கு அணிய இசைந்தா னென்றால் பரதனை அச்செல்வத்தினின்றும் விலக்குவது எவ்வண்ணம் முடியும்?

அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
மறநி ரைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறந்து றும்படி யியற்றுவ ரிடையறா வின்னல். (46)

தன் மகனுக்கே அரசென்றால் பூமண்டலவாதிக்க முழு-
தும் கோசலைக்குடைமையே யல்லது வேறன்று. ஆத-
லால் உன் மகனுக்கும் உனக்கும் இப்பூமியினிடத்தே
அவளுதவிய ஒரு பொருளல்லது உரிமையுள்ள தெது?
துன்பமும் வறுமையும் தொடர்ந்திடத் துன்பத்தால்
வருந்திக் கேட்டவர்க்கு வேண்டிய பொருள்களை அவளை
வேண்டிக் கேட்டுக் கொடுப்பையோ? கோபிப்பையோ?
துன்பத்தினால் வருந்தி மாண்டுபோவையோ? மறுப்-
பையோ? எவ்வாறு உயிர் வாழ்வை? மனச்செயலாற்
றினைந் தொழிந்தனை? இனிச் சிலநாளில் தத்தமில்லா
மையும் எளிமையும் உன்னைக்கொண்டு தவிர்க்க உன்
தந்தையும் உறவினரும் பிறரும் உன்னைவந்து காண
எண்ணினால் அவர்கள் உன் மாற்றவள் செல்வத்தையோ
கண்டு மகிழவேண்டும். நல்லது உன் கணவனுக் கஞ்-
சியே சீதைக்குத் தந்தையாகிய சனகராசன், உன் தந்
தையாகிய உதாசித்தோடு போர் செய்யாம லிருக்கின்-
றனன். இனி அவனுக்கு வாழ்வாவது எவ்வாறுகிடைக்
கும்? பழி யெய்தப் பிறந்தார் உன்னளவு யாரிருக்
கின்றனர்? உன் பிதாவிற்குப் பல பகைவ ரிருக்கின்-
றனர். அவர் பகைத்தெழுந்தால் உன் தந்தைக் குதவி
சிறிதேனு மில்லை. அவன் எவ்வாறு வெற்றி யடை
வான்? நீயோ சுற்றத்தை அவலமாக்கித் துயர்க்கடலி
லழுத்தப் பிறந்தனை?' என்று புகன்ற தோடமையாது,
மந்தரை

கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரெலா முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த போர சவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள். ()

தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றநல் வரவுண்மை யாலும்
ஆய வந்தணா ரியற்றிய வருந்தவத் தாலும். (48)

அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்க மின்மையன் றேவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே. ()

அனைய தன்மைய ளாகிய கைகய னன்னம்
வினைநி ரம்பிய கூனியை விரும்பினை நோக்கி
எனையு வந்தனை யினியையென் மகனுக்கு மனையான்
புனையு நீண்முடி பெறும்படி புகலுதி யென்றாள். (50)

நாடி யொன்றுனக் குரைசெய்வே னளிர்மணி நகையாய்
தேடி வர்ந்தார்ச் சம்பரன் தொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டும்
கோடி யென்றன ளுள்ளமுங் கோடிய கொடியாள். (51)

சம்பராசுர யுத்தம் நடந்த அந்நாளில் நீ அரசனுக்கு ரதசாரத்தியம் செய்யச் சமைந்தாய், அப்போது அரசன் உனக்கு இரண்டுவரங்கள் கொடுத்திருந்தா னல்லவா? அவ்வர மிரண்டில் ஒன்றால் இராமன் பதினான்கு ஆண்டு காடுறை வாழ்க்கையனாகவும் மற்றொன்றால் உன்மகன் பதினான்கு உலகமும் ஆண்டுவரும் நாடுறை வாழ்க்கையனாகவும் இருக்கும் உபாயத்தைத் தேடவேண்டும் ; இதுதான் உபாயம்' என்றெடுத்துச் சொல்லினள்.

உரைத்த கூனியை யுவந்தன ளுயிருறத் தழுவி
நிரைத்த மாமணி யாரமு நிதியமு நீட்டி
இரைத்த வேலைசூ ழுலகமென் னொருமகற் கீந்தாய்
தரைக்கு நாயகன் றானினி நீயெனத் தணியா. (52)

நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டல்
அன்று கானத்தி லிராமனைத் துரத்தலிவ் விரண்டும்
அன்ற தாமெனி லரசன்முன் னுருயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென்யான் போதிநீ யென்றாள்.

கூனி சென்றபிறகு கைகேசி, மலர்ப்படுக்கையி-னின்று மிழிந்து, தன் கூந்தலிற் செருகிய மாலையைச் சிதைத்து, தான் அணிந்திருந்த மேகலாபரணத்தைச் சிதறி, கைவளை துறந்து வாணுதற் றிலகத்தை யழித்து, இரத்தினுபரணங்களைக் கழற்றியெறிந்து, மையுண்ட-கண்ணின் அஞ்சனங்கான்றிட அழுது பூவுதிர்ந்த கொம்பெனப்பூமியிற் புரண்டு வீழ்ந்திருந்தாள். இவள் இவ்வாறிருக்க நள்ளிரவாகியவுடன் தசரதன் கைகேசி யிருக்கும் மாளிகையை யடைந்து இவள் இருக்கும் நிலைமையைக்கண்டு, 'உனக்கு வந்து நேர்ந்த துன்பம் யாது' என்று மனஞ்சோர்ந்து மானையெடுத்தணைக்கும் யானைபோலத் தன் கைகளால் தழுவி யெடுக்க, கைகேசியும் தன் கைகளால் அவ்வரசன் கைகளை நீக்கி, மீண்டும் மின்துவள்வதுபோல மண்ணில் வீழ்ந்-தயர்ந்து, ஒன்றும் பேசாளாய் நெட்டுயிர்ப் பெறிந்-திருந்தனள். இதைக்கண்ட அரசன் பயந்து, 'உனக்கு நேர்ந்ததைச் சொல், சொன்ன பிறகு என் செயலைப் பார்' என்று சொல்லக் கைகேசியும் அரசன் முன்னே தன் இரண்டு கண்களுநம் நீர் பெருகி ஒழுக 'என்னிடத்தில் உனக்கு அருளுண்டாயிருக்குமாயின் முன் எனக்-

குக் கொடுத்திருந்த வரங்களிரண்டுந் தரவேண்டும்'
என்று கேட்டனள்.

### கைகேசி சூழ்வினை

கள்ளவிழ் கோதை கருத்து ணர்ந்த மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கான்
உள்ள முவந்துள செய்வ னொன்றும் லோபேன்
வள்ள லிராமனுன் மைந்த னாணை யென்றான். (54)

ஏயவ ரங்க ளிரண்டி னொன்றி னாலென்
சேயபா சாள்வது நீசை கேள்வ னொன்றால்
போயவன மாள்வ தெனப்பு கன்று நின்றாள்
தீயவை யாவையி னுஞ்சி றந்த தீயாள். (55)

நாக மெனுங்கொடி யாட னாவி னீந்த
சோக விடந்தொட ரத்து ணுக்க மெய்தா
ஆக மடங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான். (56)

பூதல முற்றுத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்து வெந்து கொல்லன்
ஊதுலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான். (57)

மேவி நிலத்தி லிருக்கு விம்மும் வீழும்
ஓவிய மென்ன வுயிர்ப்ப டங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றி யெற்ற வெண்ணும்
ஆவி பதைக்க வலக்க ணெய்தி நின்றான். (58)

பெண்ணென வுட்கும் பெரும்ப ழிக்கு நாணும்
உண்ணிறை வெப்பொ டுயிர்த் துயிர்த்து லாவும்
கண்ணினி னேக்கு மயிர்க்கு மிக்க கைவேல்
புண்ணுழை தைக்க வுழைக்கு மானை போல்வான். ()

அஞ்சல ளையன தல்லல் கண்டு முள்ளம்
நஞ்சில ஞணில ளொன்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மென்றே
தஞ்சென மாதரை யுள்ள லார்கள் தக்கோர் (60)

இவ்வாறு அரசன் வருந்தக்கண்ட கைகேசியோ சிறிதும் அஞ்சா நெஞ்சு படைத்து நாணமின்றி யிருக்க, அவளை நோக்கிச் சக்கரவர்த்தியும் நல்லுணர்ச்சி தலைக்கூடி, 'உனக்குப் பொய்நிலையோர் புணர்த்திய வஞ்சமுண்டோ? அதனை என் ஆணை சொல்ல வேண்டும்' என்றான்.

திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோர்
இசைத்தது மில்லை முனிந்த விவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரி னின்று கொள்வே னன்றேல்
வசைத்திற னின்வயின் வைத்து மாள்வ னென்றாள்.

இந்த நெடுஞ்சொலவ் வேழை கூறு முன்னே
வெந்த கொடும்புணில் வேலு ழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்த யர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறி லாத மன்னன். (62)

ஆகொடி யாயெனு மாவி காலு மந்தோ
ஓகொடி தேயற மென்னு முண்மை யொன்றும்
சாக வெனுவெழு மெய்த ளாடி வீழும்
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான். (63)

நாரிய ரில்லையிஞ் ஞால மெங்கு மெனக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரிய ரெண்ணிடை வீழ்வெ னென்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான். (64)

இவ்வாறு மனம் வருந்தி சக்கரவர்த்தி ஆவிசோர்ந் தயர்ந்து நாம் கொடுந்தொழில் மேற்கொண்டு வெட்டத் துணிவதிலும் இரந்து கோடலே நல்லதென்று துணிந்து அவள் கால்மேல் வீழ்ந்து வேண்டிக்கொள்வான்.

கொள்ளா ணின்சே யிவ்வர சன்னான் கொண்டாலும்
நள்ளா திந்த நானிலம் ஞாலந் தனிலென்றும்
உள்ளா ரெல்லா மோத வுவக்கும் புகழ்கொள்ளாய்
எள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றான்.

வானோர் கொள்ளார் மண்ணவ ருய்யா ரினிமற்றென்
னனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள விசைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குந் தரையென்றான். (66)

கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்றும் மறவென்றான்.

வாய்தந் தேனென் றேனினி யானோ வதுமாற்றேன்
நோய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை யிரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தீயு நீயிது செய்தாற் பிழையாமோ. (68)

இன்னே யின்னே பன்னி யிரந்தா னிகல்வேந்தன்
தன்னே ரில்லாத் தீயவ ளுள்ளந் தடுமாறாள்
முன்னே தந்தா யிவ்வர நல்காய் முனிவாயேல்
என்னே மனனு யாருளர் வாய்மைக் கினியென்றாள். ()

அச்சொற் கேளா வாவி புழுங்கா வயர்கின்றான்
பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன் பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு வன்றோ வெனநாணா
முச்சற் றார்போற் பின்னு மிருந்தே மொழிகின்றான்.()

நின்மக னாள்வா னீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றேன்
என்மக னென்க ணென்னுயி ரெல்லா வுயிர்கட்கும்
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்றான். (71)

மெய்யே யென்றன் வேரற நூறும் வினைநோக்கி
நையா நின்றே னவு முலர்ந்தே னளினம்போல்
கையா னின்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானேல்
உய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான். (72)

இரந்தான் சொல்லு மின்னுரை
கொள்ளாள் முனி வெஞ்சாள்
மரந்தா னென்னு நெஞ்சின
ளுள்ளாள் வசைபாராள்
சரந்தா வில்லாய் தந்து
வரத்தைத் தவிர்கென்றல்
உரந்தா னல்லா னல்லற
மாமோ வுரையென்றாள். (73)

கொடியவளாகிய கைகேசி சொல்லிய வார்த்தை-யைக் கேட்டு முடி சூடாமல் நெருங்கிய காட்டி-னிடத்தே உண்மையாகச் சீராமன் நீங்குவானாயின் என் ஆவி நீங்குமென்று இடியேறுண்ட மலைபோல் மண்ணிடை வீழ்ந்து துன்பக் கடற்கோர் எல்லை காணுதானுய்க் கைகேசி சொன்ன கொடுஞ்சொற்கு, உள்ளம் புழுங்கி, உலகத்தில்,

ஒன்றா நின்ற வாருயி ரோடு முயிர்கேள்வன்
பொன்றா முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லால்
இன்றோர் காறு மெல்வளை யார்தம் மிறையோரைக்
கொன்றா ரில்லை கொல்லுதி யோநீ கொடியாளே. (74)

ஏவம் பாரா யின்முறை நோக்கா யறமெண்ணாய்
ஆவென் பாயோ வல்லை மனத்தா லருள்கொன்றாய்
நாவம் பாலென் னாருயி ருண்டா யினிஞாலம்
பாவம் பாரா தின்னுயிர் கொள்ளப் படுகின்றாய். (75)

ஒண்பா லோவா நாண்மட மச்ச மிவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பா னணுகாரே
ஆண்பா லாரே பெண்பா லாரோ டைவம்மா. (76)

மண்ணாள் கின்றா ராகி வலத்தான் மதியால்வைத்
தெண்ணா நின்றார் யாரையு மெல்லா விகலாலும்
விண்ணோர் காறும் வென்ற வெனக்கென் மனைவாழும்
பெண்ணால் வந்த தந்தர மென்னப் பெறுவேனோ. (77)

என்று நினைப்பான் இடரிலாழ்வான்; ஒன்றோ டொன்றொவ்வாத துன்பத்திலாழ்வான். இவனுக்கு உயிருண்டோ இன்றோ என்று சொல்லும் வண்ணம் மயங்கி இடிவான். இவ்வாறு தயாதன் துன்பமெய்திக் கிடந்து புரள்கையில்,

அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தா லென்னா மென்றனள் பாயுங் கனலேபோல்
எரிந்தே றாதே யின்னுயி ருண்ணா மெரியன்னாள். (78)

வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்னு மிடல்வேந்தன்
ஈந்தே னீந்தே னிவ்வர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுல கா[ள்]வென் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடு நெடிதென்றான். (79)

இவ்வாறு சக்கரவர்த்தி கைகேசி கேட்ட வரங்களைக் கொடுத்து, துயரத்தினால் வருந்திக் கிடந்தனன். கைகேசி தன் கருத்து முடிந்ததென்னும் உவகையோடும் துயில் கொண்டனள்.

சேணு லாவிய நாளெ லாமுயி
ரொன்று போல்வன செய்துபின்
ஏணு லாவிய தோளி னானிட
ரெய்த வொன்று மிரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல்
கண்டு மைந்தர் முனிற்கவும்
நாணி னாளென வேகி னாளிர்
கங்கு லாகிய நங்கையே. (80)

இரவு கழிந்தது. அதைக் குறிக்கப் பேரிகை அதிர்ந்தன. அவ் வொலியை மாரிக்காலம் கண்டு மகிழும் மயிற் கூட்டம்போல மாதர்கேட்டு மகிழ்வெய்தினர். தன்குல நன்மையும் போயடங்கப் பெரும்பழி மேற்கொண்டு, அரிய புகழைக் கெடுக்கும் அக்கொடிய கைகேசியின் செயலைக்கண்டு, சிறந்த கற்பின் நலம் அமைந்த மாதர்கள் வாயடங்கினாற்போலக் குமுதமலர் வாய்மூடிக்கொண்டன. ஆடவரோ, ஆழியானாகிய சிராமன் முடிசூடுகின்ற பகற் போதிற்கு இடையாக நின்ற பாவியாகிய இரவு நமக்கு ஓரூழி காலம்போலத் தோன்றுகிறதென்றும், திருமகளும், ஏழுலகும் தவஞ்-

செய்யப்பெற்ற கண்களும் எங்கள் மனமும் வாழு-நாள் ஈதென்றும் எண்ணித் துயில் நீங்கினர். தாமரை-மலரோ மூவராயும், அம்மூவர்க்கு முதல்வனுயும், ஞான மாயும் நின்று, மகாதேவனுகிய பரமசிவன் கையிற் பிடித்த போர்த்தொழில் மேற்கொண்ட பிஞகத்தை ஒடித்த சேவகனுகிய சீராமன் மகுடாபிஷேகம் செய்-வதைக்காண ஆசைகொள்ளும் மாதர்முகம்போல மலர்ந்-தன. நகரமாந்தர்கட்குள்,

மாதர்கள் கற்பின் மிக்கார்
கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வசிட்ட னொத்தார்
வேறுள மகளி ரெல்லாஞ்
சீதையை யொத்தா ரன்னு
டிருவினை யொத்தா ளவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாந்
தசரதன் றன்னை யொத்தார். (81)

அவ் வீதியில் மாதர்கூட்டமும் நெருங்கி எங்கும் 'ஏகுங்கோள், ஏகுங்கோள்' என்று இடை யிடை நிற்ற-லான், போதலும் மீளலும் ஒழிந்தில. வேந்தர்களே பெரிதென்பாரும், வீரர்களே பெரிதென்பாரும், மாந்-தரே பெரிதென்பாரும், மகளிரே பெரிதென்பாரும், போந்ததே பெரிதென்பாரும், புகுவதே பெரிதென்-பாரும், தேர்ந்ததே தேர்வதன்றி, யாரே தான் அங்கு நிகழ்வதைத் தெரியக் கண்டவராகச் சொல்லக்கூடும்.

சீராமனது மகுடாபிஷேகங் காண அந்நகரத்-திற்கு வந்தவர் யாவரெனின் இலங்கையிலிருக்கும் அரக்கரும் ஏழுலகத்திலிருக்கும் மலைகளும் திசை-

யானைகளுமல்லது ஏனையாவரும் கூட்டமாகக் கூடினர் என்பதேயாம். இவ்வாறிருக்கையிற் பலகோடி சந்திரனென்ன முத்துக் குடை நிழல் செய்யவும், ஆகாயத்தில் வாசஞ் செய்யும் அன்னக் கூட்டம் நெருங்கிய தென்னச் சாமரை யிரட்டவும் இந்திரனுக்கு உவமை எடுத்துச் சொல்லப்பட்ட உலகத்திலிருக்கும் அரசரெல்லாம் வந்து மகுடாபிஷேகஞ் செய்யும் அத்தாணி மண்டபமே போய்ச் சேர்ந்தனர். தாம் முன்னே பெற்றெடுத்த காதற்புதல்வனை முறையாக மணவினை அயர்விப்பவர் போல நெருங்கிய நான்மறை யுணர்ந்த அந்தணரும் சிராமனது மகுடாபிஷேகங் காண வந்து நெருங்கினர்.

ஆயதோ ரமைதி யின்க
ணையனை மகுடஞ் சூட்டற்
கேயுமங் கலங்க ளான
யாவைவு மியையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத
பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்க ணெருக்க நீங்க
மாதவக் கிழவன் வந்தான். (82)

கங்கையே முதல வாகிக்
கன்னியீ றான தீர்த்த
மங்கலப் புனலு நாலு
வாரியி னீரும் பூரித்
தங்கியின் வினையிற் கேற்ற
யாவையு மமைத்து வீரச்
சிங்கவா தனமும் வைத்துச்
செய்வன பிறவுஞ் செய்தான். (83)

சோதிடநூற் புலவர்கள் பட்டாபிஷேகஞ் செய்தற் கடுத்த காலஞ் சமீபத்ததென்று சொல்ல வசிட்டமுனி வரும் சக்கரவர்த்தியை அழைத்துவரக் கட்டளையிட்டனர். சுமந்திரன் பரிந்து சென்று,

விண்டொட நிவந்த கோயில்
வேந்தர்தம் வேந்தன் றன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான்
கைகயள் கோயி னண்ணித்
தொண்டைவாய் மடந்தைமாரிற் சொல்ல
மற்றவருஞ் சொல்லப்
பெண்டிரிற் கூற்ற மன்னாள்
பிள்ளையைக் கொணர்க வென்றாள். (84)

கைகேயியின் கட்டளையை மாதரும் சுமந்திரனுக் கறிவிக்கச் சுமந்திரனும் விரைந்து சென்று, இராசவீதி கடந்து, ஸ்ரீராமனை யடைந்து வணங்கி நின்று, கைகட்டி வாய்புதைத்து, 'தாசரதி, அரசரும் முனிவரும் அகிலத்திலுள்ள மாந்தர் அனைவரும் உம்மைப்பெற்ற சக்கரவாத்திபோலும் பரிவு செய்கின்றனர். உமது சிறிய தாயாகிய கைகேசியோ உம்மைத் தமது திருமாளிகையில் வரக் கட்டளையிட்டனள். அழகிய மகுடாபிஷேகஞ் செய்துகொள்ள விரைவிற் செல்லும்' என்று புகன்றனன்.

ஐயனு மச்சொற் கேளா
வாயிர மௌலி யானைக்
கைதொழு தரச வெள்ளங்
கடலெனத் தொடர்ந்து சுற்றத்

தெய்வ கீதங்கள் பாடத்
தேவரு மகிழ்ந்து வாழ்த்தத்
தையலா ரிரைத்து நோக்கத்
தாரணி தேரிற் சென்றான். (85)

சீராமன் மணிமுடிபுனையத் தேரேறிச் செல்வதைக் கண்டமாதர் இருமருங்கிலும் இரைத்து நெருங்கினார்கள்.

துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச்
சுடர்முடி துறந்து தூய
மண்ணெனுந் திருவை நீங்கி
வழிக்கொளா முன்னம் வள்ளல்
எண்ணெனுஞ் சொல்லி னார்தந்
தோளெனும் பணைத்த வேயும்
கண்ணெனுங் கால வேலு
மிடைநெடுங் கானம் புக்கான். (86)

வாரண மரற்ற வந்த கரா வுயிர் மாற்று நேமி
நாரண னொக்கு மிந்த நம்பிதன் கருணை யென்பார்
ஆரண மறிதல் தேற்றா வையனை யணுகி நோக்கிக்
காரண மின்றி யேயுங் கண்கணீர் கலுழ நிற்பார்.

சீராமன் தேரேறி வருவதைக்கண்ட மாதரும், மாந்தரும் தத்தம் மனத்திற் றோன்றியவாறு சொல்லக் காகுத்தன் தயரதன்வசிக்கும் மாளிகையுள் புகுந்தனன்

ஆங்குவந் தடைந்த வண்ண லாசையின் கவரி வீசப்
பூங்குழன் மகளி ருள்ளம் புதுக்களி யாட நோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரிமுகக் கமலபீடத்
தோங்கிய மகுடஞ் சூடி யுவகைவீற் றிருப்பக் காணான்.

அரியணை மீதுதன் அருமந்த தந்தை வீற்றிருப்பக் காணாதவனாகிய சீராமன் தன் சிற்றன்னை யாகிய கைகேசி மாளிகையை அடைந்தனன்.

ஆயன நிகழும் வேலை
யன்னவு மயர்ந்து தேறாத்
தூயவன் னிருந்த சூழற்
றுருவினன் வருத னோக்கி
நாயக னுரையான் வாயா
னுனிது பகர்வே னென்னாத்
தாயென நினைவான் முன்னே
கூற்றெனத் தமியள் வந்தாள். (89)

வந்தவ டன்னைச் சென்னி
மண்ணுற வணங்கி வாய்ந்த
சிந்துரப் பவளச் செவ்வாய்
செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை
மடக்குறத் தொழுது நின்றான்
அந்திவந் தடைந்த தாயைக்
கண்டவான் கன்றி னன்னான். (90)

நின்றவன் றன்னை நோக்கி
யிரும்பினு னியைந்த நெஞ்சிற்
கொன்றுழல் கூற்று மென்னும்
பெயரின்றிக் கொடுமை பூண்டாள்
இன்றுனக் குணர்த்த லாவ
தேயதே யென்னி னுரும்
ஒன்றுனக் குந்தை மைந்த
வுரைப்பதோ ருரையுண் டென்றாள். (91)

எந்தையே யேவ நீரே
யுரைசெய யியைவ துண்டேல்
உய்ந்தென னடியே னென்னிற்
பிறந்தவ ருளரோ வாழி

வந்ததெதன் றவத்தி ஞய
வருபயன் மற்றென் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே
தலைநின்றேன் பணிமி னென்றான். (92)

ஆழிசூ ழுலக மெல்லாம்
பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப்
புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென்
றியம்பின னரச னென்றாள். (93)

இப்பொழு தெம்ம னோரா
லியம்புதற் கெளிதோ யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
றிருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ்
வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா (94)

தெருளுடை மனத்து மன்ன
னேவலிற் றிறம்ப லஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு
மின்னலுக் கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூட்டி
யுடையவ னுய்த்த காரே
றருளுடை யொருவ னீங்க
வப்பிணி யவிழ்ந்த தொத்தான். (95)

மன்னவன் பணியன் றாகி
நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வ
மடியனேன் பெற்ற தன்றோ
என்னினி நுறுதி யப்பா
லிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன்.

நகர் நீங்குகை

என்றுகொண் டினைய கூறி
யடியிணை யிறைஞ்சி மீட்டுந்
தன்றுணைத் தாதை பாத
மத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்றிணி போதி னாளும்
பூமியும் புலம்பி னையக்
குன்றினு முயர்ந்த தோளான்
கோசலை கோயில் புக்கான். (97)

குழைக்கின்ற கவரி யின்றிக்
கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம்பின் னிரங்கிச் செல்ல
மழைக்குன்ற மனையான் மௌலி
கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாள்
முன்னொரு தமியன் சென்றான். (98)

புனைந்திலன் மௌலி குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்தில னென்கொ லென்னு
மையத்தாள் நளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன்
வணங்கலுங் குழைந்து வாழ்த்தி
நினைந்தநெ நன் னிடையூ றுண்டோ
நெடுமுடி புனைதற் கென்றாள். (99)

வேறு

மங்கை யம்மொழி கூறலு மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றா னென்றான். (100)

முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனால்
குறைவி லன்றெனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள். (101)

கோசலை மொழிந்தவைகளைக் கேட்ட சிராமன் இது-வன்றி 'என் தந்தை எனக்கேவிய குற்றேவலும் வேறொன்று உண்டு' என்றனன். கோசலை,

ஈண்டு ரைத்த பணியென்னை யென்றவட்
காண்டோ ரேழிரண் டேழகன் கானிடை
மாண்ட மாதவ ரோடுடன் வைகிப்பின்
மீண்டு நீவரல் வேண்டுமென் றானென்றான். (102)

இராமன் கூறியமொழிகள் செவியிற் புகாமுன்னம் கோசலை ஏங்கி யிளைத்துத் திகைத்து மனம் வீங்கி விம்மி விழுந்து 'இது வஞ்சகமாக இருக்கின்றது மகனே, 'இவ்வரசாண்டு வா' என்று சொன்னசொல் வஞ்சமாமோ, நான் உயிர் வாழ்ந்திருப்பேனோ? என் ஆருயிர் அஞ்சா நிற்கின்றது' என்று கையொடு கைநெரித்து ஆலிலைபோலும் வயிற்றைத் தன் கையாகிய தளிராற் பிசைந்தும், வெய்துயிர்த்துப் புழுங்கியும், 'நன்று நன்று அரசன் கருணை' என்று சிரிப்பாள். 'மகனே! நீ என்று காடு செல்வாய்' என்று உயிர்நீங்கும் காலத்திலே எய்தும் துன்பமேபோற் றுன்ப மெய்துவாள்.

அன்பி ழைத்த மனத்தர சற்குநீ
என்பி ழைத்தனை யென்றுநின் றேங்குமால்
முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தவை போலவே. (103)

அறமெனக் கிலையோ வென்னு மாவினைந்
திறவ டுத்ததென் றெய்வதங் காளெனும்
பிறவு ரைப்பதென் கன்று பிரிந்துழி
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள். (104)

இவ்வாறு துன்பப்படுந் தாயைக் கையாலெடுத்து 'அருமையாகிய கற்பு நலமுடையாளே! வாய்மைக் கிருப்பிடமாகிய அரசனைப் பொய்யனுக்கத் துணிந்தனையோ? சிறந்த தம்பி செல்வமடைய என் தந்தையாகிய தசரதனை மறந்தும் பொய்மொழி சொல்லாதவனுக்கி, யான் வனத்திற் சென்று வசிக்கு முறுதியைப் பெற்றேன். இதைப் பார்க்கிலும் யான் பிறந்து

பெற்ற பேறு யாது? மண் முதலிய எல்லாப் பூதங்களும் இழந்தொழியினும் நமது அரசன் ஏவலை மறுக்கத் துணிவேனோ?' என்று சீராமன் சொல்லினான். கோசலையும், 'அரசனாணையா லேகுவதாயின் தடுக்கேன். ஆயினும் சாகலா உயிர்தாங்கவல்ல என்னையும் உன்னோடு கூட்டிக்கொண்டு போகவேண்டும்' என்றாள். 'என்னை நீங்கி இடர்க்கடலி லழுந்தி வருந்தும் என் தந்தையை வற்புறுத்தி வேண்டுவன சொல்லாமல் என்னுடன் காட்டுக்கு வருவதாகத் துணிவது தகுதியோ! தாயே! நீயோ அறத்தைச் சிறிது மறியாதிருக்கின்றனை! என் தம்பி பரதன் மண்முழுதும் அரசாண்டுவரும் மன்னனாகவே இவ்வுலக முழுதும் அவன் வசமாகும்; அதன்பின் நமதரசன் செல்வந்துறந்து தவஞ் செய்யுங்காலத்தில் அவனுடன் நீ அருமையான நோன்புகள் செய்யத் துணியவேண்டும்.

சித்த நீதிகைக் கின்றதெந் தேவரும்
ஒத்த மாதவஞ் செய்துயர்ந் தாரன்றே
எத்த னைக்குள வாண்டுக ளீண்டவை
பத்து நாளும் பகலல வோவென்றான். (105)

மேலும் விசுவாமித்திர முனிவன் அருளால் தாங்கிய வித்தையும் பின்னரடைந்த பேறும் பிழைத்தனவோ! நான் முனிவ ரேவினவற்றைச் செய்தல் இன்னும் நல்லதாகும். அருந்தவர்க்கு வழிபாடுசெய்து மெய்யுணர்ச்சி பெற்று ஒப்பில்லாத வித்தைகள் குற்றமற்றன தாங்கித் தேவர்கள் காதல்பெற்று யானும் நன்றாக வரக்காண்பாய். கடல் தொட்ட சகரர் அறுபதினாயிரவரும் தந்தை ஏவலிற் றலைநின்று உடம்பினின் றுயிர்போக்கிய சிறந்த புகழ் நிலைபெற்றிருக்கின்ற

தன்றே ! மழுவாளனாகிய பரசுராமனும் தன்றந்தை-யாகிய சமதக்கினி முனிவன் சொற்கடவாமல் தாயை ஊன் சிதையக் கொன்றனெனின், யான் "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்றதைத் தவிர்ந்து நடப்பதோ !" என்று இவ்வகையான பல மொழிகளையும் சொல்லி, நல்லறிவுச்சுடர் கொளுத்திய சீராமன் சொல்-லைக் கேட்டு, உலகையாள்வது பரதன் பாலாகினு மாகட்டும், இவன் மாத்திரம் இந்நாடு கடவாவண்ணஞ் செய்யவேண்டு மென்பது கருதித் தான் எண்ணியது முடிக்கத் தசரத னிருக்குமிடஞ் சென்றாள்.

நடந்த கோசலை கேகைய நாட்டிறை
மடந்தை கோயிலை யெய்தினள் மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் நெட்டுயிர்
உடைந்த போழ்தி னுடல்விழுந் தென்னவே. ()

கோசலை போவதைக் கண்டு இவள் கொண்ட சோகத்தைத் தீர்ப்பவள் சுமித்திரைதான் எனத்-துணிந்து சீராமன் அவளிருக்குமிடஞ் சென்றான். கோசலை அரசன் தரையில் விழுந்து கிடப்பதைப் பார்த்து, உயிர்நீங்க உடல் வீழ்ந்ததுபோல அரசன்-மேல் வீழ்ந்து புலம்பினள். அப்புலம்பலோசை சென்று கேளாமுன்னம் முனிவரும் மன்னரும் இனிக்காலம் செல்கின்றது தகுதியன்றென்று வேண்ட, 'யானே எல்லாச் செய்தியு மறிந்து வருவேன்' என்று பகர்ந்து, வசிட்ட முனிவர் தசரத னிருக்குமிடம் அடைந்து, அவன் நிலைகண்டு இஃது என்ன விளைவென்று நினைத்து 'இவனோ இறந்தானல்லன் இறவாதொழிவானு மல்-லன் ; ஆயின் இப்போது உணர்வு கெட்டிருக்கின்றான்' என்றும் கோசலை ஆறாத்துயரத்தால் அயர்கின்ற

ளென்றும் சிந்தித்து, தன்னை வணங்கி நின்ற கைகே-சியை நோக்கி, 'அரசன் இவ்வாறு வருந்தக் காரண மென்ன சொல்லவேண்டும்' எனத் தன்னால் நடந்த-தைத் தானே சொல்லி நின்றாள் கைகேசி. அவள் சொல்லி முடிப்பதன் முன்னே சக்கரவர்த்தியைத் தரையினின் றெடுத்துச் சயித்தியோபசாரம் செய்து 'அறிவுடையாய்! நீயேன் அயரவேண்டும். கைகேசியே உன்மகனாகிய ஸ்ரீராமனுக்கு முடி சூட்டுவாள்; அப்படிச் செய்யாளேல் நாங்கள் சும்மாவிருப்போமோ!' என்று சொல்ல, தயரதன் வசிட்ட முனிவனைப் பார்த்து, 'என் மகனைப் புனைமணி மகுடஞ் சூட்டிக் காடு ஏகா வண்ணஞ் செய்து, என்னையும் புனிதனாக்கவேண்டும்' என்று வேண்டினான். வசிட்ட முனிவரும் யாவரை-யும் முனியுங் கொடுஞ்செய்கையையுடைய கைகேசி முகமே நோக்கி 'பொன்போன்றவளே! உன்மகனுக்கு அரசும் ஏனையோருக்கும் உன் கணவனுக்கும் உயி-ரும் உதவிசெய்து பெரும்புகழடைய வேண்டுகின் றேன்' என்று சொல்லி முடித்தனர். கைகேசியும் 'அரசன் தான் சொன்ன சொல் தவறுவானேயாயின் உயிர்வாழமாட்டேன். என்சொல் பொய்யாதற் றன்-மைக்குப் பொன்றுதொழியேன்' என்று சொல்லினள்.

அதைக்கேட்ட வசிஷ்டர் கைகேசியை நோக்கித் தன்கணவன் இறந்து படுமென்றும், உலகந்தான் கொண்ட கருத்தைக் கொள்ளாதென்றும், பழிநிலை பெற்றுயரும் என்றும், பாவம் பெருகுமென்றும நீ யறிகின்றிலை அன்றியும் சிறிதும் அறியா திருக்கின்-றனை; இனி நான் உனக்கென்ன சொல்வது நீபேயோ தீயோ இம்மண்ணில் உனக்கு வசையே நிலைபெற்-றிருக்கு மல்லது வேறன்று.

வாயான் மன்னன் மகனை
வனமே கென்று முன்னம்
நீயோ சொன்ன யவனே
நிமிர்கா னிடைவெந் நெறியில்
போயோ புகலோ தவிரான்
புகழோ டுயிரைச் சுடுவெந்
தீயோய் நின்போற் றீயா
ருளரோ செயலென் னென்றான். (107)

வசிட்டமுனிவர் கைகேசியை நோக்கிச் சொல்வதைக் கேட்ட தயரதன் நாவில் நஞ்சமுடைய மாதராளைப் பார்த்து 'அடி பாவி! என்னுயிரைக் கொடுங்கான் படர்ந்து செல்லென்று ஏவினையோ! அவனும் போனானே! நானோ உன் தனிவாய்விடத்தை நெடுநாளுண்டேன், அதனாலன்றோ என்னுயிரையும் முதலோடு உண்டாய். உனை அக்கினி சாட்சியாக முன்னாளில் மணமாலை சூட்டியது நான் இப்போது பிணமாகும் பொருட்டென்றே துணிந்தேன். என்மகனைக் காட்டி லனுப்பினமையால் உன் கழுத்திற் கட்டியிருக்கின்ற மங்கலநாணே உன் மகனுக்குக் காப்பினணே யாகும்' என்றிவ்வாறு சொல்லி, தன்னை நோக்கி யிரங்காத கைகேசிக்காக வசிட்டமுனிவரைப் பார்த்துத் தயரதன்,

இன்னே பலவும் பகர்வா
னிரங்கா தாளை நோக்கிச்
சொன்னே னின்றே யிவளென்
றார மல்ல டுறந்தேன்

மன்னே யாவான் வருமப்
பரதன் றனையு மகனென்
றன்னேன் முனிவா வவனு
மாகா னுரிமைக் கென்றான். (108)

பிறகு 'என்னைக் கண்டும் பேசிப்போகவே இடை-யூறுடைய சீராமன் உன்னைக்கண்டும் போகவில்-லையோ' என்று கோசலையைக் கேட்கக் கோசலையும் இது மாற்றாள் செயலென்றுந் தன் கணவன் வரங்-கொடுத்து உள்ளம் அயர்ந்தானென்றுங் கண்டு, அரசனைத் தேற்றியும்; மகனை நிறுத்தினால், அரசன் மெய்ம்மொழி தவிர்ந்தான் என்று உலகஞ் சொல்லும் பழிக்குச் சோர்ந்தும், மெய்ம்மை தழுவாவகையால் நிந்தியாத நிலைமைவாய்ந்த பெருமைக் கிழிவாமென்று சொல்லி "அரசனே, அன்பான் மகன்மேல் மெலியின் உலகம் கொள்ளாதென்றும், நமது மகன் போவா தொழியான்" என்றும் கணவனே சாகாமலிரா னென்-றும் உள்ளம் புலர்ந்து வாடி, "மகனே உன் தந்தை-யைக் காக்கவேண்டும்" என்று புலம்பி வருந்தினள். அதைக் கண்ட தசரதனே,

கண்ணு நீரா யுயிரு
மொழுகக் கழியா நின்றேன்
எண்ணு நீர்நான் மறையோ
ரெரிமு னின்மேற் சொரிய
மண்ணு நீராய் வந்த
புனலே மகனே வினையேற்
குண்ணு நீரா யுதவி
யுயர்கா னடைவா யென்றான். (109)

படைமா ணரசைப் பலகாற்
பழுவாய் மழுவா லெறிவான்
மிடைமா வலிதா னனையான்
வில்லா லடுமா வல்லாய்
உடைமா மகுடம் புனையென்
றுரையா வுடனே கொடியேன்
சடைமா மகுடம் புனையத்
தந்தே னந்தோ வென்றான். (110)

நெருதற் கொத்த நெஞ்சு நேயத் தாலே யாவி
உகுதற் கொத்த வுடலு முடையே னின்போ லல்லேன்
தகுதற் கொத்த சனகன் றையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணாற் போகக் காணே னென்றான்.

பூணா ரணியும் முடியும் பொன்னா சனமுங் குடையுஞ்
சேணார் மார்புந் திருவுந் தெரியக் காணத் திரிவேன்
மாணா மரைவற் கலையும் மானின் றோலும் மவைநான்
காணா தொழிந்தே னென்றா னன்றாய்த் தன்றே கருமம்.

இவ்வாறு அரசன் மிகவும் புலம்பி மூர்ச்சை யடைந்தான். இவ்வாறிருக்கையில் வசிட்டமுனிவன் அரசனைப் பார்த்து, "நீ அயரவேண்டாம், உன் மகனாகிய ஸ்ரீராமனைக் காட்டிற்குச் செல்லாவண்ணம் தடுக்கின்றேன்' என்று சொல்ல, அதைக் கேட்ட அரசன் 'வசிட்டபகவான் சொல் செல்லுமல்லவா! நாம் வருத்தமொழிவோம்' என்று எண்ணி யிருந்தான். கோசலையும் அரசன் படும்பாடறிந்து, 'மகனையும் எங்களையும் உலகோடு துறந்தீர் ? இதுதானோ அறமெனப் படுவது. நீரிவ்வாறிருக்கின் உலகமுழுதுந் துயர மடையும். நமது மகனாகிய ஸ்ரீராமனோ வசிட்ட பக-

வான் சொல் தட்டாமல் வரினும் வருவான்; வருந்தாதிரும்' என்று சொல்லி, அரசர் பெருமான் வருத்தந் தீரும்படி சயித்தியோபசாரஞ் செய்தாள். அரசர் பெருமான் கோசலையை நோக்கி, ஒன்றுந் தெரியாதானாய், 'சீராமன் வருவனோ வருவனோ' என்று ஏங்கிப் புலம்புவான். கூனியின் புணர்ப்பினால் 'கொடிய கைகேசி தன் வாக்கால் என்னுயிரை முன்னே மாய்க்கத் துணிந்தாள்' என்பான். 'நானும் என் மகனும் அரசு துறந்தோம்' என்று சொல்லிப் புலம்புவான். 'அது போகட்டும் என்மகனைக் காட்டுக்குப் போகச் சொன்னாளே அது தருமமோ' என்று ஏங்குவான்.

பொன்னார் தோளாள் கானோ
புகுதப் புகுத றவிரான்
என்னா ருயிரோ வகலா
தொழியா திதுகோ சலைகேள்
முன்னா ளொருமா முனிவன்
மொழியுஞ் சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா
மவருக் கரச னறைவான். (113)

முன்னாளில் முனிவனிட்ட சாபத்தை விரித்துக் கூறி, 'சீராமன் பிரிந்து செல்வானேல் என்னுயிர் நில்லாது' எனக் கோசலையும் மனந்திகைத்து நின்றனள். வசிட்டமுனிவரும் அல்லற்றரு நெஞ்சினையுடையவராய் இராசமாளிகையை அகன்று, பட்டாபிஷேக மண்டபத்தை அடைந்தார். அதைக் கண்ட அரசரனைவரும் 'சீராமபிரான் இங்கே எழுந்தருளுவதற்கு ஏதேனும் இடையூறுண்டாயிற்றோ? இராசமாளிகையில் அழுகுரலுண்டாவதற்குக் காரணம்' என்ன?' என்று கேட்க,

வசிட்டமுனிவரும், 'கைகேசியோ அரசர் பெருமானிடத்தில் வரமிரண்டு பெற்றனள்; அவற்றுள் ஒன்றால் சீராமன் காடுபோகவும், மற்றொன்றால் பரதன் நாடாளவும் கேட்டனள். இதுதான் செய்தி' என்ன, அம்மொழிகாதிற் புகுமுன்னே மாதரும் மற்ற நகர மாந்தரும் அரசரும் அந்தணரும் சக்கரவர்த்தியே போல வீழ்ந்து வருந்தினர்.

கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால். ()

ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகுங்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு மழுதனவம் மன்னவனை மானவே. (115)

இவ்வாறியாவரும் அழவே கைகேசியும் கூனியுமே அழாதிருந்தனர். அத் தெருவெங்குங் கண்ணீர்ப் பெருக்கு ஆறுயோடினதேயன்றி மனம் இரு பிளவாகாமையே குறையென்று சொல்ல விருந்தது. இவ்வாறிருக்கையில்,

மண்செய்த பாவ முளதென்பார் மாமலர்மேற்
பெண்செய்த பாவ மதனிற் பெரிதென்பார்
புண்செய்த நெஞ்சை விதியென்பார் பூதலத்தோர்
கண்செய்த பாவங் கடலிற் பெரிதென்பார். (116)

ஆளான் பரத னரசென்பா ரய்யனினி
மீளா னமக்கு விதிகொடிது காணென்பார்
கோளாகி வந்தவா கொற்றமுடி தானென்பார்
மாளாத நம்மின் மனவலியா ரரென்பார். (117)

'நமது சக்கரவர்த்தியோ கைகேசிமேல் வைத்த காதலினால் கருத்துக் கெட்டான்' என்பார்கள். சிலர், 'நாம் அனைவரும் சீதாநாயகனுடன் காட்டிற்குப் போவோம்; அவ்வாறில்லாவிட்டால் தீயில் வீழ்ந்தழிவோம்' என்பார்கள். சிலர் கையால் நிலத்தைத் தடவிக் கண்ணீரால் மெழுகுவார்கள். சிலர் இச்சொல்லைக் கேட்டு 'கோசலை சகிக்கமாட்டாளோ' என்றொழியாமற் பெருமூச் செறிவார்கள். சிலர் கைகேசி தன் மகனாகிய பரதன் பூமி முழுதும் ஆள வரம் பெற்றாளே, 'இவளை வஞ்சகி யென்றே' நாம் சொல்லவேண்டும் என்பார்கள்.

சிலர், 'தான் பிறந்து முழுதுலகாளுந் செல்வப் பெருக்கினையுடைய சீராமன் தான்பெற்ற உலகமுழுதும் அவருக்குக் கொடுத்துவிட்டதும் நாமெல்லாம் அவனைப் பின்தொடர்ந்து நெருங்கிப் போவோமாயின் அவன் வாழும் காடெல்லாம் நாடாகச் சில நாளைக்குள் ஆகமாட்டாவோ' என்று சொல்வார்கள். 'இச் சக்கரவர்த்தியை இதுவரையில் சத்திய சந்தனென்று எண்ணியிருந்தோமே, இவன் முன்னே தன் இராச்சியமுழுதும் சீராமனுக்குக் கொடுத்துவிட்டு, இப்போது பரதனுக்கு முறைதவறிக் கொடுத்துவிடுவானானால் சத்தியந் தவிர்ந்தவனாக மாட்டானோ? இவன் அறிவுகெட்ட தன்னவனை' என்பார்கள். சிலர் 'வில்லேந்திய கையையுடைய சீராமனுக்கே கொடுத்துவிட்ட நிலத்தை மற்றொருவர் அனுபவிப்பார்களா, இவன் ஆளப்படாதென்று வஞ்சனையாலடைந்த அறிவில்லாதவளுடைய கைகேசி மகனாகிய பரதனைப் பின் பார்த்து நிற்குமா? சீதை பிரிந்தாலும் செல்வம் இராமனை விட்டுப் பிரியாது' என்பார்கள்.

இளையபெருமாளோ தன் சிறிய தாயாகிய கைகேசி தன் திருத்தமையனாகிய பெருமாளுக்குச் சக்கரவர்த்தி கொடுத்த செங்கோலைத் தன் சொல்லால் வாங்கினாள் என்ற கடுஞ்சொல்லைக் கேட்டுப் பொறாமல் ஆலவிடம்போற் கொதித்துப் பிரளயகாலத்தில் தனது பூர்வாவதாரமாகிய அனந்தாழ்வானே யென்று சொல்ல விளங்கி,

சிங்கக் குருளைக் கிடுதீஞ் சுவையூனை நாயின்
வெங்கட் கடுங்குட் டியையூட்ட விரும்பி னாளே
நங்கைக் கறிவின் றிறநன்றிது நன்றி தென்னாக்
கங்கைக் கிறைவன் கடகக்கை புடைத்து நக்கான். ()

கைகொட்டிச் சிரித்து, உடைவாளைப் பக்கத்தில் கட்டிக்கொண்டு அம்புப் புட்டிலை முதுகிற் றூங்கி, செம்பொற் கவசமணிந்து, தன் காலில் வீரகண்டாமணி சத்திக்க, வில்லைவளைத்து நாணேற்றி, நாணோசையால் உகாந்த காலத்தில் கடலேழு மொன்றாகக் கோத்துக்கொண்டாலொத்த வோசை யுண்டாகவும் தானுந் தன் தமையனு மல்லாதவர் அவ்வோசையால் நடுக்கங் கொள்ளவுஞ் செய்து, இனிப் பூமிதேவி, 'நான் பாரமிழந்தேன்' என்று சொல்லும்படி என்னுடன் போர்செய வந்தோரை யெல்லாங் கொன்று அவர்கள் சரீரத்தை யெல்லாம் மலைபோற் குவித்து என் திருத்தமையனுக்குத் தொன்று தொட்டுவந்த மகுடாபிஷேகஞ் செய்து பார்க்கின்றேன். தடுக்க வலியுள்ளவர்கள் தடுக்கலாம். இது கிடக்கட்டும்.

விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்சையர்
நாகர் மற்றும்
எண்ணாட்டவர் யாவரு நிற்கவோர்
மூவ ராகி

மண்ணாட்டுநர் காட்டுநர் வீட்டுநர்
வந்த போதும்
பெண்ணாட்ட மொட்டே னினிப்பே
ருலகத்து ளென்னா. (119)

இலக்குவன் இவ்வாறு கோபித்து மந்தரகிரிபோல அந்நகரத்தின் மத்தியிற் சுழன்றுகொண் டிருந்தான். அப்போது தன் சிறிய தாயாகிய சுமித்திரை திருமாளிகையில் இருந்த ஸ்ரீராமபிரான், 'நீ வில்லைக் கையிலேந்தி யுத்தசன்னத்தனாய் வருவதற் கேது வென்ன ?' என்று வினவினர். இளையபெருமாள், 'மெய்யைக் கெடுத்து முறைதவறிய கைகேசி முன் உனக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய எண்ணினேன். அதைத் தடுக்கத் தேவர்களே துணிந்தாலும் பஞ்சின் தொடர் துணியைச் சுடுகின்ற தீயேபோல என் பாணத்தால் அவர்களை யெல்லாஞ் சுட்டுக் கரியாக்கத் துணிந்தேன். ஆற்றலை யுடைய வில் என் கையிலுள்ளதாக அதைத் தேவரேயாயினும் விலக்குவ தரிது. அப்படி விலக்கத் துணிந்தாலும் என் கைப்பாணத்தால் அவர்களை யெல்லாங் கொன்று களைந்து, இப் பதினான்குலகத்திற்கும் நீ அரசனாக நானே செய்கின்றேன், பெற்றுக் கொள்' என,

இளையானிது கூற விராம னியைந்த நீதி
விளையா வருநன்னெறி நின்னறி வாகு மன்றே
உளையா வறம்வற்றிட ஆழ்வழு வுற்ற சீற்றம்
விளையாத நிலத்துனக் கெங்கண் விளைந்த தென்றான்.

இளையபெருமாள் நகைத்து, 'இவ்வுலகமுழுதும் உன்னதே' என்று உமது திருத்தந்தை சொல்ல, இவ்வர-

சாள மேற்கொண்டாய். அதைப் பகையா விழந்து விட்டுக் காட்டுக்குப் போகின்றாய் என்றால், எவ்வித மாகத்தான் எனக்குக் கோபம் வாராதிருக்கும். உன்னிடத்தே அன்பு சிறிது மில்லாதவர்கள் உன்னை வனத்திற்குப் போகச்சொல்ல, நான் இவ் வைம் பொறியையுடைய இவ்வுடம்பைப் போற்றி வளர்ப் பேனோ, நான், முன்னே அரசெல்லாங் கொடுத்துவிட்டுப் பின்பு இல்லையென்று சொல்லிக் காட்டுக்கனுப்பிய அரசன்போல்வேனோ' எனச் சீராமபிரான், 'தம்பி! இவ்வரசபாரம் மிகவும் குற்றமுண்டாக்கு மென்பதெண்ணாமல் முன்னே அரசன் இவ்விராச்சியபாரம் கைக்கொள் என்று சொல்ல, அதை ஏற்றுக்கொண்டது என் குற்றமேயல்லவோ? அது அரசன் செய்த குற்றமாகுமோ!'

நதியின் பிழையன்று நறும்புன லின்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று மகன் பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்றான்.

உதிக்கு முலையு ளுறுதீயென
ஆதை பொங்கக்
கொதிக்கும் மனமெங் ஙனமாற்றுவென்
கோளி ழைத்தாள்
மதிக்கும் மதியா முதல்வான
வர்க்கும் வலீஇதாம்
விதிக்கும் விதியாகு மென்பிற்றொழில்
காண்டி யென்றான். (122)

ஆய்தந்தவ னவ்வுரை கூறலு மைய நின்றன்
வாய்தந்தன கூறுதி யோமறை தந்த நாவால்
நீதந்த தன்றே நெறியோர்க ணிலாத தீன்ற
தாய்தந்தை யென்று லவர்மேற் சலிக்கின்ற தென்னே.

நற்று தையுநீ தனி நாயக னீவ யிற்றிற்
பெற்றுய் நீயே பிறரில்லை பிறர்க்கு நல்கக்
கற்று யிதுகாணு தியின் றெனக்கைம் மறித்தான்
முற்று மதியம்மிலைந் தான்முனிந் தானை யன்னான். ()

வரதன் பகர்வான் வரம்பெற்றவ டானிவ் வையந்
சரத முடையா னவளென்றனி த்தாதை செப்பப்
பரதன் பெறுவா னினியான் படைக்கின்ற செல்வம்
விரதம் மிதினல்லது வேறினி யாவ தென்றான். (125)

சீராமன் தம்பியை நோக்கி, 'இலக்குவனே, நீ கோபம் கொண்டாயே. அக்கோபம் தீர்வது உலகமையலை அறியாத பாதகனுகிய தம்பியைப் போரிலே தொலைத்தோ; பெரியோரால் புகழப்படும் தந்தையை வாதனை செய்தோ அல்லது பெற்ற தாயைக் கொன்றோ சொல்' என்றனன். அது கேட்ட இலக்குவன்,

செல்லுஞ்சொல் வல்லா னெதிர்தம்பியுந்
தெவ்வர் சொல்லுஞ்
சொல்லுஞ் சுமந்தே னிருதோளெனச்
சோம்பி யோங்குங்
கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டிலுங்
கட்ட மைந்த
வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன்வெகுண்
டென்னை யென்றான். (126)

நன்சொற்க டந்தாண் டெனைநாளும்
வளர்த்த தாதை
தன்சொற் கடந்தெற் கரசாள்வது
தக்க தன்றால்
என்சொற் கடந்தா லுனக்கியாதுள
தீன மென்றான்
தென்சொற் கடந்தான் வடசொற்கலைக்
கெல்லை தேர்ந்தான். (127)

சீற்றந் துறந்தா னெதிர்நின்று
தெரிந்து செப்பும்
மாற்றந் துறந்தான் மறைநான்கென
வாங்கல் செல்லா
நாற்றெண் டிரைவேலையி னம்பித
ணுணை யாலே
ஏற்றந் தொடங்காக் கடலிற்றணி
வெய்தி நின்றான். (128)

அப்போது ஸ்ரீராமபிரானுந் தானும் தன்பாலிருக்கும் மானுரிபோர்த்த மணிகண்டப் பெருமானும் போல அவ்விளைய பெருமாளைத் தழுவிக்கொண்டு, சொல்லின் மாட்சிமையுடைய சுமித்திரை திருமாளிகையை அடைந்தான். சுமித்திரையோ தன் கண்போல்பவ-ராகிய மக்களிருவருங் காட்டிற்குப் போகத் துணிந்-திருப்பது கண்டு சகியாதவளாய்த் துன்பக்கடற்கு ஓரெல்லை காணுமல் மனம் புண்ணுகிப் பூமிமேற் புரண்-டழுதாள். அவ்வாறழுகின்ற தாயைத் தொழுது தேற்றி, 'நான் துன்பமென்னும் வாளை வாங்க மனந்-தேற்றுதற்குத் தக்க காரியஞ் செய்பவனுய்ச் சக்கர-

வர்த்தியைப் பொய்யனுக்க மாட்டேன். காட்டினைச் சிறிது நாள் கண்டி ருக்கின்றேன். நான் காட்டிற்குப் போனாலும், கடற்குப் போனாலும், வானுலகமே சென்றாலும் எனக்கவை யெல்லாந் திருவயோத்தியையே ஒத்திருக்கும். என்னை யார்வருத்து மியல்பினை யுடையார்? நீ மனம் வருந்த வேண்டா' என்று சொல்லிக்கொண் டிருந்தான். இப்படிச் சொல்லிக்கொண் டிருக்கும்போது கைகேசி யனுப்பிய தொழுத்தையர்.

> கார்வான மொப்பான் றனைக்காண்டொறுங்
> காண் டொறும்போய்
> நீராயுகக் கண்ணினு நெஞ்சழி
> கின்ற நீரார்
> போரா விடர்பட் டயலாருறு
> பீழை கண்டும்
> தீரா மனத்தா டரவந்தன
> சீர மென்றார். (129)

சீராமனிடம் மரவுரியைக் கொடுத்தனர். அதைக் கண்ட இராமாநுஜர், 'என் திருத்தமையனுரைத் திருவயோத்தியை இழப்பித்தவர் கொடுத் தனுப்பிய வற்றை எல்லாம் எடுத்தணியப் பிறந்த பெருமாளும் நிற்கின்றனன். அவற்றைப் போர்வில்லோடும் காணப் பிறந்த நானும் நிற்கின்றேன். அவற்றைக் காட்டவேண்டு' மென்று வேண்டினான். சக்கரவர்த்தித் திருமகனார் அவர் தந்த மரவுரியை ஆதரத்தோடு மேற்கொண்டு, 'துன்பந்தீர்ந்து உடனே செல்லவேண்டு மென்று எமது பெருமாட்டி சொன்னால் அதுவே துணையா' மென்று தன் தாயாகிய சுமித்திரையினுடைய

அழகிய பாதங்களை வணங்கினன். அவள் இலக்கு-
வற்குச் சொல்வளாயினாள்.

ஆகாத தன்று னுனக்கவ்வன மிவ்வயோத்தி
மாகாத லிராம னம்மன்னவன் வைய மீந்தும்
போகா வுயிர்த் தாயர்நம் பூங்குழற் சீதையென்றே
ஏகா யினியிவ் வயினிற்றலு மேத மென்றாள்.

பின்னும் பகர்வாண் மகனேயிவன் பின்செ றம்பி
என்னும் படியன் றடியாரினி லேவல் செய்தி
மன்னுந் நகர்க்கே யிவன்வந்திடின் வாவ தன்றேல்
முன்னம் முடியென் றனள்பான்முலை சோர நின்றாள்.

**வேறு**

இருவருந் தொழுதன ரிரண்டு கன்றெரீஇ
வெருவரு மாவினிற் றுயும் விம்மினாள்
பொருவருங் குமரரும் போயி னார்புறம்
தருவரைத் துகிலொரீஇச் சீரை சாத்தியே. (132)

தான்புனை சீரையைத் தம்பி சாத்திடத்
தேன்புனை தெரியலான் செய்கை நோக்கினான்
வான்புனை யிசையினாய் மறுக்கி லாதுநீ
யான்புகல் வினையதோ ருறுதி கேளெனு. (133)

அன்னைய ரனைவரு மாழி வேந்தனும்
முன்னைய ரல்லர்வெந் துயரின் மூழ்கினார்
என்னையும் பிரிந்தன ரிடரு றுவகை
உன்னைநீ யென்பொருட் டுதவுவா யென்றான். (134)

ஆண்டகை யம்மொழி பகர வன்பனும்
தூண்டகு திரள்புயந் துளங்கத் துண்ணெனு
மீண்டதோ ருயிரிடை விம்ம விம்முவான்
ஈண்டுனக் கடியனேன் பிழைத்த தியாதென்றான். (135)

நீருள வெனினுள மீனு நீலமும்
பாருள வெனினுள யாவும் பார்ப்புறில்
நாருள தனுவுளாய் நானுஞ் சீதையும்
ஆருள ரெனினுள மருளு வாயென்றான். (136)

பைந்தொடி யொருத்திசொற் கொண்டு பார்மகள்
நைந்துயிர் நடுங்கவு நடத்திக் கானென
உய்ந்தன னிருந்தன னுண்மை காவலன்
மைந்தனென் றினையசொல் வழங்கி னையெனு. (137)

மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
ஏறின வெகுளியை யாது முற்றுற
ஆறினை தவிர்கென வைய வாணையில்
கூறிய மொழியினுங் கொடிய தாமென்றான். (138)

செய்துடைச் செல்வமோ யாதுந் தீர்ந்தமைக்
கைதுடைத் தேகவுங் கடவை யோவையா
நெய்துடைத் தடையலர் நேய மாதர்கண்
மைதுடைத் துறைபுதும் மறங்கொள் வேலினாய். (139)

இலக்குவன் இவ்வாறு கூறக்கேட்ட சீராமன் ஒன்றுஞ் சொல்ல வகையறியாதவனாய் இளையபெருமாள் திருமுக மண்டலத்தை நோக்கிப் பார்த்தான். அப்பொழுது அவனது திருக்கண்களாகிய தாமரை மலரினின்றும் நீர், முத்துக்கள்போல வடியக்கண்டு வெகுநேரம் நின்றான். இவ்வாறிருக்கையில் இராச சபையினின்றும் தம்பால் அன்புடையவராகிய வசிட்ட முனிவ ரெழுந்தருளக் கண்டு சீராம லட்சுமணரிருவரும் தலைவணங்கித் தாழ்ந்தார்கள். அதைக்கண்ட வசிட்டமுனிவரும் துன்பப் பெருங்கடலிற் கால் வைத்

தவராய் அவர் மனத்தையும் முகத்தையு முற்றுப் பார்த்த நல்லது மரவுரியுடுத்த கோலப் பொலிவை யுங்கண்டு,

வாழ்வினை நுதலிய மங்க லத்துநாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினன்
சூழ்வினை நான்முகத் தொருவர்ச் சூழினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ. (140)

வெவ்வினை யிவடர விளைந்த தேயுமன்
றிவ்வினை யிவன்வயி னெய்தற் பாற்றுமன்
றெவ்வினை நிகழ்ந்ததோ வேவ ரெண்ணமோ
வெவ்விதி னொருமுறை தெரியப் பின்னென்றான். ()

வசிட்டர் இவ்வாறு சொல்லிக்கொண்டே வில்லேந்திய செந்தாமரைக் கண்ணையுடைய சீராமபிரானைக் கட்டிக் கிட்டிவந்து ஐயனே, 'நீ காடு சூழ்ந்த விடத்தைக் காண்பாயானல் உன் தந்தை வீடு காணவேண்டுவது நிச்சயமாய் நிறைவேறும்' எனச் சீராமன், 'என் தந்தை சொல்லியசொல்லைச் சிரமேற்கொண்டு நடப்பது என் கடமை; அவர் எனது பிரிவால் வருந்துவதை மாற்றுவது உமது கடமை, இதுவே முறைமையுமாகும்' என்று பகர்ந்து 'அரசன் வெம்மையான எல்லையில்லாத காட்டினையடை யென்றானல்லன்; பகைவரம்பினை யொத்த சொற்களைக் கூறிய கைகேசிக்கு அரசன் ஆராயாவது இ வ் வ ர ந் தருவேன் என்று இசைந்ததுண்டு, அவ்வரம் பெற்றதாயோ என்னைக் காட்டிற்போக வவினள், நானே மாதுருவாக்கிய பரிபாலனஞ் செய்யத் துணிந்தேன், எவற்றிற்கும் சான்றாக நின்றதாம் அதைத் தடுப்பது தகுமோ' என்றனன்.

இதைக்கேட்ட வசிட்டர் சித்திரப் பதுமைபோல் ஒன்று முரையாடாமல் தன்கண்களில் நீர்த்துளி சிந்த நின்றார். அவரது பாதங்களை வணங்கி மலைபோலுந் தோளையுடைய தாசரதி பொன்னாற் செய்யப்பட்ட மதிலையுடைய வாயிலைக் கடந்து மரவுரிதரித்த கோலத்துடன் தம்பி தன்னோடு தொடர்ந்துவர அந்தணர்களும் அருந்தவரும் அரசரும் நகர மாந்தரும் கொண்டிருக்கின்ற எண்ணத்தை என்னவென்று சொல்வது ! தேவர்களும் தமக்கு இனிவரும் உறுதியை எண்ணுமல் மனம் வருந்தியே நின்றார்கள். மரவுரிதரித்த கோலத்துடன் சிராமன் வரக்கண்ட மாதர்கள்,

கரும்பன மொழியினர் கண்ப னிக்கிலர்
வரம்பறு துயரினுள் மயங்கி யேகொலாம்
இரும்பன மனத்தின ரென்ன நின்றனர்
பெரும்பொரு ளிழந்தவர் போலும் பெற்றியார். (142)

திருவரை சுற்றிய சீரை யாடையன்
பொருவருந் துயரினன் றொடர்ந்து போகின்றான்
இருவரைப் பயந்தவ ளீன்ற கான்முளை
ஒருவனே யிவற்கிவ்வு றுறவென் றார்சிலர் (143)

நன்னெடுங் கண்களி னுன்ற நீர்த்துளி
தன்னெடுந் தாரைக ளாத்தின் வீழ்தலால்
மன்னெடுங் குமரன்மாட் டமுங்கி மாடமும்
பொன்னெடுங் கண்டிழித் தழுவ போன்றவே. (144)

திக்கு நோக்கிய தீவினைப் பயனெனச் சிந்தை
நெக்கு நோக்குவோர் நல்வினைப் பயனென நேர்வோர்
பக்க நோக்கலென் பருவர லின்பமென் றிரண்டும்
ஒக்க நோக்கிய யோகரு மருந்துய ருழந்தார். (145)

எல்லாரும் வருந்த ஸ்ரீராமர் ஸீதாபிராட்டி திருமனைக்குச் சென்றார். தாய்மாரும் அரசர், அந்தணர் முதலியோரும் அழுதுகொண்டு கூடவர மரவுரி யுடுத்தி வருகின்ற தன் நாயகனைக் கண்டு மனங்கலங்கி ஸீதாதேவி, 'இது என்ன' வென்று தன் கணவனை வினவ, அவர் நடந்தவைகளைத் தெரிவித்து, 'பெண்ணே! நான் காட்டுக்குப் போய்வருகின்றேன்; நீ வருந்தாமலிரு' என்றார். ஸ்ரீராமன் புகன்ற மொழிகளைக் கேட்ட ஸீதை,

துறந்து போமெனச் சொற்றசொற் றேறுமோ
உறைந்த பாற்கடற் சேக்கை யுடனொரீஇ
அறந்தி றம்புமென் றய்ய னயோத்தியில்
பிறந்த பின்பும் பிரிவில ளாயினாள். (146)

'என்னையும் பிரிந்துபோகத் துணிந்தீரோ' என்று ஸீதை கூறியதைக் கேட்ட ஸ்ரீராமன் "கல்லுமுள்ளு மிகுந்து கடினமான காட்டுக்குவர உன் திருமேனி ஒவ்வாதே, நீப்போற்காயும் வெய்யிலிலே அக்காடு மிகச்சுடுமே' என்றனன். இதைக்கேட்ட ஸீதை,

பரிவி கந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனும்
எரியு மென்பதி யாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள். (147)

இவ்வாறு கூறிய ஸீதை சரேலென்று உள்ளே போய் மரவுரி யுடுத்துக்கொண்டு ஸ்ரீராமன் பக்கல் வந்து நின்றனள். ஸீதை தன்னுடன் காட்டிற்கு வரச்சமைந்து நின்றதைக் கண்ட காகுத்தன்,

முல்லை யுங்கடன் முத்து மெதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய்விளை வுன்னுவா
யல்லை போதவ மைந்தனை யாதலின்
எல்லை யற்ற விடர்தரு வாயென்றான். (147)

கொற்ற வன்னது கூறலுங் கோகிலம்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரிது தொன்றுமே
எற்று நந்தபி னின்பங்கொ லாமென்றாள். (148)

சீதை கூறியவைகளைக் கேட்ட சீராமன் வேறொன்றும் சொல்லாதவனாய் நகரமாந்தர் யாவரும் வருந்த அயோத்திமா நகரத்தின் வீதிவழியே சென்றான்.

சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை யிளையவன் முன்செல
காரை யொத்தவன் போம்படி கண்டவவ்
வூரை யுற்ற துணர்த்தவு மொண்ணுமோ? (149)

நகரமாந்தர் யாவரும் அழுது வருந்தினார்கள். சீராமபிரான் காடுபோகின்றானெனக் கேட்டுத் தளருஞ் சிந்தை யுடையவர்களெல்லாம் அவனை நெருங்கிச் சூழ்ந்து இவன் போவதற்கு முன்னரே நாங்களும் வனவாசஞ் செய்யப் போகின்றோமென்ற பேரொலியுடன் உடன்போகத் துணிந்தார்கள். சீராமபிரானே தந்தையிருக்கும் திருமாளிகையை அடைந்து, அவரைக் காணாமலே தாய்மாரை யெல்லாம் வணங்கி, 'என் தந்தையார் யான் பிரிந்ததினாலே மிகத் துயரங்கொண்டு வருந்துவர். அவரைத் துயரமாற்றிக் கொண்டிருங்கள்' என்று வணங்கினான். அவர்களும் சீராமபிரானையும் இளையபெருமாளையும் சானகியாரை-

யும் வாழ்த்தித் தெய்வங்களை நோக்கி, 'இவர்களைக் காத்து இரட்சிக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டு நின்றார்கள். அவர்களை அரிதில் நீங்கித் தன் முன்னே நின்ற வசிட்ட முனிவரை வணங்கிக்கொண்டே தம்பியும் சானகியாரும் தொடர்ந்து வர ஒரழகிய தேரில் ஏறிப் போனான்.

தைலமாட்டு

ஏவிய குரிசில்பின் யாவ ரேகிலார்
மாவிய ரானையின் மன்னை நீங்கலாத்
தேவிய ரொழிந்தனர் தெய்வ மாநகர்
ஓவிய மொழிந்தன வுயிரி லாமையால். (150)

ஸ்ரீராமபிரான் தான் செம்பொற் றேரின்மேல் ஏறி நகரமாந்தர்கள் கண்ணீராறாகப் பெருக்கெடுத்துச் செல்லும் அக்கண்ணீர் வெள்ளத்தில் தேரை விட்டுக்கொண்டே நட்சத்திரங்கள் பிரகாசிக்கவும் வெயி லொதுங்கவும் மேதியுமானும் ஊரிற் பிரவேசிக்கவும் தான் காடு செல்வது தரியாமல் சூரியன் அத்தமான மலையிற் பிரவேசிக்கவும் காட்டிற் சென்றான். ஸ்ரீராமபிரான் திருவயோத்தியை அகன்று இரண்டு யோசனைதூரஞ் சென்று ஒரு பூஞ்சோலையை யடைந்து அங்கேயுள்ள முனிவருடன் உறையுங் காலத்து, தன்னை ஓர் யோசனை அளவாய் வட்டமாகச் சூழ்ந்து எள் விழ இடமில்லாமல் எங்கும் பரந்து அச்சோலையின்புறத்தே சேனை சூழ்ந்துகொண் டிருந்தன. அவர்கள் அங்குள்ள நதிக்கரையின் மணற் பரப்பின்மேலும் பசும் புல்லின்மேலும் படுத்துக்கொண்டு உணவு சிறிதும் உண்ணாமல் அழுது கொண்டே யிருந்தார்கள். இவ்வாறு அவரவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்தைப்

பார்த்துக் கண்ணுறங்கா திருக்கின்ற ஸ்ரீராமபிரானும் மந்திரி சுமந்திரனை அழைத்து,

பூண்டபே ரன்பினு ளாரைப் போக்குவ
தரிது போக்கா
நீண்டுநின் றேகல் பொல்லா
நெறிதனைப் பிரிதலின்னே
தூண்டினை மீள நோக்கிச்
சுவட்டையோர்ந் தென்னை யங்கே
மீண்டனர் னென்ன மீள்வ
ரிதுநின்னை வேண்டிற் றென்றான். (151)

செவ்விய குரிசில் கூறத்
தேவிலான் செப்பு வானவ்
வெவ்விய தாயிற் றீய
விதியினின் மேலென் போலாம்
இவ்வயி னின்னை நீக்கி
யின்னுயிர் தீர்ந்தின் றேகி
அவ்வயி னனைய காண்டற்
கமைதலா லளிய னென்றான். (152)

வேறு

தேவியு மிளவலுந் தொடரச் செல்வனைப்
பூவியற் கானகம் புகவுய்த்தே னென்கோ
கோவினை யுடன்கொடு குறுகினே னென்கோ
யாவது கூறுகே னிரும்பி னெஞ்சினேன். (153)

தாருடை மலரினு மொதுங்கத் தக்கிலா
வாருடை மகளொடு மதுகை மைந்தரைப்
பாரிடைச் செலுத்தினேன் பழைய நண்பினேன்
தேரிடை வந்தனென் றீதிலே னென்கோ. (154)

சக்கரவர்த்தியினிடத்தே, 'நீ சொன்ன சொல்லைச் சொல்லி, யமதூதனைப்போற் போவேனோ? நான்கு திசைகளிலுள்ள சனங்களும் நகரமாந்தரும் ஸ்ரீராமனைத்தேற்றி அழைத்துக்கொண்டு வருவார்களென்ற நான் அந்த அரசனிடஞ்சென்று, 'நீ போய் விட்டாய்' என்று யமனை யொத்த சொல்லை எவ்வாறு சொல்ல இசைவேன்.

அங்கிமேல் வேள்விசெய் தரிதிற் பெற்றநின்
சிங்கவே றகன்றதென் றுணர்த்தச் செல்கெனோ
எங்கள்கோ மகற்கினி யென்னிற் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால். (155)

இவ்வாறு பலபல சொல்லி, நின்று அடியற்ற பனைமரம்போல அச்ஸ்ரீராமபிரானது பாதங்களில் வீழ்ந்து புலம்பினன்.

தடக்கையா லெடுத்தவற் றழுவிக் கண்ணநீர்
துடைத்துவே றிருத்திமற் றினைய சொல்லினான்
அடக்குமைம் பொறியொடு காணத் தப்புறம்
கடக்கும்வா லுணர்வினுக் கணுகுங் காட்சியான். ()

முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின் றுறுதியைப் பயக்கும் பேரறம்
இன்பம்வந் துறுமெனி னினிய தாயிடைத்
துன்பம் துறுமெனிற் றுறக்க லாகுமோ. (157)

வினைக்கரு மெய்ம்மையன் வனத்துள் விட்டனன்
மனைக்கரும் புதல்வனை யென்றல் மன்னவன்
தனக்கருந் தவமது தலைக்கொண் டேகுதல்
எனக்கருந் தவமிதற், கிரங்க லெந்தைநீ (158)

சீராமபிரான் இவ்வாறு சுமந்திரனை நீதி மொழிகளால் தேற்றித் தந்தைதாய் முதலியோருக்குத் தாம் வந்தனை செய்ததாய்ச் சொல்லும்படி பணித்தருளினர். பிராட்டியும் அப்படியே சொல்லித் தான் வளர்த்து வந்த பூவையையும் கிளியையும் பரிபாலித்துவரும்படி தன் தங்கைமாருக்குச் சொல்லச்சொன்னாள். அது கேட்டுச் சுமந்திரர் பிராட்டியின் பேதைமைத் துயரத்திற்கு மிகவும் விசனப்பட்டார். இளையபெருமாள் முதலில் இராமருக்கு முடி சூட்டுவே னென்று சொல்லிப் பின் ஒரு பெண்பிள்ளைக்கு அதைக் கொடுத்த சத்தியவானை அரசனென்று சொல்லலாமோ என்று நிந்தித்ததைக் குறித்து இராமமூர்த்தி கோபிக்க அவரும் தணிந்து பணிந்தபின், சுமத்திரரை அனுப்பி விட்டு,

தையறன் கற்புந்தன் தகவுந் தம்பியும்
மையறு கருணையு முணர்வும் வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேம மாகக்கொண்
டையனும் போயினு னல்லி னுப்பணே. (159)

வேறு

அஞ்சனக் குன்ற மன்ன
வழகனு மழகன் றன்மேல்
எஞ்சலில் பொன்போர்த் தன்ன
விளவனு மிந்து வென்பான்
வெஞ்சிலைப் புருவத் தாடன்
மெல்லடிக் கேற்ப வெண்ணூற்
பஞ்சிடைப் படுத்தா லென்ன
வெண்ணிலாப் பரப்பப் போனர். (160)

சீராமன் முதலியோர் தென்றிசையில் இரண்டு யோசனை கடந்து காட்டிற்குச் சென்றார்.

அப்படியே வெறுந்தேரோடு முகம்வாடி அயோத்திக்குப்போன சுமந்திரரை அரசன் 'அப்பா சுமந்திரா ! இராமன் எங்கே?' என்ன சுமந்திரர் கண்ணீர் பெருக வாய்குழறக் 'காட்டுக்குச் சென்றார்' என்று சொன்னவுடனே தசரதமகாராஜா உயிர் நீங்கினார். அப்போது தேவர் திவ்விய விமானத்தில் அவரை ஏற்றி வைகுண்டத்தில் செலுத்தினார்கள். அரசன் இறந்ததை அறிந்து கோசலாதேவி தரையில் வீழ்ந்து பலவகையிற் பன்னி அழுதாற்ற, அந்தப்புரத்துள்ள மற்றப் பெருமாட்டிகளும் வந்து அழப் பெருங்கோஷமுண்டாயிற்று. அப்போது வசிட்டமுனிவர், மகாராஜாவுக்குச் சரமகிரியை செய்வார் ஒருவரும் அங்கில்லாமையை யெண்ணி, அதற்குரியார் வந்து சேருமளவும் அரசனுடல் கெடாதிருப்பதற்காக அரசனைத் தைலக் கடலின்றலை யுய்த்தான். அங்கு நடத்த வேண்டிய ராஜகாரியத்திற்காகச் சுமந்திரரைப் பார்த்துக் கொள்ளும்படி நியமித்துப் பின்பு பரதனை அழைத்து வரும்படி தூதரைக் கேகய நகரத்துக்கு அனுப்ப அவர்களும் மிக்க விரைவாக அங்குச் சென்றார்கள்.

அது அப்படியிருக்க கங்கைக்கரைத் தோப்பில் தூங்கிக்கொண் டிருந்த நகரத்தார் விழித்துப் பார்த்தனர். அப்போது,

மீனீர் வேலை முரசியம்ப
விண்ணோ ரேத்த மண்ணிறைஞ்சத்
தூநீ ரொளிவா ளுடையிலங்கச்
சுடர்த்தே ரேறித் தோன்றினன்

வானே புக்கா னரும்புதல்வன்
மக்களகன்றார் வருமளவும்
யானே காப்ப னிவ்வுலகை
யென்பான் போல வெறிகதிரோன். (161)

துயில் நீத்தெழுந்த நகர மாந்தர் சக்கரவர்த்தித் திருமகனைரக் காணுமல், கண்போனவர் ஒரு காரணத்தால் கண்பெற்று மறித்தும் அக்கண்ணே இழந்தாற்போலவும், சாவாநின்றவர் சாவாமருந்தாகிய அமுதத்தையடைந்து உடனே அதைப் போக்கிக் கொண்டாற் போலவும், பெருந் துயரமுற்றுப் பரிதவித்து வழியில் தேருருளை களின் சுவடு கண்டு பின்பு அதையுங் காணுமல் அயோத்தி சேர்ந்து தயரதன் இறந்த செய்தியைக் கேட்டுக் கரைகாணுத் துயரத்தில் அமிழ்ந்தார்கள்- திருவயோத்தியோ, கடலினடுவே யிருந்து கொண்டும் அக்கடலினைக் கடக்காமலிருக்கின்ற வடவாமுகாக்கினிபோல, வசிட்டமுனிவர் ஆணையைக் கடவாமல் துன்பமே வடிவமா யிருந்தது. மந்திரியாகிய சுமந்திரனைத் திருவயோத்திக் கனுப்பிவிட்டுச் சீராமன் தம்பியோடும் சானகியாரோடும் நடுராத்திரியிற் காடு செல்வதைச் சொல்வாம்.

**கங்கை**

வெய்யோனொளி தன்மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு
மிளையானொடும் போனன்
மையோமர கதமோமறி
கடலோமழை முகிலோ
அய்யோவிவன் வடிவென்பதோ
ரழியாவழ குடையான். (162)

அளியன்னதோ ரறல்துன்னிய
குழலாள்கட லமிர்தின்
தெளியன்னதோர் மொழியாள்நிறை
தவமன்னதோர் பொறையாள்
வெளியன்னதோ ரிடையாளொடும்
விடையன்னதோர் நடையான்
களியன்னமு மடவன்னமு
விளையாடுவ கண்டான். (163)

அஞ்சம்பையு மையன்றன தகலம்பையு மளவா
நஞ்சங்களை வெலலாகிய நயனங்களை யுடையாள்
துஞ்சுங்களி வரிவண்டுகள் குழலின்மிசை சுழலக்
கஞ்சங்களை மஞ்சன்கழ னகுகின்றது கண்டாள். (164)

பெருமானும் பிராட்டியும் இவ்வாறு பார்த்துக்கொண்டே வருகையில் பிராட்டி தன் விழியைப்போல வயலிற் களைகளைபவர் தளையினின்றும் விட்டெறிகின்ற குவளைத் தொகுதியையும் கருப்பாலை முதலியவைகளையும் பார்த்துக் கொண்டே, நடந்து வருவதனுலாகிய இளைப்பறியாதவளாய் நடந்து சென்று, சின்னந் தருகின்ற மலர்களைத் தரும் நெருங்கிய நந்தவனங்களையும் பொற் சன்னங்களை அடித்துக்கொண்டு வரும் நதிகளையும் பார்த்து மகிழ்ந்து, சூரியனைப்போல் பிரகாசிக்கும் இரத்திநபணங்களை யணிந்த பல மாதர்கள் வசிக்கின்ற மருதநிலத்துப் பல ஊர்களையும் கடந்து, வேதாகம சாஸ்திர புராணங்களை ஐயந்திரிபற அறிந்தவர் பலரும் வாழ்கின்ற கங்கைக் கரையை அடைந்தார்கள்.

வேறு

கங்கை யென்னுங் கடவுட் டிருநதித்
தங்கி வைகுந் தபோதனர் யாவரும்
எங்கள் செல்கதி வந்ததென் றேமுறு
அங்க ணாயகற் காணவந் தண்மினார். (165)

பெண்ணி னோக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி நோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னோக்கும் பராவமு தைப்பசுங்
கண்ணி னோக்கின ருள்ளங் களிக்கின்றார். (166)

மனையி னீங்கிய மக்களை வைகலும்
நினையு நெஞ்சினர் கண்டிலர் நேடுவார்
அனையர் வந்துற வாண்டெதிர்ந் தார்களில்
இனிய மாதவப் பள்ளிகொண் டெய்தினார். (167)

பொழியுங் கண்ணிற் புதுப்புன லாட்டினர்
மொழியு மின்சொலின் மொய்ம்மலர் சூட்டினர்
அழிவி லன்பெனு மாரமிழ் தூட்டினர்
வழியில் வந்த வருத்தத்தை வாட்டினர். (168)

காயுங் கானிற் கிழங்குங் கனிகளுந்
தூய தேடிக் கொணர்ந்தனர் தோன்றனீ
ஆய கங்கை யரும்புன லாடினை
தீயை யோம்பினை செய்யமு தென்றனர். (169)

மங்கை யர்க்கு விளக்கன்ன மானையும்
செங்கை பற்றினன் றேவரும் துன்பறப்
பங்க யத்தயன் பண்டுதன் பாதத்தின்
அங்கை யிற்றருங் கங்கையி னாடினான். (170)

கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப்
பன்னி நீக்கரும் பாதகம் பாருளோர்
என்னி னீக்குவர் யானுமின் றெற்றந்த
உன்னி னீக்கினெ னுய்ந்தனென் யானென்றாள். ()

வெங்க ணாகக் கரத்தினன் வெண்ணிறக்
கங்கை வார்சடைக் கற்றையன் கற்புடை
மங்கை காணநின் றாடுகின் றான்வகிர்த்
திங்கள் சூடிய செல்வனிற் றோன்றினான். (172)

வஞ்சி நாண விடைக்கு மடநடைக்
கஞ்சி யன்ன மொதுங்க வடியன்ன
கஞ்ச நீரி லொளிப்பக் கயலுகப்
பஞ்சி மெல்லடிப் பாவையு மாடினாள். (173)

நுரைக்கொ ழுந்தெழுந் தோங்கி நுடங்கலால்
நரைத்த கூந்தலி னங்கைமந் தாகினி
உரைத்த சீதைத் தனிமையை யுன்னுவாள்
திரைக்கை நீட்டிச் செவிலியி னாட்டினாள். (174)

கங்கையில் நீராடிய சானகியாரது கூந்தற் கற்றை யாகிய மழைக்கூட்டம் நிலைநீரிலே தாழ்ந்து குழைவது கங்கைநதியி லிருந்தும் காளிந்தி நதியிலிருந்தும் மிகுந்த நீர்ச்சுழி போவதை ஒத்திருந்தது. அவ்வாறு சுழியிட் டோடுகின்ற மிக்க வொலியுள்ள ஆற்று வெள்ளத்தில் தன் கண்ணாகிய சேற்கண்டைகள் புரளச் சானகி நீராடி எழுவது அவள் முன்னாளில் திருப்பாற்கடலிற் றுயில் நீங்கி எழுந்ததை ஒத்திருந்தது.

செய்ய தாமரைத் தாள்பண்டு தீண்டலால்
வெய்ய பாதகந் தீர்த்து விளங்குவாள்
ஐயன் மேனி யெலாமனைந் தாவினி
வைய மாநக ரத்திடை வைகுமே. (175)

அக்கங்கை நதியிலுள்ள கட்டங்களில் ஒன்றில் இவ்வாறு இராகவன் சானகியுடன் நீராடி வேத பாரகராகிய முனிவர்கள் வசிக்கும் ஆச்சிரமத்தை யடைந்து, மெய்யுணர் வுடையோர் உணரும் இறைவனைக் கைதொழுது அக்கினி காரியமுஞ் செய்து பின்னர் அவ் வுணர்வுடையோர் அன்பிற்கமைந்த விருந்தாகிச் சமைந்தனன்.

ஆய காலையி னாயிர மம்பிக்கு
நாய கன்போர்க் குகனெனு நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினான். (176)

துடிய னாயினன் றோற்செருப் பார்த்தபேர்
அடிய னற்செறிந் தன்ன நிறத்தினான்
நெடிய தானை நெருங்கலி னீர்முகில்
இடியி னோடெழுந் தாலன்ன வீட்டினான். (177)

கொம்பு துத்தரி கொட்டு முறைமையன்
பம்பை பம்பு படையினன் பல்லவத்
தம்ப னம்பிக்கு நாத னழிகவுள்
தும்பி யீட்டம் புரைகிளை சுற்றத்தான். (178)

காழ மிட்ட குறங்கினன் கங்கையி
னாழ மிட்ட நெடுமையி னானரை
தாழ விட்டசெந் தோலன் றயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினான். (179)

பற்ருே டொத்தன்ன பல்சூற் கவடியன்
கற்ருே டொத்தன்ன போலுங் கழலினுன்
அற்ருே டொத்தன்ன குஞ்சியி னுளியின்
நெற்ருே டொத்து நெரிந்த புருவத்தான். (180)

பெண்ணை வன்செறும் பிற்பிறங் கிச்செறி
வண்ண வன்மயிர் வார்ந்துயர் முன்கையன்
கண்ண கன்றட மார்பெனுங் கல்லினன்
எண்ணெ யுண்ட விருள்புரை மேனியான். (181)

கச்சொ டார்த்த கறைக்கதிர் வாளினன்
நச்ச ராவி னடுக்குறு நோக்கினன்
பிச்ச ராமன்ன பேச்சின னிந்திரன்
வச்சி ராயுதம் போலு மருங்கினுன். (182)

ஊற்று மெய்ந்நற வூனொடு மீனுகர்
நாற்ற மேய நகையின் முகத்தினுன்
சீற்ற மின்றியுந் தீயெழ நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமுறுங் குரலினுன். (183)

சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருறை வாழ்க்கையான்
ஒருங்கு தேனொடு மீனுப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினுன். (184)

சுற்ற மப்புற நிற்கச் சுடுகணை
விற்று றந்தரை வீக்கிய வாளொழித்
தற்ற நீத்த மனத்தின னன்பினன்
நற்ற வப்பள்ளி வாயிலை நண்ணினுன். (185)

கூவா முன்ன மிளையோன் குறுகிநீ
ஆவான் யாரென வன்பி னிறைஞ்சினான்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவ னுயடி யேனென்றான்.(186)

### வேறு

நிற்றியீண் டென்று புக்கு
நெடியவற் றொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக்
குறுகின னிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானு முள்ளந்
தூயவன் றாயி னல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்
கிறைகுக னொருவ னென்றான். (187)

அண்ணலும் விரும்பி யென்பா
லழைத்திநீ யவனை யென்றான்
பண்ணவன் வருக வென்னப்
பரிவினன் விரைவிற் புக்கான்
கண்ணனைக் கண்ணி னோக்கிக்
கனிந்தன னிருண் டகுஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி
வளைத்துவாய் புதைத்து நின்றான்.(188)

இருத்தியீண் டென்ன லோடு
மிருந்தில னெல்லை நீத்த
அருத்தியன் தேனு மீனு
மமுதினுக் கமைவ தாகத்

திருத்தினென் கொணர்ந்தே னென்கொற்
றிருவுள மென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி
முறுவலன் விளம்ப லுற்றான். (189)

அரியதா முவப்ப வுள்ளத்
தன்பினா லமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த தென்றா
லமிர்தினுஞ் சீர்த்த தன்றே
பரிவினிற் றழீஇய வென்னிற்
பவித்திர மெம்ம னோர்க்கும்
உரியன வினிதி னாமு
முண்டென மன்றோ வென்றான். (190)

சிங்கவே றனைய வீரன்
பின்னருஞ் செப்பு வான்யாம்
இங்குறைந் தெறிநீர்க் கங்கை
யேறுது நாளை யாணர்
பொங்குநின் சுற்றத் தோடும்
போயுவந் தினிது னூரில்
தங்கிநீ நாவா யோடுஞ்
சாருதி விடிய வென்றான். (191)

கார்குலா நிறத்தான் கூறக்
காதல னுணர்ந்து வானிப்
பார்குலாஞ் செல்வ நின்னை
யிங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யா
னின்னலி னிருக்கை நோக்கித்
தீர்கிலே னான தைய
செய்குவெ னடிமை யென்றான். (192)

கோதைவிற் குரிசி லன்னான்
　　கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி
　　திருமுக நோக்கித் தீராக்
காதல னுருகு மென்று
　　கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினு மினிய நண்ப
　　விருத்தியீண் டெம்மொ டென்றான்.(193)

திருநகர் தீர்ந்த வண்ண
　　மானவ தெரித்தி யென்ன
பருவர றம்பி கூறப்
　　பரிந்தவன் பையு மெய்தி
இருகணீ ரருவி சோரக்
　　குகனு மாண்டிருந்தா னென்னே
பெருநிலக் கிழத்தி நோற்றும்
　　பெற்றிலள் போலு மென்றான். (194)

இலக்குவன் கூறிய வினைத்தையும் குகன் கேட்டுத் துன்பமடைந்து இரு கண்களினின்றும் அருவிசோர அங்கே இருந்தனன். பகையை யோட்டித் திசைகளை வென்று திகிரி செலுத்திப் புகழ் நிறுவி எந்நாளும் பெரிய நிலத்தின்கண் உள்ளோர் யாவர் மனத்தின் கண்ணிருந்த தயரதன் என்னலாம்படி செங்கதிர்ச் செல்வன் அத்தமன வரையை அடைந்தான்.

சூரியன் அத்தமன வரையை அடையவே, மாலைக்-காலத்திற்குரிய நியமங்களைச் செய்து முடித்து இரவில் நாணலினால் தொடுக்கப்பட்ட மாலையைப் பரப்பித் தரையாகிய படுக்கையில் சீதையும் இரகுநாயகனும்

நித்திரை செய்தனர். வில்லேந்திய கையுடன் இளைய-பெருமாள் சிறிதும் கண்ணிமை கொட்டாமல் புறத்தே காத்திருந்தனன்.

இளையவன் செய்கையைக் கண்ட நாவாய்க் கிறை-வனாகிய குகன் கண்ணில் அருவிசோர மலைபோல நின்றனன். சூரிய னுதயமாயினான். இரகுநாயகனும் காலைக்கடனை முனிவருடனே சென்று முடித்துக் கொண்டு குகப்பெருமானை நோக்கி விரைவாகப் படகைக் கொண்டு வரவேண்டுமென்று கட்டளையிட்டனன். அதைக் கேட்ட குகன்,

வேறு

ஏவிய மொழிகேளா விழிபுனல் பொழிகண்ணான்
ஆவியு முலைகின்று னடியிணை பிரிகில்லான்
காவியின் மலர்காசா கடல்மழை யனையானைத்
தேவியோ டடிதாழாச் சிந்தனை யுரைசெய்வான்.(195)

பொய்ம்முறை யிலரேமெம் புகலிடம் வனமேயால்
கொய்ம்முறை யுறுதாராய் குறைவிலெம் வலியேமால்
செய்ம்முறை குற்றேவல் செய்குது மடியோமை
இம்முறை யுறவென்ன வினிதிரு நெடிதெம்மூர். (196)

தேனுள தினையுண்டாற் றேவரு நுகர்தற்காம்
ஊனுள துணைநாயே முயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையு முளதன்றே
நாளுள தனையுநீ யினிதிரு நடவெம்பால். (197)

ஐயிரு பத்தோடைந் தாயிர ருளரானை
செய்குநர் சிலைவேடர் தேவரின் வலியாரால்
உய்குது மடியேமெங் குடிலிடை யொருநாணீ
வைகுதி யெனின்மேலோர் வாழ்விலை பிறிதென்றான். ()

அண்ணலு மதுகேளா வகநிறை யருண்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் னுழையாமப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்
றெண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்றான்.(199)

அக்கருத்தை யறிந்த குகப்பெருமாள் விரைந்து போய்ப் படகு கொண்டு வருகின்றேனென்று விடை பெற்றுச் சென்று, 'கொண்டுவந்தேன்' என்று அறிவிக்க, சீராமபிரானும் அந்தணர்களிடத்தே தான் விடைபெற்றுத் தம்பியோடும் சானகியாரோடும் அப் படகிலேறி விரைந்து படகுவிடக் குகனுக்குக் கட்டளையிட்டனர். அக் குகப்பெருமாளும் அக் கங்கையில் படகை விரைந்து செலுத்தவே அது அன்னம் போலுஞ் சென்றது. சீராமபிரானது பிரிவுக்கு அவ்வந்தண ரெல்லாம் எரியுறு மெழுகாய் ஏங்கி மனம் வருந்தினர். அப் படகேறிச் செல்லுகையில்,

பாலுடை மொழியாளும் பகலவ னனையானுஞ்
சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடத்
தோலுடை நிமிர்கோலிற் றுழவிட நடுநாவாய்
காலுடை நெடுஞெண்டிற் சென்றது கடிதம்மா. (200)

அப் படகைக் கங்கையும் அலையாகிய கையினாலே தானே ஏந்திச் சென்று அக்கரையில் விடுத்தாள். அக்கரை எய்தியவுடன் சீராமபிரானும் தன்பால் அன்புடைய குகப்பெருமானை நோக்கிச் சித்திரகூடத்திற்குப் போம்வழி யாதென்று கேட்க, பத்தியினால் தன்னுயிரையும் கொடுக்கும் பேரன்பு வாய்ந்த குகப் பெருமாள் சீராமபிரானை வணங்கி,

நெறியிடு நெறிவல்லே னேடினேன் வழுவாமல்
நறியன கனிகாயுந் நறவிவை தரவல்லேன்
உறைவிட மமைவிப்பே னொருநொடி வரையும்மை
பிறிகிலே னுடனேகப் பெறுகுவ னெனினுயேன். (201)

கல்லுவென் மலைமேலுங் கவலையின் முதல்யாவுஞ்
செல்லுவென் னெறிதூரஞ் செறிபுன றரவல்லேன்
வில்லின முளனென்றும் வெருவலெ னிருபோதும்
மல்லினு முயர்தோளாய் மலரடி பிரியேனான். (202)

திருவுள மெனின்மற்றென் சேனையு முடனேகொண்
டொருவலெ னிருபோது முறைகுவே னுளரானார்
மருவல ரெனின்முன்னே மாள்குவென் வசையில்லேன்
பொருவரு மணிபார்பா போதுவே னுடனென்றான். ()

அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான்
என்னுயி ரனையாய்நீ யிளவலுன் னிளையானிந்
நன்னுத லவணின்கே ணளிர்கட னிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் றொழிலுரி மையினுள்ளேன்.()

துன்புள தெனினன்றோ சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புள மொருநால்வே முடிவுள தெனவுன்னா
அன்புள மினிநாமோ ரைவர்க ளுளரானேம். (205)

படருற வுளனும்பி கானுறை பகலெல்லாம்
இடருறு பகையாபோ யானென வுரியாய்நீ
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேல்யான்
வடதிசை வருமந்நா ளின்னுழை வருகின்றேன்.(206)

அங்குள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்குள கிளைகாவற் கியாருள ருரைசெய்யாய்
உன்கிளை யெனதன்றோ வுறுதுய ருறலாமோ
என்கிளை யிதுகாவென் னேவலி னினிதென்றான்.(207)

பணிமொழி கடவாதான் பருவர லிகவாதான்
பிணிவுடை யவனென்னும் பிரிவினன் விடைகொண்
அணியிழை மயிலொடு மையனு மிளையோனும் [டான்
திணிமர நிறைகானிற் சேணுற நெறிசென்றார். (208)

வனம் புகுதல்

இவ்வாறு மூவரும் காட்டிற்சென்ற பருவம் இளவேனிற் பருவம். சீராமன் முதலியோர் வரக்கண்ட அக்காடு அவர் வருகையால் நீரொடு கலந்த சீதம் வாய்ந்த கார்காலம் வருங்குறியை ஒப்பக் காட்டியது என்று சொல்லக் கிடந்தது. சூரியனே இளநில வெறிக்கவும், மரங்களெல்லாம் நிழலைத் தரவும், மேகம் பனித்துளி வீசவும், தென்றற் காற்றோடு கலந்து மலர்கள் மணம் வீசவும் மயிலினங்கள் தங்கள் சிறகை விரித்தாடும் வழிகளைக் கடந்து போகையில் சீராமன் சானகிக்கு,

அருந்ததி யனையாளே யமிர்தினு மினியாளே
செருந்தியின் மலர்தாங்குஞ் செறிவிதழ் வனசோகம்
பொருந்தின களிவண்டிற் பொதிவன பொன்னூதும்
இருந்தையி னெழுதீயொத் தெழிவன வியல்காணாய்.()

வாள்புரை விழியாயுன் மலரடி யணிமானத்
தாள்புரை தளிர்வைகுந் தகைநிமி றிவைகாணாய்
கோள்புரை யிருள்வாசக் குழல்புரை மழைகாணாய்
தோள்புரை யிளவேயின் றொகுதிக ளவைகாணாய்.(210)

என்றனன் மடவாளோ டினிதினின் விளையாடிப்
பொன்றிணி திரடோளன் போயின னெறிபோதுஞ்
சென்றது குடபாலத் திருமலை யிதுவன்றே
என்றனன் வினைவென்றார் மேவிட மெனலோடும்.(211)

அருத்தியி னகம்விம்மு மன்பினி னெடுநாளில்
திருத்திய வினைமுற்றிற் றென்றனன் றெரிகின்றான்
பரத்துவ னெனுநாமப் பரமுனி பவநோயின்
மருத்துவ னனையானை வரவெதிர் கொளவந்தான்.(212)

குடையின னிமிர்கோலன் குண்டிகை யினன்மூரிச்
சடையின னுரிமானின் தோலினன் மரநாரின்
உடையினன் மயிர்நாலு முருவின னெறிபேணும்
நடையினன் மறைநாலு நடநவி றருநாவான். (213)

செந்தழல் புரிசெல்வன் றிசைமுக முனிசெவ்வே
தந்தன வுயிரெல்லாந் தன்னுயிரென நல்கும்
அந்தண னுலகேழு மமையெனி னமசேரன்
உந்தியி னுதவாமே யுதவிடு தொழில்வல்லான். (214)

அம்முனி வரலோடு மனகனு மலர்தூவி
மும்முறை தொழுதானம் முனிவனு மெதிர்புல்லி
இம்முறை யுருவோநா னெய்துவ தெனவுள்ளம்
விம்மின னிழிகண்ணீர் விழிவழி யுகநின்றான். (215)

அகலிட நெடிதாளு மமைதியை யதுதீரப்
புகலிட மெமதாகும் புரையிடை யிதுநாளில்
தகவில தவவேடந் தழுவினை வருவானேன்
இகலடு சிலைவீர விளையவ னொடுமென்றான். (216)

உற்றுள பொருளெல்லா முணர்வுற வுரைசெய்தான்
நற்றவ முனியந்தோ விதிதரு நவையென்பான்
இற்றது செயலுண்டோ வினியென விடர்கொண்டான்
பெற்றில டவமந்தோ பெருநில மகளென்றான். (217)

துப்புறழ் துவர்வாயின் றாய்மொழி மயிலோடும்
அப்புறு கடல்ஞால மாளுதி கடிதென்று
ஒப்பறு மரசுன்னை யுயர்வன முறவேகென்
றெப்பரி சுயிருந்தா னென்றுனை யவனென்றான்.(218)

அல்லலு முளவின்ப மனுகலு முளவன்றே
நல்லவு முளசெய்யு நவைகளு முளவென்றால்
இல்லையோர் பயனின் றிடருறு மிதினென்னுப்
புல்லின னுடனேகொண் டினிதுறை புரைபுக்கான். ()

பாரத்துவாசர் சீராமனை எதிர்கொண் டழைத்து, அவன் தன் தம்பியோடும் மனைவியோடும் காட்டிற்கு வந்த காரணங்களை அறிந்துகொண்டு அம்மூவரையும் தமது இருப்பிடத்திற்குக் கூட்டிக்கொண்டு போய் அவர்களிருக்க இடமுதவி அதிதிபூசைக்கு வேண்டிய வற்றைக் குறைவற நடத்திக் காய்கனி கிழங்கு முதலியவற்றையும் கொடுத்து இதவார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தனர். பொழுது விடிந்ததும் அம் முனிவர் சீராமனை நோக்கி,

வேறு

நிறையு நீர்மலர் நெடுங்கனி கிழங்குகாய் நேர்ந்த
குறையுந் தீயவை தூயவை குறைவில வெம்மோ
டுறையு மிவ்வழி யொருங்கினி துயர்தவ முயல்வார்க்
கிறையு மீதலா தினியதோ ரிடமரி தின்னும் (220)

கங்கை யாளொடு கரியவ ளுமகள் கலந்த
சங்க மாதலிற் பிரியலன் றுமரைச் செங்கண்
அங்க நாயக வயனுக்கு மரும்பெறற் றீர்த்தம்
எங்கள் போலியர் தரத்ததன் றிருத்திபீண் டென்றான்.

பூண்ட மாதவ னவ்வழி விரும்பினன் புகல
நீண்ட தன்றிது நிறைபுன லாட்டுக்கு நடுவாம்
மாண்ட சிந்தைய விவ்வழி வைகுவெ னென்றால்
ஈண்டை யாவரு நெருங்குவ ரென்றன னிராமன்.(222)

ஆவ துள்ளதே யையகே ளோயிரண் டமைந்த
காவ தப்பொழிற் கப்புறங் கழிந்தபின் காண்டி
மேவு காதலின் வைகுதி விண்ணினு மினிதால்
தேவர் கைதொழுஞ் சித்திர கூடமென் றுளதால். (223)

என்று காதலி னேயின னடிதொழு தேத்திக்
கொன்றை வேய்ங்குழற் கோவலர் முல்லையங் குடுமி
சென்று செங்கதிர்ச் செல்வனு நடுவுறச் சிறுமான்
கன்று நின்றுகள் காளிந்தி யெனுநதி கண்டார். (224)

ஆறு கண்டன ரகமகிழ்ந் திறைஞ்சின ரறிந்து
நீறு தோய்மணி மேனியர் நெடும்புனல் படிந்தார்
ஊறு மென்கனி கிழங்கினோ டுண்டுநீ ருண்டார்
ஏறி யேகுவ தெங்ஙன மென்றலு மிளையோன். (225)

வாங்கு வேய்ங்கழை துணித்தனன் மாணையின் கொடியால்
ஓங்கு தெப்பமொன் றமைத்ததி னும்பரி னுலம்போல்
வீங்கு தோளண்ண றேவியோ டினிதுவீற் றிருப்ப
நீங்கி னனந்த நெடுநதி யிருகையா னீந்தி (226)

ஆலே பாய்வய லயோத்திய ராண்டகைக் கிளையான்
மாலே மால்வரைத் தோளெனு மந்தரந் திரிய
காலே வேலேயை யுற்றது கழிந்தநீர் கடிதின்
மேலே வேலேயிற் பாய்ந்தது மீண்டநீர் வெள்ளம்.(227)

அனைய ரப்புன லேறின ரக்கரை யுற்றார்
புனையும் வற்கலைக் கோலத்தார் நெடுநெறி போனார்
சினையு மூலமும் வேரும்வெந் திருநிலந் தீய்ந்து
நினையு நெஞ்சமுஞ் சுடுவதோர் நெடுநெறி நேர்ந்தார். ()

நீங்க லாற்றலள் சனகியென் றன்னவன் நினைந்தான்
ஓங்கு வெய்யவ னுடுபதி யெனக்கதி ருகுத்தான்
தாங்கு வெங்கடத் துலவைகள் தழைகொண்டு தழைத்த
பாங்கு வெங்கனற் பங்கய வனங்களாய்ப் பரந்த. (229)

வறுத்து வித்திய வனையன வல்லயிற் பரற்கள்
பறித்து வித்திய மலரெனக் குளிர்ந்தன பசைந்த
இறுத் தெறிந்தன வல்லிக ளிளந்தளி ரீன்ற
கறுத்த வாளர வெயிற்றினு ளமுதுகக் களித்த.(230)

குழுமி மேகங்கள் குமிறின குளிர்துளி கொணர்ந்த
மழுவில் வேடரு முனிவரின் முனிகில ருயிரைத்
தழுவி நின்றன பசியில பகையில தணிந்த
உழுவை யின்முலே மானிளங் கன்றுக ளுண்ட. (231)

கல்ல ளைக்கிடந் தகடுவெந் தயர்கின்ற கதழ்பாம்
பல்ல லுற்றில வலைபுனற் கிடந்தன வனைய
வல்லை யுற்றவேய் புற்றொடு பெரிவன மணிவாழ்
புல்லெ யிற்றிளங் கன்னியர் தோளெனப் பொலிந்த.()

கால மின்றியுங் கனிந்தன கனிநெடுங் கந்தம்
மூல மின்றியு முகிழ்த்தன நிலனுற முழுதுங்
கோல மங்கைய ரொத்தன கொம்பர்க ளிம்பர்ச்
சீல மன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ. ()

பந்த ருட்புரை பாசறைப் பொருள்வயிற் பருவம்
தந்த கேள்வரை யுயிருறத் தழுவினர் பிரிந்த
கந்த வோதியர் சிந்தையிற் கொதிப்பதக் கழலோர்
வந்த போதவர் மனமெனக் குளிர்ந்ததவ் வனமே. ()

வெளிறு நீங்கிய பாலையை மெல்லெனப் போனார்
குளிறு வான்மதிக் குழவிதன் சூல்வயிற் றொளிப்பப்
பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பணைத் தடக்
களிறு நீட்டமெச் சித்திர கூடத்தைக் கண்டார். [கைக்

## சித்திரகூடம்

நினையுந் தேவர்க்கு நமக்குமொத் தொருநெறி நின்ற
அனக னங்கண னாயிரம் பெயருடை யமலன்
சனகன் மாமட மயிற்கந்தச் சந்தனஞ் செறிந்த
கனக மால்வரை யியல்பெலாந் தெரிவுறக் காட்டும். ()

வாளும் வேலும்விட் டளாயின வனையகண் மயிலே
தாளி னேலமு மாலமுந் தொடர்தரு சாரல்
நீள மாமலை துயில்வன நீருண்ட கமஞ்சூற்
காள மேகமு நாகமுந் தெரிகில காணாய். (237)

உவரி வாயன்றிப் பாற்கட லுதவிய வமுதே
துவரி நீண்மணித் தடந்தொறு மிடந்தொறுந் துவன்
கவரி பானிற வால்புடை பெயர்வன கடிதிற் [றிக்
பவள மால்வரை யருவியைப் பொருவின பாராய் ()

உருகு காதலிற் றழைகொண்டு மழலைவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினை முழைநின்றும் வாங்கிப்
பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப் பியானை
பருக வாயினிற் கையினின் றளிப்பது பாராய். (239)

வீறு பஞ்சின்றி யமுதநெய் மாட்டிய விளக்கே
சீறு வெங்கதிர் செறிந்தன பேர்கல திரியா
மாறில் மண்டில நிரப்பிய மாணிக்க மணிக்கற்
பாறை மற்றொரு பரிதியிற் பொலிவன பாராய். (240)

மஞ்ச ளாவிய மாணிக்கப் பாறையில் மறைவ
செஞ்செ வேநெடு மரகதப் பாறையிற் றெரிவ
விஞ்சை நாடியர் கொழுநரோ டாடிய விமலப்
பஞ்ச ளாவிய சீறடிச் சுவடுகள் பாராய். (241)

அறைக முற்சிலைக் குன்றவ ரகன்புனங் காவற்
பறையெ டுத்தொரு கடுவனின் றடிப்பது பாராய்
பிறையை யெட்டினள் பிடித்திதற் கிதுபிழை யென்று
கறைத் டைக்குறும் பேதையோர் கொடிச்சியைக் காணாய்.

வளைகள் காந்தளிற் பெய்தன வளையகைம் மயிலே
தொளைகொ டாழ்தடக் கைநெடுந் துருத்தியிற் றாக்கி
யளவில் மூப்பின ரருந்தவர்க் கருவிநீர் கொணர்ந்து
களப மால்கரி குண்டிகை சொரிவன காணாய். (243)

வடுவின் மாவகி ரிவையெனப் பொலிந்தகண் மயிலே
இடுகு கண்ணின ரிடருறு மூப்பின ரேக
நெடுகு கூனல்வா னீட்டின வுருகுறு நெஞ்சக்
கடுவன் மாதவர்க் கருநெறி காட்டுவ காணாய். (244)

தெரிவை மார்க்கொரு கட்டளை யெனச்செய்த திருவே
பெரிய மாக்களிற் பலாக்களிற் பிறங்கிய வாழை
அரிய மாக்கனி கடுவன்க ளன்புகொண் டளிப்பக்
கரிய மாகிழங் ககழ்ந்தன கொணர்வன காணாய். (245)

இடிகொள் வேழத்தை யெயிற்றொடு மெடுத்துடன் விழுங்கும்
கடிய மாசுணங் கற்றறிந் தவரென வடங்கி
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித் தேறப்
படிகடாமெனத் தாழ்வரை கிடப்பன பாராய். (246)

இனைய யாவையு மேந்திழைக் கியம்பினன் காட்டி
அனைய மால்வரை யருந்தவ ரெதிர்வர வணங்கி
வினையி னீங்கிய வேதியர் விருந்தின னானான்
மனையில் மெய்யனு மாதவம் புரிந்தவன் மைந்தன். ()

இவ்வாறு சித்திரகூடத்தி னியல்பெல்லாம் சானகிக்குத் தெளிவுறக் காட்டித் தன் வரவை நோக்கி அருமையான முனிவர்கள் எதிர்வரக்கண்டு அவர்களை வணங்கி அவர்களால் உபசரிக்கப்பட்டு அவர்கட்கு விருந்தாக அமைந்தான் இரகுநாயகன். அப்போது சூரியன் அஸ்தமன மலையை அடைந்தான். சந்திரனும் உதயமானான். சூரியன் அஸ்தமனமாகவே மகளிர் முகம்போல விளங்கியிருந்த தாமரை மலர்களெல்லாம் குவிந்தன. நக்ஷத்திரங்களைப்போல பிரகாசித்துக் கொண்டிருந்த வெள்ளிய ஆம்பற்பூக்கள் வானைப்போல தடாகங்களில் எல்லா மலர்ந்தன. ஆண் குரங்குகளும் பெண் குரங்குகளும் பொய்கைகளை நோக்கிச்சென்றன. களிறுகளும் பிடிகளும் சாரலை நோக்கிச் சென்றன. குற்றமில்லாத சகுந்தலைப் பறவைகள் தம் கூடுகளை

நோக்கிப் போயின. இப்படிப்பட்ட சமயத்தில் மெய்-யுணர்ச்சியா லறியப்படும் இரகுநாயகன் அந்தியை நோக்கி நின்றான்.

வேறு

மாலைவந் தகன்றபின் மருங்கி லாளொடும்
வேலைவந் துறைவிட மேய தாமெனக்
கோலைவந் துமிழ்சிலைத் தம்பி கோலிய
சாலைவந் தெய்தினான் றவத்தி னெய்தினான். (248)

நெடுங்கழைக் குறுந்துணி நிறுவி மேனிரைத்
தொடுங்கலி னெடுமுக டொழுக்கி யூழுற
இடுங்கலில் கைவிசித் தேற்றி யெங்கணும்
முடங்கலில் வரிச்சுமேல் விரிச்சு மூட்டியே. (249)

தேக்கடைப் படலையிற் செறிவு செய்துபின்
பூக்கிளர் நாணலின் புல்லு வேய்ந்துகீழ்
தூக்கிய வேய்களிற் சுவரும் சுற்றுறப்
போக்கிம ணெறிந்தவை புனலிற் றீற்றியே. (250)

வேறிட மியற்றினன் மிதிலை நாடிக்கும்
கூறின நெறிமுறை குயிற்றிக் குங்குமச்
சேறுகொண் டழகுறத் திருத்தித் திண்சுவர்
ஆறிடு மணியொடுங் கனக மப்பியே. (251)

மயிலுடைப் பீலியால் விதான மேல்வகுத்
தயிலுடைச் சுரிகையா லருகு தூக்கறுத்
தெயிலிளங் கழைகளா லியற்றி யாறிடு
செயலுடைப் புதுமலர் பொறப்பச் சிந்தியே. (252)

இவ்வாறு இளையபெருமாள் சமைத்த சாலையின்-கண், நன்மையாகிய நெடிய திசைமுக னுள்ளத்தும் நம்மனோருடைய எண்ணரிய உயிரிடத்தும் ஒக்க வீற்-

றிருக்கும் இறைவன் பொன்னிறத்தையுடைய சானகி யோடும் குடி புகுந்தனன். வஞ்ச மகன்ற மனமும் பெருமை யமைந்த மறையும் பரிசுத்தமாகிய பாற்கட-லும் வைகுந்தமும் என்று சொல்லப்படும் அத் தவச்-சாலையில் பெறலரும் அன்புடையவனாகிய இறைவன் பொருந்திய நெஞ்சிடை விருப்புடையனாகத் தங்கினான். பின்பு அயோத்தியர் பெருமான் மிதிலை நாட்டன்னத்-தின் பாதங்கள் இங்கே நடக்கப் பெற்றன. தம்பி கை-களோ பன்னசாலைகட்டி வருந்தின வென்றால் யாதுமில் லாதவர்க் கியையாதவை யாவையென்று நினைத்து,

வேறு

என்று சிந்தித் திளையவற் பார்த்திரு
குன்று போலக் குவவிய தோளினாய்
என்று கற்றனை நீயிது போலென்றான்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான் (253)

அடருஞ் செல்வ மளித்தவ னாணையாற்
படரு நல்லறம் பாலித் திரவியில்
சுடரு மெய்ப்புகழ் சூடினை னென்பதென்
இடரு னக்கிழைத் தேனெடு நாளென்றான். (254)

அந்த வாய்மொழி யையனி யம்பலும்
நொந்த சிந்தை யிளையவ னோக்கினால்
எந்தை காண்டி யிடரினுக் கங்குரம்
முந்தி வந்து முளைத்ததன் றேவென்றான். (255)

ஆக செய்தக்க தில்லை யறத்தினின்
றேக லென்ப தரிதென்று மெண்ணினான்
ஓகை கொண்டில னுள்ளிடர் நோக்கினான்
சோக பங்கந் துடைப்பரி தாலென. (256)

பின்னுந் தம்பியை நோக்கிப் பெரியவன்
மன்னுஞ் செல்வத்திற் குண்டுவ ரம்பிதற்
கென்ன கேடுண்டிவ் வெல்லையி லின்பத்தை
உன்னு மேல்வரு மூதியத் தோடென்றான். ()

தேற்றித் தம்பியைத் தேவருங் கைதொழ
நோற்றி ருந்தன ஞன்சிலை யோனிப்பால்
ஆற்றல் மாதவ ஞணையிற் போனவர்
கூற்றி னுற்றது கூறலுற் முமரோ. (258)

தூதுவர், வசிட்ட முனிவர் எழுதிக்கொடுத்த திரு-முகத்தை எடுத்துக்கொண்டு இரவும் பகலும் நடந்து கேகய தேசத்தை அடைந்து பரதனது திருமா-ளிகையைச் சேர்ந்து, காவற்காரரை நோக்கி 'நாங்கள் வந்தமையைப் பரதராசனுக்கு அறிவிக்க வேண்டும்' என்று சொல்லியனுப்ப அவர்களும் இவர்கள் வரவைத் தெரிவிக்கக்கேட்ட பரதன் அவர்களை வரும்படி கட்டளை யிட்டான். அவர்களுஞ் சென்று பரதராசனின் திரு-வடிகளைத் தொழப் பரதனும், 'நமது அரசர் பெருமான் சுகமாக இருக்கின்றனரோ? எமது பெருமாஞகிய இரகுநாயகனும் இளைய பெருமாளும் சுகமாக இருக்-கின்றனரோ?' என, அவர்களும், 'சுகமாக இருக்கின்-றார்கள்' என்று சொல்ல, தயரதனையும், இரகுநாய-கனையும் தியானித்து, அவர்களிருந்த திசை நோக்கி வணங்கி நின்முன். தூதுவரும் முனிவர் பெருமான் முத்திரை யிட்டிருக்கும் திருமுகத்தைக் கொடுக்க, அதைப் பரதன் வாங்கி மனமுருக நோக்கி முடிமேற் சூடிக்கொண்டு அதையவிழ்த்து வாசித்துப் பார்த்து, அதைக் கொண்டு வந்து கொடுத்த தூதர்களுக்கு வேண்டிய திரவியங் கொடுத்து, மயிர்க்கூச்செறிந்து தன்

திருத் தமையனைக் காணவேண்டும் என்னும் ஆசை அதிகப்படத் தன் மாதாமகனாகிய கேகயராசனிடத்தே விடைபெற்றுத் தன் தம்பியோடும் தேரேறி, நாளுங் கோளுங் குறியாமல் நால்வகைச் சேனைகள் சூழவும், அரசர் கூட்டங்கள் புடைசுற்றவும், சங்கத்தொனி முழங்கவும், பேரிகைகள் கடல்போல் ஒலிக்கவும், புறப்பட்டு, ஆறும், காடும், மலையும் கடந்து, ஏழாநாள் கோசலை நாட்டை அடைந்தான். அத் தேசத்திலோ வயல்கள் ஏர் பூட்டி உழாமலிருந்தன. வீரர் தோள்கள் மாலை யிழந்திருந்தன, திருமகள் தாமரையை நீங்கினாற்போல அந்நாட்டை நீங்கியிருந்தாள். மலர்க்கூட்டமெல்லாம் பறிப்பாரில்லாமையால் உலர்ந்து உதிர்ந்து கிடந்தன. ஏய்ந்தகாலம் இது, இதற்காமென்று ஆராய்ந்து அறியும் மள்ளரில்லாமையால் மாம்பழச் சாற்றினால் செஞ்சாலி முளைத்தது. கிள்ளைகளும் தூது செல்லாதிருந்தன. அழகிய வீதிகளில் பேரிகை குடமுழா முழக்கம் நீங்கியிருந்தன. திருவிழாவும் நடக்கவில்லை. புள்ளாங்குழற் பாட லொழிந்திருந்தன. நாடக சாலைகள் ஆட லொழிந்திருந்தன. மாந்தர் நீராடுதலும் செய்யாம லிருந்தனர். மாலைகள் சூடாம லிருந்தனர். வீடுகளில் மங்கலவள்ளை என்னும் பாட்டைப் பாடாதிருந்தனர். முகம் நகையிழந்திருந்தன. வீடுகள் எல்லாம் வாசனை கமழ்கின்ற அகிற்புகை இழந்திருந்தன. விளக்குக ளெல்லாம் அழற்சிகை இழந்திருந்தன. மாதர்கள் கூந்தல்கள் மலர்மாலை இழந்து இருந்தன. அலர்ந்த பயிர்கள் நீர் செல்லும் வழியிற் சலம் செல்லாமையால் உலோபிகள் கடைத் தலைவாயிலில் வருந்தும் யாசகர்களை ஒத்திருந்தன. இவ்வாறு அத்தேசம் பொலிவிழந்து ஆவி நீங்கிய உடல்போலிருந்தது. இவ்-

வாறு அத் தேசத்தைப் பார்த்துக்கொண்டு, 'இதென்ன, இங்கே நடந்த துன்பச் செய்தி யொன்றுந் தெரிய-வில்லையே !" என்று நினைத்துத் தான் தீங்கான காரியங் கேட்க விருக்குமென்று நின்று பெருமூச்செறிந்து விரைந்து தேரேறிச் சென்று நகரவாயிலைக் கடந்து 'நீ உலகமுழுதும் சென்று வருந்துகின்றாயாகையால் இங்கே தங்கிப் போவென்று சூரியனை அழைப்பதுபோன்ற கொடியின் கூட்டங்களைக் காணுமலும் புகழைத் தேடச் சம்பாதித்த பொருள்களை எல்லாம் கொள்ளை கொள்ளுங் கோள்' என்று அழைப்பதுபோன்ற பேரிகையோசை கேளாமலும், களிறுகளையும் பிடிகளையும் செல்வங்-களையும் தியாகங் கொடுப்பவர் கொடுக்கப் பாடுவோர் பெற்றுப் போவதும், பசுக்களையும், யானைகளையும், குதிரைகளையும், செல்வத்தையும் அந்தணர்கள் தான-மாக வாங்கிப் போவதும், இல்லாமையைப் பார்த்துக் கொண்டே இஃது இராசதானிபோல் இருக்கவில்லையே, என்று தம்பியை நோக்கி, 'இந் நகரம் திரு நீங்கிய மாநகரம்போல் இருப்பது காண்'என்று பரதாழ்வான் சொல்ல, இத் திருநகரத்தில் நமக்கு உண்டான துயரம் ஒருவகை யன்று ; ஊழிவாழ்நகராம் திருமகள் நீங்கிய பாற்கடலெனத் திரு நீங்கிக் கிடக்கின்றது' என்று இரண்டு கைகளையும் சிரமேற் குவித்துக்கொண்டு தம்பி வணங்கிச் சொல்ல, பின்பு இருவரும் இராச வீதிகள் எல்லாம் கடந்து தம் பிதா இனிதிருக்கும் மாளிகையை அடைந்தனர்.

பரதாழ்வான் விருப்பத்தோ டடைந்து அவரிருக்கும் இடமெல்லாம் தேடியும் காணுமல், அருமையா யிருக்கின்றதென்று ஐயமடைந்து நிற்கையில்,

### பள்ளியடைதல்

ஆய காலையி லையனை நாடித்தன்
தூய கையிற் றொழுதுறு வான்றனை
கூய வன்னை குறுகுதி யென்றொரு
வேய்கொ டோளி தொழுது விளம்பினாள். (259)

வந்து தாயை யடியில் வணங்கலுஞ்
சிந்தை யாரத் தழுவின டீதிலர்
எந்தை யென்னைய ரெங்கைய ரென்றனள்
அந்த மில்குணத் தானும தாமென்றான். (260)

### வேறு

மூண்டெழு காதலின் முளரித் தாடொழ
வேண்டினெ னெய்தின னுள்ளம் விம்முமால்
ஆண்டகை நெடுமுடி யரசர் கோமகன்
யாண்டையான் பணித்திரென் றிருகை கூப்பினான்.

ஆனவ னுரைசெய வழிவில் சிந்தையாள்
தானவர் வலிதவ நிமிர்ந்த தானையத்
தேனமர் தெரியலான் றேவர் கைதொழ
வானக மெய்தினான் வருந்த னீயென்றாள். (262)

எறிந்தன கடியசொல் செவியு ளெய்தலும்
நெறிந்தலர் குஞ்சியா னெடிது வீழ்ந்தனன்
அறிந்தில னுயிர்த்தில னசனி யேற்றினால்
மறிந்துயர் மராமர மண்ணுற் றென்னவே. (263)

வாயொளி மழுங்கத்தன் மலர்ந்த தாமரை
ஆய்மலர் நயனங்க ளருவி சோர்தர
தீயெரி செவியில்வைத் தனைய தீயசொல்
நீயல துரைசெய நினைப்ப ரோவென்றான். (264)

எழுந்தன னேங்கின னிரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்து யிர்த்தனன்
அழிந்தன னரற்றின னரற்றி யின்னண
மொழிந்தனன் பின்னரு முருகிற் செவ்வியான்.

அறந்தனை வேரறுத் தருளைக் கொன்றனை
சிறந்தநின் றண்ணளித் திருவைத் தேசழித்
திறந்தனை யாமெனி னிறைவ நீதியை
மறந்தனை யுனக்கிதன் மாசு மேலுண்டோ. (266)

தந்தை இறந்துபட்டான் என்றதைக்கேட்ட பரதன் ஏங்கி இரங்கிப் பின்னும் விழுந்து விம்மி வெய்துயிர்த்துப் புலம்பலாயினன்.

'சினந் தவிர்ந்தும் காமத்தை யவித்தும் அதற்கு இனமாகிய மயக்க முதலியவற்றையுங் களைந்தும் யாவருடைய மனத்திற்கும் இசைந்த மார்க்கத்திற் செல்லும் ஈகையாளனே! மறந்துபோய் நினக்குற்ற மார்க்கத்திற் செல்லுதல் ஒழுக்க நெறியாமோ! சூரியன் முதலிய முந்தையோர் பழைய கதையையும் புதுக்கிய தலைவனும் கண்ணுதற் பெருமானுடைய மலைபோன்ற பினாக மென்னும் வில்லின் பெருமிதத்தையும் அழித்தவனுமாகிய நின் மகனை எவ்வாறு பிரிந்துபோய்விட்டாய்! நடுவு நிலைமையிலேயே ஆஞ்ஞா சக்கரத்தை யுருட்டிய அருமையாளனே! இவ்வுலகில் எவ்வழி நோக்கினும் ஏற்போரில்லாமை நோக்கி, அத்துறக்க நோக்கி நடந்தனையோ? அறுபதினாயிரம் வருஷம் நின்னுடைய வெண் கொற்றக்குடை நிழலில் நிற்பனவும் நடப்பனவுமாகிய எவ்வகை உயிரையும் தங்கச் செய்தமையால் இப்போது

அவைகள் வருந்த நீ கற்பகத் தருவினது நிழலை விரும்பி நடந்தனையோ! நீ இருக்குமிட மொழிந்து இவ்வுலகத்தை விட்டுப் போயினையோ? தேவர்கள் வந்து உன்னுடைய காற்கீழ் ஒதுங்கினார்களோ! சம்பராசுரனைப் போன்ற அசுரர் இன்னும் அத்துறக்க நாட்டிலிருக்கின்றார்களோ? அதனால் அந் துறக்க நாட்டைச் சென்றடைந்தாயோ? உனக்கிவ் வுலகத்திற் பல அரசர்கள் கொடுத்துவந்த திறைப்பொருளை அந்தணர்கட்குக் கொடுத்துதவி, தேவர்கள் பொருட்டு அசுவமேத முதலிய யாகங்களைச் செய்து அவர்களுக்காக்கிய உலகத்தை யடைந்து தங்கவல்லையோ? எழுறுப் புயர்ந்த மும்மதக் களிற்றை யுடையானே! வறியவன் கையைப் போல் வலிமையுள்ள அழகிய நின் தோளினின்றும் நீங்காத ஆஞ்ஞா சக்கரத்தையும் இராகவனுக்குக் கொடுக்க எண்ணியோ நடந்துபோயினை! நீ பெற்ற மகனுக்கு முழுதுலகாளும் அரசுரிமை அளித்து முறைமையாக அடைந்த அவ்விளங் குமாரனது மகுடாபிஷேகக் கோலங் காணவும் நின் பெரிய கண்களாற் பெற்றிலைபோலும்' என்று பலவாறு பரிதபித்துகொண்டு தொடுமணற் கேணியிற் சுரந்த நீர்போலக் கண்ணினின்றும் துன்பக்கண்ணீர் பெருக்கெடுப்ப மனமுருகும் பரதன், தன்னைத்தானே தேற்றிக்கொண்டு ஒருவகைத் தேறியபின் தாயை நோக்கி,

எந்தையும் யாயுமெம் பிரானு மெம்முனும்
அந்தமில் பெருங்குணத் திராம னாதலால்
வந்தனை யவன்கழல் வைத்த போதலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாதென்றான். ()

அவ்வுரை கேட்டலு மசனி யேறென
வெவ்வுரை வல்லவள் மீட்டுங் கூறுவாள்
தெவ்வடு சிலையினுய் தேவி தம்பியென்
றிவ்விரு வோரொடுங் கானத் தானென்றாள்.(268)

வனத்தின னென்றவ ளிசைத்த மாற்றத்தை
நினைத்தன னிருந்தன னெருப்புண் டானென
வினைத்திறம் யாதினி விளைவ தின்னமும்
எனைத்துள கேட்பன துன்பம் யாதென்றான்.(269)

ஏங்கினன் விம்மலோ டிருந்த வேந்தலப்
பூங்கழற் காவலன் வனத்துப் போயது
தீங்கிழைத் ததனினோ தெய்வஞ் சீறியோ
ஓங்கிய விதியினோ யாதி னோவெனா. (270)

தீயன விராமனே செய்யு மேலவை
தாய்செய லல்லவோ தலத்து ளோர்க்கெலாம்
போயது தாதைவிண் புக்க பின்னரோ
ஆயதன் முன்னரோ வருளு வீரென்றான். (271)

குருக்களை யிகழ்தலி னன்று கூறிய
செருக்கினு லன்றொரு தெய்வத் தாலுமன்
றருக்கனே யனையவவ் வரசர் கோமகன்
இருக்கவே வனத்தவ னேகி னானென்றாள். (272)

குற்றமொன் றில்லையேல் கொதித்து வேறுளோர்
செற்றது மில்லையே றெய்வத்தா லன்றேல்
பெற்றவ னிருக்கவே பிள்ளை கான்புக
உற்றதென் பின்னவ னுவந்த தென்னென்றான். ()

வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனைக்
காக்கினே னவனது பொறுக்க லாமையால்
நீக்கினான் றன்னுயிர் நேமி வேந்தென்றாள். (274)

சூடின மலர்க்கரஞ் சொல்லின் முன்செவி
கூடின புருவங்கள் குனித்துக் கூத்துநின்
றாடின வுயிர்ப்பினோ டழற்கொ ழுந்துகள்
ஓடின வுமிழ்ந்தன வுதிரங் கண்களே. (275)

கொடியவெங் கோபத்தாற் கொதித்த கோளரி
கடியவ டாயெனக் கருது கின்றிலன்
நெடியவன் முனியுமென் றஞ்சி நின்றனன்
இடியுரு மனையவெம் மொழியி யம்புவான். (276)

மாண்டன னெந்தையென் றம்முன் மாதவம்
பூண்டன னின்கொடும் புணர்ப்பி னாலென்றால்
கீண்டிலென் வாயது கேட்டு நின்றயான்
ஆண்டன னேயன்றோ வரசை யாசையால். (277)

நீயின மிருந்தனை யானு நின்றனன்
ஏயெனு மாத்திரத் தெற்று கிற்றிலென்
ஆயகன் முனியுமென் றஞ்சி னேனலால்
தாயெனும் பெயரெனைத் தடுக்கற் பாலதோ. ()

மாளவு முளனொரு மன்னன் வன்சொலான்
மீளவு முளனொரு வீரன் மேயபார்
ஆளவு முளனொரு பரத னாயினால்
கோளல தறநெறி குறையுண் டாகுமோ. (279)

சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்
வழியுடைத் தாய்வரு மரபை மாய்த்தொரு
பழியுடைத் தாக்கினன் பரதன் பண்டெனும்
மொழியுடைத் தாக்கலின் முறைமை வேறுண்டோ. ()

வேறு

ஒன்றும் பொய்யா மன்னனை வாயா லுயிரோடும்
தின்றுந் தீரா வன்பழி கொண்டீர் திருவெய்தி
என்றும் நீரே வாழ வுவந்தீ ரவனேகக்
கன்றுந் தாயும் போவன கண்டுங் கழியீரே. (281)

இறந்தான் றந்தை யீய்ந்த வரத்துக் கிழிவென்று
அறந்தா னீதென் றன்னவன் மைந்த னரசெல்லாந்
துறந்தான் றாயின் சூழ்ச்சியின் ஞால மவனோடும்
பிறந்தா னுண்டா னென்னுமி தென்றாற் பெறலாமே.()

மானு மென்றே தந்தையை யுன்னு வசைகொண்டாள்
கோனு மென்னு லேயனல் கொண்டா னதுவன்றேல்
மீனு மன்றே யென்னையு மெய்யே யுலகெல்லாம்
ஆனு மென்றே போயின னன்றோ வரசாள்வான்.(283)

ஓதா நின்ற தொல்குல மன்ன னுணர்வப்பால்
யாதா னுந்தா னுகவெ னக்கே பணிசெய்வான்
தீதா நின்ற சிந்தனை செய்தா னவனென்ன
போதா தோவென் றாயிவள் கொண்ட புகழும்மா. ()

உய்யா நின்றே னின்னமு மென்முன் னுடன்வந்தான்
கையார் கல்லைப் புல்லட குண்ணக் கல்மேந்தி
வெய்யோ னுனின் சாலியின வெண்சோ றமுதென்ன
நெய்யோ டுண்ண நின்றது நின்றார் நினையாரே. (285)

வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன
நல்லா னன்றே துஞ்சின னஞ்சே யனையாளைக்
கொல்லேன் மாயேன் வன்பழி யாலே குறைவற்றேன்
அல்லே னேயா னன்புடை யார்போ லழுகின்றேன். ()

கொன்றே னுனென் றந்தையை மற்றுன் கொலைவாயால்
ஒன்றோ கானத் தண்ணலை யுய்த்தே யுலகாள்வான்
நின்றே னென்று னின்பிழை யுண்டோ பழியுண்டோ
என்றே னுந்தா னென்புகழ் மாயு மிடமுண்டோ. ()

என்றுன் பாவிக் கும்பி வயிற்றி னிடைவைகித்
தோன்றுந் தீராப் பாதக மற்றென் றுயர்தீரச்
சான்றுந் தானே நல்லற மாகத் தகைஞாலம்
மூன்றுங் காண மாதவம் யானே முயல்கின்றேன். ()

சிறந்தார் சொல்லு நல்லுரை சொன்னேன் செயலெல்லாம்
மறந்தாய் செய்தா யாகுதி மாயா வுயிர்தன்னைத்
துறந்தா யாகிற் றாயையு மாதி யுலகத்தே
பிறந்தா யாதி யீதல தில்லைப் பிறிதென்றான். (289)

வேறு

இன்னண மிளையவன் விளம்பி யானுமிப்
பன்னருங் கொடுமனப் பாவி பாடிரேன்
துன்னருந் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவெனென் றெழுந்து போயினான். ()

ஆண்டகை கோசலை யருக ரெய்தினன்
மீண்டுமண் கிழிதர வீழ்ந்து கேழ்கிளர்
காண்டகு தடக்கையிற் கமலச் சீறடி
பூண்டனன் கிடந்தனன் புலம்பி னனரோ. (291)

பரதன் நடந்து சென்று மண்கிழிய வீழ்ந்து வணங்கி அவளது (கோசலையினது) பாதங்களைத் தன் கையினுற் பற்றிக்கொண்டு புலம்பி நின்று, 'அன்னய்! என் தந்தை எவ்வுலகத்தி லிருக்கின்ருர்? என் தமையஞர் எங்கே சென்றனர்? நானும் இங்கே வந்தது இத் துன்பங்களையெல்லாம் கண்ணுரப் பார்ப்பதற்கோ! என் சிந்தைத் துயரந் தீர்க்கவேண்டும்' என்று தேவர்களும் தான்படுந் துயரங்கண்டு அழுது சோரும்படி, சொல்லத் தொடங்கித் தான் புழுதியாடிய தோளையுடையனுய்ப் புரண்டு சோர்ந்து 'என் ஐயனை அடித்தலங் கண்டிலேன். அரசன் பூமியை நீங்கிப் பெயருந் தன்மையனே! நீர் பிடித்தி ரல்லீர்போலும்! நீர் தவறிப்போயினீர். கொடியவர்களெல்லாம் தங்குலங்கள் வேரற்றுப் போகக் கொல்வேனென்று யான் சொல்வது எவ்வாறு? அஃதிருக்கட்டும், கொடியவளாகிய கைகேசி வயிற்றிற் பிறந்த கள்ளத் தன்மை யுடையேன். என் துயரமுடியும்படிமு டிவேனென்றும், ஒற்றை யாழியந்தேரூர்ந்து இருளையோட்டும் அச் சூரியனைப்போலக் கீர்த்திபெற வளர்ந்த பழமையான இக்குலமானது பரதனென்று சொல்லப்படும் ஒரு பழி படைத்ததென்றும், வாளையேந்திய சேனையுடைய அரசன் வீடெய்தவும் மற்ருேர் அரசன் காடெய்தவுங் கண்ணில்லாமலே உலக முழுதும் துயரத்தில் வருந்துவதோ' என்றும், பரதன் சொல்லிக்கொண் டிருந்தான். அதைக் கேட்டுக் கோசலை,

மையறு மனத்தொரு மாசு ளானலன்
செய்யனே யென்பது தேருஞ் சிந்தையான்
கய்கயர் கோமக ளிழைத்த கைதவம்
ஐயநீ யறிந்திலை போலு மாலென்ருள். (292)

தாளுறு குரிசிலத் தாய்சொற் கேட்டலுங்
கோளுறு மடங்கலிற் குமுறி விம்முவான்
நாளுறு நல்லற நடுங்க நாவினல்
சூளுறு கட்டுரை சொல்லன் மேயினன். (293)

தழைத்ததண் டளவினேன் றலைவ னல்லனென்
றழைத்தவ னறநெறி யந்த ணாளிற்
பிழைத்தவன் பிழைப்பிலா மறையைப் பேணலா
திழைத்தவன் பொய்யெனு மிழுதை நெஞ்சினேன்.()

தாய்பசி யுழந்துயிர் தளரத் தான்றனி
பாய்பெரும் பாழ்வயி றளிக்கும் பாவியும்
நாயகன் படநடந் தவனு நண்ணுமத்
தீயெரி நரகத்துக் கடிது செல்கயான். (295)

தாளினி லடைந்தவர் தம்மைத் தற்கொரு
கோளுற வஞ்சினன் கொடுத்த பேதையும்
நாளினு மறமறந் தவனு நண்ணுறும்
மீளரு நரகிடைக் கடிது வீழ்கயான். (296)

பொய்க்கரி கூறினேன் போருக் கஞ்சினேன்
கைக்கொளு மடைக்கலங் கரந்து வவ்வினேன்
எய்த்திடத் திடர்செய்தோ னென்றின் னோர்புகும்
மெய்க்கொடு நரகிடை விரைவின் வீழ்கயான். (297)

அந்தண ருறையுளை யனலி னூட்டினேன்
மைந்தரைக் கொன்றுளோன் வழக்கிற் பொய்த்துளோன்
நிந்தனை தேவரை நிகழ்த்தி னேன்புகும்
வெந்துயர் நரகத்து வீழ்க யானுமே. (298)

கன்றுயி ரோய்ந்துகக் கறந்து பாலுண்டோன்
மன்றிடைப் பிறர்பொருள் மறைத்து வவ்விஞேன்
நன்றியை மறந்திடு நயமி ஞவிஞேன்
என்றிவ ருறுநர கென்ன தாகவே. (299)

ஊணல வுண்வழி நாயி னுண்டவன்
ஆணலன் பெண்ணல ஞர்கொ லாமென
நாணல னரகமுண் டென்னு நல்லுரை
பேணலன் பிறர்பழி பிதற்றி யாகயான். (300)

மறுவிஞெல் குலங்களை மாசிட் டேற்றிஞேன்
சிறுவிலை யெளியவ ருணவு சிந்திஞேன்
நறியன வயலவர் நாவி னீர்வர
உறுபத நுங்கிய வொருவ ஞகயான். (301)

கரும்பலர் செங்நெலங் கழனிக் கானநா
டரும்பகை கவர்ந்துண வாவி பேணினென்
இரும்பலர் நெடுந்தளை யீர்த்த காலொடும்
விரும்பலர் முகத்தெதிர் விழித்து நிற்கயான். (302)

இவ்வாறு சொன்ன மகனை,

வேறு

தூய வாசகஞ் சொன்ன தோன்றலைத்
தீய கானகந் திருவி னீங்கிமுன்
போயி ஞன்வரக் கண்ட பொம்மலாள்
ஆய காதலா லழுது புல்லிஞள். (303)

அவ்வாறு புலம்பக்கண்ட பரதன் கோசலையாகிய தாயை மீட்டும் வணங்கித் தானும் புலம்பிக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் வசிட்டமுனிவரும அங்கே வந்தருளினர். பரதன் அவரை வணங்கி,

'எந்தை யாண்டுளார்? அருளிச் செய்ய வேண்டும்' என்று வேண்ட, அதைக் கேட்ட முனிவர் பெருமான் ஏதுஞ் சொல்ல நாவெழாமல் நொந்து வருந்தி, 'உன் தந்தை இறந்து பட்டுப் பதினான்கு நாட்களாகின்றன; மக்களாவார் செய்யவேண்டிய உரிமைக்கடன் செய்யவேண்டும்' என்று சொல்லி முடிக்க, பரதனும் தாயாகிய கோசலையினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வசிட்ட முனிவரோடுஞ் சென்று தன்னைத் தந்தை தருமத்தை நாட்டிய அறப்படிவத்தைக் கண்டு மண்ணின்மேல் விழுந்து புரண்டு சக்கரவர்த்தியினுடைய தயிலமாட்டிய பொன் மேனியைத் தன் கண்ணீராலாட்டிக் கழுவி அங்குநின்றும் பரிவின் வாங்கி, நான்மறை யுணர்ந்த அந்தணர் கூட்டம் நிறைந்து சுற்ற, அரசனைப் பொன் விமானத்திலேற்றி மந்திரிகள், பிரதானிகள், சேனாபதிகள், தண்டத்தலைவர், யூகத்தலைவர், சாமந்தர், குறுநில மன்னர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் முதலானோர் சூழ்ந்துவர, பட்டத்து யானைமேற்கொண்டு சென்றனர்.

அப்போது சங்கமும் பேரிகையும், திருச் சின்னமும் எங்கும் நின்று ஆரவாரிக்கச் செல்கையில் யானையும், குதிரையும், தேர்களும், அரசரும், நான்மறை யுணர்ந்த அந்தணரும் முன்செல்ல, தேவிமாருடனே கொண்டு சென்று சரயுநதியை அடைந்தார்கள். அவ்வாற்றை அடைந்தவுடனே பரதன் பிரேத சம்ஸ்கார முழுவதும் செய்து சிதையி லிருத்தித் தீமூட்டித் தந்தைக்குரிய கடன் முழுதுஞ் செய்யத் துணிய, அருகிலிருந்த வசிட்டமுனிவரும், 'உன் தாய் செய்த கொடுமையால் அரசன் நினையும் மகனல்லனென்றே துறந்து போனான்' என்று சொல்லினர்.

துறந்து போயினு னுந்தை தோன்றனீ
பிறந்து போறம் பிழைத்த தென்றல்போல்
இறந்து போயினு னிருந்த தாண்டது
மறந்து வேறொரு மைந்த னுங்கொலாம். (304)

இடிக்கு வாளரா விடைந்த தாமெனு
படிக்கண் வீழ்ந்தகம் பதைக்கு நெஞ்சினன்
தடுக்க லாகலாத் துயரந் தன்னுளே
துடிக்க விம்மிநின் றழுது சொல்லுவான். (305)

உரைசெய் மன்னன்மற் றென்னின் யாவரே
இரவி தனகுலத் தெந்தை முந்தையோர்
பிரத பூசனைக் குரிய பேறிலேன்
அரசு செய்யவோ வாவ தாயினேன். (306)

பூவி னான்முகன் புதல்வ னாதியாந்
தாவின் மன்னர்தந் தரும நீதியால்
தேவ ராயினர் சிறுவ னாகியே
ஆவ நான்பிறந் தவத்த னைவா. (307)

துன்னு தாள்வளஞ் சுமந்த தாழையின்
பன்னு வான்குலைப் பதடி யாயினேன்
என்னை யென்னையே யீன்று காத்தவென்
அன்னை யாரெனக் கழகு செய்தவா. (308)

என்று கூறிநொந் திடரின் மூழ்குமத்
துன்று தாரவற் கிளைய தோன்றலால்
அன்று நேர்கட னமைவ தாக்கினன்
நின்று நான்மறை நெறிசெய் நீர்மையான். (309)

பரதன் தன் தம்பியாகிய சத்துருக்கனனை அழைப்பித்து அவனைக்கொண்டு தந்தைக்குச் செய்யவேண்டிய சகல காரியங்களையும் நடப்பித்து நின்றான். ஆபரணங்கள் முதலியவை அணிந்து கொண்டு தாமரைபூத்த காட்டில் முறைமையின் மயிலேபோல அறுபதினாயிர மாதரும் சஹகமனமாகித் தங்கள் கணவரிறந்து பட்ட பின் மாதரடையும் திவ்வியவுலகம் சென்றடைந்தனர். சரயுநதிக்கரையில் தன் தந்தைக்கு நடத்தவேண்டிய காரியங்களையெல்லாம் முடித்துவிட்டுப் பரதாழ்வானுங் களிப்பில்லாமல் தன் இராசமாளிகை சேர்ந்தனன். அவனை வசிட்டமுனிவர் தன்னைப் பல அந்தணர் புடைசூழக் கண்டனர். அப்போது, 'அரச னெவ்வழி அவ்வழி குடிகள்' என்று பெரியோர்கள் சொல்வார்களே! அரசனில்லாமல் உலகம் வருந்தி நிற்பது தகுதியல்ல' என்று கூறி படை குடி அமைச்சு புரோகிதர் முதலானோரும், பெரியாரும், சேனைத்தலைவர்களும், தண்டத் தலைவர்களும், சாமந்தரும், மகுடவர்த்தனரும், பட்டவர்த்தனரும் குறுநில மன்னரும் சூழ்ந்து போய்ப் பரதனைக் கண்டார்கள்.

அவ்வாறு காணப்போகையில் வரலாற்று முறைமையினால் வேத நான்கையு முணர்ந்த பெருந்தவமுடைய வசிட்டமுனிவர் அவ்விராசமாளிகையி லெழுந்தருளியிருக்கின்றாரென்பது கேட்டுணர்ந்து பரிந்த நெஞ்சினையுடையாராய்ப் பரதாழ்வானைக் கண்டு கொண்டனர். அவருள் சுமந்திரன் என்பவன் அரசனுக்கு உறுபொருள் குறித்த உள்ளத்தனாய் எல்லாமுணர்ந்த வசிட்ட முனிவரை முகத்தானோக்கி நின்றனன். அதை அவன் வாயினாற் சொல்லாமலே அறிந்துகொண்ட அம்முனிவர்

பெருமான் 'உலகங் காப்பது உன் கடனும்' என்று பரதாழ்வானுக்குத் தெரிவித்து, 'பிராமணரும், முனி-வரும், விருத்தர்களும், அரசர்களும், நகரமாந்தரும், உன்னிடத்தே அடைந்த காரியம் நீதியையும், தருமத்-தையும், நீ நிலைநிறுத்தற் கென்றே துணி; தரும-மென்கிற ஒரு பொருளைத் தந்து நாட்டுதல் அருமை-யான காரியமெனப் பெரிது மறிவாய்,

ஆறு

வள்ளுறு வயிரவா ளரசில் வையகம்
நள்ளுறு கதிரிலாப் பகலு நாளொடும்
தெள்ளுறு மதியிலா விரவுந் தேவுடன்
உள்ளுறை உயிரிலா வுடலு மொக்குமே. (310)

தேவர் வசிக்கும் உலகத்திலும், தீமை செய்தே உடலையோம்பும் அசுரர் வசிக்கும் நாடுகளிலும், ஏனைய உலகங்களிலும் அரசனில்லா திருக்கக் கண்டிலோம். முறைதெரிந்து ஒருவகை ஆராய்ந்து பார்க்குங் காலத்-தில் பிரமனால் படைக்கப்பட்ட மண்ணிலும் வானினும் நிற்பனவும், நடப்பனவுமாகிய எல்லா உயிர்களும் தலைவ னில்லாதிருக்கக் கண்டதில்லை. இனி இவ்வுலகமோ அரசனில்லாமல் வருந்துகின்றது.

உந்தையோ விறந்தன னும்மு னீத்தனன்
வந்தது மன்னைதன் வரத்தின் மைந்தநீ
அந்தமில் பேரர சளித்தி யன்னது
சிந்தனை யெமக்கெனத் தெரிந்து கூறினான். (311)

தஞ்சமிவ் வுலகநீ தாங்கு வாயெனச்
செஞ்சவே முனிவரன் செப்பக் கேட்டலும்
நஞ்சினை நுகரென நடுங்கு வாரினும்
அஞ்சின னயர்ந்தன னருவிக் கண்ணினான். (312)

'நீ இவ்வுலக முழுவதும் ஆண்டே வரலாம்' என்று வசிட்டன் கூறிய சொற்களைக் கேட்ட பரதன் கண்ணீர் சொரிந்து நடுநடுங்கி நாத்தடுமாற மாதரைப்போல் நின்று அழுது தன்வயமகன்று ஒருவாறு தெளிந்து 'மூன்றுலகங்கட்கும் ஒரு முதல்வனாய் என் முன்னே தோன்றிய ஸ்ரீராமனிருக்க யான் மகுடாபிஷேகஞ்செய்து கொள்ளும்படி பெரியோர் சொல்லத்தக்க தரும மாகையால் தாய் செய்கையின் இழுக்காக முடியுமே ?

அடைவருங் கொடுமையென் னன்னை செய்கையை
நடைவருந் தன்மைநீர் நன்றி தென்றிரேல்
இடைவருங் காலமீண் டிரண்டு நீத்திது
கடைவருந் தீநெறிக் கலியி னாட்சியோ. (313)

வேத்தவை யிருந்தநீர் விமல னுந்தியிற்
பூத்தவன் முதலிய புவியுட் டோன்றினார்
மூத்தவ ரிருக்கவே முறைமை யானிலம்
காத்தவ ருளரெனிற் காட்டிக் காண்டிரால். (314)

நன்னெறி யென்னினு நானின் நானில
இன்னுயிர்ப் பொறைசுமந் திருந்து வாழ்கிலேன்
அன்னவன் றனைக்கொணர்ந் தலங்கன் மாமுடி
தொன்னெறி முறைமையிற் சூட்டிக் காண்டிரால். ()

அன்றெனி லவனொடு மரிய கானிடை
நின்றினி திருந்தவ நெறியி னாற்றுவென்
ஒன்றினி யுரைக்கிலென் னுயிரை நீக்குவென்
என்றன னென்றபோ திருந்த பேரவை. (316)

ஆன்றபே ரரசனு மிருப்ப வையனும்
ஏன்றனன் மணிமுடி யேந்தல் வேந்தநீ
வான்றொடர் திருவினை மறுத்தி மன்னிளந்
தோன்றல்கள் யாருளர் நின்னிற் றோன்றினார். (317)

பரதன் கூறியவைகளைக் கேட்ட அவையத்தார் 'ஆக்கினைசக்கர நடத்தியும், வேள்வி செய்தும் தருமத்தை வளர்க்க வேண்டுமோ? பதினுன்குலக மழிந்தாலும் நின்புகழ், என்றும் வாழக்கடவது' என்று வாழ்த்தினார்கள்

குரிசிலுந் தம்பியைக் கூவிக் கொண்டலின்
முரசறைந் திந்நகர் முறைமை வேந்தனைத்
தருதுமீண் டென்பது சாற்றித் தானையை
விரைவினி லெழுகென விளம்பு வாயென்றான் (318)

நல்லவ னுரைசெய நம்பி கூறலும்
அல்லலி லழுங்கிய வன்பின் மாநகர்
ஒல்லென விரைத்ததா லுயிரில் யாக்கையைச்
சொல்லெனு மமிர்தினுற் றுளித்த தென்னவே. (319)

பின்பு பரதாழ்வான் தம்பியைக் கூவியழைத்து 'இந்நகர முழுது மறிய முரசறைவித்து இந் நகரத் தரசனை அழைத்துவரத் தெரிவிக்க வேண்டுகின்றேன்' என்ற பரதன் கட்டளைக்குக் கீழ்ப்பட்டு எழுந்த சேனை நிலத்தையும் வானையும் திசைகளையும் உண்ணவோங்கிய கடலையும் நிகர்க்கும் என்பது அதற்கோர் சிறப்பாக மாட்டாது. மேலும் அவ்வாறு எழுந்த அச்சேனை,

அலைநெடும் புனலறக் குடித்த லாலகம்
நிலைபெற நிலைநெறி நிறுத்த லானெடு
மலைகளை மண்ணுற வழுத்த லாற்றமிழ்த்
தலைவனை யொத்ததத் தயங்கு தானையே. (320)

அறிஞருஞ் சிறிஞரு மாதி யந்தமா
செறிபெருந் தானையுந் திருவு நீங்கலால்
குறியவன் புனலெலாம் வயிற்றிற் கொண்டநாள்
மறிகட லொத்ததவ் வயோத்தி மாநகர். (321)

இவ்வாறு நால்வகைச் சேனையும் பயணப்பட்டன. தாரையும், சங்சமும், ஊதுகொம்பும், பம்பையும், பேரியு முழங்கின.

இன்னண நெடும்படை யேக வேந்தனும்
தன்னுடை நெடுவரைச் சிவை சாத்தினன்
பின்னிளை யவனொடும் பிறந்த துன்பொடும்
நன்னெடுந் தேர்மிசை நடத்தன் மேயினன். ()

இதை யறிந்த தாய்மாரும் தவமுடைய முனிவர்களும், தந்தைபோன்ற மந்திரிமாரும் பிராமணரும் அளவில்லாத சுற்றத்தாரும் தன்னைச் சூழ்ந்துவரப் பரதன் திருவயோத்தி நகர்க்கோட்டை வாயிலில் அடைந்தான். இவ்வாறு போகையில் மந்தரை யென்னும் யமனும் வழிச் செல்வாருடனே போகக்கண்டு தம்பியாகிய சத்-துருக்கனாழ்வான் ஓடிச்சென்று அவளை ஆகாயத்தில் எறியும்படி நினைத்துக் கோபித்துப் பற்றலும், அதைக் கண்ட பரதாழ்வான், 'இதுவரையிலும் பரம்பரையாக நடந்துவந்த வழக்கத்தைக் கெடுத்த மாபாவியாகிய என் தாயைச் சின்னபின்னமாக்கி என் கோபத்தையே தீர்த்துக் கொள்ளுவேன்; என்னை இன்று என்னையன் துறந்துவிடுவானென் றெண்ணியே விட்டேனல்லாமல் அன்னை யென்று மதித்தவனாக மாட்டேன்' என்று சொல்லிவிட்டு, 'நாம் இவளைக் கோபிப்போமானால் நம்மையன் நம்மைக் கோபித்துக் கொள்ளுவான். ஆதலால் மந்தரையைக் கோபிக்க வேண்டா' என்று தம்பியை அழைத்துக் கொண்டுபோய், சீராமன் தம்பி-யோடு சீதையும் தொடரக் காடு செல்கையில் தங்கிய சோலையில் தானும் வைகினன்.

அல்லணை நெடுங்கணீ ரருவி யாடினன்
கல்லணை கிழங்கொடு கனியு முண்டிலன்
வில்லணைத் துயர்ந்ததோள் வீரன் வைகிய
புல்லணை மருங்கிற்றன் பொடியின் வைகினான். ()

குகன்

பூவிரி பொலன்கழல் புனைவி றானையான்
காவிரி நாடன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான். (324)

அங்கிருந்து தன் தமையன் கால் நடையாகவே நடந்து போனதைக் கேட்டுத் தானும் தம்பியுடன் நால்வகைச் சேனைகளும் புடை சூழ்ந்து வரச் செல்வானாயினான்.

பரதன் கங்கைக்கரையை அடைந்து நின்றனன். கங்கை, பரதாழ்வானுடன் வந்த யானைகள் மதம் பாய்வதனால் உண்ணவும் நீராடவும் உரித்தல்லாததா யிருந்தது. பாலைப்போன்ற நிறத்துடன் செல்லும் அந்நீர் ஒல்லென்னும் ஒலியுள்ள கடலில் பாயாதிருந்தது.

அப்படை கங்கையை வடைந்த வாயிடை
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை யண்ணலோ டுற்ற வேகொலாம்
இப்படை யெடுத்ததென் றெடுத்த சீற்றத்தான்.

குகன் என்னும் பெயரையுடைய கூற்றுவனை யொத்த வன்மையுடையவன் வலியமைந்த சேனா சமுத்திரத்தைத் துகளேபோற் கருதி, நகைமிக, விழிகள் தீப்பொறி சிந்த, மூக்கிற் புகையுண்டாக, சூலம் பிடித்த யமன் இருபத்தைந்து லட்சம் வடிவங் கொண்டாற் போன்ற சேனையுடன்,

கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்குந் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
கிட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினன். (326)

எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுவந்து கூயினன்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழி புகுந்த போலவே. (327)

அக் கங்கைக்குத் தென் கரையில் வந்து தோன்றி, ஊழிக்காலத்து மேகமும் கருங்கடலும் ஒன்று கூடினாற் போல அடைந்து, அவர்கள் எமது தலைவனாகிய இரகு நாயகன் விஷயத்தில் அபசாரப்பட்டமையால் அவர்களை வானிலனுப்பி அந்த இராச்சியத்தை அவனுக்கே பட்டாபிஷேகஞ் செய்விக்கின்றேன். என் வன்மையைப் பாருங்களென்றும், நீங்கள் ஓடிப் படகுகளைச் செலுத்த வேண்டாவென்றும் அக்கரையில் வந்திருப்பவரைப் பிடியுங்கள் எறியுங்கள் என்றும் ஆஞ்ஞை செய்து விட்டுக் குகன் பின்னுஞ் செல்வானயினன்.

## வேறு

அஞ்சன வண்ணனெ னருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடி னய்குக னென்றெனை யோதாரோ.

'ஆழமாகிய இக்கங்கையைக் கடந்தும் இவர்கள் இக்கரை வழியாய்ப் போவார்களோ? நான் யானைப் படையைக் கண்டு விலகிப் போய்விடும் வில்லாளோ?

அச் சீராமன் என்னைத் தோழனென்று சொல்லிய சொல் ஒரு சொல் அல்லவோ ? அதைக் கடப்பேனுனல் ஏழை வேடன் இறவாமற்போனுனே'யென்று பார்த்தவர் பரிகசியாமற் போவார்களோ? அவ்விராமன் தனக்குமுன்னவன் என்று நினையாமற் போய்விட்டானே, அதுபோகப் பின் பிறந்தவனுகிய இலக்குவன் இங்கே கூடவேயிருக்கின்-றுனென்பதும் சிறிதும் எண்ணுமற் போனுனே. என்ன இவனென்னை யிகழ்ந்த காரியம் ? இக்கங்கையைக் கடந்தல்லவோ போகவேண்டும். வேடர் பாணம் விட்டால் அரசர் மார்பில் பாயக்கூடாதென்ற நியதியும் உண்டோ.

பாவமும் பழியும் பகையும் நண்பும் துன்பமும் என்பவைகளை அரசாள்பவர் எண்ணமாட்டார்களோ ? என்னுருயிர்த் துணைவனுகிய சீராமன்மேற் போகிற சேனையும் இக்கங்கையை கடந்தல்லவோ உயிர் கொண்டு போக வேண்டும். அருமையான தவஞ் செய்கையை எமது தலைவனுகிய சீராமன் கைக்கொள்ள இவன் பூமியை யரசாண்டு வரலாமோ? உயிர் எனக்கு மருந்தா! புகழை மேற்கொண்டு உயிரையேனும் விடுத்துப் போர் செய்ய மாட்டேனே ! நான் சீராமனேடு போகாமல் இங்கே இருந்தது நல்ல காரியமாகத்தான் தோன்று-கின்றது. என் கடனை இன்றே கழிக்கின்றேன்.

யானையும் குதிரையும் சூழ்ந்த பெரும்படையுடனே வந்தவர்களும் தங்கள் வாள்வலிகாட்டி யுத்தஞ்செய்து கங்கையைக் கடந்தல்லவோ அப்புறம் போகவேண்டும், வேடர்களே ! நமது துறையில் ஓடங்களை விலக்க வேண்டுகிறேன். இனி இறைவன் பொருதற்கு முன்-னரே நம்முயிர் அழிவது நன்றே யன்றே.

போன படைத்தலை வீரர் தமக்கிரை போதாவிச்
சேனை கிடக்கிடு தேவர்வ ரிற்சிலை மாமேகம்
சோனை படக்குடர் சூறை படச்சுடர் வாளொடும்
தானை படைத்தனி யானை படத்திரள் சாயேனோ. ()

வள்ளற் றன்மையுடைய சிராமன் மரவுரிதரிக்கக் கொடுத்த அக் கைகேசியினுடைய மக்கள் வலியை இன்றே பார்க்கின்றேன். அவர்களை என் அம்பாலே இன்றே கொன்று குவிக்க இந்நிணங்கொண்ட பிணக் குவியலைக் கொண்டோடிக் கடலில் இக்கங்கையாறு தூரத்தேவிடப் பார்க்கமாட்டேனோ,

ஆடு கொடிப்படை சாடி யறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தவெ னாயக னுக்கிவர் நாமாளும்
காடு கொடுக்கில ராகி யெடுத்தது காணீரோ. ()

பெருந்தவமுடைய முனிவர்கட்கு உறவாகி வனத்தில் வசித்துக்கொண் டிருக்கும் சிராமன் கோபிக்கத்தகு-மென்று சிறிது மனத்திற் கொள்ளாமல் பாணங்களைச் செலுத்தும்போர்முனையில் எழுகடல்போன்ற சேனையே யானாலும் ஆழுமையிற் சிறுகூழே போல இப்போதே முடியாதோ !" என்று பலபல சொல்லி இரும்பை யொத்த மேனியர்களுடனே வில்லேற்றிக் கொண்டு மல்யுத்தத்திற்குத் தகுந்த தோளையுடையவனும் சிராம பிரானுக்குத் தோழனுமாகிய குகப்பெருமா னிருந்-தனன். அக்கரையில பரதாழ்வான்முன்னே சுமந் திரனாகிய பெரிய மந்திரி எதிரே வந்து சொல்லத் தொடங்கினன்.

கங்கையிரு கரையுடையான்
கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற்
குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான்
விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க்
குகனென்னும் குறியுடையான். (331)

கற்காணுந் திண்மையான்
கரைகாணாக் காதலான்
அற்காணி லெனநின்ற
வழகமைந்த மேனியான்
மற்காணுந் திரணெடுந்தோண்
மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா
னெறியெதிர்நின் றனனென்றான். (332)

தன்முன்னே யவன்றன்மை
தன்றுணைவன் முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற
துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட
மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவற்காண்பென்
யானேசென் றெனவெழுந்தான். (333)

என்றெழுந்த தம்பியொடு
மெழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக்
குளிர்கங்கைக் கரைகுறுகி

நின்றவனை நோக்கினன்
திருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி
யெயினர்கோன் றண்ணென்றான். (334)

வற்கலையி னுடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன
நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ
விம்முற்று நின்றொழிந்தான். (335)

நம்பியுமென் னாயகனை
யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான்
றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை
திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா
ரிழைப்பரோ பிழைப்பென்றான். (336)

உண்டிடுக்க ணொன்றுடையா
னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே
கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன்
காமின்க ணெறியென்னா
தண்டுறையோர் நாவாயி
லொருதனியே தான்வந்தான். (337)

வந்தெதிரே தொழுதானை
வணங்கினன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு
மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத்
தழுவினன் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும்
வீற்றிருக்குஞ் சீர்த்தியான். (338)

வேறு

தழுவின புளிஞர் வேந்தன்
றாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா
யெய்திய தென்னை யென்ன
முழுதுல களித்த தந்தை
முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க
மன்னனைக் கொணர்வா னென்றான்.(339)

கேட்டனன் கிராதர் வேந்தன்
கிளர்ந்தெழு முயிர்ப்ப னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்
விம்மின னுவகை வீங்கத்
தீட்டரு மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்யி
லுள்ளத்தன் புகல லுற்றான். (340)

தாயுரை கொண்டு தாதை
யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச்
சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து
புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே
ளாவரோ தெரியி லம்மா. (341)

என்புகழ் கின்ற தேழை
யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண்
மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டா
யுயர்குணத் துரவுத் தோளாய். (342)

எனையிவை யன்ன மாற்ற
மியைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவு வேற்கைப்
புளினர்கோன் பொருவில் காதல்
அனையவற் கன்பு செய்தா
ராரவற் கன்பி லாதார்
நினைவருங் குணங்கொ டன்றே
யிராமன்மே னிமிர்ந்த காதல். (343)

அவ்வழி யவனை நோக்கி
யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ணல்
றென்றிசை செங்கை கூப்பி

எவ்வழி யுறைந்தா னம்மு
னென்றலு மெயினர் வேந்தன்
இவ்வழி வீர யானே
காட்டுவ லெழுக வென்றான். (344)

காரெனக் கடிது சென்றான்
கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்
பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை
மண்ணுநீ ராட்டுங் கண்ணான். (345)

இயன்றதென் பொருட்டி னாலிவ்
விடருனக் கென்ற போழ்தும்
அயின்றனை கிழங்குங் காயு
மமிர்தென வரிய புல்லில்
துயின்றனை யெனவு மாவி
துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ்
செல்வமுங் கொள்வென் யானே. (346)

தூண்டா திவர்ந்த தோளான்
பின்னருஞ் சொல்லு வானந்
நீண்டவன் றுயின்ற சூழ
லிதுவெனி னிமிர்ந்த நேயம்
பூண்டவன் றொடர்ந்து பின்னே
போந்தவன் பொழுது நீத்த
தியாண்டெனா வினிது கேட்டா
னெயினர்கோ னிதனைச் சொன்னான். ()

அல்லியாண் டமைந்த மேனி
யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லியாண் டுயர்ந்த தோளாய்
கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்று
னிமைப்பில னயன மென்றான். (348)

என்பத்தைக் கேட்ட மைந்த
னிராமனுக் கிளையா ரென்று
முன்பொரத்த தோற்றத் தேயில்
யானென்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானே
னவனது துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுண்டே
யழகிதென் னடிமை யென்றான். (349)

அவ்விடை யண்ண றானு மன்றரும்
பொடியின் வைகித்
தெவ்விடை தரநின் றார்க்குஞ் செறிகழற்
புளினர் கோமாஅன்
இவ்விடைக் கங்கை யாற்றி னேற்றினை
யாயி னெம்மை
வெவ்விடர்க் கடனின் றேற்றி வேந்தன்பால்
விடுத்த தென்றான். (350)

பரதன் கூறியதைக்கேட்ட குகன் 'அவ்வாறே செய்கின்றேன்' என்று தன் உறவினரை அழைத்து, கபிலையும் மேருவும் புட்பக விமானமும் ஒவ்வொன்-

றுள்ளன அவை பலவுருவங்கொண்டு விளங்கிய வென்ன விருக்கும் படகுகளைக் கொண்டுவரும்படி கட்டளை யிடவே அவர்களும் அவ்வாறே கொண்டு வந்தனர். படகுகள் வந்து சேர்ந்தவுடனே 'உன் சித்தம் என்ன?' என்று குகப்பெருமாள் கேட்க, சுந்தரவரிவில்லனுகிய பரதன் சுமந்திரனைப் பார்த்து, 'இச் சேனைகளை முன்னே அக்கரை போகக் கட்டளையிட வேண்டும்' என்றனன். அவ்வாறே அச் சேனைகளை முறையாக வனுப்ப அவைகளும் அக் கரையை அடைந்தன. தவத்திலும் சிறந்தது சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூவுலகத்திலு மில்லை யாதலால், சேனைகளைப் போலத் தாங்களும் கங்கையைக் கடக்கப் படகேருமல் மனத்-திற் செல்கின்றவராய் ஆகாயமே ஓடமாகத் தேவர்-களைப் போல முனிவரும் போயினர். இவ்வகையாக அறுபதினுயிரம் அக்குரோணி சேனைகளும் நகரமாந்-தரும் மாதர்களும் கங்கையிற்படச் சென்று அக்கரை சேர்ந்தனர்.

கள்ள ஆசையை அழித்து நின்று உலகமுழுது மரசாண்ட அரசர்களை யெல்லாம் இழித்து மேற்பட நின்ற பரதாழ்வானும் குகப்பெருமானும் தம்பி சத்-துருக்கன் தாய்மார் மூவர், சுமந்திரன் இவர்களு-டன் எஞ்சியிருக்கும் எல்லோரும் படகில் ஏறினர். அப்போது,

சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று
குகன்வினவ வேந்தர் வைகும்

முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு
　　மீன்றானை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறத்த
　　லாற்றுறந்த பெரியா ளென்றான். (351)

என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந்
　　தழுவானை யிவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய
　　கொடிவினவக் கழற்கான் மைந்தன்
இன்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு
　　மிளையவற்கு மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா
　　னிந்நின்ற குரிசி லென்றான். (352)

நைவீர லீர்மைந்தீ ரினித்துயரா
　　லுடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்
　　றுமன்றே விலங்க றிண்டோள்
கைவீரக் களிறனைய காளையிவன்
　　றன்னோடுங் கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீரா யகலிடத்தை
　　நெடுங்கால மளித்தி ரென்றாள். (353)

அறந்தானே யென்கின்ற வயனின்று
　　டனைநோக்கி யைய வன்பின்
நிறந்தானை யுரையென்ன நெறிதிறம்பாத்
　　தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்ற னிளந்தேவி யாவர்க்குந்
　　தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
　　றனைப்பயந்த பெரியா ளென்றான். (354)

சுடுமையா னத்திடைதன் றுணையேகத்
தோன்றறுயர்க் கடலி னேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார்
கலியேகக் கழற்கான் மாயன்
நெடுமையா லன்றளந்த வுலகெல்லாந்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையா லளந்தானை யாரிவரென்
றுரையென்னக் குரிசில் கூறும். (355)

படரெலாம் படைத்தானைப் பழிவளர்க்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கு
முயிர்ப்பாரங் குறைந்து தேய
உடரெலா முயிரிலா வெனத்தோன்று
முலகத்தே யொருத்தி யன்றே
இடரிலா முகத்தானை யறிந்திலையே
லிந்நின்ற ளென்னை யீன்றாள். (356)

வேறு

என்னக் கேட்டவ் விரக்கமி லானையும்
தன்னற் கையின் வணங்கினன் றயென
அன்னப் பேடை சிறையிலை தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே. ()

தோணியினின்றும் இழிந்து பரதாழ்வார் தாய்மாரைச் சிவிகையி லேறும்படி செய்து, பலகாதம் காலால் நடந்து,

பரத்தி னீங்கும் பரத்துவ னென்னும்போர்
வரத்தின் மிக்குயர் மாதவன் வைகிடம்
அருத்தி கூர வணுகின னண்டவன்
விருத்தி வேதிய ரோடெதிர் மேவினன். (358)

பரதன், இவ்வாறு தம்மை எதிர்கொண் டழைக்க வந்த பரத்துவாச முனிவரை வணங்க, சந்திரசேகரனாகிய சிவபெருமானை யொத்த அம் முனிவரும் பரதாழ்வானைக்கண்டு இரங்கி ஆசிகள் கூறி, 'உயர்ந்த மாமுடி சூடிக்கொண்டு, உனக்கு வந்தடுத்த பேரரசு செய்யாமல் சடைக் கற்றையை யுடையவனாய் மரவுரி தரித்து இவ்விடம் வருவதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டனர். அதைக்கேட்டு பரதாழ்வான் சிறிது கோபங்கொண்டு, 'எனக்குத் தகுந்ததும் கூறினையல்லை அதுவேயன்றி உன் தவவேடத்திற்கு அமைந்ததும் கூறவில்லை' என்று சொல்லிப் பின்னும் முனிவரை நோக்கி, 'நானோ முறைதவறி அரசைக் கைக்கொள்ளேன், எம்மிறைவன் கைக்கொள்ளானாயின் அவன் மேற்கொண்ட பதினான்கு வருடமும் நானும் அவனுடனே காடே கதியாக வாழ்ந்து கொண்டிருப்பேன்' என்று சொல்லினன். அதைக் கேட்ட பரத்துவாச முனிவரும் அரைத்த சாந்துகொண்டப்பியதுபோல மனங்குளிர்ந்து,

### கிளை கண்டு நீங்குகை

ஆய காதலோ டையனைக் கொண்டுதன்
தூய சாலை யுறைவிடந் துன்னினன்
மேய சேனைக் கமைப்பென் விருந்தெனத்
தீயி னாவுதி செங்கையி னீக்கினன். (359)

பரத்துவாசர் பரதனைச் சேனையுடன் தன் பர்ண சாலைக்கு அழைத்துச் சென்று விருந்தமைப்பேன் என்று அக்கினியில் ஆகுதியளித்திருக்கையில் துறக்க நாடே அங்கு வந்து இழிந்தது. பரதனைச் சூழ்ந்து வந்தோர் யாவரும் முன்னைய வாழ்வை மறந்துவிட்டார்கள். கெடுதலில்லாத நல்லறம் விருத்தியாயினாற்போல அந்தரவாசிகளாகிய அரம்பையர் அன்பினையுடையராய்ப் பரதனுடன் வந்த வீரரை யடைந்து எதிர் வணங்கி, சந்திரனைப்போலும் விளங்கும் பளிக்கறையில் அழைத்துக்கொண்டு சென்று வானநீரினாலாட்டிக் கற்பக மலர் மாலையைப் புனைந்து செம்பொற்கலந் திருத்தி இனிய அமிழ்தினை உண்பித்துப் பஞ்சசயனத்தில் பஞ்சூட்டிய பாதங்களையும், நஞ்சு தீட்டிய கண்ணையுமுடைய மாதர்கள் மான்போன்றுறங்க, அத்தனை பேரும் உறக்கங்கொண்டார்கள். இவ்வாறு அரசர்முதல் சிவிகையைக் காவுவோர்வரையிலுமுள்ள யாவரும் தத்தமக்குரிய வரிசை வழுவாமல் தெய்வ மகளிர் கொண்டாடத் தேவபோகத்தை அடைந்தனர். மாதர்களும் தேவமாதர் செல்வத்தை அனுபவித்தனர். வாடையும், கற்பகச் சோலையின் மணமுகந்து மெல்லென வீசிற்று. மயங்கின வண்டின் கூட்டம் மதசலமருந்தின. தேன் மணங் கமழ்கின்ற கவளத்தையும், செங்கதிரைத் தரும் நெற்கதிரையும் கற்பகத் தருவளிக்க யானைகளுண்டன. நரகத்தின்வழிச் செல்வோர்க்கு அவ்வழியின் நின்று நீங்க அறத்தைத் தரும் கங்கை நீரைத் துதிக்கையையுடைய கோபமுள்ள யானைகள் காலை நிமிர்ந்துண்டன. மரகதக் கொழுந்தென வார்ந்த புல்லைக் குதிரைக் குழாங்கள் அருந்தின. இன்னவிதமாக உயர்திணை, அஃறிணைப் பொருள்கள் இந்திரபோகமனுபவித்தன.

இன்னை ரின்னணம் யாவரு மிந்திரன்
துன்னு போகங்க டெய்த்தனர் தோன்றருன்
அன்ன காயுங் கிழங்குமுண் டப்பகல்
பொன்னின் மேனி பொடியுறப் போக்கினன். ()

இன்ன விதமாக அந்த இராத்திரி நீங்கலும் சூரியனும் உதயமானன். சூரியன் எழுந்தது கண்டு சேனைகளேயல்ல இது கடலேயென்று தேவர்கள் கண்டு மயங்கவும், போகும் வழியிலுள்ள சோலைகளும், மலைகளும் சுண்ணமாகவும் பரதாழ்வானுடன் செல்லும் சேனை பாலைவனமடைந்தது. தூசி எங்குமெழுந்தன, அதனல் வெப்பமுள்ள சூரியனும் தன் வெப்பம் நீங்கினன். யானைகள் மதசலம் பொழிவதனல் பூமி நனைந்து வழுக்க சனங்கள் காலடி வைத்துப் போகமாட்டமல் வருந்தினர். கூர்மையுள்ள வேலைத் தாங்கிய அரசர் வெண்குடை மரநிழலைப்போல நிழலைச் செய்தன.

வன்றெறு பாலையை மருத மாமெனச்
சென்றது சித்திர கூடஞ் சேர்ந்ததால்
ஒன்றுரைத் துயிரினு மொழுக்க நன்றெனப்
பொன்றிய புரவலன் பொருவில் சேனையே. (361)

இவ்வாறு வருஞ் சேனையின் கோலாகலத்தை இளையவன் மலைமேலேறிப் பார்த்துப் பெருங் கோபங்கொண்டு 'இதென்ன விபரீதம்! தன்னுள்ளத்திற் பகைவைத்துக்கொண்டே வெளிக்குப் பட்சம் காட்டி இப்பரதன் படை கூட்டிக்கொண்டு விரதமேற்கொண்டிருந்த ஸ்ரீராமன்மேற் பகைகொண்டு வந்தான்' என்று அம்மலையினின்றும் குதித்துப் பூமியிலுள்ள மலைகளும் நீருய்ப் போக மிதித்துச் ஸ்ரீராமபிரானை விரைந்தடைந்து,

'நமது பரதன் சேனையைக் கூட்டிக்கொண்டு போர்க் கோலங் கொண்டு வருகிறான். நம்மைச் சிறிதும் மதித்திலன்' என்று உரைத்து,

கட்டினன் சுரிகையுங் கழலும் பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன் கவசம் பூட்டமைத்
திட்டன னெடுத்தனன் வரிவி லேந்தலைத்
தொட்டடி வணங்கிநின் றினைய சொல்லினான். ()

இருமையு மிழந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையு நின்னொரு பின்பு வந்தவென்
னொருமையுங் கண்டினி யுவத்தி யுள்ளநீ. (363)

படாத துன்ப மெல்லாம் பட்டு யானைகள் திடர்களில் உருண்டு உருண்டு கிடக்கவும், தேர்கள் இழுத்துக்கொண்டு போகவும், குடர்க ளெல்லாம் திரைந்து கிடக்கவும், உதிரவெள்ள மோடவும், காலாட்கள் தம் படைகளும், கைகளும் துண்டமாகக் கவசமணிந்த மார்பு துளைக்கப்பட்டு உயிரோடு வருந்துவதையும், உதிரம் தோயாமல் சுடுகணைகள் திசையானைகளையும் பயப்படச் செய்யும்படி செய்கின்றேன். யானைத் தந்தத்தால் செய்த தேர்களும், குதிரைகளும் அழியப் பொன்னுலாகிய தட்டினிடத்தே நின்று அலகைகள் அற்றுப்போனகேடகத்தையணிந்தவீரர்கள் தடக்கைகளைக் கவ்விக்கொண்டு சங்கீதம் பாடி நாடக நடிப்பதையும், இப் பரதனுடைய சேனை வெள்ளத்தை இமைப்போதிற் கொன்று குவித்து விண்முழுதுகு நெளியவும், மண்முழுதுகு ஆற்றிக்கொண் டிருக்கவும் படை யெல்லாம் இப்படிப்பட்ட வெள்ளத்தின்மேல் நீந்திக்கொண்டு, மெய் சிவந்த

குறள்களும், பாரிடமும் கவந்தமும் இவ்வுலக முழுதும் ஸ்ரீராமபிரான் வசமாய்ப் போய்விட்டதே யென்று ஆனந்தக் கூத்தாடவும் பார்க்கலாம்; மேலும் ஒரு நொடிப் பொழுதிலேயே இக்கடல் போன்ற சேனை வெள்ளத்தை மார்பு துருவிச் செல்லும் வடிக்கணை யொன்றினால் நான் வெற்றிகொண்டு திரிபுராந்தகனைப் போல விளங்குவதைப் பாரும்' என்று சொல்லிக்கொண் டிருக்கையில் ஸ்ரீராமபிரான் இளையவனைப் பார்த்துத் தம்பி,

இலக்குவ வுலகமோ ரேழு மேழுநீ
கலக்குவ னென்பது கருதி னலது
விலக்குவ தரித்து விளம்பல் வேண்டுமோ
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால். (364)

எனைத்துள மறையவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
அனைத்திற மல்லன வல்ல வன்னது
நினைத்திலை யென்வயி னேய நெஞ்சினால். (365)

பொன்னெடும் பொருகழற் பரதன் போந்தனன்
நன்னெடும் பெரும்படை நல்க லன்றியே
என்னொடும் பொருமென வியம்பற் பாலதோ
மின்னொடும் பொருவுற விளங்கும் வேலினாய். (366)

சேனையர் தருமத்தின் றேவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமே
பூணியன் மொய்ம்பினாய் போந்த தீண்டெனைக்
காணிய நீயிது பின்னுங் காண்டியால் (367)

என்றன னிளவலை நோக்கி யேந்தலும்
நின்றனன் பரதனு நிமிர்ந்த சேனையைப்
பின்றரு கென்றுதன் பிரிவில் காதலில்
தன்றுணைத் தம்பியுந் தானு முந்தினான். (368)

தொழுதுயர் கையினன் றுவண்ட மேனியன்
அழுதழி கண்ணின னவல மீதென
எழுதிய படிவமொத் தெய்து வான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான். (369)

கார்ப்பொரு மேனியக் கண்ணன் காட்டினான்
ஆர்ப்புறு வரிசிலை யிளைய வ்வையநீ
தேர்ப்பெருந் தானையாற் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கென. ()

ஸ்ரீராமன் கூறியதைக்கேட்ட இளையவன் ஒளி யிழந்த முகத்தையுடையவனாய்ப் பரதாழ்வானை வைத சொல்லும் உணர்வும் கோபமும் சோர வில்லையெறிந்து விட்டுக் கண்ணீர் பூமியிற் சிந்த நின்றான். அப்போது,

கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
காதனைப் பிரிந்தன லைத்து நீங்கினாள்
வேதனைத் திருமகள் மேலிகின் றாள்விடு
தூதெனப் பரதனுந் தொழுது தோன்றினான். (371)

அறந்தனை நினைந்திலை யருளை நீத்தனை
துறந்தனை முறைமையை யென்னுஞ் சொல்லினான்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்தனன் றாதையை யெதிர்கண் டென்னவே. (372)

அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
உயாவுறத் திருவுள முருகப் புல்லினன்
நியாயமத் தனைக்குமோர் நிலய மாயினான்
தயாமுத லறத்தினைத் தழுவி யென்னவே. (373)

புல்லின னின்றவன் புனைந்த வேடத்தைப்
பல்முறை நோக்கினன் பலவு முன்னினன்
அல்லலி னழுங்கினை யைய வாளுடை
மல்லுயர் தோளினன் வலிய னேவென்றான். (374)

அரியவ னுரைசெயப் பரத னையநின்
பிரிவெனும் பிணியினா லென்னைப் பெற்றவக்
கரியவள் வரமெனுங் கால னானக்
குரியமெய் நிறுவிப்போ யும்ப ரானென்றான். (375)

தந்தை பரமபதஞ் சென்றார் என்ற வெய்யசொல் லைக்கேட்கவே சீராமபிரான் புண்ணில்வேல் செருகியது போல் கண்ணும் மனமுங் கறங்கே போற் சுழலும்படி மண்ணிடை வீழ்ந்து புலம்பிச் சிறிது முயிர்ப்பில்லாமல் இடியோசை கேட்ட நாகம்போல் வருந்தி உணர் வொழிந்து பலவிதமாகப் புலம்பலாயினன்.

நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் றாயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையே
அந்தோ வினிவாய்மைக் காருளரே மற்றென்றான். ()

தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டு
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்ன மிருந்தேனான் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வ ருயிரடைந்த வொன்வேலோய்.

என்றெடுத்துப் பற்பலவும் பன்னி யிடருழக்கும்
குன்றெடுத்த லொக்குங் குவவுத்தோட் கோளரியை
வன்றடக்கைத் தம்பியரு மற்றுள்ள மன்னவரும்
சென்றெடுத்துத் தாங்கினார் மாவதிட்டன் றேற்றினன்.

அத் தருணத்திற் சொல்லற் கரிதாகிய நோன்பினையுடைய பரத்துவாசர் முதலிய முனிவரும் அநேக அரசர்களும் மந்திரிமார்களும் பிறரும் வந்து சேர்ந்தார்கள். அப்போது வசிட்ட முனிவர் ஸ்ரீராமபிரானைப் பார்த்து,

துறத்தலு நல்லறத் துறையு மல்லது
புறத்தொரு துணையிலை பொருந்து மன்னுயிர்க்
கிறத்தலும் பிறத்தலு மியற்கை யென்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ. (379)

பெறுவதன் முன்னுயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு சிறப்பினில் வையம் யாவையும்
அறுபதி னாயிர மாண்டு மாண்டவன
இறுவது கண்டதற் கிரங்கல் வேண்டுமோ. (380)

சீலமுந் தருமமுஞ் சிதைவில் செய்கையுஞ்
சூலமுந் திகிரியுஞ் சொல்லுந் தாங்கினார்
மூலம்வந் துதவிய மூவர்க் காயினுங்
காலமென் றொருவரை கடக்க வொண்ணுமோ. (381)

புண்ணிய நறுநெயில் பொருவில் காலமாந்
திண்ணிய திரியினில் விதியென் றீயினில்
எண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினால்
அண்ணலே யவிவதற் கைய மாவதோ. (382)

விண்ணுநீர் மொக்குளின் விளியும் யாக்கையை
எண்ணிநீ யழுங்குத லிழுதைப் பாலதால்
கண்ணினீ ருகுத்தலின் கண்ட தில்லைபோய்
மண்ணுநீ ருகுத்திதா னரைக்கை யாலென்றான். (383)

இவ்வாறு வசிட்ட முனிவரர் கூறியபின் அரசர்கள் சிராமமூர்த்தியை வந்தி னின்று பொன் திணிந்தாலொத்த சடையையுடைய வசிட்டமுனிவரோடும் கங்கைக் கரையை அடைந்து நீரிற் செய்யுங் கடமைகளைச் செய்யக்கடவாய் என்று கரையில் நின்றார்கள். சிராமன்,

புக்கனன் புனலினின் முழுகிப் போந்தனன்
தக்கநன் மறையவன் சடங்கு காட்டத்தான்
முக்கையி னீர்விதி முறையி னீந்தனன்
ஒக்கநின் றுயிர்தொறு முணர்வு நல்குவான். (384)

சிராமன் பின்னும் செய்யவேண்டிய கருமங்களெல்லாம் செய்து முடித்தான். பிறகு இரகுநந்தனன் மந்திரத்தவரும் மாதவரும் மன்னரும் ஏனையோருஞ் சூழச் சானகியிருந்த சாலையை அடைந்தனன். அடைந்தகாலையில் பரதாழ்வான் தனியளாய் நின்ற சீதையைப்பார்த்து அவள் வசிக்கும் பர்ணசாலையை நோக்கி, வருத்தமுற்றவனாய்க் கண்ணாகிய தாமரையைக் கைகளான் அடித்துக்கொண்டு சானகியார் பாதங்களில் வீழ்ந்து அழுதனன். பரதன் அழுவதைக் கண்ட இரகுவீரன் அவனைத் தாங்கிக்கொண்டு சீதையைப் பார்த்து 'அரசர்பெருமான் என் பிரிவினால் இறந்துபட்டான்' என்றான். அதைக்கேட்ட சானகி கண்ணென்னுங் கடல் பெருங்கலுழியைச் சொரிய மண்ணென்னுஞ் செவிலித் தாய்மேல் வைத்தகையை உடையவளாய்த் தன் கணவன்

பின்னே நடந்து வந்தமையால் தனக்குக் காடானது திருவயோத்தி நகரத்தையே ஒத்திருந்ததாயினும் மன்னர் பெருமான் இறந்து பட்டானென்ற சொல் தன் செவித்தொளையில் புகுந்தமையால் துயரமாகிய கடலுக் கடிவைத்தவளானாள்.

அதைக்கண்ட முனிவர்களுடைய தரும பத்தினிமார்கள் அவளைத் தங்கையா லேந்திக்கொண்டு தேற்றித் துயரமகற்றி இரகுவீரனிடத்திலே சேர்த்தனர். அப்போது மந்திரியாகிய சுமந்திரன், இரகு நாயகனை முதலிய நால்வரையும் பெற்ற தாய்மார் மூவருடனே வந்து அவ் விரகு நாயகனை வணங்கி நின்றான். இரகுவீரனே தனக்கு முன்னே எழுந்தருளிய தாய்மார் மூவரையும் பார்த்தருளி அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கி "எந்தையார் எங்குற்றார் சொல்லுங்கள்" என்று கேட்க, அதைக்கேட்ட தாய்மார்களும் கதறி யழத்தொடங்கினர். அதைக் கண்ட சேனைகளும் மாதர்களும் அழுது புலம்பினார்கள். பின்பு தாய்மார்கள் மூவரும் சானகியைக் கட்டிக்கொண்டு புலம்பி அழுது நின்றார்கள். இவ்வாறிருக்கையில் சேனைத் தலைவரும் நகர மாந்தரும் மற்றையோரும் அரசர்களும் மாதவரும் கூடிக்கொண்டு சீராமபிரா னிருந்தவிடஞ் சென்று சேர்ந்தார்கள். அப்போது சூரியன், அத்தமன வரையை அடைந்தனன்.

அத் தினங் கழிந்தபிறகு அரசர்கள் கூட்டமும் முனிவர் கூட்டமும் மாதர்கள் கூட்டமும் சூழ்ந்து இருந்த பரதன், இளையவன் சத்துருக்கன் என்னும் தம்பிமாரும் புடைசூழ இரகுநாயகன் வீற்றிருந்து, பரதனைப் பார்த்து,

வரதன் றுஞ்சினான் வைய மாணையால்
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொல் வேண்டுவான்
பரத கூறெனாப் பரிந்து கூறினான். (385)

என்ற லும்பதைத் தெழுந்து கைதொழா
நின்று தோன்றலை நெடிது நோக்கிநீ
அன்றி யாவரே யறத்து ளோரதர்ப்
பின்று வாய்கொலா மென்னப் பேசுவான். (386)

மனைக்கொண் ருதவள் வரத்தி னின்னையுட்
நினைக்கொண் ருணிலை நிறுவி நேமியான்
தனைக்கொண் ருடருந் தனைய னாதலால்
எனக்கன் றேதவ மடுப்ப தெண்ணினால். (387)

நோவ தாகவிவ் வுலகை நோய்செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியேன்
சாவ தோர்கிலேன் றவஞ்செய் வேனலேன்
யாவ னாகியிப் பழிநின் றேறுவேன். (388)

தொணைகயி லன்பினா லிறைவன் றுஞ்சநீ
புகையும் வெஞ்சுரம் புகுதப் புந்தியால்
வகையில் வஞ்சனா யரசு வவ்வயான்
பகைவ னேகொலா மிறவு பார்க்கின்றேன். (389)

உந்தை தீமையு முலகு ருதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்கெனாச்
சிந்தை யாவதுந் தெரியக் கூறினான். (390)

இப்படிச் சொன்ன பரதாழ்வானுடைய கருத்தைச் சீர்தூக்கிப் பார்த்து இரகுநாயகன் 'இவன் எண்ணம் இப்படியா இருக்கின்றது' என்று அவனைப் பார்த்துச் சொல்வானாயினான்.

முறையும் வாய்மையு முயலு நீதியும்
அறையு மேன்மையோ டறனு மாதியாந்
துறையுள் யாவையுஞ் சுருதி நூல்விடா
இறைவ ரேவலா லியைவ காணையா. (391)

பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவருங்
குரவ ரேயெனப் பெரிது கோடியால். (392)

அந்த நற்பெருங் குரவ ராமெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்
தந்தை தாயரென் றிவர்க டாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையால். (393)

தாய்வ ரங்கொளத் தந்தை யேவலால்
மேய வெங்குலத் தரும மேவினேன்
நீவ ரங்கொளத் தவிர்த னீர்மையோ
ஆய்வ ரும்புலத் தறிவு மேவினாய். (394)

தனைய ராயினார் தந்தை தாயரை
வினையி னல்லதோ ரிசையை வேய்தலோ
நினைய லோவிடா நெடிய வன்பழி
புனைத லோவைய புதல்வ ராதருன். (395)

வரனி லுந்தைசொல் மரபி னுலுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்
உரனி னீபிறந் துரிமை யாதலால்
அரசு நின்னதே யாள்க வென்னவே. (396)

முன்னர் வந்துதித் துலக மூன்றினும்
நின்னை யொப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகில்யா னின்று தந்தனென்
மன்ன போந்துநீ மகுடஞ் சூடென்று. (397)

மலங்கி வையகம் வருந்தி வைகநீ
உலங்கொ டோளனைக் குறுவ செய்தியோ
கலங்கு றுவணங் காத்தி போந்தெனைப்
பொலங்கு லாவுதாள் பூண்டு வேண்டினன். ()

அதைக்கண்ட இரகு நாயகன் பரதாழ்வானைப் பார்த்து அன்புடைய சிந்தைகொண்டு 'இவ்வுலகம் முழுதும் என் வசமே நீ செய்தாயானல் அது முறை-யாமோ! வசை புண்டாமன்றே! நம்மைப் பயந்த தந்தையார் சொல்ல நான் மேற்கொண்ட வருஷம் பதினன்கும் இன்றோடு முற்றுப்பெறுமோ! வாய்மை யென்னு மிதுவல்லாமல் உலகமும் இது சரியென்றே ஏற்றுக்கொள்ளுமா! தீமையானது அதனல் தீர்வதல்லாமல் மெய்யாக வேறு சொல்ல யாதிருக்கின்றது! நமது தந்தை சொன்ன கட்டளையின்படி மேற்கொண்டு வந்த பதினலாண்டும் நான் வனத்தில் வாசஞ்செய்து கொண்டிருக்கிறேன். அது வரையும் எனக்கு நீ கொடுத்த அவ்வரசுரிமை முழுதும் என்னணை கடவாதபடி நீ அரசாண்டுவர வேண்டுகிறேன். இது நிற்க.

வேறு

மன்னவ னிருக்க வேயு
மணியணி மகுடஞ் சூடு
கென்னயா னியைந்த தன்று
னேயது மறுக்க வஞ்சி
அன்னது நினைந்து நீயென்
றுணையை மறுக்க லாமோ
சொன்னது செய்தி யைய
துயருழந் தயா லென்றான். (399)

ஒள்ளியோ னினைய வெல்லா
முரைத்தலு முரைக்க லுற்ற
பள்ளநீர் வெள்ள மன்ன
பரதனை விலக்கிப் பண்டு
தெள்ளிய குலத்தோர் செய்கை
சிக்கறச் சிந்தை நோக்கி
வள்ளியோய் கேட்டி யென்று
வசிட்டமா முனிவன் சொன்னான். (400)

முன்னாளில் திருமகள் கொழுநனாகிய பகவான் தன் ஆதியஞ்சோதி உருவை அங்குவைத்து இக்கடலிடத்தினின்றும் ஆதிவராகத் திருவுருவாய் இங்குத் தோன்றி இப் பூபிராட்டியைத் தன் வெண்கோட்டிற் சந்திரனிடத்தே உள்ள மறுவைப்போல ஏந்தி விளங்கினான். அப்படிப்பட்ட காலத்தில் ஐம்பெரும் பூதமும் ஆகாசத்தில் மறைந்து எவையும் புகுந்த பின்பு இறைவனும் மீளவும கடலைப் படைத்து அதில் அறிதுயிலமர்ந்தருளினான். அக் கடல்வண்ணப் பெருமான் தன் உந்திமலரிற் றோன்றிய நூற்றிதழ்க் கமலத்திலிருந்

தும் விரைந்து யாரையும் படைக்கப் பிரமதேவன் அவதரித்தான். அன்று அவன் படைக்க உண்டாகிய இவ் வுலகமுழுவதும் உன் குலத்திற் பிறந்த அரசர்கள் இன்று வரையிலும் முறை தவறுமல் அரசாண்டு வந்தார்கள். ஆயினும் நான் உனக்குச் சொல்லவேண்டிய தொன்றிருக்கின்றது. அதைச் சொல்லுகிறேன் கேள்.

இதவிய வியற்றிய குரவர் யாரினும்
மதவியல் களிற்றினுய் மறுவில் விஞ்சைகள்
பதவிய விருமையும் பயக்கப் பண்பினல்
உதவிய வொருவனே யுயரு மென்பரால். (401)

என்றலால் யானுனை யெடுத்து விஞ்சைகள்
ஒன்றலா தனைபல வுதவிற் றுண்மையால்
அன்றெனு தின்றென தாணை யையநீ
நன்றுபோந் தளியுனக் குரிய நாடென்றுன். ()

வசிட்டர் கூறியதைக் கேட்ட காகுஸ்த வம்சோத்ரன் வசிட்ட முனிவரைத் தாமரை மலரைப் பழித்த தமது கைகளால் தொழுது வணங்கிக் கூறுவானுயினன்.

சான்றவ ராகதந் குரவ ராகதாய்
போன்றவ ராகமெய்ப் புதல்வ ராகதான்
தேன்றரு மலருளான் சிறுவ செய்வெனென்
றேன்றபி னவ்வுரை மறுக்கு மீட்டதோ. (403)

தாய்பணித் துவந்தன தந்தை செய்கென
ஏயவெப் பொருள்களு மிறைஞ்சி மேற்கொளா
தீயவப் புலையனிற் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிவது நல்ல தல்லவோ. (404

முன்னுறப் பணித்தவர் மொழியை யானென
சென்னியிற் கொண்டது செய்வெ னென்றபின்
பின்னுறப் பணித்தனை பெருமை யோயெனத்
தென்னினிச் செய்வதென் றுரைசெ யீங்கென்றான். ()

இராமன் உரைத்ததைக் கேட்டமுனிவர் பெருமானும் உரைக்கும் முறைமை காணாதவராய் வாளாவிருந்தனர். பரதாழ்வான் அப்படியானால் 'நாடு ஆள வேண்டிய கருத்துடையவர்கள் நாட்டை அரசாண்டு வரட்டும். நான் காட்டிலிருந்து தவஞ்செய்கின்றேன்' என்றான். அச் சமயத்தில் தேவர்கள் எல்லாரும் இப்பரதாழ்வான் சீராமபிரானை அழைத்துக் கொண்டுபோய் விடுவானானால் நமக்குக் காரியக் கேடாய் விடுமே யென்று ஆகாயத்தில் மறைந்துகொண்டு நின்று 'புகழ வரிய பெருங்குணத்துப் புண்டரிசக்கட் புரவலனாகிய சீராமபிரான் இங்கே தன் தந்தைசொற் கடவாமல் பதினாலாண்டும் வனசஞ்சாரஞ் செய்தே வரவேண்டும். அது வரையிலும் நீ அவன் சொற்கடவாமல் இவ்வுலக முழுதுமே அரசாண்டு வரவேண்டும்' என்று பரதனை நோக்கிச் சொல்லினர்.

அதைக்கேட்ட இரகுநாயகனும் தேவர்களும் தன் கருத்தையே சொன்னமையால் இனி மறுப்பது தகுதியல்ல, அதுவரையிலும் 'நீ என்னாணையைக் கடவாமல் அரசாண்டுவரவேண்டுகிறேன்' என்று பரதன் கையைப் பிடித்துச் சொல்லப் பரதன்,

ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலங்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி
சாமிது சரதநின் னாணை சாற்றினேன் (406)

என்பது சொல்லிய பரதன் யாதுமோர்
துன்பில னவனது துணிவை நோக்கினான்
அன்பின னுருகின னன்ன தாகென்றான்
தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான். (407)

விம்மினன் பரதனும் வேறு செய்வதொன்
றின்மையி னரிதென வெண்ணி யேங்குவான்
செம்மைநின் றிருவடித் தலந்தந் தீகென
எம்மையுந் தருவன விரண்டு நல்கினான். (408)

அடித்தல மிரண்டையு மழுத கண்ணினான்
முடித்தல மிவையென முறையிற் சூடினான்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினான்
பொடித்தல மிலங்குறு பொலங்கொள் மேனியான். ()

பரதன் இராகவபிரானிடத்தே விடை பெற்றுக்கொண்டு தாய்மாரும் மாதவரும் பெரியோரும் சேனைகளும், தம்பியும் தன்னைச் சூழ்ந்துவரச் சென்றான். வசிட்டமுனிவரும், பரத்துவாச முனிவரும், குகப்பெருமானுஞ் சீராமபிரானிடத்தே விடைபெற்றுக்கொண்டு சென்றனர். ஆகாயத்தில் மறைந்திருந்த தேவர்களும் போய்விட்டனர்.

பாதுகம் தலைக்கொடு பரதன் பைம்புனல்
மோதுகங் கையின்கரை கடந்து முந்தினான்
போதுகுங் கடிபொழி லயோத்தி புக்கிலன்
ஓதுகங் குலிநெடி துறக்க நீங்கினான். (410)

நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக் கோன்முறை செலுத்தச் சிந்தையான்
இந்தியங் களையவித் திருத்தன் மேயினான்
அந்தியும் பகலுநீ ரசூத கண்ணினான். (411)

இப்பால் சித்திரகூடத்தி லிருந்த இரகுநாயகன் நகரமாந்தரும், தம்பியிருவரும் தாய்மாரும் தம்பால் வைத்திருந்த அன்பால் இங்கே வந்து அடிக்கடி நம்மை வருந்துவார்க ளாதலால் இங்கேயிருப்பது சரியல்ல வென்று தம்பியும் சானகியும் தொடர்ந்துவரத் தென் திசையை நோக்கி நடந்தான்.

இறுவ ரம்பிலி ராமவேன் ரேரும்பர்
பேறுவ ரேன்பது நிச்சய மாதலான்
மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்
பேறுவ ரேன்பது பேசவும் வேண்டுமோ.

# குறிப்புக்கள்

**கம்பராமாயணம்** :— கம்பரால் செய்யப்பட்ட ராமாயணம் என விரியும். ராமாயணம் என்பது ராம அயநம் என்னும் இரண்டு வட சொற்கள் சேர்ந்து தீர்க்க சந்திபெற்ற தொடர்மொழி. ராம என்பதற்குத் தனது நற்குண நற்செய்கைகளினாலும் திருமேனியழகினாலும் எல்லாரையும் மகிழ்விப்பவன் என்பதாம்; அயநம் என்பதற்கு அடைய அல்லது அறியக் கருவியாயுள்ளது என்பதாம். ஆகவே, ராமனை அடைய அல்லது அறியக் கருவியாயுள்ள நூல் அல்லது ராமனுடைய குணாதிசயங்களைத் தெரிவிக்கும் நூல் என்பது திரண்ட பொருள். இதனை (1) பால காண்டம், (2) அயோத்தியா காண்டம், (3) ஆரணிய காண்டம், (4) கிஷ்கிந்தா காண்டம், (5) சுந்தர காண்டம், (6) யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களாக மகா கவியாகிய கம்பர் பாடி முடித்தனர். கம்பர் காலத்துப் புலவராகிய ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பாடிய உத்தர காண்டம் இராமாயணத்தின் பிற்பகுதியாம்.

**கம்பர்** :— சோழ நாட்டிலே திருவழுந்தூரில் (a village 2 miles from Kutalam Railway Station Tanjore District). உவச்சர் குலத்தில் ஆதித்தர் என்பவர்க்குப் புதல்வராகப் பிறந்தவர். இவர் செல்வத்திற் சிறந்த வள்ளலாகிய திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல் என்பவரால் ஆதரிக்கப்பெற்றவர். கம்பர் இவ் வள்ளலைத் தாம் பாடிய இராமா-

யணத்தில் பத்து இடங்களில் வியந்து கூறியிருக்கின்றனர் இவர் இராமாயணமன்றி (1) திருக்கை வழக்கம், (2) சரஸ்வதி அந்தாதி (3) சடகோபரந்தாதி (4) ஏரெழுபது முதலிய வேறு நூல்களும் அநேகம் தனிப்பாடல்களும் பாடியிருப்ப-தாகத் தெரிகின்றது. இவர் இராமாயணம் அரங்கேற்றிய காலம் கி. பி. 885-ஆம் ஆண்டுக்கு முன் என்று கூறுவர்.

**அயோத்தியா காண்டம்** :— அயோத்திமா நகரத்தில் (நிகழ்ந்த செய்தியை உணர்த்தும்) பாகம் என விரிதலால் உருபும் பயனும் உடன் தொக்க ஏழாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடரில் இருசொல் ஒரு சந்தியாய் நின்றன.

## தசரதச் சக்கரவர்த்தியின் அமைச்சர் இலக்கணம்

1. குலமுதல் தொன்மை - பழங்குடிப்பிறப்பு ; கலையின் குப்பை - கலைகளின் உணர்ச்சி ; நலமுதல் நலியி-னும் - தமக்கு வரும் நன்மையே கெடுவதாயினும் ; நடுவு - நடுவுநிலைமை ; சலமுதல் அறுத்து - கோபத்தைக் களைந்து.

2. உற்றது - நேர்ந்தது ; மேல் வந்துறுபொருள் - மேல் வந்தடையுங் கருமம் ; உணருங் கோளார் - அறியுங் கொள்கையுடையார் ; வினை - பழவினை ; மாற்ற-லாற்றும் - மாற்றுதல் செய்யவல்ல ; பிறப்பின் மேன்மைப் பெரியவர் - பிறப்பினுற் சிறப்படைந்த பெருந்தகைமை யுடையவர் ; அரியநூல் - அரிதாகிய அமைச்சியல்.

மானநோக்கிற் கவரிமா அனையநீரார் என்பதனை 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்ன-ருயிர் நீர்ப்பர் மானம் வரின்' என்னுங் குறட்பாவோடு ஒப்பிடுக. இச் செய்-யுளை 'மதிநுட்ப நூலோடுடையார்க் கதிநுட்பம் - யாவுள முன்னிற்பவை' என்னும் குறட்கருத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்க.

3. உறுதி - நன்மை ; தலைமகன் - அரசன் ; வெம்மை- அரசனது கோபம் ; நின்று - அரசனுக்கு எதிர் நின்று ; செம்மை - நடுவு நிலைமை. தேற்றத்தார் - தெளிவினையுடையவர் ; ஒருமையே - (அமைச்சர் எல்லாரும்) ஒருமைப் பாடாகவே.

## அமைச்சர் அத்தாணி மண்டபமடைதலும் அவர் செய்கையும்

4. அந்தமில் அறிவன் - அளவிடப்படாத அறிவினையுடைய வசிட்டமுனிவன் ; தம் அரசு - தமது வேந்தனாகிய தசரதன் ; இறையிடை - சக்கரவர்த்திக் கருகே.

5. அன்னவர் - அமைச்சர் ;

## தசரதன் அமைச்சர்களை நோக்கிப் பகர்தல்

6. ஒட்டிய - நெருங்கிய ; பட்டவர் - புண் பட்டிறந்தவர்; பரமஞானம் போய் தெட்டவர் - மெய்யுணர்ச்சி சிறந்து தெளிந்தவர் ; செல்வம் ஈண்டென விட்டவர் - செல்வத்தை நிலையாமைகண்டு துறந்தவர் ; யாவர் வீடுளார் - வீடு பேறடைவார் யாவர்.

7. துறப்பு - துறவற வொழுக்கம் ; பிழைக்கலாகுமோ - ஒருவன் கடக்க முடியுமோ ;

## தசரதன் அமைச்சரை வினவுதல்

8. பெருமகன் - ஸ்ரீராமன் ; அவனிமாது - நிலமகள் ; பெருமானின் அவதாரமாகிய ஸ்ரீராமனுக்கு மலர்மகளும் நிலமகளும் மனைவியராகலின் அவருள் மலர்மகளை முன்னமே மணம் புணர்த்தினேன் இனி நிலமகளையும் மணம் புணர்த்திக்காண மகிழ்ச்சி யுடையேன் என்பது கருத்து.

## தசரதன் கூறியதைக் கேட்ட அமைச்சர் செய்கை

9. *திரண்டதோளினன் - தயரதன் ; வெருண்டு-பயந்து ; விம்முறு - தேம்புகின்ற ; இரண்டு கன்றினுக்கிரங்கு மோரா - இல் பொருள் உவமை.*

## வசிட்டமுனிவர் உத்தரம்

10. ***பிறத்து*** *- (எல்லா உயிர்களையும்) தோற்றுவித்து ; பிறப்பித்து என்பது பிறத்து எனத் திரிந்து நின்றது ; துடைத்தல் - அழித்தல் ;*

## சீராமனை அழைத்து வரும்படி தசரதன் சுமந்திரனுக்குச் சொல்லுதல்

11. *நம்பியைநளிர் முடிசூட்டி - புருடோத்தமனாகிய இராமனுக்குப் பெருமையாகிய முடியினைத் தரித்து ; நின்றது - நிலையாயதுறவற வொழுக்கம்.*

## சுமந்திரன் சீராமன் திருமாளிகையை யடைதல்

12. *அலங்கல் - மாலை ; அவன் மனமனையான் - அரசன் மனம்போல் பவனாகிய சுமந்திரன் ; விலங்கல் மாளிகை - மலைபோன்ற மாளிகை ; தளிர்ப்பான் - மகிழ்ந்து ; பொலன் கொள்தேர் - பொன்னாலியன்றதேர்.*

## சுமந்திரன் சீராமனைக் காண்டல்

13. *பெண்ணின் இன்னமிர்தன்னவள் - பெண்களில் அமுதம்போன்ற சானகி ; பிரியாவண்ண வெஞ்சிலைக்குரிசில் - சீராமனை நீங்காமல் அழகிய கொடிதாகிய வில்லேந்திய இளையவன் (இலக்குவன்); அண்ணல் - பெரியோனாகிய சீராமன் ; இருப்ப, நறவென, வண்டெனக் களிப்புறக் கண்டான் என்று இயைக்க.*

## சுமந்திரன் விண்ணப்பித்தமையும் சீராமனை தேரேறினமையும்

14. இக்கடலுடைக் கிழவன் - தசரதன்; கண்டு, தொழுது, உரைத்தனன், எனலும், எழுந்து, தேர் மிசைக் கொண்டான் எனவினை முடிக்க. மேகம் கோடையைத் தணிப்பான் மழைபெய்ய எழுதல் போலத் தேவர் துயரந் தீர்ப்பான் எழுபவனாதலின் கொண்டல் போல அவன்கொடி நெடுந்தேர்மிசைக் கொண்டான் என்றார்.

## சீராமன் சக்கரவர்த்தியைச் சார்தல்

15. ஆடவர் - நகரமாந்தர்; உயிர்தளிர்ப்ப - மனம் மகிழ் வெய்த; தம்பி - இலக்குவன்; அகங்குளிர் - மன மகிழ்கின்ற.

## சக்கரவர்த்தி சீராமனைத் தழுவிக்கொள்ளல்

16. நலங்கொள் மைந்தன் - சீராமன்; நளி நீர் நிலம் - கடல் சூழ்ந்த உலகம்; விலங்கல் - மலை.

## சக்கரவர்த்தி சீராமனை மணிமுடி சூட வேண்டல்

17. ஒருத்தலைப் பாரத்து ஒருத்தல் - ஒருபாற் பூட்டிய பாரத்தையுடைய வண்டியின் எருது; பங்குவின் ஊர்தி எருத்து - முடவனது வாகனமாவோன் பிடர்; இன்னொரு உரை; ஒருத்தலைப்பாரத்து - சுமையின் ஒரு தலையுள்ள பாரத்தைப்போல; ஒரு தலை பங்கு இல் ஊர்தி எருத்தின் - மற்றொரு தலையில் அக்கூறு (பாரம்) இல்லாமற் செல்லும் பொதி எருதைப் போல; அருத்தி - ஆசை.

## சீராமன் உடன்படல்

18. தாதை-தசரதன்; தாமரைக்கண்ணன்-சீராமன்; காத லித்திலன்-ஆசையையடைந்திலன்; கடன்-உரிமை.

## சபையிலுள்ள வேந்தர் சக்கரவர்த்திசகுத் தங்கள் கருத்துணர்த்தல்

19. மானவவைய - மனுகுலத்திற் சிறந்தவனே, தகவு - ஒழுக்கம்; தன்மை சேர்ஞானம் - மேன்மையமைந்த மெய்யுணர்ச்சி; நல்லவர்ப் பேணு நன்மை - பெரியோரிடத்து வழிபாடு; ஈனமில் செல்வம் - குற்ற மற்ற அரசச் செல்வம்.

20. ஊருணி - தண்ணீர்க்குளம்; உதவு மாடு உயர்பார் செழு பழுமரம் பழுத்து அற்றாகவும் - பயன் படும் நடு ஊரிலுள்ள பழுத்தற்குரிய மரம் பழுத்துப் பயனளிக்கவும்; மறுக்கின்றார்கள் யார் - தடுப்பவர் யாவர்; ஊருணியும், ஊர்நடுவேநின்ற பழுமரமும் யாவராலும் கொள்ளப் படுவதனாலும், கார்மழை பொழிதல் கைம்மாறு வேண்டப் படாமையாலும், கழினியிற் பாயு நதியினீர் என்றென்றும் விளையுளாக்கப்படுவதனாலும், பேரறிவாளனாகிய சீராமன் அரசச்செல்வம் பெற்றுழி அதுயாவராலும் கொள்ளப்படுவதனாலும், கைம்மாறு வேண்டப் படாமையாலும், என்றும் நன்மைவிளைக்கப் படுவதனாலும் அவற்றையே உவமை முகத்தால் எடுத்துக் காட்டினார். ஊருணிக்கு, 'ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம் - பேரறிவாளன்திரு' என்னும் குறளையும் பழுமரத்திற்கு, 'பயன்மரமுள்ளூர் பழுத்தற்றாற் செல்வ - நயனுடையான் கட்படின்', என்னும் குறட்பாவினையும், கார்மழை பொழிதற்கு, 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட் - டென்னாற்றுங் கொல்லோ வுலகு' என்னும் குறட்பாவையும் ஒப்பிட்டு நோக்குக.

## தசரதன் கணிதமாக்களை முடிபுனையுநாள் வினவியது

21. கணிதமாக்கள் - சோதிடம் வல்லார்; முதன்மை கூறி - முகமன்கூறி; வடிமழுவாளவற் கடந்தமைந்-

தன் - பரசுராமனை வெற்றிகொண்ட ஸ்ரீராமன் ; முடி-புனை கடிகைநாள் - முடியைத் தரிக்கின்ற முகூர்த்த ஓரை ; இத்தொடர், முடிபுனை தலைக்கடிதலைச் (நீக்கு-தல்) செய்யும் நாளென வேறொரு பொருள் பயந்து நிற்றல் காண்க.

## கணிதர்களைக்கேட்ட அரசன் வசிட்டரை வருகவென்ன அவர் வருதல்

22. இருந்தினர் - கணிதமாக்கள் ; அன்னசொல் - அச் சொல்லை ; யானையான் - தசரதன் ; செய்தவம் வருந்-தினன் - செம்மையாகிய தவத்தில் வருந்தின வசிட்ட முனிவன்.

## அரசர் அந்தணரை வழிபடவேண்டும் என்றல்

23. உள்ளத்தால் பேணுதி - உள்ளத்தால் பேணி வழி-படுவாய்; அந்தணர் என்பதற்கு அழகியதட் பத்தினை யுடையவர் என்றும் அது எதுப்பெயரென்றும் கூறு-வர் பரிமேலழகர். அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது வேதாந்தத்தையே பொருளென்று மேற் கொண்டு பார்ப்பார் என்பர் நச்சினார்க்கினியர்.

24. நொந்துளாரையும் - துன்பமெய்தினாரையும் ; நொய் துயர்ந்தாரையும் - விரைந்து உயர்பதம் பெற்றாரை-யும், எண்ண வரம்பும் உண்டாங் கொல் - நினைக்க அளவைப் படுமோ.

25. புனையுஞ் சென்னியையாய் - தரிக்கும் முடியையுடை யனாய்; புகழ்ந்தேத்துதி - புகழ்ந்து வணங்கு; இனிய கூறி நின்று ஏயின செய்தி - இனிய சொற்களைக் கூறி நின்று அவர் ஏவினவற்றைச் செய்.

26. ஒருவர் ஆக்கம் பெறுவதற்கும் அஃதொழிவதற்கும் அவர் (அந்தணர்) ஏவ லூழென்பதே நிற்குமெனின்

இம்மையினும் அம்மையினும் இனி ஆவதாகியிருப்பது எப்பொருள். தேவரை வழிபடுதலினும் அந்தணரை வழிபடல் சிறப்புடையதே என்பது பொருள்.

## அறம் முதலியன நீங்காதிருக்கவேண்டும் என்றல்

27. உருண்டு செல்லுஞ் சக்கரப் படையும், ஒள்ளிய பிளப்பினையுடைய சூலமும் மயக்கமகன்ற வாக்கும் படையாகக் கொண்ட மும்மைப் பெருந்தேவருக்கும் தெளிந்த நன்மையாகிய அறமும், மனத்து நடுவுநிலைமையும் கருணையும் முறையே நீங்கிய பின்னர் ஆகத்தக்க துண்டாமோ.

## சூது தீமைதரும் என்றல்

28. சூதெனமுற் பொருந்தக்கூறிய பெருந்துயரம், நீதியையுணர்ந்த மகனே ! நினக்கில்லையேனும் பொல்லாங்கென்பன அனைத்து மடைவதற்கு கூறப்படும் காரணம் அவையென்றே யறி என்பது பொருள் 'சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின், வறுமை தருவ தொன்றில்' என்னும் குறட்பாவை ஒப்பிடுக.

## அரசன் யாரோடும் பகைமை வேண்டாமை உணர்த்தல்

29. பகை கொள்ளிலன் - பகை கொண்டொழுகிலன் ; போரொடுங்கும் - போர்த்தொழிலடங்கிவிடும் ; புகழ் ஒடுங்காது - புகழ் என்பது ஓங்கிவளரும் ; தன் தாரொடுங்கல் செல்லாது - தன்னுடைய அறுவகைத் தானையும் கெடாமலிருக்கும் ; அதுதந்தபின் வேரோடுங் கெடல் வேண்டலுண்டாகுமோ - அது தந்த பின்னர் பகையை வேரோடுங் களைதலை வேண்டப் படுமோ ; அறுவகைத் தானையாவன - மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப் படை, பகைப்படை என்பன.

## அரசனுக்குத் தவம் இன்னதென்பது உணர்த்தல்

30. இராகவனே! தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கின்ற ஐம்பொறிகளும் அடங்க செல்வத்தை என்றுந் தேடிப் பழிபாவங்கட்கு அஞ்சும் பொறையினால் உலகையாண்டுவரும் அரசே அரசெனப் படுவது. அது வாளின்மேற் கிடந்து செய்யும் பெருந்தவமாம் என்பது பொருள்.

## அரசன் அமைச்சர் சொற்கேட்டல் தக்கதென்றல்

31. உமைக்கு நாதன் - உருத்திரன்; புள்ளூர்தி - திருமால்; இமைப்பிறுட்டமோ ரெட்டுடையான் - பிரமன்; புள் - கருடன், அமைச்சர் சொல்வழியாற்றுதல் ஆற்றலே - ஆற்றலெனப் படுவது மந்திரிமார் சொல்வழி நடப்பதே.

32. என்பு தோல் உடையார்க்கும் - என்பினுலுந் தோலினுலுமாகிய யாக்கையையுடைய மானிடர்க்கும்; இல்லார்க்கும் - அஃதில்லாத வானவர்க்கும்; தம் வன்புலப்பகை - தமது வன்மையாகிய புலப்பகையை; மாசறமாய்ப்பது என் - குற்றந்தீரக் கெடுப்பது யாது பயன்; முன்பு பின்பு இன்றி - தொன்மையும் புதுமையும் நாடாது எக்காலத்தும், மூவுலகத்தினும் - மும்மை யுலகத்தினும்; அன்பினல்லது ஆக்கம் உண்டாகுமோ - அன்பினுலன்றி யொரு செல்வம் கிடைக்குமோ.

## அரசனுக்கு எத்தகைய வேள்வி வேண்டும் என்றல்

33. அறங்கடவாது அருள்மெய்யின் நின்றபின் - அறத்தைக் கடவாத அருளினிடத்தும் வாய்மையினிடத்தும் இருந்த பின்னர். வேள்வியும் வேண்டுமோ - வேள்வி செய்தலும் வேண்டப்படுமோ; ஓகாரம் எதிர்மறை.

## அரசனுக்கு இன்றியமையாத குணங்கள்

34. இன்சொலுடையானும், ஈகையுடையானும், மதிக்கப் படுவானும், முயற்சியுடையானும் உள்ளந் தூய்மை யுடையானும் சிறப்பினையுடையானும், பகைவரை வெற்றி கொள்வானும், யாவராலும் நினைக்கப்படும் நீதியும் ஒழுக்கமும் கடவானேயாயின் அவ்வரச-னுக்குக் கேடென்பதும் உண்டு கொல்.

## அரசன் காலங்கருதியிருக்க வேண்டும் என்றல்

35. சீலமல்லன - ஒழுக்கமல்லன வற்றினை ; செம்பொன் துலைதாலமன்ன - (தன்னிலிட்ட) செம்பொன்னை வரையறுக்கும் துலைநாவே போன்ற ; தனிநிலை தாங்கிய ஞாலமன்னற்கு - நடுவு நிலைமையாக உலகை ஆண்டுவரும் அரசனுக்கு ; நல்லவர் - அறிவுடை-யோர் ; கண்ணுமுண்டாங்கொலோ - வேறு கண்-ணும் வேண்டப் படுவதோ. 'காலங் கருதியிருப்பர் கலங்காது - ஞாலங்கருதுபவர்' என்னுங் குறட்பா வோடு ஒப்பு நோக்குக.

## மங்கையர் வாஞ்சை கேடுதரும் என்றல்

36. தூமகேது - வாலையுடைய விண்மீன் - அது உற்-பாதக்குறி ; வாமமேகலை - அழகிய மேகலாபரணம்.

## மந்தரை கைகேசி மாளிகையைச் சார்தல்

37. நாற்கடற் படுமணி - நாற்றிசைக் கடலில் தோன்றும் மாணிக்கம் ; நளினம் பூத்ததோர் பாற்கடல் - முக-மாகிய தாமரை மலர்வதாகிய பாற்கடல் ; பவள வல்லி - பவளக்கொடிபோல்வா ளாகிய கைகேசி.

## கைகேயி மந்தரைக்கு தன் மக்கட் சிறப்புரைத்தல்

38. வெவ்விடமனையவள் - கொடியவிடம் போல்பவளா-கிய மந்தரை ; வேற்கணாள் - வேல்போலுங் கண்ண-

ளாகிய கைகேசி; செவ்வியர் - சுகமாக யிருக்கின்றனர். அவ்வவர் அறம் துறைதொறும் திறம்பலர் - அவரவர் தத்தம் அறத்தொழிலினின்றும் தவறு தொழுகுகின்றனர்; அவ்வவர் துறை யென்றது - சீராமன் தாய் தந்தையர் சொற்கடவாமை; இளையவன் சீராமனைப் புறத்தே காத்திருத்தல்; பரதன் சீராமனை யன்றித் தேவுமற் றறியேன் எனல்; சத்துருக்கன் அவ்விறைவனை யடைந்த பரதனையன்றி வேறறியாதிருத்தலென்கை.

39. பராவரும் - பரவுதற்கருமையாகிய; உராவரும் - பொருந்துதலருமையாகிய; விராவரும் - கலத்தற் கருமையாகிய.

## மந்தரை, கோசலை செல்வம் பெற்றதும் அதனைக் கைகேசி இழந்தமையும் கூறல்

40. ஆழ்ந்த பேரன்பினள் - அன்பு மிக்கவளாகிய கைகேசி; சூழ்ந்த - நெருங்கிய; நின்னலம் - நின்வனப்பு; கோசலை மதியினல் வாழ்ந்தனள் - கோசலை அறிவால் வாழ்வடைந்தனள்.

## சீராமன் நாளை முடிசூடுவான் என்று மந்தரை புகறல்

41. ஆண்மைமாசுற - ஆண்டன்மைகுறைய; தையலாள்பட - பெண்மாய; கோடிய - வளைத்த.

## மந்தரை கைகேசியை வெதுண்டு நோக்கிக் கூறல்

42. வேதனைக் கூனி - துன்பம் விளைக்கும் மந்தரை; பித்தி - பித்த குண முடையவளே; நிற்பிறந்த சேய் - பரதன்; தரிக்கிலேன் - பொறுக்கமாட்டேன்.

## கைகேசி வற்புறுத்திக் கூறல்

43. கயப்புற - கசக்க ; காய்கனல் - எரியும் நெருப்பு ; கதம் கனற்ற - கோபம் எழுப்ப.

## கைகேசி வற்புறுத்திக் கூறல்

44. வெயின்முறை குலம் கதிரவன் முதலிய மேலோர் - கிரணங்களைப் பரப்பும் சிறந்த சூரியன் முதலிய மேலோர் ; உயிர்முதல் பொருள் திறம்பினும் - உயிர் முதலிய பொருள்கள் மாறுபடினும் ; உரைதிறம்பாதோர் - சொற்றவறுதவராவர் ; மயில் முறை குலத்துரிமையை-மயிலினது முறைமையையுடைய குலத்துரிமையை யுடைய ; மனுமுதல் மரபை - மனு முதலிய அரசர் தோன்றிய மரபினை; செயிருறப்புலச் சிந்தையால் என் சொனாய் தீயோய் - கொடியாளே குற்றமுறப் பேதைமையை யுடைய சிந்தையினால் யாதுகூறினை.

மயில் முட்டையிட்டுப் பொரித்துழி முதற் பார்ப்பின் கலாபத்துப் பீலி பொன்னிறம் படர்தலானும் ஏனைய வற்றிக்கு அங்ஙன மின்மையானும் மயின்முறைக்குலத்துரிமை யென்றான் - இதனானே முதற் குமாரனே மணிமுடி புனைதன் மரபெனப் பொருள் படல் காண்க. இதனை, பலாவம் பொழிலினொரு தாயுயிர்த்த பலமயிற்குங் - கலாவம் புனைந்த களிமயின் மூத்ததெனக் கருதச் - சுலாவம் பரிமிர் வெற்பினெம் மாதுக்குத் தோன்றன்முன்ன - மிலாவம்பு வாய்ப் பழுதுக் குறைந்தாளென வெண்ணமுண்டே' என்னுந் தணிகைப் புராணச் செய்யுளோடு ஒப்பிடுக. இதுவேயன்றி 'மையின் முறை' 'என்பது எழுத்துமுதற்போலியாய் 'மயின்முறை' என்று வந்தது எனக் கொண்டு 'குற்றமற்ற முறையுள்ள குலம்' என்று

பொருள் கூறுவாரும் உளர். மனுஞாயிற்றின் மகனுக-லானும், அவன் வழி வந்தாரே கடை முறை உலகங் காத்தமையானும் மனுமுதன்மர பென்றதென்க.

45. எனக்கு நல்லேயுமல்லே - எனக்கு நன்மை செய்தாயு-மல்லே ; மதியிலாமனத்தோய் - அறிவில்லாத மன-முடையவளே.

## மந்தரை கைகேசியை யுடன்படச் செய்தல்

46. அருந்தவர் - முற்றத் துறந்த முனிவர் ; சிந்தனே-கருத்து ; வலிகிலராயினும் - வருத்தாதொழியினும் ; இடையறு இன்னல் மனத்தால் இறலுறும்படி இயற்றுவர் என்று இயைக்க ; இறலுறும்படி - வருந் தும் வண்ணம்.

47. உனக்கரும் புதல்வனே - உனக்கு அருமைப் புதல்வ ஞகிய பரதனே ; கெடுத்தொழிந்தனே - கெடுத்து விட்டனே ; கிளர்நீர் உடுத்த பாரகம் உடையவன் - கடல்சூழ்ந்த நிலமுழுதும் உடையவனுகிய தசரா-தன் ; ஒருமகன் - சீராமன் ; அவன் குலக்கோ மைந் தர் - அவனது (சீராமனது) சிறந்த மக்கள் ; அடுத்த தம்பி - அவனே அடுத்த இளேயவன் (இலக்குவன்)

48. தேவி தூயசிந்தையும் - கைகேசியினது பரிசுத்தமான மனமும் ; சூழ்ச்சியின் திரிந்தது - ஆலோசனேயின் மாறுபட்டது.

49. இராவணன் முதலிய அரக்கர்கள் செய்த பாவமும் தேவர்கள் முதலியோர்செய்த புண்ணியமுந் தூண்ட நல்ல கருணேயும் பரிசுத்தமான மொழியையுமுடைய கைகேசி (இராமமூர்த்தியி னிடத்துள்ள) மிக்க கரு-ணேயை நீக்கிஞள். அந்த அன்னே கருணேயை

யொழிந்ததனாலன்றோ இப்பொழுது இவ்வுலகங்கள் இராமமூர்த்தியின் பரவிய தொன்றுதொட் டுள்ள புகழாகிய அமுதத்தைக் காதாகிய வாயால் பருகுகின்றது.

கைகேசி அருளுடையவளா யிருந்தால் இராமசரிதை நடந்தே யிராதல்லவா ?

## கைகேசி உடன்படல்

50. கைகயன் அன்னம் - கேகயராசன் பெற்ற அன்னம் போல்வாள் ; வினை நிரம்பிய - முயற்சி நிரம்பிய ; அனையான் - பரதன்.

## மந்தரை கைகேசியைத் தெருட்டல்

51. நாடி - ஆராய்ந்து ; நளிர்மணி நகையாய் - குளிர்ந்த முத்தம் போலும் நகையினை யுடையவளே ; ஆடல் வென்றியான் - போரில் வெற்றிகொண்ட தயரதன் ; உள்ளமும் கோடிய - உடம்பே யன்றி மனமும் கோணிய ; கொடியாள் - கூனி.

## கைகேசியின் துணிபு

52. கூனி - மந்தரை ; நிரைத்த மாமணியாரம்-வரிசைப் பட்ட மணிவடங்கள் ; இரைத்தவேலை - ஒலிக்கின்ற கடல் ; ஒருமகன் - பரதன் ; தணியா-மனங்குளிர்ந்து.

53. நம்பியைநளிர் முடி சூட்டல் - பரதனுக்கு மணிமுடி கட்டுதல் ; துன்றுகானத்தி விராமனைத் துரத்தல் - மரங்களடர்ந்த காட்டிற் சீராமனைச் செலுத்தல் ; இவ் விரண்டும் அன்றதாமெனின் - இவ்விரண்டும் வேறு படுவதாயின் ; அரசன் முன் ஆருயிர் துறந்து யான் பொன்றி நீங்குதல் புரிவென் - அரசனுக்குமுன் உடலை நீக்கி யான் இறப்பேன்.

## தசரதன் கைகேசியின் வேண்டுகோட்கு இயைதல்

54. *கள்ளவிழ் கோதை* - கைகேசி ; *வெள்ள நெடுஞ்சுடர் மின்னின்* - வெண்மையாகிய நெடுஞ்சுடரை யுடைய மின்னலைப்போல.

## கைகேசி அரசனுக்கு வரங்கள் இவையென்றல்

55. *தீயவை யாவையினுந் சிறந்த தீயாள் ஏயவரங்கள் இரண்டில் ஒன்றினல் என் சேயுலகாள்வது, ஒன்றால் சீதை கொண்கன் போய் வனமாள்வது எனப் புகன்று நின்றாள் என இயைக்க.*

*என்சேய்* - பரதன் ; *சீதை கொண்கன்* - சனகிக்குக் கணவனாகிய சீராமன்.

## கைகேசி வரங்கேட்க தசரதன் துயரம் எய்தல்

56. *நாகமெனுங் கொடியாள்* - பாம்பெனப்படும் கொடியவளாகிய கைகேசி ; *தன் நாவின் ஈந்த சோகவிடம் தொடர* - தன் நாவினாற்கொடுத்த (சொல்லிய) புத்திரசோகம் என்னும் விஷம் தொடர்ந்ததனால் ; *துணுக்க மெய்தா* - நடுக்கமடைந்து ; *ஆகமடங்கலும்* - உடல் முழுதும், *ஆராவின்* வேகமடங்கிய *வேழமென்ன வீழ்ந்தான்* - பாம்பால் வேகங்கெட்ட யானை போல் வீழ்ந்தனன்.

57. *வெய்துயிர்த்தான்* - நெட்டுயிர்ப் பெறிந்தான்.

58. ஆவிபதைக்க அலக்கணெய்தி நின்றான் மேவி நிலத்திலிருக்கும், விம்மும், வீழும், ஓவியமென்ன உயிர்ப்பு அடங்கி ஓயும், பாவியை உற்று எதிர் பற்றி எற்ற எண்ணும் என முடிக்க ; *அலக்கண்*-துன்பம், *ஓவியம்* - பதுமை ; *எற்ற* - மோத.

59. கைவேல் மிக்க புண்ணுழை தைக்க உழைக்கும் ஆனைபோல்வான், பெண் என உட்கும் பெரும் பழிக்கு நாணும், உள் நிறை வெப்பொடு உயிர்த்து உயிர்த்து உலாவும், கண்ணினினோக்கும் மயர்க்கும் என முடிக்க. உழைக்கும் - வருந்தும் ; மயர்க்கும் - மயங்குவான்.

## கவிக்கூற்று

60. ஐயனது அல்லல் கண்டும் அஞ்சலள் உள்ளம் அஞ் சிலள், நாணிலள், நாணம் என்ன ஆம், தக்கோர்-பண்டு மடந்தை வேடம் வஞ்சனை என்றே, மாதரை தஞ்சென உள்ளலார்கள் என்று இயைத்துப் பொருள் கொள்க.

## கைகேசி மறுமொழி கூறல்

61. திசைத்தது - மயங்கியது ; குசைப்பரியோய் - பிடரி மயிரையுடைய குதிரையை யுடையவனே ; வசைத்-திறன் - வசையின் வகை.

## தசரதன் சோகம் எய்தல்

62. இந்த நெடுஞ்சொல் அவ்வேழை கூறுமுன் வெந்த கொடும்புணில் வேல் நுழைந்த தொப்ப, மைந்தன் அலாது உயிர்வேறு இலாத மன்னன், சிந்தை திரிந்து திகைத்து அயர்ந்து வீழ்ந்தான் என இயைக்க ; நெடுஞ்சொல் - கொடுமொழி ; சிந்தை திரிந்து-மனம் மாறுபட்டு ; திகைத்து - மயங்கி.

63. ஆவிகாலும் - உயிர் நீங்குகின்றது ; அந்தோ அறம் ஒ கொடிதேயெனும் - ஐயோ ஒ கெட்டதேயறம் என்பான் ; உண்மை ஒன்றும் சாகவென்று வெழும் - மெய்மை என்றும் இறக்க என்று எழுவான் ; மாக

மும் நாகமும் மண்ணும் வென்றவாளான் - விண்ணுலகமும், பாதலவுலகமும், மண்ணுலகமுமாகிய மும்மையுலகமும் வென்ற வாளினையுடைய தயாதன்.

64. கொன்று நீக்கி - கொன்று களைந்து; பூரியர் எண்ணிடை - கீழோர் எண்ணிக்கையில்; பொங்கும் - சினங்கொள்வான்; வீரியர் வீரம் விழுங்க நின்ற வேலான் - வீரர்வீரத்தை வெற்றிகொண்ட வேலையுடைய அரசன்.

## கைகேசியை அரசன் வேண்டல்

65. நின்சேய் - உன்மகனாகிய பரதன்; நானிலம் நள்ளாது - இவ்வுலகத்தவர் விரும்பார்; ஞாலந்தனிலென்று முள்ளார் எல்லாம் ஓத உவக்கும் புகழ்கொள்ளாய் - உலகத்தில் என்று முள்ளார் யாவரும் சொல்ல மகிழும் புகழினைக் கைக்கொள்ள மாட்டாய்; எள்ளா நிற்கும் வன்பழிகொண்டிடேன் பயன் என் - ருன் - அதனால் நிந்தனை செய்யும் வன்மையாகிய பழிச்சொல்லைக்கொண்டு பயன் யாதென்றனன்.

66. வானோர்கொள்ளார் - தேவர்களொப்பார்; மண்ணவர் உய்யார் - மண்ணுலகத்தவர் பிழையார்; ஏனோர் செய்கை இனி என்-ஏனையோராகிய நாகலோகத்தார் செய்கை இனியாது; யானே சொல்லக்கொள்ள விசைந்தான் - யானே (தசரதன்) வேண்டிக்கொள்ள மேற்கொள்ள இசைந்தனன் (இராமன்); உன் மகன் - பரதன்.

67. என் உள்நேர் ஆவி - என்னுட் பொருந்திய உயிர்; இன்றே உனதன்றே - இப்போதே யுனதேயாம்; கண்ணிற்சிறந்த உறுப்பில்லை யாகலின் 'கண்ணே வேண்டினுமீயக் கடவேன்' என்றும், அதனினுஞ் சிறந்த உயிரையே வேண்டினுந் தருவேன் என்பான்

'உண்ணேராவி வேண்டினு மின்றே யுனதன்றோ' என்றும், பெண்ணிற் சிறந்தவளாகலானும், கைகயன் மகளாகலானும் 'பெண்ணே கைகயன் மானே' என்றும், அவன் ஈகையிற் சிறந்தானகலின் 'வண்மை' என்று அடைதந்தும், கொடையாளி மகளாதலின் முறை திறம்பி அரசை விரும்பா தொழிவை, ஒருவாறு விரும்புவையேல் 'மண்ணேகொள்' என்றும் மற்றொன்றை வாயாற்கூறி நாடல் முறையன்றென்பான் 'மற்றையதொன்றும் மற' என்றுங் கூறினர். கவி சொற்களைக் கோத்திருப்பது வியக்கத்தக்கது.

68. வாய் தந்தேன் என்றேன் - வாய்கொடுத்துவிட்டேன் என்று சொல்லிவிட்டேன் ; இனியானே அதுமாற்றேன் - இனியானே அதனைத் தடுக்கமாட்டேன் ; நோய்தந்து - நோயை விளைவித்து ; என்னை நோவன செய்து நுவலாது - என்னை நோவத்தக்க மொழிகளைச் சொல்லிப் போக்காது ; தாய்தந்தென்னதாயுந் தந்தையும் என்ன ; பேய் தந்தீயும் - பேயும் விரும்பக்கொடுக்கும் ; நீயிது செய்தால் பிழையாமோ - நீயிது செய்வையாயின் குற்றமாமோ ; தாய் தந்தை என்றமை தாய்தந்தென நின்றது.

## கைகேசி அரசனை இழித்துக் கூறல்

69. இன்னே - இவ்வாறு ; பன்னி - சொல்லி ; இகல் வேந்தன் - வலிமையையுடைய அரசன் ; தன்நேர் இல்லாத் தீயவள் - தன்னை யொப்பாரில்லாத கொடியவள்.

## கைகேசியை அரசன் பின்னும் வேண்டல்

70. ஆவி புழுங்கா - நெடுமூச்செறிந்து ; அயர்கின்றான் - வருந்துகின்றவன் ; பொய் சொல்கேளா - பொய் மொழி பேசியறியாத ; வாய் மொழி மன்னன் -

வாய்மை மொழியையுடைய தயரதன் ; நச்சுத்தீயே பெண்ணுருவன்றே என நாணு - பெண்வடிவமென் பது விடாக்கினியே யன்றே என்று நாணமுற்று ; முச்சத்தார்போல - செத்தார்போல.

71. நின்மகன் - பரதன் ; தந்தேன் ஆளுதி - கொடுத்து விட்டேன் ஆண்டுவா ; உரைகுன்றேன் - சொல் தவ றேன் ; எல்லா உயிர்கட்கும் நன்மகன் - எல்லா உயிர் கட்கும் நல்லோனுமாகிய சீராமன் ; இந்த நாடிற வாமை நயவென்றான் - இந்த நாட்டைக் கடவா திருக்க விரும்பியருளென்றனன்.

72. என்றன் வேரற நூறும் வினைநோக்கி - என்சுற்றத் துடன் கழியும் வினையை எண்ணி ; நாவுமுலர்ந்தேன்- நாவும் வறண்டேன் ; நளினம்போல் கையான் - தாமரை மலர்போலுங் கையையுடைய சீராமன் ; நங்காய் உய்யேன் - பெண்ணே பிழையேன்.

## தயரதன் புகன்றதைக்கேட்ட கைகேசி கடுமொழி கூறல்

73. இரந்தான் - இரந்து வேண்டுவோனது ; முனிவெஞ்சாள் - கோபத்திற் குறையாதவளும் ; மரந்தா னென்னு நெஞ்சினள் - மரமொத்த மனமுடையவ- ளும் ; நாணாள் - நாணமிலாதவளும் ; வசைபாராள் - வசை நோக்காதவளுமாகிய கைகேசி ; சரந்தாவில் - லாய் - அம்புதாவும் வில்லையேந்திய அரசனே; தவிர்- கென்றல் - தவிர்க என்று சொல்லுதல் ; உரந்தா- னல்லால் - உனக்குள்ள வன்மையே யல்லாமல்.

## தயரதன கைகேசியை இடித்துக் கூறுதல்

74. ஒன்றுநின்ற - பொருந்திநின்ற ; உயிர்கேள்வர் - உயிர்போன்ற கணவர் ; பொன்று முன்னம் - சாகா முன்னம் ; பொன்றினரென்னும் புகழல்லால் - இறந்-

தனென்றும் புகழே யல்லாமல்; இன்றோர் காறும் - இற்றை வரையும்; எல்லேயார் - விளக்கமாகிய வளையலே யணிந்த மாதர்; தம் இறையோரைக் கொன்றாரில்லை - தங்கணவரைக் கொன்றவரிலர்.

75. ஏவம்பாராய் - துன்பத்தைப் பார்த்திலை; இனமுறை நோக்காய் - இனத்தின் முறையும் பார்த்திலே; ஆவென்பாயோ அல்லை - ஆவென்றிரங்குவையோ அல்லை; மனத்தாலருள் கொன்றாய் - மனத்திலருளைச் சிதைத்தனை; நாவம் பாலென்னாருயிருண்டாய் - நாவாகிய கணையால் என் அருமையாகிய உயிரை அழித்தனை; இனி ஞாலம் பாவம் பாராது இன் உயிர் கொள்ளப் படுகின்றாய் - இனி உலகத்தவர் பாவத்தை நோக்காது உன் இனிமையாகிய உயிர்வாங்கப்படப் போகின்றாய்; உலகத்தவர் உன்னைக் கொல்வார்கள் என்றபடி.

76. எண்பாலோவா - மாட்சிமையின் பகுதி நீங்காத; நாண்மடம் அச்சம் இவையே - நாணம் மடம் அச்சம் என்னும் இவற்றையே; புகழ்பேணி - புகழை விரும்பி; தம் பூண் பாலாகக் காண்பவர் நல்லார் - தாம் பூணும் பகுதியை யுடைய அணிகலமாக நோக்குவோர் மாதரேயாம்; நாண் பால் ஓரா நங்கையர் - நாணின் பகுதியை அறியாத மாதர்கள்; தம்பால் நணுகார் ஆண்பாலார் - தம் பகுதியை யடையாதார் ஆண்பாலாரேயாம்; பெண் பாலாரோடடைவு-(அவ்வாறு நணுகுவாராயின் அவர்) பெண்பாலாரோடு ஒரு புடையொப்பு (வடிவான்மாதரா யிருத்தலின்).

77. புயவலியால் மண்ணையாள்கின்றவராகி அறிவினல் வைத்து எண்ணப்படுகின்றவர் யாவரையும் எவ்வகையாகிய வன்மையானும் தேவர் வரையும் வெற்றி கொண்ட எனக்கு என் மனைவியால் முடிவு நேர்ந்ததன்மை பெறுவேனே என்பது பொருள்.

## கைகேசி அரசனை வாய்மை தவறலாகாதெனக் கூறல்

78. பாயுங் கனலேபோல் எரிந்து எருதே இன்னுயிர் உண்ணும் எரியன்னாள் வரிந்தார் வில்லாய் முன் ஓர் மன்னவன் அருமேனி அரிந்தான் அன்றே வாய்மை வளர்ப்பான் வரநல்கிப் பரிந்தால் என்னும் என்றனள் என இயைக்க ; அருமேனி அரிந்தான் - சிபிச்சக்கரவர்த்தி ; பரிந்தாலென்னும் - வருந்தினாலென்ன பயனும். தீத்தன்னை யடுத்த பொருளைப் பற்றுதலும், எரித்தலும் மேற் சேறலும் உயிர்வாங்குதலும் போலக் கைகேசியின் மொழி அரசனைப்பற்றி உடம்பினை வருத்தி மேற்செலாது உள்ளேசென்று உயிர்வாங்குதலின் 'பாயுங்கனலேபோல் எரிந்தேருதே இன்னுயிருண்ணும் எரியன்னாள்' என்றார்.

## தசரதன் கைகேசிக்கு வரங் கொடுத்தமையைக் கூறல்

79. வீந்தாளே யிவ் வெய்யவள் - இக் கொடியவளாகிய கைகேசி நான் உடன்படாவிடில் இறந்து படுவாள் என்றெண்ணி ; மிடல் வேந்தன் - தசரதன் ; வசை வெள்ளம் - பழிப்பாகிய கடல்.

## இரவு கழிதல்

80. சேணுலாவிய நாள் - பலநாள் ; ஏணுலாவிய - மாட்சிமைப்பட்ட ; இளநகை மாதராள் - கைகேசி.

## மாதரும், ஆடவரும் சீராமன் முடிபுனை கோலம் காண வருதல்

81. அன்னாள் - சனகி - சாதகை - சாந்தமிக்க.

## வசிட்டர் மகுடாபிஷேகத்திற்கு வருதல்

82. ஐயன் - சீராமன் ; யாவும் - வேண்டும் சுபகாமான உபகாணங்க ளனைத்தும்.

83. கங்கையே முதலவாகிக் கன்னியீறான தீர்த்தம்-கங்கை முதற் கன்னியிறுதியாகிய தீர்த்தம் ; தீர்த்தம்-கங்கை, காளிந்தி, சரஸ்வதி, கோதாவரி, நருமதை, சிந்து, காவேரி, கன்னி என்பனவற்றை, பூரித்து - கலசங் - களினிரப்பி ; அங்கியின் வினை - அக்கினி காரியம்.

## கைகேசி சீராமனை அழைத்துவருக என்றல்

84. வேந்தர்தம் வேந்தன்-தசாதன் ; பெண்டிரின் கூற்ற மன்னாள்-மாதரிற் கூற்றம்போல்பவளாகிய கைகேசி ; பிள்ளை - சீராமன்.

## சீராமன் தேரேறிக் கைகேசி மாளிகை செல்லல்

85. ஐயன் - சீராமன் ; ஆயிரமௌலியானை - ஆயிரமோலி யம்மானை ; தாரணிதேர் - மாலையணிந்த தேர்.

## கைகேசி மாளிகைக்குச் செல்லும் சீராமனை மாதர்கண்டு வருந்தல்

86. நுண்ணெனுஞ் சொல்லாள் - கைகேசி ; வள்ளல் - சீராமன் ; பண் - இசை.

87. வாரண மாற்ற - யானை ஒலமிட ; காரணமின்றியே-யும் - யாதொரு காரணம் இல்லாமலும்.

## சீராமன் கைகேசி மாளிகை யடைதல்

88. ஆங்கு வந்தடைந்த அண்ணல் - சீராமன் ; வீங்கிருங் காதல் - மிக்க அன்பு.

## கைகேசி சீராமனைக் காண்டல்

89. ஆயன - அத்தன்மையன ; அண்ணல் - பெரியோனாகிய சீராமன் ; அயர்ந்து தேருத்தூயவன் - தன்னை மறந்தறியாத பரிசுத்தனாகிய தயாதன் ; நாயகன்-கணவனாகிய தசாதன் ; இது - காடு செல்லென்றதனை.

## கைகேசிக்குச் சீராமன் வழிபாடு செய்தல்

90. சென்னிமண்ணுற - முடி மண்ணிற் பொருந்த ; சிந்தூரப் பவளச் செவ்வாய் - சிவந்த பவளம்போலும் செம்மையாகிய வாய் ; அந்தி வந்தடைந்த தாயைக் கண்ட ஆன் கன்றின் அன்னான் - மாலைக்காலத்து வந்தெய்திய பசுவினைக்கண்ட கன்றினை யொப்பவனாகிய சீராமன்.

## கைகேசி சீராமனிடத்தில் உன் தந்தை உனக்கு அறிவிப்பது உண்டென்றல்

91. நின்றவன் - சீராமன் ; இரும்பினன் இயைந்த நெஞ்சில் - இரும்பினமைந்த மனத்தால் ; கொடுமை பூண்டாள்-கொடுமை பூண்டவளாகிய கைகேசி ; மைந்த உனக்கு உந்தை உரைப்பதோர் உரை உண்டு ஏயதே இன்று எனக்கு உணர்த்தலாவது என்னின் ஆகுமென்றாள் என இயைக்க ; மைந்த - சீராமனே ; உனக்கு உந்தை உரைப்பதோர் உரை-உனக்குச் சக்காவர்த்தி சொல்வதாகிய தோருறுதி ; ஏயதே - அது அரசனாணையே ; இன்று எனக்கு உணர்த்தலாவது - இன்று என்னால் அறிவிக்கலாவது என்னின் ; ஆகுமென்றாள் - வேண்டு மென்னின் கூறலாமென்றனள்

### சீராமன் தன் உள்ளக்கருத்தை வெளியிடல்

92. எந்தையே ஏவ - தந்தையே கட்டளையிட ; இயைவ துண்டேல்-அமைவதாயின் ; அடியேன் உய்ந்தனன்-யான் பிழைத்தேன் ; என்னிற் பிறந்தவருளரோ - என்போலும் பிறபெய்தினர் இருப்பரோ ; என் தவத்தினல் வருபயன் வந்தது - என் தவத்தினாற் பெறப்படுவதாகிய பயன் வந்தெய்தியது ; தலைநின்றேன் பணிமின் என்றான் - செய்யக் காத்திருக்கின்றேன் கட்டளையிடும் என்றனன் ; வாழி - அசைச் சொல்.

### கைகேசி சீராமனைப் பதினான்கு காணிற் செல்க, இது அரசன ஆணை என்றல

93. ஆழி - கடல் ; பூழி வெங்கானம், புழுதிபடிந்த கொடிய காடு.

### கானேகேனக் கேட்ட சீராமன் முகமலர்ச்சி யோடிருந்தனன் எனறல்

94. யாரும் செப்பருங் குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கில் - யாவராலும் சொல்லுதற்கரிய மங்கல குணமமைந்த சீராமன் திருமுகப்பொலிவைப் பார்க்கில் ; முன்பு ஒப்பது - முன்பு தாமரைமலரை ஒத்திருப்பது ; அவ் வாசகம் உணரக் கேட்டபின்பு-அந்த வார்த்தையைத் தெரியக்கேட்ட பின்னர் ; அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது - அன்றலர்ந்த செந்தாமரை மலரை வெற்றிகொண்டது ; எம்மனோரால் இப்பொழுது இயம்புதற்கு எளிதோ - எம்போலியரால் இயபெபாழுது அவ்வாது உள்ளக் கிளர்ச்சியைச் சொல்லுதற்கு எளிதாகுமோ (அன்று என்றபடி.) இது கவிக்கூற்று.

## சீராமன் அரணியஞ் செல்லக் கட்டளை அடைதல்

95. தெருளுடைய மனத்து மன்னன் - தசரதன்; ஏவலில் திறம்ப அஞ்சி - கட்டளையை மறுக்கப் பயந்து; இருளுடை உலகந்தாங்கும் இன்னலுக்கு இயைந்து நின்றான் - மயக்கம் அமைந்த உலகத்தைக் காக்குந் துன்பத்திற்கு அமைந்து நின்றனன்; சக்கரமுடைய வண்டியிற் பூட்டப்பட்ட உடையான் ஒருவன் செலுத்திய பெரிய எருது, கருணையுடையா னொருவன் நீக்க, அத்துன்பந் தவிர்ந்தது ஒத்திருந்தனன் சீராமன் என்பது பின்னிரண்டடியின் பொருள்.

## கைகேசிபால் சீராமன் விடை பெறுதல்

96. மன்னவன்-தசரதன்; பணி-கட்டளை; அப்பால் இனி உறுதி என்-பின் இதனினுஞ் சிறந்த நன்மை யாது.

## சீராமன் கோசலை மாளிகைக்குச் செல்லல்

97. என்று கொண்டு - என்ற தாய் சொற் றலைமேற் கொண்டு, இனையகூறி-(நும் பணி மறுப்பனோ என்று) இப்படிப்பட்டவற்றைச் சொல்லி; மீட்டும் - பின்னும்; பொன்திணி போதினாளும் பூமியும் - அழகு தங்கிய தாமரையாளும் நிலமகளும்.

98. மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வரும் என்றென்று தழைக்கின்ற உள்ளத்து அன்னாள் முன் குழைக்கின்ற கவரியின்றிக் கொற்ற வெண் குடையுமின்றி இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம் பின் இரங்கி யேக ஒருதமியன் சென்றான் என் இயைக்க. குழைக்கின்ற கவரி - இரட்டுகின்ற சாமரை; இழைக்கின்ற விதி - தானே செய்து கொண்ட சங்கற்பம்; மழைக்குன்ற மனையான் - மேகந் தங்கும் மலையன்னானாகிய சீராமன்.

## கோசலை சீராமனை முடிபுனையத் தடை யாதென வினுதல்

99. மௌலி - மகுடம் ; குஞ்சி - ஆண் மயிர் ; என்கொலென்னும் ஐயத்தாள் - யாதோ என்னும் ஐயமுடைய கோசலை ; நளினபாதம் - தாமரை மலர் போன்ற பாதங்கள் ; வனைந்த பொற்கழற்கால் வீரன்-அழகிய வீர கண்டையணிந்த பாதங்களையுடைய வீரனுகிய சீராமன் ; இடையூறு - தடை.

## சீராமன் பரதனுக்கு முடிசூட்டப்படும் என்றல்

100. மங்கை - கோசலை ; மானவன் - மனுகுலத்திற்ரேன்றினவனுகிய சீராமன் ; பங்கமில் - குற்றந்தீர்ந்த.

## கோசலை உத்தரம்

101. நிறைகுணத்தவன் நின்னினு மும்மையின் நல்லன்-நற்குணங்களையுடைய பரதன் நின்னினு மும்மடங்கு நல்லவனும் ; குறைவிலன் - நல்லொழுக்கங்களில் குறைவில்லாதவன் ; வேற்றுமை மாற்றினுள்-வேறுபாடில்லாதவள்.

## சீராமன் அரசனேவிய பணி யாதென உரைத்தல்

102. ஈண்டுரைத்த பணி - உனக்குக் கட்டளையிட்ட வேலை; மாண்ட மாதவர் - மாட்சிமைப்பட்ட பெருந்தவத்தர்.

## கோசலை துயர் உறுதல்

103. முன்பு இழைத்த வறுமையின் முற்றினேர் - முன் பிறப்பிற் செய்த தீவினையால் வறுமையில் முதிர்ந்தோர் ; பொன்பிழைக்க பொதிந்தனர்போல - இடையிற் செல்வம் கிடைப்ப அதனை இழந்தவர்போன்று.

104. *அறம் எனக்கிலேயோ - அறம் என்பது எனக்குத் துணையாவதில்லையோ ; ஆவி நைந்து இற அடுத்தது- உயிர் நைந்து அழியவந்த தீவினைப் பயன்.*

## சீராமன் கோசலையைத் தேருட்டுதல்

105. *சித்தம் நீ திகைக்கின்ற தென் - நீ மனந் திகைக்கின்றது யாது ; உயர்ந்தார் - சிறந்தனர்.*

## கோசலை அரசன் நிலைமைகண்டு வருந்தல்

106. *கேகய நாட்டிறை மடந்தை - கைகேசி ; உயிர் கெட்டு உடைந்த போழ்தில் - உயிர்நிலை கெட்டு அழிந்த காலத்தில்.*

## வசிட்டர் கைகேசிக்கு நல்லறிவு கூறுதல்

107. *மன்னன் - தசரதன் ; மகன் - சீராமன் ; போயோ புகலோ தவிரான் - போய் அடைவதையே நீங்கலன் ; செயலெலன் என்றான் - இது என்ன செய்கை என்றனன்.*

## தசரதன் வசிட்ட முனிவரை நோக்கிக் கைகேசி தாரமல்லள் என்றும பரதன் தநயனல்லன என்றும் கூறுதல்

108. *இரங்காதவளை நோக்கி - கணவன் படுந்துயர்க்கு மனமழியாத கைகேசியைப் பார்த்து ; இவள் என் தாரம் அல்லள் துறந்தேன் - இக் கைகேசி என் மனையாள் அல்லள் என்றே நீக்கினேன் ; மன்னே யாவான் வரும் அப் பரதன்தனையும் மகன் என்று உன்னேன் - இனி அரசனாக வருகின்ற அப் பரதனையும் மகன் என்று நினையேன் ; அவனும் உரிமைக்கு ஆகான் என்றான் - அவனும் என் கரும உரிமைக்கு உரியனுமாகான் என்றனன்.*

## சீராமன் கான்புகத் தயரதன் புலம்பல்

109. கண்ணுநீராய் - கண்ணிரண்டும் நீர் சொரிய ; உயிரும் ஒழுக - உயிருஞ் செல்ல ; மண்ணுநீராய் - சுத்த ஜலமாய்.

110. படைமாணரசை - சேனையில் மாண்புபெற்ற அரசரை ; பழுவாய் - பழுக்கக் காய்ச்சிய ; மழுவாலெறிவான் - பரசுராமன் ; மிடை மாவலிதா னனையான் - வென்றியையுடைய மாவலியை யொப்பவனாகிய பரசுராமன் ; உடைமா மகுடம் - நீ புனைதற்குரிய பெரிய முடியை.

111. நேயத்தால் நெகுதற்கொத்த நெஞ்சம் - அன்பான் உருகுதற்குத் தகுந்த மனமும் ; ஆவியுகுதற் கொத்த உடலும் - உயிர்போதற்கொத்த உடம்பும் ; உன் போல் அல்லேன் - உன்னைப்போல ஆற்றுங் கடினமுடையவ னல்லேன் ; சனகன் தையல் கையைப் பற்றி - சனகியை மணமயருங் காலத்துக் கையைப் பிடித்து.

112. பூணாரணியும் - பூணுதலமர்ந்த ஆபரணமும் ; பொன் ஆசனமும்-அழகிய ஆசனமும், சேணார்-விசாலமான; மாணா - மாட்சிமைப்படாத ; கருமம் நன்றாய்த்து அன்றோ - கொண்ட காரியம் நன்றாய் முடிந்தது அன்றோ.

## தயரதன் தான் சாபமெய்தியமையை உணர்த்தல்

113. பொன்னார் தோளான் - விஜயமடந்தை தங்கும் தோளையுடைய சீராமன் ; கானே புகுதப்புகுதல் - காட்டிற் போகத் துணிதல்.

## சீராமன் பிரிவு கேட்டு கிள்ளை முதலிய இரங்கல்

114. *கிள்ளை - கிளிப்பிள்ளை ; பூவை - நாகணவாய்ப்புள் ; பூசை - பூனை ; உருவறியாப் பிள்ளை - உருத் தோன்றாத குழவி ; பெரியோரை யென் சொல்ல - பெரியோரைப்பற்றி யாது கூற.*

115. *புனற்புள் - நீர் வாழ்பறவை ; கள் ஒழுகும் கா-தேன் பொழியுஞ் சோலை ; கால்வயப் போர் மா-கால் வாயு வேகமுள்ள வெற்றிதரும் போர்த் திறலையுடைய குதிரை.*

116. *மண் - நிலமடந்தை ; மா மலர்மேற் பெண் - பெரிய தாமரையாள் (இலக்குமி); புண்செய்த என்புழி, செய்தது என்பது செய்த என ஈறு தொகுத்தல் பெற்றது.*

117. *ஐயன் - சீராமன் ; கொற்றமுடி கோளாகி வந்தவா என்பர் - வெற்றியையுடைய திருமுடி உயிர்கோடல் செய்யும் கூற்றமாகி வந்தவா றென்பார் ; மாளாத - உயிர் நீங்காத.*

## தமையன் கானேகல் கேட்டு இளையோன் வருந்தல்

118. *நங்கை - கைகேசி ; கங்கைக் கிறைவன் - கங்கையைப் புவியிற் கொணர்ந்த அரசன் வழித்தோன்றலாகிய இலக்குவன்; சிங்க ஏற்றிற்கிடும் ஊனை நாய்க் குட்டிக் கிடுவதுபோல இறைவனுகிய சீராமன் அடைதற்பால தாகிய அரசினைப் பரதனுக்கு உதவியது முறையன்றென உவமை முகத்தாற் கூறினர்.*

119. *மண்ணுட்டுநர் - உலகத்தைப் படைப்பவர்; காட்டுநர் காப்பவர் ; வீட்டுநர் - அழிப்பவர் ; பெண்கள் சஞ்சரித்தலை இப்பெரிய உலகில் வைக்கமாட்டேன் அதாவது பெண்கள் என்னும் பூண்டை அறவே ஒழித்து விடுவேன் என்பது நான்காமடியின் பொருள்.*

## சீராமன் இளையவனை 'நினக்குச் சினம் வருவான் ஏன்' என்று கேட்டல்

120. *இளையான் - இலக்குவன் ; இயைந்த நீதிவரு நன்னெறி நின்னறிவாகும் - பொருந்திய நீதி கெடாமல் வரு நன்மார்க்கம் நின்னறிவே யாகும் ; உளையா - கெடாத ; அறம் வற்றிட - தருமம் அழிய.*

## சீராமன் அரசன் முதலியோர்பாற் பிழை கூறலாகாதென்றல்

121. *நறும் புனலின்மை நதியின் பிழையன்று - நறும் புனலில்லாமை ஆற்றின் குற்றமன்று ; அற்றே பதியின் பிழையன்று - அத்தன்மையாகவே (யான் கான் ஏகல்) அரசன் குற்ற மன்று ; பயந்து நமைப் புரந்தாள் - பெற்றெடுத்து நம்மைக் காத்தவள் ; மகன் - பரதன்.*

## இளையவன் 'என்விற்றொழில் காண்' என்றல்

122. *உளைதை பொங்க உலை உள் உதிக்கும் உறு தீ என்ன - துருத்தியால் காற்று அதிகரிக்கக் கொல்லன் உலைக் களத்தில் தோன்றும் மிக்க தீயைப்போல ; கோள் இழைத்தாள் - தீங்கு செய்த கைகேசி.*

## சீராமன் இளையவனுக்கு நீதிகள் பல காட்டல்

123. *ஆய் தந்தவன் - தாயன்றனுகிய இலக்குவன் ; ஐய நின்றன் வாய்தந்தன - ஐயனே நின்னுடைய வாயிற் பிறந்த சொற்களை ; மறைதந்த நாவால் - மறைகளை அளித்த நாவினால் ; நெறியோர்கண் நிலாதது நீதந்த தன்றே - நன்னெறியுடையாரிடை நில்லாதது நீ தந்தமை யன்றே ; சலிக்கின்றது - வருந்துவது.*

124. முற்றுமதியம் மிலைந்தான் முனிந்தானை அன்னான் - இளமதியம் புனைந்த சிவனைப் பகைத்த மாரன் போல் பவனாகிய சீராமன்.

125. வரதன் - யாவர்க்கும் பேறுதருபவனாகிய சீராமன்; விரதம் - வனப் பிரவேசமாகிய விரதம்.

## இளையவன் 'யான் வெகுண்டு எம்பயன்' என்றல்

126. செல்லுஞ் சொல்வல்லான்-எங்குஞ் செல்லுஞ் சொல் வன்மையுடைய சீராமன்.

## சீராமன் தாதை சொற்கடந்து அரசாளல் தக்கதன்று என்றல்

127. நன்சொற்கள்தந்து ஆண்டு என்னை நாளும் வளர்த்த தாதை - நன்மொழிகளைக் கூறிப் பல்லாண்டுகளாக என்னை வளர்த்த தந்தை, சொல் கடந்து - சொல்லைக் கடந்து; எற்கு-எனக்கு, என் சொல் கடந்தால்-என் மொழியைக் கடந்தால்; தென்சொற்கள் தந்தான் - இன்னுரைகள் கூறினான்; வடசொற் கலைக் கெல்லை தேர்ந்தான் - வடமொழிக் கலையின் எல்லை யறிந்த சீராமன்.

## இளையவன் சினந்தணிதல்

128. சீற்றந் துறந்தான் - சினம் நீங்கி; எதிர் நின்று தெரிந்து செப்பும் மாற்றந் துறந்தான் - எதிர் நின்று கூறும் வார்த்தையை யொழித்து; ஏற்றந் தொடங்காக் கடல் - பெருக்கெழாத கடல்; தணிவெய்தி நின்றான் - அடங்கி நின்றான்.

## கைகேசி தந்த மரவுரியைப் பாங்கியர் கொணர்தல்

129. கார்வான மொப்பான் - கரியமேகத்தை யொத்த சீராமன்; நீராயுகு அக் கண்ணினும் - நீரயொழுகும்

அக் கண்களைப் பார்க்கிலும் ; பீழை - துன்பம் ; தீரா மனத்தாள் - தீமையகலாத சிந்தையுடையவளாகிய கைகேசி ; சீரம் - மரவுரி.

## சுமித்திரை இளையவனுக்கு விடையளித்தல்

130. ஆகாததன்றால் உனக்கவ்வனம் இவ்வயோத்தி-உனக்கு அக் கானகம் ஆகாதிருப்பதன்று அது இவ்வயோத்தியே யாகும் (சீராமன் இருத்தலின்); மா காதல் சீராமன் நம் மன்னவன் - பெருங் காதலையுடைய சீராமன் நம் மரசன் (தசரதன்); ஏதம் - துன்பம்.

131. தம்பி எனும்படி அன்று - தம்பி என்று சொல்லும் வகையன்று ; அடியாரினில் ஏவல் செய்தி - அடியாரையொப்பக் குற்றேவல் செய்.

## சீராமனும், இளையவனும் மரவுரி உடுத்துச் செல்லல்

132. இருவரும் - சீராமனும் இளையவனும் ; வெருவரும் ஆவினில் - பயந்து நிற்கும் பசுவைப் போல.

## சீராமன இளையவனை அயோத்தியி லிருக்கச் சொல்லல்

133. சீரை - மரவுரி ; தம்பி - இலக்குவன் ; தேன்புனை தெரியலான் - மதுத்தங்கிய மாலை யுடையானாகிய இளையவன் ; வான்புனை இசையினாய் - வானையலங்கரிக்கும் புகழினையுடையானே (இலக்குவ); இது அண்மை விளி.

134. ஆழி வேந்தன் - தசரதன் ; உன்னை நீ யென் பொருட்டு உதவுவாய் - உன்னை நீ எனக்காக உதவுவாய் ; (அதாவது) நீ அவருக்குத் துணையாக இங்கே (அயோத்தியில்) இரு என்பது.

## இளையவன் சீராமனோடு 'யான் உடன் வருவதைத் தடுத்தல் முறையன்று' எனறல்

**135.** ஆண்டகை - சீராமன் ; அன்பன் - அன்புடைய வனாகிய இளையவன் ; துண்ணெனா - அச்சம் எய்தி ; மீண்டதோர் உயிரிடை விம்ம விம்முவான் - திரும்பி வந்ததாகியதோர் உயிர் இடையே கலங்க அழுபவன்

**136.** நீலம் - நீலோற்பலமலர் ; பாருள வெளினுள யாவும் - எவ்வகைப பொருளும் பார்உள்ள வரை யும் உள்ளன ; நாருள தனு - நாணையுடைய வில் ; அருளுவாயென்றான் - சொல்லென்றனன்.

**137.** பைந்தொடி யொருத்தி - கைகேசி ; உண்மை காவலன் - தசரதன்.

**138.** ஐய மாறினி என்னை - இறைவனே வேறு கூறுவது என்னை ; ஏறினை வெகுளியை யாது முற்றற - யான் கொண்ட சீற்றமுழுவதும் ஒழிய ; ஆறினை தவிர்க என - தணிந்து ஒழிக என்று ; ஆணையின்-ஆணையால்.

**139.** செய்துடைச் செல்வமோ யாதுந் தீர்ந்து எமைக் கைதுடைத்து ஏகவும் - உமக்குச் செய்து வைத்த செல்வமோ முற்றும் ஒழிந்து எம்மைக் கைகழுவிச் செல்லவும் ; அடையலர் - பகைவர்.

## வசிட்டமுனிவர் சீராமனை நீ காடேகல் முறையன்றென்றல்

**140.** வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள் - முடிபுனைந்து வாழ்தற்குக் கூறப்பட்ட மங்கல நாளில் ; தாழ்வினை யதுவர சீரை சாத்தினான் - அது தவிர்தற் குரித்-தாகிய தீவினை வர மரவுரி புனைந்தனன் ; சூழ்வினை-இடைவிடாது தொடரும் வினைப்பயன் ; ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ - ஊழ்வினை ஒருவரால்

நீக்கும் பான்மையதோ, 'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்' (திருக்குறள்) என்பதனோடு ஒப்பிடுக.

141. வெவ்வினை - (கானேகலாகிய) கொடுந் தொழில்; அவள்தர - கைகேசி விளைவிக்க; இவ்வினை இவன் வயின் எய்தற் பாற்றுமன்று - இத்தொழில் நிகழ்ச்சி (கானேகல்) இவன் (சீராமன்) பாலடையும் பகுதியு மன்று.

## அயோத்தியிலுள்ள மாதரடைந்த துயரம் கூறல்

142. கண்பனிக்கிலர்-நீர் விடாதிருந்தனர்; பெரும்பொருள் இழந்தவர் போலும் பெற்றியார் - பெரும் பொரு ளிழந்த தன்மையராகி.

## நகர மாந்தர் அடைந்த துயரம் கூறல

143. பொருவரும்-ஒப்பில்லாத; இருவரைப் பயந்தவளீன்ற கான்முளை - இலக்குவன்; இவற்கு - சீராமனுக்கு.

144. நான்ற - வீழ்ந்த; நீர்த் துளி நன்னெடுந் தாரைகள் - நீர்த் துளியாகிய நெடிய தாரைகள்; தளத்தில்-உப்பரிகையில்; குமரன் - சீராமன்.

145. திக்கு நோக்கிய - தம்மிடத்து வந்தடைந்த; ஒக்க நோக்கிய - சமமாக எண்ணும்.

146. துறந்து போமெனச் சொற்ற சொல் - நீங்கிப் போவேன் என்று சொன்ன சொல்; தேறுமோ - மனந் தெளிவரோ; உறைந்த - தான் முன் வசித்த. (இது தவிக் கூற்று).

## சானகி கூறல்

147. பரிவிகந்த - அன்பு நீங்கிய; பற்றிலாது - தொடர் பொழிந்து; ஒருவுகின்றனை - நீங்குகின்றனை

## சீராமன் சீதையை நோக்கி நின்னால் இடர் பல நேரும் என்றல்

147. (*a*) *விளைவு - மேல் வரும் துன்பத்தை ; போத-என்னுடன் வர.*

## சீதை தொடர்ந்தே வருவேன் என்றல்

148. *கொற்றவன் - சீராமன் ; கோகிலம் செற்றதனை - குயிலிசையை வென்ற.*

## கவிக்கூற்று

149. *மரவுரியை உடுத்துத் திருமகளாகிய சனகி பின்றொடர்ந்து செல்ல, இளையவன் முன்னே செல்ல மேகம் போல்வானாகிய சீராமன் கானேகினான் என்பது பொருள். சீரை சுற்றித் திருமகளுக்குப் பின் செல மூரிவிற்கை இளையவன் என்றும் முன் செலக் காரை யொத்தவன் என்றும் அமைத்துப் பொருள் கூறலும் ஒன்று.*

150. *மாவியல் தானை - பெருமை தங்கிய சேனை ; ஓவியம் - சித்திரம்.*

## சீராமன் சுமந்திரனை இரதங் கொண்டு மீள்க என்றல்

151. *பூண்ட பேரன்பினர் - அன்பினை யுடைய நகர மாந்தர்; சுவட்டையோர்ந்து-சுவட்டைப் பார்த்து அறிந்து.*

## சுமந்திரன் விடை கூறுதல்

152. *செவ்விய குரிசில் - நடுவுநிலைமையையுடைய இறைவனாகிய சீராமன் ; தேர்வலான் - தேரூர வல்லானாகிய சுமந்திரன்.*

153. *தேவி - சானகி ; இளவல் - இலக்குவன் ; செல்வன்-இராமன் ; பூவியல்-பூக்கள் நிரம்பிய ; கோ-இராமன்.*

154. வாருடை மகள் - சானகி.

155. சிங்கவேறு - ஆண் சிங்கம் போன்ற சீராமன் ; எங்கள் கோமகன் - தசரதன்.

### சீராமன் சுமந்திரனுக்கு உணர்த்தல்

156. அவன் - சுமந்திரன்; அடக்கும் இயல்பினை யுடைய ஐம்பொறிகளோடு கரணங்கட்கு அப்பாற்கடக்கு மெய்யுணர்ச்சிக்கு நெருங்கித் தோன்றும் தோற்றத் தையுடைய சீராமன் என்பது பின னிரண் டடிக்குப பொருள்.

157. இம்மையில் நின்று புகழை நிறுத்தித் தேகத்திற்கு அழிவு வந்த பிறகு ஒற்றித்து நின்று ஆன்மாவிற்கு சுவர்க்க போகத்தைத் தரும் பெரிய அறச் செய்கை நமக்கு இன்பம் கிட்டுமாயின் இனியதாய் இடையே துன்பம் வருமாயின் அச் செய்கையைக் கைவிடக் கூடுமோ (கூடாதென்றபடி) என்பது பொருள்.

### சீராமன் சுமந்திரனை நோக்கிச் சொல்லல்

158. வினைக்கரு மெய்மையன்-வினையிற்றூயனுய சுமந்திரன் ; மனைக்கு அரும் புதல்வன் - ஒர் குடியில் பெறுதற்கரிய புத்திரன் (சீராமன்), மன்னவன்தனக்கு - தயாதனுக்கு ; எனக்கு - சீராமனுக்கு ; எந்தை-என் தந்தை போல்வாய் (சுமந்திரன).

### சீராமன கானேகல்

159. தையல் - சனகி ; உணர்வு - அறிவுடைமை, சேமம் - துணை ; அல்லிருப்பாண் . நடு ராத்திரியில்.

### சந்திரோதயம்

160. அஞ்சனக் குன்றமன்ன அழகன் - சீராமன்; இளவல் - இலக்குவன் ; இந்து - சந்திரன்.

## சூரியோதயம்

161. எறி கதிரோன் சுடர்த் தேரேறித் தோன்றினன் என இயைக்க.

## சீராமன் கங்கையை நோக்கிச் செல்லல்

162. சூரியனின் ஒளி சீராமன் வடிவின் விரிந்த ஒளியின் முன்கரப்ப என்பது முதலடியின் பொருள்; பொய்யோவெனு மிடையாள் - உண்டோ இலையோ எனச் சந்தேகங் கொள்ளத்தக்க இடையையுடைய சானகி; இளையான் - இலக்குவன், மை - அஞ்சனம்; மரகதம் - பச்சை; மறிகடல் - அலை எறியுங் கடல்.

163. அளியன்னதோர் அறல் துன்னிய குழலாள் - வண்டினைப் போல்வதாகிய ஒப்பற்ற கருமணலை ஒத்த கூந்தலை யுடையவள்; கடலமிர்தின் தெளிவன்னதோர் மொழியாள் - கடலிற் றோன்றிய அமுதத்தினது தெளிவை யொத்ததாகிய ஒப்பற்ற சொல்லை யுடையவள்; நிறைதவமன்னதோர் செயலாள்-நிறைந்த தவம் போல்வதாகியதொரு செய்கையுடையவள்; விடையன்னதோர் நடையான் - விடை போலும் நடையை யுடையவனாகிய சீராமன்; களியன்னம் - களிப்பினை யுடைய ஆண் அன்னம்; மடவன்னம் - பெடையன்னம்.

164. அஞ்சம்பு - பஞ்ச பாணங்கள் (தாமரை, முல்லை, நெய்தல், மா, அசோகு); அகல் அம்பு - அகன்ற பாணம்; துஞ்சும் - தங்கும்; வரி - கீற்றுக்கள்; மஞ்சன் - மேகம் போன்ற சீராமன்.

## கங்கைக் கரையில் உள்ள முனிவரர் சீராமனைத் தம் இருக்கைக்கு அழைத்துச் செல்லல்

165. கடவுள் திருநதி - தெய்வத் தன்மை பொருந்திய அழகிய ஆற்றங் கரையில்; தபோதனர் - தவமே

செல்வமாக உடையவர் ; செல்கதி - பரகதி ; ஏமுறு-மகிழ்ந்து ; அங்கணுயகன் - அழகிய கண்ணையுடைய சீராமன்.

166. பிறர்பெண்ணிஞேக்குஞ் சுவையின் - இல்வாழ்க்கை உடையார் பெண்ணினடையுஞ் சுவைபோல ; பிறர்க்கு எண்ணிநோக்கி இயம்பரும் இன்பத்தை - துறவற வொழுக்கம் உடையார்க்கு உள்ளத்தின்கண் காண்கின்ற சொல்லவரிய இன்பத்தை ; பண்ணிஞேக்கும் பராவமுதை - இசையிலமைந்த யாவரும் புகழும் அமுதத்தினை ; பசுங்கண் - ஊனக்கண் ; நோக்கினர் - நோக்கி (வினையெச்சமுற்று).

167. வைகல் - எஞ்ஞான்றும் ; கண்டிலர் - காணுது (வினையெச்சமுற்று) ; நேடுவார் - தேடுவார் ; மாதவப் பள்ளி - மாதவர் உறையும் பள்ளி.

## முனிவர் இறைவனை நீராடி உண்க என்றல்

168. பொழியுங் கண்ணிற் புதுப்புனல் - பொழிகின்ற கண்ணினின்று வரும் புதுநீர் ; மொழியும் இன் சொலின் - சொல்லுகின்ற இன் சொல்லோடு ; அழிவில் - கேடில்லாத.

169. கானிற்கிழங்கு - காட்டில் உள்ள கிழங்குகள், தோன்-றல் - சீராமன்.

170. மங்கையர்க்கு விளக்கன்ன மான் - பெண்கள் குலத்-துக்கு ஓர் தீபம் போன்ற சீதை ; துன்பற - துன்-பம் நீங்க.

## கங்கை என்பாதகம் நீங்கப்பெற்றேன் என்றல்

171. கன்னி நீக்கருங் கங்கையும் - கன்னித் தன்மையின் நீங்குதல் இல்லாத கங்கையும் ; பாதகங்களை எல்லாம்

பூமியிலுள்ளவர்கள் என்றால் (கங்கையில் நீராடலால்) நீக்கிக் கொள்வார்கள் ; இன்று யான் (கங்கை) செய்த பாதகங்களை எல்லாம் என்னை ஈன்ற உன்னால் (சீராமனாகிய நீ கங்கையில் நீராடலால்) நீக்கிக்கொண்டேன் என்று கங்கை கூறினள் என்பது பொருள்.

## இறைவன் கங்கையின் நீராடல்

172. வெங்கண் நாகக் கரத்தினன் - தறுகண்மையையுடைய யானைப் புழைக்கைபோலும் கையையுடையவனும் ; வெண்ணிறக் கங்கைவார் சடைக் கற்றையன் - வெண்ணிறமுடைய கங்கை யொழுகுஞ் சடைக் கற்றை யுடையவனும் ; கற்புடை மங்கைகாண நின்றாடுகின்றான் - கற்பினையுடைய சானகி காண நீராடுகின்றானுமாகிய சீராமன் ; வகிர்திங்கள் சூடிய செல்வனிற் றோன்றினான்-இளம்பிறையை யணிந்த சிவனைப்போல விளங்கினான். இச் செய்யுள் சிலேடைப் பொருள்பட வந்தது ; வெங்கண் நாகக் கரத்தினன்-தீயைக் காலும் பாம்பாகிய கங்கணமணிந்த கையையுடையவனும் ; வெண்ணிறக் கங்கைவார் சடைக் கற்றையன் - வெண்ணிறமுடைய கங்கையை யணிந்த நீண்ட சடைக்கற்றை யுடையானும் ; கற்புடை மங்கைகாண நின்றாடுகின்றான்-மலையரையன் பயந்த பாவைகாண இரணியமன்றில் ஆனந்தத் தாண்டவஞ் செய்வானுமாகிய வகிர்திங்கள் சூடிய செல்வனிற் றோன்றினான் எனவும் பொருள் படுதலைக் காண்க ; வகிர்திங்கள் சூடிய செல்வன் - இராமசந்திரன்.

## சீதாபிராட்டி கங்கையில் நீராடல்

173. இடைக்கு வஞ்சி நாண, மடநடைக்கு அன்னம் அஞ்சி ஒதுங்க, அடியன்ன கஞ்சம் நீரில் ஒளிப்ப கயல்

உக ஆடினுள் என இயையும். வஞ்சி - கொடி ; அடியன்ன கஞ்சம் - அடியையொத்த தாமரை மலர்.-

174. மந்தாகினி - கங்கை ; உரைத்த - யாவராலும் கூறப்படும்; சீதை கங்கையில் நீராடியதைச் சானகியின் தனிமையை எண்ணிக் கங்கை செவிலித்தாய்போல் நீராட்டியதனுக்கு உவமிக்கப்பட் டிருக்கின்றது.

175. வெய்யபாதகந் தீர்த்து விளங்குவாள்-கொடிய பாவச் செயலனைத்தும் ஒழிந்த கங்கை ; இனி வையமா நரகத்திடை வைகுமே-இனி (கங்கையில் முழுகுகின்ற வர்கள்) உலகத்தவர் மாநிரயத் துன்பத் தடைவரோ, (அடையார் என்றபடி).

## குகன் வருணனையும் அவன் இறைவனைக்காண வருகையும்

176. ஆயிரம் அம்பிக்கு நாயகன் - ஆயிரம் படகுகளுக்குத் தலைவன் ; போர்க்குகன் - போர்த்தொழிலில் வல்ல குகன் ; கற்றிரள் - திரண்டகல்.

177. துடியன்-உடுக்கையை யுடையான்; அல் செறிந்தன்ன நிறத்தினன் - இருள் நெருங்கினாற்போன்ற நிறத்தை யுடையவன் ; நீர் முகில் - நீர்கொண்ட மேகம் ; ஈட்டினன் - கூட்டமுடையவன்.

178. கொம்பு, துத்தரி, பம்பை - வாத்திய விசேடங்கள் ; பம்புபடையினன் - நெருங்கும் படையையுடையவன்; பல்லவத்தம்பன் - தளிரையொத்த அம்பை யுடையவன் ; அம்பிக்கு நாதன் - படகுக்கு இறைவன் ; அழிவுகள் தும்பியீட்டம் புரைகிளை சுற்றத்தான் - மதத்தான் விளங்கும் கன்னத்தை யுடைய களிற்றின் கூட்டத்தை யொத்த கிளையாகிய சுற்றமுடையான்.

179. காழ மிட்ட குறங்கினன்-சல்லடம் அணிந்த தொடையான் ; கங்கையின் ஆழமிட்ட நெடுமையினன்- கங்கையாற்றின் ஆழத்தையும் அளந்து பார்க்கும் நீட்சியையுடையவன் (மிக உயரமுள்ளவன் என்றபடி); அரை - இடுப்பு ; தயங்குற - விளங்க.

180. பற்றொடுத்தன்ன - பல்லைத்தொடுத்தால் ஒத்த ; பல்சூல் கவடியன் - முற்றின பலகறையினால் கட்டிய மாலையையுடையவன் ; கற்றொடுத்தன்ன போலுங் கழலினன் - கல்லைத் தொடுத்தாலொக்கும் வீரகண்டையணிந்த காலையுடையவன் ; அற்றொடுத்தன்ன குஞ்சியன் - இருளையடுக்காய் நிரைத்தது போலும் குடுமியுடையவன்.

181. பெண்ணை வன்செறும்பில்-பனையினது வலிய செறும்பைப்போல் ; வண்ண வன்மயிர் வார்ந்து உயர்கையன்- அழகிய வன்மையாகிய மயிர் சாய்ந்து உயர்கின்ற முன்கையன் ; கண்ணகன் - இடம் அகன்ற (விசாலமான); மார்பெனுங் கல்லினன் - மார்பெனப்படும் மலையன் ; எண்ணெயுண்ட - எண்ணெய் பூசிய.

182. கச்சொடார்த்த - கச்சிற்கட்டிய ; கறை - உதிரக் கறை ; நச்சரா - விடத்தையுடைய பாம்பு ; பிச்சர் - பித்தர் ; வச்சிராயுதம் - வயிரப்படை ; (வன்மைக்கு உவமை).

183. நறவு - கள் ; ஊன் - மாமிசம் ; தீயெழ - நெருப்புப் பறக்க ; குமுறும் - ஒலிக்கும்.

184. வள்ளல் - சீராமன்.

185. சுற்றம் - சுற்றத்தார் ; கணை - அம்பு ; அற்றம் நீத்த மனத்தினன் - குற்றத்தினின்றும் நீங்கிய மனமுடையவன் ; தவப்பள்ளிவாயல் - தவச்சாலைவாயில்.

## குகனை இளையவன் வினவுதல்

186. இளையோன் - இலக்குவன் ; நீ ஆவான் யாரென - நீ யாரேயென்ன ; தேவா - இறைவனே ; நாவாய் வேட்டுவன் - படகுவிடும் வேட்டுவன்.

## குகன் செய்தியை இளையவன் இராமனுக்கு உணர்த்தல்

187. நண்டு நிற்றி என்று புக்கு - இங்கே நில்லென்று உள் புகுந்து ; நெடியவன் - சீராமன் ; கொற்றவ - இறைவனே ; உள்ளந் தூயவன்-மனந் தூயவன் ; தாயின் நல்லான் - தாயைக்காட்டிலும் அன்புடையவன் ; கங்கை நாவாய்க்கிறை - கங்கைக் கரையிலிருக்கும் தோணிகட்குத் தலைவன்.

## இராமன் குகனை அழைத்தமையும் அவன் சென்றமையும்

188. அண்ணல்-சீராமன் ; பண்ணவன் - இளையவன், கண்ணனை - இறைவனை.

## சீராமன் குகனை இருவென்றமையும் அவன் கையுறை கொணர்ந்தேன் என்றமையும்

189. நண்டிருத்தி யென்னலோடும் - இங்கு இருவென்றலும் ; எல்லை நீத்த அருத்தியன்-அளவுகடந்த அன்பினன் ; திருத்தினன் கொணர்ந்தேன் - திருத்திக் கொணர்ந்தேன் ; திருவுளம் என்கொலென்ன - கருத்து யாதென்ன ; வீரன் - சீராமன்.

## இறைவன் குகன் கொணர்ந்த கையுறை பரிசுத்தமான தென்றல்

190. அரியனவாகி விரும்பப்படுவன உள்ளத்து ஆராவன்பு மீதூரக் கொண்டுவந்த பொருள்களென்றால் அது

தேவாமிர்தத்தைப் பார்க்கிலுஞ் சிறந்த நல்லவா என்பது முதலிரண்டடியின் பொருள். பரிவினிற்றழீஇய வென்னிற் பவித்திரம் - அன்பாற்றழுவப்பட்டன வென்னிற் பரிசுத்தம்.

## ஸ்ரீராமன் குகனை நாளை வைகறைப்போது படகுடன் வரச்சொல்லல்

191. சிங்கவேறனைய வீரன் - ஸ்ரீராமன் ; யாம் - ஸ்ரீராமன் இளையவன், சானகி ; கங்கை ஏறுதும் நாளை - கங்கைக்கரையை நாளைக் கடப்பேம் ; யாணர் பொங்கு - அழகுமிகுந்த ; விடியல் - வைகறை.

## குகன் ஸ்ரீராமனுக்குக் குற்றேவல் செய்திருப்பேன் என்றல்

192. கார்குலா நிறத்தான் - மேகம் விரும்பும் நிறமுடையவன் (ஸ்ரீராமன்) ; காதலன் - காதல் மிக்குடையவனாகிய குகன் ; இப் பார் குலாஞ் செல்வ-இவ் வுலகம் விரும்புஞ் செல்வமுடையவனே ; இங்ஙனம் - இவ்வண்ணம் ; ஈர்கிலாக் கள்வனேன் - பிளவாத கள்ளத் தன்மை யுடையேனாகிய யான்; இன்னலின் இருக்கை நோக்கி - துயரத்துக் கிருக்கையை எண்ணி ; தீர்கிலேன் - முடிகிலேன் ; அடிமை செய்குவன் - குற்றேவல் செய்வேன்.

## ஸ்ரீராமன் குகனை எம்முடன் இருவென்றல்

193. கோதை விற்குரிசில் - மாலையணிந்த வில்லேந்திய இறைவன் ; அன்னான் - குகன் ; கொள்கை - கோட்பாடு ; தீராக் காதலன் ஆகும் - நீங்காத காதலுடையவனும் என்று ; யாதினுமினிய நண்ப-எப்பொருளினு மினிய நண்பையுடையாய்.

## குகன் மிகப் பரிவுடையவனாய் அங்குடனிருந்தமை உணர்த்தல்

194. திருநகர் தீர்ந்தவண்ணம் - இறைவன் நாட்டை விட்டுக் காடு அடைந்தமையை ; மானவ-மனுகுலத்தவனே (இலக்குவ) ; தெரித்தி - அறிவி ; பருவரல் - துன்பம் (நடந்த துன்ப சமாசாரம்) ; பரிந்தவன் - அன்புடையவனாகிய குகன் ; பையுள் - துன்பம்.

## குகன் சீராமனிடைத் தன்னிருக்கை வளங்கூறி அங்கே இருவென்றல்

195. காவியின் மலர் - நீலமலர் ; காசா - ஒருவகை மலர் ; தேவி - சானகி ; சிந்தனை - (தன்) கருத்தை.

196. பொய்ம்முறையிலரேம் - பொய்யான முறைமையில் லேம் ; புகலிடம் - இருக்கை ; கொய்ம்முறை புறு-தாராய் - கொய்து முறையாகத் தொடுத்த மாலையுடையாய் (சீராம).

197. துணைநாயேம் உயிருள - துணையாக நாயேம் உயிர் உண்டு ; நடவெம்பால் - எம்மிடத்து எழுந்தருள்.

198. ஆணை செய்குநர் - குற்றேவல் செய்பவர்.

## சீராமன் சிலநாளில் மீள்வேன் என்றல்

199. அண்ணல் - இறைவன் ; குறுகுதும் - அடைவேம்.

## நாவாய் கங்கையில் செல்லுதல்

200. பாலுடை மொழியாள் - பாலன்ன சொல்லளாகிய சானகி ; பகலவன் அனையான் - ஞாயிறொப்பானாகிய சீராமன் ; நாவாய் - படகு ; ஞெண்டு - நண்டு.

### குகன் சீராமனுக்குத் தன் ஆற்றலைக்கூறி அவனுடன் தான் வர வேண்டல்

201. *நெறியிடு நெறி - சிறுவழி; நேடினேன்-தேடினேன் ; வழுவாமல் - தவறாமல் ; உறைவிடம் - இருக்கை.*

202. *மல்லினுமுயர் தோளாய் - மற்போர்க்கமைந்த தோளை யுடையவனே (சீராம).*

203. *இருவுளமெனின் - இது நின்னுடைய கருத்தாயின் ; ஒருவலன் - நீங்காதேன்.*

### இறைவன் குகனுக்குத் தன் கருத்துணர்த்தல்

204. *நளிர்கடல் நிலம் - குளிர்ந்த கடலாற் சூழப்பட்ட உலகம்.*

205. *முடிவுளதென உன்னு - முடிவுண்டென் றெண்ணுத.*

206. *கானுறை பகல் எல்லாம் - காட்டில் வசிக்கும் நாள் எல்லாம் ; உம்பிபடருறவுளன் - நின் தம்பி பின் றொடர்ந்து வரவுள்ளான் ; இடருறு பகை யா - ஆக- லின் யான் துன்பமடையும் வகை யாவையுள ; யான் என உரியாய் - எனக்கென்றும் உரிமையுடையாய்.*

207. *அங்குள கிளை - அயோத்தியிலுள்ள சுற்றம் ; உம்பி - பரதன் ; இங்குள கிளை - காட்டிலுள்ள சுற்றம்.*

### குகன் விடை கோள்ளலும் இறைவன் கானேகலும்

208. *பருவரல் - துன்பம் ; அணியிழை மயில் - சீதை.*

### சீராமன் சீதைக்கு வனத்திலுள்ளவைகளைக் காட்டல்

209. *அசோக மலரில் செருந்தி மலர் வீழ அதில் வண்டு மொய்த்தல் பொன்னை ஊதுகின்ற கரியின் எழு-*

னின்ற நெருப்பை ஒத்து விளங்குகின்றது என்பது கருத்து. அசோகு நீக்கும், செருந்தி பொன்னுக்கும் வண்டு கரிக்கும் உவமை. அசோகு - என்பது சோகு என முதற் குறைந்து நின்றது.

210. கோள்புரை - கடலை ஒத்த; கார்கோள் என்பது கோள் என நின்றது.

## ஸ்ரீராமபிரானைப் பாரத்துவாசர் எதிர்கொண்டு அழைத்தல்

211. என்றனன் - என்று கூறி; பொன்றிணி திரடோளன் - அழகு திணிந்த திரண்ட தோளனாகிய ஸ்ரீராமன்; குடபால் - மேற்றிசை; வினை வென்றோர் - இரு வினை வென்ற முனிவர்; என்றனன் வினையெச்சமுற்று.

212. அருத்தியின் அகம்விம்மும் அன்பினில் - அருந்தியால் மனங் குழையும் அன்பினால், பவநோயின் மருத்துவன் அனையான் - பிறவி நோய்க்கு மருத்துவன் போல்வான்.

## பாரத்துவாசர் வருணனை

213. கோல் - திரிதண்டு; மூரிச் சடையினன் - வலிய சடையானும்; உரிமானின் தோலினன் - மான்றோலுடையானும்; நெறிபேணும் நடையினன்-மெய்ம்மை நெறியை விரும்பும் ஒழுக்கமுடையவனும்; Compare this stanza with குக வருணனை (No. 177) and see how Kamban describes persons of different creed.

214. செந்தழல் புரிசெல்வன் - செந்தீ (யாகம்) ஓம்புஞ் செல்வமுடையான்; திசைமுக முனி - நான்முகனாகிய பிரமன்; உலகேழும் அமையெனின் - உலகு ஏழும் படையெனின்; அமரேசன் - திருமால்.

## பாரத்துவாசர் சீராமனை வினவுதல்

215. அனகன் - தூய்மை யுடையவனாகிய சீராமன் ; அம் முனிவன் - பாரத்துவாச முனி ; நான் இம் முறை புருவோ எய்துவது என - நான் இத்தகைய வடிவமேயோ தரிசிப்பது.

216. அகலிட நெடிதாளும் அமைதியை - அகல் நிலம் முழுதாளும் அமைதியையுடையாய்; அது தீர - அஃது ஒழிய ; புகலிடம் எமதாகும் புரையிடை - அருந் தவராகிய யாம் இருக்கும் தவச்சாலையிடை ; இது நாளில் - இப்போழ்து.

## பாரத்துவாசர் இறைவனை அழைத்துச் செல்லல்

217. உற்றுள பொருள் எல்லாம் - நடந்த செயல் அனைத்தும் ; விதிதரு நவை - விதி தந்த குற்றம் ; இற்றது செயலுண்டோ இனியென - இனி இத் தன்மைத் தாகிய செய்கை நிகழுமோ.

218. துப்புறழ் - பவளம் போன்ற ; தூய்மொழி மயில் - சீதை ; ஒப்பறு அரசு - ஒப்பில்லாத தசரதன் ; எப் பரிசு உயிர் உய்ந்தான் - எவ்வண்ணம் உயிர் பிழைத் திருந்தனன்.

219. உலகில் துன்ப இன்பக் கூறுபாடுகள் இருப்பன சகசமே, நல்ல செய்கைகளும், தீய செய்கைகளும் இருக்கின்றன. ஆதலால் நாம் இங்கிருந்து வருந்துவதிற் பயனில்லை என்பது மூன்றடிகளின் கருத்து. புரை - தவச்சாலை.

## பாரத்துவாசர் சீராமனை அங்கே யிருக்க விரும்புதல்

220. நேர்ந்த - இசைந்திருப்பன ; இவ் வழி ஒருங்கினில் எம்மோடு உறையும் - இவ்விடை ஒருங்கு எம்மோடு

உறைமின் ; உறையும் - உம்மீற்று ஏவற் பன்மை (புதியன புகுதல்) ; இறையும் - சிறிதும்.

221. கரியவள் - யமுனை ; நாமகள் - சரசுவதி ; பிரியலன் - நீங்காதுறைவேன், எங்கள் போலியர் தரத்ததன்று - (இதன் சிறப்புக் கூறுதல்) எங்களை யொப்பார் தரத்தது அன்று ; கங்கையாளொடு கரியவள் நாமகள் கலந்த சங்கம் என்பது பிரயாகையை. சங்கமம் என்பது சங்கம் எனக் கடைக் குறைந்து நின்றது.

## இறைவன் ஈண்டு உறைதல் கூடாதென்றல்

222. மாதவம் பூண்டவன் - மாதவ மேற் கொண்ட பாரத்துவாசன் ; இது நீண்டதன்று - இது தூரத்தில் உள்ளது அன்று.

## சித்திரகூடமலைக்குச் செல்ல விடை பெறுதல்

223. ஆவதுள்ளதே-நீ கூறியது உண்மையே; காண்டி-பார்.

## சீராமன் சீதையுடனும் இளையவனுடனும் யமுனையாற்றை அடைதல்

224. என்று காதலின் ஏயினன் - என்று விருப்பத்துடன் கட்டளை யிட்டனன் ; கொன்றைவேய்ங் குழற் கோவலர்-கொன்றைக் காயானும் வேயானும் சமைக்கப்பட்ட குழலையுடைய ஆயர் ; அங்குமி சென்று செங்கதிர்ச் செல்வனும் நடுவுற - ஆழ்கிய உச்சி சென்று செம்மையாகிய கிரணங்களையுடைய ஞாயிறும் நடுவினடைய ; காளிந்தியெனுநதி-யமுனை யாறு.

## யமுனையில் நீராடல்

225. நீறுதோய் - புழுதி படிந்த ; ஊறுமென்கனி - சுவையூறும் பழம் ; ஏறி ஏகுவது - கடந்தேறிச் செல்வது.

## இறைவன் காளிந்தி நதியைக் கடத்தல்

226. வாங்குவேய் கழைத்துணித்தனன் - வளைந்த வேயின் கழையைத் துணித்து ; மாணையின் கொடி - மாணைக் கொடி ; உலம்போல் வீங்கு தோள் அண்ணல் - திரண்ட கற்போலும் ஓங்கிய தோளையுடைய இராமன் ; நீங்கினான் - நீங்கிச் சென்றனன் ; இருகையான் என்புழி முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

227. தோளெனு மந்தரம் - தோளாகிய மந்தரகிரி.

## மூவரும் பாலைவனத்தை அடைதல்

228. அனையர் - அவர் ; வற்கலை-மரவுரி ; மூலம் - கிழங்கு ; நினையும் நெஞ்சமும் - நினைக்கின்ற மனத்தையும்.

## பாலைவனச் சிறப்பு

229. நீங்கலாற்றலள்-வருந்துதல் பொருள் ; வெங் கடத்து உலவைகள் - வேகுஞ் சுரத்திலுள்ள உலர்ந்த கொம்புகள்.

230. பரற்கள் மலரென குளிர்ந்தன, இறுத்து (பிடுங்கி) எறிந்தன வல்லிகள் இளந்தளிர் ஈன்ற, அரவு எயிற்றினுள் அமுது உகக் களித்த என இயைக்க.

231. மேகங்கள் குழுமி குமிறின குளிர்துளி கொணர்ந்த, வேடரும் முனிவரின் முனிகிலர், உழுவையின் முலை மான் இளங்கன்றுகளுண்ட (உண்டு) உயிரைத் தழுவிநின்றன (நின்று) பகையில பசியில தணிந்த என இயையும்.

உழுவை - புலி ; முனிகிலர் - கோபம் நீங்கினர்.

232. கல்அளை - மலைமுழை ; அகடு - வயிறு ; கதழ் - கோபம் ; வல்லையுற்ற - விரைவாயுற்ற ; மணிவாழ்

புல்லெயிற்றிளங் கன்னியர் - முத்தந் தங்குகின்ற சிறுமையாகிய பற்களையுடைய இளம் பெண்கள்.

233. கனி காலமின்றியுங் கனிந்தன கந்தம் மூலமின்றியும் முகிழ்த்தன, கொம்பர்கள் கோல மங்கையர் ஒத்தன என இயையும்.

234. பந்தருட்புரை - பந்தரெனப்படும் உள்ளிடம்.

## கவிக்கூற்று

235. வெளிறு - வயிரம் ; குளிறு - ஒலிக்கின்ற.

236. நினையும் - யாவரானும் எண்ணப்படும் ; அனகன் - பரிசுத்தன் ; கனகமால்வரை - பொன்னை யுடைய சித்திரகூடம்.

## சீராமன் சித்திரகூடத்தைச் சானகிக்குக் காட்டல்

237. தாளின் ஏலம் - தாளையுடைய ஏல விருக்ஷம் ; ஆலம் - ஆலமரம் ; காளமேகம் - கரிய மேகம் ; நாகம் - யானை ; மலையிலே தூங்கிக்கொண்டிருக்கும் யானையும் நீருண்ட கரிய மேகமும் வேற்றுமை தோன்றாமை யால் இன்ன தெனத் தெரியாதிருக்கின்றது.

238. உவரிவாயன்றி - உவர்க் கடலைப் பக்கத்து ; துவர் - பவளம்.

239. அன்பினால் தழைகளைக் கொண்டு வண்டுகளை ஓச்சித் தேனை முழையினின்றும் வாங்கி (எடுத்து) கருக் கொண்ட இளம்பிடிக்கு ஒரு பிறை மருப்பி யானை யுண்ண வாயிற் கையினின்று அளிப்பதைப் பார் என்பது பொருள்.

240. மிகுந்த பஞ்சில்லாது அமுதமயமான நெய்விட்டெரிக் கும் விளக்கொப்பானவளே ! வருத்துகின்ற கொடிய

பிரகாசம் பொருந்தினவும் இடம்விட்டுப் பெயராதனவும் மாறுபடாதனவுமாகிய வேறுபாடில்லாத மண்டலம் (வட்ட வடிவு) நிரம்பியுள்ள மாணிக்கமாகிய மணிக் கற்பாறை வேறொரு ஞாயிறு போல விளங்குவன காணாய்.

241. மேகமளாவிய மாணிக்கக் கல்லின் மறைந்து போவனவும் மிகச் செம்மையாக நீண்ட பச்சைக் கல்லிற் றோன்றுவனவாகி, வித்தியாதர மாதர் தங் கணவரோடு பிணங்கி நடந்த பரிசுத்தமாகிய செம்பஞ் சூட்டிய சிறிய அடிச் சுவடுகள் காணாய் - செம்பஞ் சூட்டிய பாதமாகலின் மாணிக்கப் பாறையில் சுவடுகள் மறைந்தன.

242. ஒலிக்கின்ற வீரகண்டை பணிந்த வேடர்களின் விசாலமாகிய புனத்தின் காவற்களுள்ள பறையினை எடுத்து ஓர் ஆண் குரங்கு நின்று அடிப்பது காணாய், ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பிறையை எட்டிப் பிடித்து இதற்கு இது குற்றம் என்று எண்ணிக் களங்கத்தை - யழிக்கும் பேதையாகிய ஓர் குறத்தியைப் பாராய்.

243. வளைகள் காந்தள் மலரிற் பெய்தா லொத்த கையையுடைய மயில் போல்வாளே! தொளையைக் கொண்ட தாழ்ந்த துதிக்கையை நீண்ட துருத்தியைப் போலுமுயர வெடுத்து அளவைக் கடந்த முதுமைப் பருவத்தவராகிய அருமையாகிய தவமுடையாருக்கு அருவி நீரைக் கொண்டுவந்து, மத மயக்கங் கொண்ட களபமாகிய யானை குண்டிகையின்கண் சொரியாநிற்பன பாராய்.

களபம், கரி - யானை; களபக்கரி - இரு பெயர் ஒட்டுப் பண்பு. வளைகள் கைவளைக்கும், கை காந்தளுக்கும் உவமை.

244. குற்றம் நீங்கிய மாவடு இவையென விளங்கிய கண்ணை யுடைய மயில் போல்வாளே! நெடுகிய கூறெடு வால் நீட்டினவுமாகி மனமுருகா நிற்பனவாகிய ஆண் குரங்குகள் ஒட்டிய கண்ணுடையாரும் வருந்துகின்ற மூப்புடையாருமாகிச் செல்லும் பெருந் தவமுடை யார்க்கு அரிய வழியைக் காட்டுவன பாராய். கடுவன் மாதவர்க்கு அருநெறி காட்டும் என்பதாம்.

245. பெண்களுக்கு ஒரு கட்டளையெனச் செய்த திருவை யொப்பாளே! பெரிய மாமரங்களிலும், பலா மரங்க-ளிலும் விளங்கிய வாழை மரங்களிலுமுள்ள அருமை-யாகிய பெரிய பழங்களை ஆண் குரங்குகள் அன்பாற் கொடுத்துதவப் பன்றிகள் கிழங்குகளைத் தோண்டி வந்து கொடுப்பன பாராய்.

246. இடிமுழக்கத்தைக் கொண்ட யானையைக்கோட்டோ-டும் எடுத்து விழுங்குகின்ற கொடிய பாம்பு, பலநூல் களையுங் கற்று அவற்றின் பொருளையறிந்தார் போ லடங்குதல் செய்து, சடையைப் பரித்த முடியை-யுடையார் தாழ்வில்லாமல் தாம் மிதித்தேறும்படி படிக ளென்னலாம்படி தாழ்ந்த மலையிற் கிடப்பன காணாய்.

## சீராமன் முனிவர் விருந்தாயினமை கூறல்

247. ஏந்திழை - சானகி; வினையினீங்கிய வேதியர் - வினையின்மையான் அதனை அனுபவியாத மறை யோர்; மனையின் மெய்யெனும் மாதவம் புரிந்தவன் - இல்லிடை வாய்மையெனப்படும் பெருந்தவஞ் செய்-தானாகிய தயரதன்.

## சீராமன் தம்பி சமைத்த தவச்சாலையை யடைதல்

248. மருங்கிலாள் - இடையில்லாத சானகி ; வேலைவந் துறை விடமேயதாமென - கடல் ஓரிடத்தில் வந்து தங்கினாற்போல ; சாலை - பன்னசாலை ; தவத்தின் எய்தினான் - தவத்தான் அடையப்படுஞ் சீராமன்.

## இளையவன் இறைவனோடு இறைவிக்குச் சாலைசமைத் தமை கூறல்

249. கழை - மூங்கிலினால் ; குறுந்துணி - குறுந்துண்டுகள் ; நிரைத்து-வரிசைப்படுத்தி ; ஊழுற-முறைபொருந்த; முடங்கல் - ஓலை ; விரித்து என்பது போலியாக விரிச்சு என நின்றது.

250. தேக்கடைப்படலை - தேக்கிலைகளின் கூட்டம்.

251. மிதிலை நாடி - சீதை.

252. அயில் - கூர்மை ; எயில் - மதில்.

## சீராமன் இளையவனைப் பன்னசாலை அமைக்க என்று கற்றனை என்றல்

253. குன்று போலக் குவவிய தோளினாய் - மலைபோலுங் குவிதலையுடைய தோளையுடையவனே (இலக்குவன்).

254. அடருஞ் செல்வம் அளித்தவன் - நெருங்கிய செல் வத்தினை அளித்த சக்கரவர்த்தி (தசரதன்) ; ஆணை - ஆக்கினை ; இரவியில் சுடரும் - சூரியனைப் போல விளங்குகின்றன.

## இளையவன் மறுமொழி பகர்தல்

255. வாய்மொழி-மெய்ம்மையாகிய மொழி ; ஐயன்-இறை யவன் ; அங்குரம் - முளை ; முந்திவந்து முளைத்தது -

முன்னமே வந்து தோன்றியது ; (தசரதனுக்கு தேவரீர் மூத்த குமாரனைப் பிறந்ததினாலன்றோ இந்தத் துன்பம் நேரிட்டது என்பதும் ஒரு பொருள்.)

## சீராமன் இளையவனுக்கு மெய்யறிவு கொளுத்தல்

256. செய்தக்க தில்லை - செய்யத்தக்கது ஒன்றுமில்லை ; அறத்தினின்று ஏகல் - தன்ம மார்க்கத்தினைக் கடந்து போதல் ; எண்ணினன் - நினைத்த சீராமன் ; அவன்- அந்த இளையவன் ; சோகபங்கம் - துன்பமாகிய சேறு ; ஆக, ஆல் அசைநிலைகள்.

257. வரம்புண்டு - எல்லையுண்டு ; இதற்கு - இவ்வனவாசத்திற்கு ; இவ் எல்லையில் - இப்பொழுது ; மேல் வரும் ஊதியத்தோடு - எதிர் காலத்தில் வரப் போகின்ற இராச்சிய லாபத்துடன் ; உன் - (சமமாக) நினை.

## கவிக்கூற்று

258. நோன் சிலையோன் - வலியவில்லினனாகிய சீராமன் ; ஆற்றல் மாதவன் - வசிட்டன்.

## பரதனைத் தாயழைப்பதாகக் கூறுதல்

259. ஐயனை நாடி - தந்தையைத் தேடி ; கூயளன்னை - அன்னை அழைக்கின்றாள்.

## பரதனைக் கைகேசி தன் தாய் முதலியோர் செய்தி வினவல்

260. தாயைவந்து அடியில் வணங்கலும் என இயைக்க. அந்தமில் குணத்தான் - நற்குணங்களுக் கெல்லாம் முடிவில்லாதாகிய பரதன்

## பரதன், அரசன் எங்கே இருக்கின்றான் என வினவல்

261. *மூண்டெழுகாதலின் - மேலும் மேலும் அதிகப்படு கின்ற ஆசையால்; வேண்டினென் எய்தினன் - வேண்டி யடைந்தேன்; ஆண்டகைநெடு முடியரசர் கோமகன் - ஆடவரிற் சிறந்த நீண்டமுடிமன்னர் பெருமான் (தசரதன்); யாண்டையான் - எவ்விடத் துள்ளான்.*

## கைகேசி பரதனுக்கு அரசன் இறந்துபட்டமை உணர்த்தல்

262. *அழிவில் சிந்தையாள் - மனம்வருந்துத லில்லாத கைகேசி; தானவர் வலிதல - அரக்கர் ஆற்றல் கெட; தேனமர் தெரியலான்-தசரதன்; வானகமெய்தினன்- வானுலக மடைந்தனன்.*

## தசரதன் இறந்துபட்டனன் என்பதைக் கேட்ட பரதன் துயரம் அடைதல்

263 *எறிந்தன கடியசொல் - எறிந்தாலொத்த சுடுஞ்சொல்; நெறிந்தலர் குஞ்சியான் - நெறிந்து பரந்த குடுமியை யுடைய பரதன்; நெடிது வீழ்ந்தனன் - மிகவும் வீழ்ந் தனன்.*

## பரதன் தன் தாயைக் கடிந்துரைத்தல்

264 *தீயெரி செவியில் வைத்தனைய தீயசொல் - மிக்க தீயைக் காதில் வைத்தாலொத்த கொடிய சொல்.*

## பரதன் தன் தந்தை இறந்தமைக்குத் துயருறுதல்

265 *எழுந்தனன் ஏங்கினன் - எழுந்து ஏங்கி; வெய்து யிர்த்தனன் - நெட்டுயிர்ப் பெறிந்தான்; முருகிற்*

செவ்வியான் - சேயினும் அழகுடையவன் ; எழுந்தனன், ஏங்கினன், வினை யெச்சமுற்று ; முருகு - சொல்லான் அஃறிணை.

266. கொன்றனை - சிதைத்தனை ; இறைவ - தசரதனே.

## பரதன் சீராமனை யடைந்தாலல்லது துயர் நீங்காதென்றல்

267. எந்தை - என் தாதை ; அந்தமில் பெருங்குணத்து - முடிவில்லாத பெருங்குணத்தினையுடைய ; அவன் கழல் வந்தனை வைத்தபோதலால் - அவன் தாளை வணங்கினால் அல்லது; தீர்கலாது - நீங்காது.

## கைகேசி, சீராமன், தேவி தம்பி என்றிருவரோடுங் கானத்தான் என்றல்

268. வெவ்வுரை வல்லவள் - கொடுஞ் சொல்லில் வல்லமை யுடையாள்; தெவ்வடு சிலையினாய் - பகைவரை வெற்றி கொள்ளும் வில்லையுடையவனே (பரதன்); கானத்தான் - காட்டிற் சென்றனன்.

## சீராமன் கானேகினன் என்பதைக்கேட்ட பரதன் செய்கை

269. நினைத்தனன் நெருப்புண்டானென்ன இருந்தனன் - எண்ணி நெருப்பினை யுண்டவன்போ லிருந்தனன் ; நினைத்தனன் - வினையெச்சமுற்று.

270. ஏங்கினன் - ஏங்கி ; விம்மலோடு - அழுகையோடு ; அப்பூங்கழற் காவலன் - சீராமன் ; தீங்கிழைத்ததனினோ - பொல்லாங்கியற்றியதனானோ ; தெய்வஞ் சீறியோ - தெய்வக் குற்றத்தினானோ.

271. தீயன - தீக்கருமங்கள் ; போயது - காடு சென்றது.

## கைகேசி, சீராமன் அரசனிருக்கவே காடுசென்ருன் என்றல்

272. குருக்கள் - ஆசிரியர் ; ஒருதெய்வத்தாலு மன்று - ஒப்பற்ற தெய்வஞ் சீறியதனுலு மன்று ; அருக்கன் - சூரியன் ; அவன் - சீராமன்.

## பரதன், அரசனிருக்கச் சீராமன் காடுரன் சென்றனன் என விஞதல்

273. கொதித்து - கோபித்து ; செற்றது - பகைத்தது ; பெற்றவன் - தாதை.

## கைகேசி விடை பகர்தல்

274. மைந்தன் - சீராமன் ; அவன் - தசரதன் ; நேமி வேந்து - தசரதன்.

## கைகேசி விடையைக் கேட்ட பரதன் செய்கை

275. கூடின - கூப்பின ; புருவங்கள் செவிகூடின - புருவங் கள் காது வரையிற் கூடின ; உயிர்ப்பிஞேடு அழற் கொழுந்துகள் ஓடின கண்கள் உதிரம் உமிழ்ந்தன என இயைக்க. இவையெல்லாம் கோபக் குறி.

276. கொடியவெம் கோபத்தால் - மிக்ககொடிய கோபத் தால் ; கொதித்த கோளரி - மூண்ட சிங்கமன்ஞன் (பரதன்) ; நெடியவன் - முன்ஞேன் (சீராமன்).

## பரதன் கைகேசியிடம் சென்று வருந்துதல்

277. நின்கொடும் புணர்ப்பிஞல் எந்தை மாண்டனன், என் தம்முன் மாதவம் பூண்டனன் வாய்கீண்டிலென் அது கேட்டு நின்றயான் அரசை ஆசையால் ஆண்டனனே யன்றே என இயைக்க.

278. யானு நின்றனன் - யானும் உயிருடன் இருக்கின்றேன்; எற்றுகிற்றிலென்- மோதுகில்லேன், ஆயகன்-தாயை யொத்த மனமுடைய சீராமன்.

279. வன்சொல் - கடியசொல் ; மன்னன் - தசரதன் ; வீரன்-சீராமன் ; கோளல தறநெறி குறை யுண்டாகுமோ - விதியின் கொள்கையன்றி அறநெறி குறைபடுமோ.

280. சுழியுடை - வஞ்சனையுள்ள ; தாய் - கைகேசி ; வழியுடைத்தாய் - பரம்பரையாக ; மாய்த்து - கெடுத்து; பழியுடைத்தாக்கினன் - பழி பெருகச் செய்தனன்.

281. ஒன்றும் பொய்யா - சிறிதும் பொய் பேசுதலில்லாத; வாயால் உயிரோடும் தின்றும் - வாய்ச் சொல்லால் உயிர்க்கொலை செய்தும் ; திருவெய்தி-அரசச் செல்வமடைந்து.

282. தந்தை - தசரதன் ; அன்னவன்மைந்தன் - சீராமன் ; தாய்-கைகேசி ; அவளோடும் பிறந்தான்-பரதன் ; என்னுற் பெறலாமே - என்னுற் பெறுந் தன்மையதோ.

283. அரசு ஆள்வான்-அரசினை ஆள்வானிருந்த இராகவன்; தந்தையை மாளும் என்றே உன்னு-தகப்பனை இறப்பானென்றே நினைத்து ; வசைகொண்டாள் கோளும்-பழிபூண்ட இக் கைகேசியின் வரம் வாங்குதலாகிய கொள்கையும் ; என்னுலே எனல் கொண்டான் - என்னுலே யென்பதை உட்கொண்டான் ; அது அன்றேல் - அப்படி அல்லாமற் போனுல் ; அன்றே மீளும் - சக்கரவர்த்தி இறந்த அத்தினமே திரும்பி வந்திருப்பான் ; போயினன் - கருதிச் சென்றனன்.

284. ஓதாநின்ற தொல்குல மன்னன் - உரைக்கப்பட்ட பழைய சூரியகுலத் தரசன்; உணர்வு அப்பால் யாதானுந் தாருக - எண்ணமானது பின்னர் எது வேனுமாகுக; எனக்கே பணிசெய்வான் - எனக்கே குற்றேவல் செய்யத் தக்கவனாகிய அப்பரதன்; தீதா நின்ற சிந்தனை செய்தான் - கொடிய எண்ணங் கொண்டனன்; என்ன - என்று கூற.

285. என்முன் உடன் வந்தான் கையார் கல்லை புல் அடகு உண்ண கலமேந்தி வெய்யோன் நான் இன் சாலியின் வெண்சோறு அமுதென்ன நெய்யோ-டுண்ண நின்றது நினையாரோ என இயைக்க. கல்லை-இலைக்கலம்; புல் அடகு-புன்மையாகிய இலை உணவு; நின்றது - நின்றதன்மை.

286. வில்லார் தோளான் - சீராமன்; நல்லான் - நல்லொழுக்க முடையவனாகிய தயாதன்; அன்றே - அன்றைப் பொழுதே; நஞ்சேயனையாள் - விடம் போல்வாளாகிய கைகேசி.

287. உன் கொலைவாயால் ஒன்றோ - உன் கொலைத் தொழில் செய்யும் வாயால் நேர்ந்தது ஒன்றேயோ (பல என்றபடி); அண்ணல் - சீராமன்.

288. கும்பிவயிற்றி னிடை - நரகினைப் பயக்கும் வயிற்றி னிடத்தில்; தீரா - நீங்குதலில்லாத.

289. சிறந்தார் - கல்வி கேள்விகளால் நிரம்பிய பெரி-யோர்; செயலெல்லாம் மறந்தாய் செய்தாய் - நின் செய்கைகளெல்லாம் மறந்தனையாகிச் செய்தனை; தாயையுமாதி-தாயதொழில் உடையையு மாகின்றனை.

## பரதன் கோசலை மாளிகை யடைதல்

290. துன்னருந் துயர் - நெருங்குதற்கரிய துன்பம்.

291. ஆண்டகை - புருடோத்தமனாகிய பரதன்; கேழ்கிளர் - ஒளி விளங்கும்.

## கோசலை பரதனை நோக்கிக் கூறுதல்

292. செய்யன் - செவ்விய குணமுடையவன் ; கைதவம் - வஞ்சனைத் ; கய்கயர் கோமகள் - கைகேயி.

## பரதன் சூளுரை கூறுதல்

293. தாளுறுகுரிசில் - (கோசலையின்) காலருகில் கிடக்கின்ற பரதன் ; சூளுறு - சபதமான ; கட்டுரை - உறுதிமொழி.

294. தழைத்த - செழித்த ; இழுதை - அறிவின்மையையுடைய.

295. வயிறு அளிக்கும் - வயிற்றினைக் காப்பாற்றும் ; நாயகன்பட - போர்க்களத்தில் தலைவன் வீழ ; நடந்தவன் - தன்னுயிரைக் காத்து ஓடினவன் ; கடிது - விரைந்து.

296. தாளினி லடைந்தவர் தம்மை - தம்மைப் புகலடைந்தவரை ; தற்கொரு கோளுற வஞ்சினன் கொடுத்த பேதையும் - (அடைக்கலம் புகுந்தவர்களால்) தனக்கு ஒரு கெடுதி நேரிடப் பயந்து அவர்களைப் பகைவரிடம் கொடுத்த பேதையும் ; நாளினும் - விரத காலங்களிலும்.

297. பொய்க்கரி - பொய்சாக்ஷி ; எய்த்த இடத்து-வருத்தமுற்ற இடத்து.

298. உறையுள் - வீடு ; வழக்கிற் பொய்த்துளோன் - வழக்கிடைப் பொய் கூறினோன்.

299. மன்று - அரசவை ; நன்றியை மறந்திடும் நயமில் நாவினேன் - பிறர் செய்த நன்றியை மறந்த நன் மொழி பயிலாத நாவினை யுடையான்.

300. ஊண் நல உண்வழி நாயினுண்டவன் - நல்லன வாகிய உணவினை உண்ணுங்கால் நாய்போலப் பிறர்க் குக் கொடாது உண்டவனும் ; ஆணலன் பெண்ண லன் ஆர்கொலாமென நாணலன்-ஆணல்லன் பெண் ணல்லன் இவன் யாவன் கொல்லோவென நாணமில் லாதவனும் ; பேணலன் - விரும்பாதவன் ; பிறர்பழி பிதற்றி - பிறரைப் பழியெடுத்துப் பேசுபவனும்.

301. மாசிட்டு ஏற்றினேன் - குற்றத்திற் குள்ளாக்கிய வன் ; சிந்தினேன் - அழித்தவன் ; நறியன உறு பதம் - நல்லனவாகிய உண்டிகளை ; நுங்கிய - உண்ட.

302. செந்நெலங் கழனிக்கான நாடு - செந்நெற் காட்டினை யுடைய நாட்டினை ; ஆவிபேணினென் - உயிரினைக் காத் தோம்பி ; இரும்பலர் நெடுந்தளை - இரும்பினு லாகிய நீண்ட விலங்கு ; விரும்பலர் - பகைவர்.

## கோசலை பரதனைத் தழுவிக்கோள்ளல்

303. தூயவாசகம் - பரிசுத்தமான சொற்கள், தோன்றல் - பரதன் ; திருவினீங்கி - செல்வமிழந்து ; முன்போயி னான் - சீராமன் ; பொம்மலாள் - ஆசையினையுடைய கோசலை.

## வசிட்ட முனிவர் கூறல்

304. உந்தை - உனது தந்தையாகிய தசரதன் ; தோன் றல் நீ பிறந்து - தோன்றலே நீ தோன்றி (பிறந்து) ; பேரறம் பிழைத்தது என்றல் போல - பெரிய அறம் பிழைபட்டது என்றது போல ; இறந்து போயி

ஞன் - இறந்து பட்டனன் ; இருந்தது ஆண்டு:
ஆண்டு இருந்த எண்ணம் இது.

## பரதன் வசிட்டமுனிவர்க்குத் தன்துயர் எடுத்துரைத்தல்

305. இடைந்தது - வருந்துவது.

306. உரைசெய் மன்னன் - சொல்லும் அரசன் ; பிரது-பூசனை - உரிமைக் கடன்.

307. சிறுவனுகி - புதல்வனுகி ; அவத்தன்-பொய்யொழுக்க-முடையவன்.

308. தாள்வளம் - அடிவளம் ; தாழை - தென்னமரம்.

## வசிட்டமுனிவர் சத்துருக்கனுல் தயரதனுக்கு உரிமைக்கடன் செலுத்தல்

309. தாரவன் - பரதன், இளையதோன்றல் - சத்துருக்கன் ; அன்று நேர் கடன் - உரிமைக்கடன் ; நான்மறை நெறிசெய் நீர்மையான் - வசிட்டன்.

## வசிட்டமுனிவர் பரதனை இவ்வுலகம் தாங்கென்றல்

310. வள்ளுறு - கூர்மை பொருந்திய ; அரசில் வையகம் - கதிரிலாநள்ளுறு - அரசனில்லாத உலகம் பகல் என இயைக்க ; நாள் - நக்ஷத்திரம்.

311. உந்தை - தயரதன் ; நும்முன் - சீராமன் ; அன்னது சிந்தனை எமக்கு - அது எமக்கு எண்ணம்.

312. தஞ்சம் நீ தாங்குவாயென - தஞ்சமெனக் கொண்டு நீ காத்தி ; முனிவரன் - வசிட்டர்.

## பரதன் விடை

313. அடைவரும் - பொருந்துதல் அருமையாகிய ; நடைவருந்தன்மை நீர் - நல்லொழுக்கமுடைய நீவிர் ; இடைவரும் காலம் - இடையேவரும் திரேத துவாபர யுகங்களாகிய நற்காலங்கள் ; நீத்தது - ஒழிந்தது; கடைவரும் - இறுதியில் வரும்.

314. வேத்தவை - அரசசபை ; உந்தியிற் பூத்தவன் - பிரமன்.

315. நன்னெறி-நல்ல மார்க்கங்கள்; அன்னவன் - சீராமன்.

316. அன்றெனில் - அல்லதெனின்; அவன் - சீராமன்.

## அவையோர் பரதனுக்குக் கூறுதல்

317. ஆன்ற பேர் அரசன் - அறிவு விசாலித்த பெரிய அரசன் (தயரதன்) ; ஐயன் - சீராமன் ; மணிமுடி ஏந்தல் என்றனன் என இயைக்க ; மறுத்தி - மறுக்கின்றாய்.

## பரதன் தம்பியைக் கூவி 'சேனை எழுக என்று அறிவி' என்று கூறல்

318. குரிசில் - பரதன் ; தம்பி - சத்துருக்கன் ; முறைமை வேந்தன் - முறைமை அரசன் (சீராமன்).

## சத்துருக்கன் கூறியதைக் கேட்ட நகர மாந்தர் செய்கை

319. நல்லவன் - சீராமன் ; நம்பி - சத்துருக்கன்.

## சேனையின் சிறப்பு

320. தமிழ்த்தலைவன் - அகத்திய முனிவர்.

321. சிறிஞர் - அறிவில்லாதவர் ; குறியவன் - அகத்திய முனிவர்.

## பரதனும், சத்துருக்கனும் தேர்மிசைச் செல்லல்

322. ஏந்தல் - பரதன் ; இளையவன் - சத்துருக்கன்.

## பரதன் சீராமன் தங்கிய சோலையில் தங்குதல்

323. கல்லணை கிழங்கு - மலையிற் பொருந்தும் கிழங்கு ; வீரன் - சீராமன் ; பொடி - புழுதி.

## பரதன் கங்கையை அடைதல்

324. கழல் புனைவில் - வீரகண்டை அலங்காரஞ் செய்தல் இல்லாத ; கழனி நாடு - கோசல நாடு.

## சேனையைக் கண்ட குகன் செய்கை

325. மேகத்தை ஒப்புடையண்ணல் - சீராமன் ; உடற்ற - போர் செய்ய.

326. சுரிகை-உடை வாள் ; வெட்டிய மொழி-கடியமொழி.

327. இப்படை - பரதன் சேனை ; ஒலியுலாஞ் சேனை - குகனது சேனை; வள்ளுகிர்-கூர்மை பொருந்திய நகம்.

328. அஞ்சன வண்ணன் - கரிய நிறத்தையுடைய சீராமன்; வஞ்சனையால்-கைகேயி செய்த வஞ்சனையால் ; செல்லாவோ - (இவர்கள் மீது) படமாட்டாதோ.

329. போன படைத்தலை வீரர் தமக்கு - தவத்தின் மேற் சென்ற படைவீரர்களாகிய இராம லக்குவர்கட்கு ; இரை போதா - ஒரு போர்க்கேனும் பற்றாத ; கிடக்கிடு-கிடக்க (இது திசைச் சொல்) குடர் குறைபட-குடர் அலைய ; சாயேனோ - அழிக்கேனோ.

330. ஆடுகொடிப்படை - பரதனுடன் வந்த சேனை ; அறத்தவர் - சீராமன் ; வேடு - வேடர்கள் (சொல்லால் அஃறிணை) ; நாமாளும் - நாம் (வேடர்) உறையும்.

## சுமந்திரன் பரதனிடைக் குகனைப்பற்றிக் கூறுதல்

331. நாவாய் - படகு ; உங்கள் குலத்தனிநாதன் - சீராமன் ; விற்பிடித்தவேலை - வில்லேந்திய சேனைக் - கடல்.

332. கற்காணும் திண்மையான் - மலையைக் கண்டாற் போன்ற வன்மையுடையவன்.

## பரதன் குகனைக் காண்பேன் என்றல்

333. தன் துணைவன் - மந்திரி ; துரிசு - மாசு ; மன் - இறைவனாகிய சீராமன்; முன்னே தழீஇக்கொண்ட - முன்னே நட்புக்கொண்ட ; என்முன்னே - என்னைக் காணுமுன்னே.

## குகன் பரதனைக் காண்டல்

334. தம்பி - சத்துருக்கன் ; எழுகின்றகாதல் - மேன் மேல் அதிகரிக்கின்ற அன்பு ; நின்றவன் - பரதன் ; துன்று - அடர்ந்த; துண்ணென்றான்-திடுக்கிட்டான்.

## பரதன் நிலைமையைக் குகன் காண்டல்

335. வற்கலை - மரவுரி ; கற்கனியக் கனிகின்ற துயரான்- (தன்னைக்கண்ட) கல்லும் குழைந்து உருகத்தக்க துயரமுடையவன்; கண்ணுற்றான் - பார்த்தான் ; விம்முற்று - வருந்தி.

## குகன் பரதன் தீங்கிலன் என்றல்

336. நம்பி - ஆடவரிற் சிறந்தவனாகிய பரதன்; நாயகன் - சீராமன் ; அயல் நின்றான் - சத்துருக்கன் ; தம்பி- இலக்குவன் ; திசை - சீராமன் சென்ற திசை.

நம்பியுமென்னாயகனை ஒக்கின்றான் என்பதை 'எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த வள்-

ளிலேயே யனையானைக் கேகயர் கோன் மகள் பயந்தாள்' (பால காண்டம். குலமுறை கிளத்து படலம். செய்யுள் 21) என் முற்காண்டத்துக் கூறியதனோடு ஒப்பிடுக.

## குகன், வேடரை ஈண்டு இருமின் என்று செல்லல்

337. இடுக்கண் - துயரம் ; பெயர்கின்றேன் - மீள்வேன் ; காமின்கள் - காத்துக்கொண்டிருங்கள்.

## குகன் பரதனைச் சென்று வணங்கல்

338. தன் (பரதன்) எதிரே வந்து தொழுத குகனைப் பரதன் வணங்கினான், அங்ஙனம் வணங்கின பரதன் பாதத்தில் குகன் வீழ்ந்தான், தன் காலில் வீழ்ந்த குகனைப் பரதன் தழுவினான் என்பது பொருள்.

## குகன் பரதன் வந்த காரணம் வினவல்

339. தழுவின - தழுவப்பட்ட ; தாமரைச் செங்கணான் - பரதன் ; முந்தையோர் முறை - மூத்த குமாரனுக்கே முடி சூட்டுவது ; கொணர்வான் - கொண்டு போகும்படி ; வான் - எதிர்கால வினையெச்ச விகுதி.

## குகன் பரதனைப் புகழ்ந்து கூறல்

340. கிராதர் வேந்தன்-வேடர்கட்கு இறைவனாகிய குகன்; தீட்டரு மேனிமைந்தன் - (சித்திரத்தில்) எழுதுவதற்கும் அருமையான (அழகிய) மேனியை யுடைய பரதன் ; கேட்டனன், வீழ்ந்தான், விம்மினன் - முற்றெச்சங்கள்.

341. தாய் - கைகேசி, தாதை - தசரதன் ; நீத்து - விட்டு ; போயினை - இங்கே வந்தனை ; ஆயிரம் இராமர் நின் கேள் ஆவரோ - இராமர் ஆயிரவர் சேர்ந்தாலும் உனக்கு ஒப்பாவரோ.

342. *புகழ்கின்றது - புகழ்வது ; இரவி என்பான்......... உன் புகழ் ஆக்கிக்கொண்டாய் - சூரியன், ஒளியின் தொகுதியால் சந்திரன் முதலிய கிரணங்களின் ஒளிகளைத் தன்னுள் அடக்குவது போல உன் முன்னோர் கொண்டிருந்த புகழை எல்லாம் நீ உன்னுடைய புகழின்கண் அடங்கச் செய்தனை.*

## கவிக்கூற்று

343. *மாற்றம் - சொல் ; புளிஞர்கோன் - குகன்.*

## சீராமன் யாண்டிருந்தானெனப் பரதன் வினவலும் அதற்குக் குகன் மறுமொழி கூறலும்

344. *அண்ணல் - பரதன் ; நம்முன் - சீராமன் ; எயினர் வேந்தன் - குகன்.*

## சீராமன் படுக்கையைக் கண்ட பரதன் செய்கை

345. *காரெனக் கடிது சென்றான் - மேகம்போல விரைந்து சென்றான் (பரதன்) ; பருவரல் - துன்பம்.*

## பரதன் தன்னைத் தானே வெறுத்துக்கொள்ளல்

346. *அரிய புல்லில் - படுக்க முடியாத புல்லின்பேரில் ; சுடரும் காசு - பிரகாசிக்கின்ற இரத்தினங்கள்.*

## பரதன், இலக்குவன் யாண்டிருந்தான் என வினவல்

347. *தூண்தர நிவந்த தோளான் - தூண்போ லோங்கிய தோளையுடைய பரதன் ; நீண்டவன் - இராமன் ; தொடர்ந்து பின்னே போந்தவன் - இலக்குவன்.*

## குகன் பரதனுக்கு விடை பகர்தல்

348. *அல்லை யாண்டு அமைந்த மேனி அழகன் - இரவுப் பொழுதை யாண்டு சமைந்துள்ள மேனியை யுடைய அழகப் பிரானாகிய இராமன் ; அவள் - சானகி.*

## பரதன் குகனிடத்தில் தன்னடிமைத் திறம் அழகிதேன்றல்

349. முன்பொத்த தோற்றத் தேமில் - முன்பொத்த பிறப்பினருள் ; அவன் - இலக்குவன் ; அது - அத்துன்பம்.

## பரதன் குகனைக் கங்கைக் கரையேற்றுகவென்று வேண்டுதல்

350. அண்ணல் - பரதன் ; அன்று - அற்றையிரவு; தெவ்விடைதர - பகைவர் புறங்காட்டி யோட ; புளிஞர் கோமான்-குகன் (விளிப் பெயர்) ; வெவ்விடர்க்கடல் - கொடிய துன்பக் கடல்.

## கோசலையைக் குகன் யாரேன வினவப் பரதன் விடை பகர்தல்

351. சுற்றத்தார் - உறவினர் ; கோசலை - கோசல தேசத்துப் பெண் ; குரிசில் - பரதன் (இது அண்மை விளி); முதற்றேவி - முதன் மனைவி.

## பரதன் குகன் இனையன் எனக் கோசலைக்கு அறிவித்தல்

352. அழுவான் - அழுகின்ற குகன் ; கொடி - பூங்கொடி போன்ற கோசலை ;

## கோசலை குகனை ஆசீர்வதித்தல்

353. நைவீரலீர் - வருந்தாதீர் ; மெய்வீரர் - இராமலக்ஷ்மணர் ; விலங்கல் - மலை ; ஒருவீர் - ஒரு தன்மையுடையீராய்.

## பரதன் குகனுக்கு இவ்வனை சுமத்திரை என்றல்

354. *அன்பின் நிறந்தாள் - அன்புருவ முடையவள்; இறந்தான் - இறந்த தசரதன்; தொழுகுலம் - தொழத் தக்க குலம்.*

## கைகேசியைக் குகன் யாரென வினவல்

355. *சுடுமயானம் - சுடுகாடு; தன்துணை - தன் நாயகன்; தோன்றல் - தன் மகன் (பரதன்); கருணையார்கலி - கருணைக்கடல் (சீராமன்); குரிசில் - பரதன்.*

## பரதன் விடை பகர்தல்

356. *படர் - துயரம்; பழிவளர்க்குஞ் செவிலி - பழியாகிய குழந்தையை வளர்க்குந் தாய்; குடர் - குடல் (போலி); உடலெலாம் - உடம்பனைத்தும்.*

## படகு கரையை அடைதல்

357. *இரக்கமிலாள் - கைகேயி; வணங்கினன் - குகன் வணங்கினான்.*

## பரதன் பாரத்துவாசன் இருப்பிடம் சார்தல்

358. *பாத்தினீங்கும் - வினைச் சுமையின் நீங்கிய; அருத்திகூர - அன்பு மிக; அவன் - பாரத்துவாசன்.*

## பாரத்துவாசன் விருந்தமைக்கத் தீயின் ஆகுதி செய்தல்

359. *ஐயன் - பரதன்; ஆவுதி - வடசொற்சிதைவு.*

## பாரத்துவாசன் சேனைக்கு விருந்தமைத்தமை கூறல்

360. *இன்னர் - இவ்விடத்து; இன்னணம் - இவ்வாறு; இந்திரன் துன்னு போகம் - இந்திர போகங்கள்; தோன்றல் - பரதன்.*

## சேனை சித்திரகூட பர்வதத்தைச் சார்தல்

361. ஒன்றுரைத்து - ஒரு வார்த்தையைக் கூறி, புரவலன்-தசரதன்.

## சேனையைக் கண்ட இலக்குவன் செய்கை

362. சுரிகை - உடைவாள் ; கழல் - வீரகண்டை ; ஏந்தல்-இறைவணுகிய சீராமன்.

363. பின்பு வந்த - பின்னே தோன்றிய.

## இலக்குவன் கோபங் கொண்டபோது சீராமன் பகர்தல்

364. கலக்குவன் - கலங்கச் செய்வேன் ; புலக்குரித்து ஒரு பொருள் - அறிவினுக் குரித்தாகிய மெய்ம்மைச் செய்தியை.

## இறைவன் இளையவனுக்குப் பரதன் செயலுணர்த்தல்

365. என் வயின் நேய நெஞ்சினுல் - என்பால் வைத்த அன்பினையுடைய சிந்தனையால் ; மறைகூறும் ஒழுக்கம் அனைத்தும் பரதன் ஒழுக்கமே என்பது கருத்து.

366. பொன்னெடும் பொருகழற் பரதன் - பொன்னுற் செய்யப்பட்ட போர்க்குரித்தாகிய கழலையணிந்த பரதன்.

367. சேனுயர் தருமத்தின் தேவை - மிகப் பெரிய தரும தேவதை போல்வானை ; செம்மையின் ஆணியை - நடுவு நிலைமைக்கு உரையாணி யன்னுனை.

368. ஏந்தல் - இறைவணுகிய சீராமன் ; முந்தினுன் - முற்பட வந்தனன்.

## இறைவன் பரதனைத் தூரத்தே பார்த்தல்

369. தொழுதுயர் கையினன் - தொழுதோங்கிய கையை யுடையவன் ; துவண்ட மேனியன் - தளர்ந்த உடம் பினை யுடையவன் ; அவலமீதென எழுதிய படிவ மொத்து எய்துவான்றனை - துன்பப் படிவம் ஈதென்று எழுதிய ஓவியப் படிவம் ஒத்து அடையும் பரதனை.

## பரதன் போர்க்கோலங் கொண்டமையைச் சீராமன் இளையவற்குக் காட்டல்

370. கார்ப்பொரு மேனி அக்கண்ணன் - கருமுகில் போலு நிறத்தினையுடைய அச் சீராமன் ; போர்ப் பெருங் கோலத்தை - போர்க்குரிய பெரிய காட்சியை.

## பரதன் சீராமன் முன்னே தோன்றல்

371. துன்பப்படுகின்றவளாகிய திருமடந்தை விட்ட தூதைப் போலப் பரதன் சென்று இராமன் முன்னே தொழுது தோன்றினன் என்பது கருத்து.

## பரதன் சீராமனை வணங்கல்

372. முறைமையைத் துறந்தனை - நீதியை ஒழித்தனை ; சொல்லினன் - சொல்லையுடையவனாய் ; மறந்தனன் - மெய்ம்மறந்து ; இறந்தனன் தாதையை - இறந்து பட்ட தாதையை ; எதிர்கண்டன்ன - நேரிற் கண் டாங்கு.

## பரதன் சீராமனைத் தழுவிக்கோடல்

373. அயா வுயிர்த்து - நெட்டுயிர்ப் பெறிந்து ; அழுத கண்ணீர் அருவி மார்பிடை உயாவுற - அழுதலானுய கண்ணினின்றும் வழியு நீரருவி மார்பிடைப் பெருக ; திருவுளம் முருக - மனங் கரைய.

## சீராமன் பரதனைத் தழீஇக்கொண்டு தன் தந்தையின் க்ஷேமத்தை வினவியது

374. புல்லினன் நின்று - தழுவி நின்று ; அல்லலின் அழுங்கினை - துயரத்தில் அழுந்தினை ; ஆளுடை மல்லுயர் தோளினன் - நிலவுலகத்தை யாளுதலுடைய மற்போரால் உயர்ந்த தோளையுடைய அரசன் (தசரதன்).

## பரதன் விடை பகர்தல்

375. அரியவன் - சீராமன் ; என்னைப்பெற்ற அக் கரியவள்-என்னை ஈன்ற அந்தக் கொடியவளாகிய கைகேசி; மெய் - உண்மை ; உம்பரான் என்றான் - துறக்கம் அடைந்தனன் என்றனன்.

## தந்தை இறந்ததைக் கேட்டுச் சீராமன் வருந்துதல்

376. நந்தா விளக்கு - அவியாத விளக்கு ; தயாநிலை - அருட்கு நிலைக்களம்.

377. திருநாடு - கோசலநாடு ; வான் - பரமபதம் ; ஊன் அடைந்த தெவ்வர் உயிரடைந்த ஒள் வேலோய் - ஊன் தங்கிய பகைவர் உயிரினைக் கவர்ந்த ஒள்ளிய வேற்படையை யுடையானே.

378. கோளரி - சிங்கம் போல்பவனாகிய சீராமன்.

## வசிட்டர் சீராமனைத் தேற்றல்

379. துறத்தல் - துறவற நிலையினிற்றல ; மறைகளின் வரம்பு - மறைகளின் முடிவு.

380. பெறுவதன்முன்-மக்களைத் தாய் உயிர்த்தலின் முன் ; மறுவறு - குற்றமற்ற ; இறுவது - இறத்தல்.

381. சீலம் - தவவொழுக்கம்; சிதைவில் செய்கை - கேடில்லாத செய்கை; சூலமும் - முத்தலைப் படையும்; திகிரியும் - ஆழிப்படையும்; சொல்லும்-வாக்காயுதத்தையும்; மூலம் வந்து உதவிய மூவர்க்கு - யாவைக்கும் காரணமாய் நின்ற திரிமூர்த்திகளுக்கு.

382. எண்ணிய விளக்கு - கருதி ஏற்றப்பட்ட உலக வாழ்வாகிய விளக்கு; அவை யிரண்டு - அந்த நெய்யுந் திரியும்; எஞ்சினால் - தேய்ந்தால்.

383. விண்ணுறு நீர் மொக்குள் - மேகத்தினின்று விழும் நீர்க் குமிழி; இழுதைப்பாலது - பேதமைத் தன்மையது; மண்ணுறு நீர் உகுத்தி - பாவம் கழிக்கும் தருப்பணம் செய்.

## சீராமன் தர்ப்பணஞ் செய்தல்

384. தக்கநன் மறையவன்-வசிட்டன்; முக்கையின்-மூன்று தரம்; புக்கனன் போந்தனன் எச்சமுற்று.

## சீராமன் பரதனை வினவுதல்

385. வரதன் - அரசர் பெருமான்; பரிந்து கூறினன் - பரிந்து கேட்டனன்.

## சீராமன் பரதனை, 'நீ விரத வேடங் கோள்வானேன்' என்று கேட்க அதற்கு அவன் விடை பகர்தல்

386. அறத்துளோர் நீயன்றி யாவர் - அறத்து வழியில் நிற்பார் நீயல்லாது யாவர்; அதர்ப்பின்று வாய்கொலாம் - அவ்வழியினின்றும் பின்னிடுவை கொலாம்.

387. மனைக்கு ஒன்றாதவள் - இல்லற தருமத்திற்கியையாதவளாகிய கைகேசி; நினக்கொன்றா நிலைநிறுவி - நினக்குப் பொருந்தாதவண்ணம் நிறுத்தி; நேமியான்தனைக் கொன்றாள் - அரசர் பெருமானைக்

கொன்றுவிட்டாள் ; தவம் அடுப்பது எண்ணினுல் எனக்கன்றே - நினையுங்கால் தவநெறி மேற்கோடல் எனக்குத் தக்கதே யல்லவா ?

388. நோவதாக - வருந்துவதாக ; பாவகாரி - பாவச் செயலை மேற்கொண்ட கைகேசி ; சாவதோர்கி-லேன் - சாவத் துணியகில்லேன்.

389. தொகையில் அன்பினுல் - அளவுபடாத நின்னிடை வைத்த அன்பால் ; இறைவன்-தசரதன் ; புந்தியால் வகையில் வஞ்சனுய் - மனத்தால் வகுத்தற்கரிய வஞ்சகமுடையனுகி ; இறவு - சமயம் (தொழிற்பெயர்).

390. எந்தை-என் தந்தையே (சீராமன்) ; உலகு உறுத - உலகம் சகிக்காத; நோய் - துன்பம்; தாய் - கைகேசி ; சிந்தையாவதும் - தன் கருத்து முழுவதும்.

## சீராமன் விடை பகர்தல்

391. முறையும்-ஒழுக்கமும் ; இறைவர்-அரசர் ; இயைவ - வந்து பொருந்துவன.

392. பரவுகேள்வியும் - சிறப்பித்துரைக்கப்படும் கேள்வி-யும் ; பழுதுஇல் ஞானமும் - குற்றமற்ற மெய் உணர்ச்சியும் ; விரவுசீலமும் - பொருந்திய ஒழுக்க-மும் ; வினையின் மேன்மை - வினைத்தூய்மை ; உரம் விலோய் - ஆற்றலமைந்த வில்லையுடையானே.

393. சிந்தை தேர்வுற - சிந்தை தெளிய.

394. ஆய்வரும்புலத்து அறிவுமேவினுய் - ஆராய்வதற்கரிய அறநூலும் நீதிநூலும் முதலியவற்றின் அறிவினை யுடையவனே.

395. வினையின் நல்லதோ ரிசையை வேய்தலோ - தத்தஞ் செய்கையானல்லதாகிய தொரு புகழினை அடை-

வித்தலோ ; நினையலோவிடா - எண்ணத்தினின்றும் நீங்குதலில்லாத ; புனைதலோ - மேற்கோடலோ.

396. வானில் - வரத்தால் ; உந்தை - தயரதன் ; அரசு - அரசச் செல்வம்.

## பரதன் விடை பகர்தல்

397. முன்னர்வந்துதித்து-எங்கள் முன் வந்துதோன்றி.

398. வையகம் மலங்கி வருந்தி வைக - மண்ணுலகம் முழுவதும் கலங்கி வருத்தமடைந்து இருக்க ; நீ உலங்கொள் தோள் உனக்குறுவ செய்தியோ - நீ திரள் கற்போன்ற தோளாற்றலான் நினக்கியைவனவற்றைச் செய்தியோ ; பொலங்குலாவுதாள் - அழகமைந்த சேவடி.

## சீராமன் உத்தரம்

399. மன்னவன் - தசரதன் ; அன்னான் - அரசர் பெருமான் ; ஏயது - ஏவிய கட்டளையை; ஆணை-கட்டளை ; அயரல் - தளராதே.

400. ஒள்ளியோன் - சீராமன் ; வள்ளியோய் - சீராமனே.

## வசிட்டமுனிவர் சீராமனுக்குக் கூறுதல்

401. இதவிய லியற்றிய - நன்மையைத் தருகிற வித்தைகள் யாவையுங் கற்பித்த ; பதவிய இருமையும் பயக்க - சிரேஷ்டமான இம்மை, மறுமை யின்பங்களைத் தரும்படி ; பண்பினால் - அன்புடனே.

402. என்றலால் - என்று பெரியோர் சொல்லுதலால் ; உனை எடுத்து - உன்னை விர்த்திசெய்து ; உதவிற்று உண்மை - கற்பித்தது மெய் ; அன்றெனாது - அல்லவென்று மறுக்காமல்.

## சீராமன் விடை பகர்தல்

403. சான்றவராக-பெரியோரே யாகட்டும்; தாய் போன்றவர் ஆக - தாய்போன்ற அன்புடையவரே ஆகட்டும் ; தேன்தரு மலருளான் சிறுவ - தேனைச் சிந்துகிற தாமரைமலர்த் தவிசிலிருப்பவனாகிய பிரமதேவனது சிறுவனே ; என்றபின் - சம்மதித்த பிறகு ; மறுக்கும் ஈட்டதோ - மறுக்குந் தகுதியதோ.

404. தாய்பணித்து வந்தன - தாயினால் கட்டளை யிடப்பட்டு வந்தவற்றையும் ; ஏய எப்பொருள்களையும் - ஏவின எந்தக் காரியங்களையும் ; மேற்கொளா - சிரசாக வகிக்காத.

405. முன்னுறப் பணித்தவர் - முற்படப் பணித்த தந்தை தாயர் மொழியை.

## பரதன் கூறுதல்

406. கூர்எரி சாமிது - மிக்க தீயிற் புக்கு இறப்பது ; சரதம் - உண்மை.

407. யாதுமோர் துன்பிலன் - சிறிதுந்துயரம் இல்லாதவனாயினன் ; தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான் - தன்புகழினும் பெரிய தன்மை யுடையவனாகிய இறைவன்.

## பரதன் சீராமபிரானின் பாதுகை வேண்டலும், அதை அவன் கொடுத்தலும்

408. பரதனும் வேறு செய்வதொன்று இன்மையின் - பரதனும் பிறிது தொன்றுஞ் செயக்கடவதொன்று இன்மையான் ; திருவடித் தலம் செம்மையிற் றந்தீக என - திருப்பாதுகையை அன்பினோ டளித்தி என்று வேண்ட.

## பரதன் பாதுகையைச் சூட்டிக்கோள்ளலும், விடை பெறுதலும்

409. *அடித்தலம் இரண்டு-திருப்பாதுகை இரண்டு ; முடித் தலம் இவையென - இவை முடிகளேயாமென்று.*

## பரதன் நந்திக்கிராமத்தில் தங்கியிருந்தனன் என்றல்

410. *பாதுகம் - திருவடிநிலைகள் ; உறக்க நீங்கினன் - நித்திரை கொள்ளாதிருந்தனன்.*

411. *இந்தியம் - ஐம்பொறி.*

# முதனினைப்பகராதி


| செய்யுள் அ - (50) | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| அகலிட | 80 | அலைநெடும் | 107 |
| அங்கிமேல் | 64 | அவ்வுரை | 95 |
| அங்குள | 79 | அவ்வழி | 116 |
| அச்சொற் | 29 | அவ்விடை | 118 |
| அஞ்சனக் | 65 | அளியன்னதோ | 68 |
| அஞ்சம்பையு | 68 | அறநி | 22 |
| அஞ்சன | 110 | அறமெனக் | 40 |
| அஞ்சல | 27 | அறந்தனை | 93 |
| அடித்தல | 138 | அறைக | 85 |
| அடருஞ் | 88 | அறந்தானே | 120 |
| அடைவருங் | 106 | அறந்தனை | 127 |
| அண்ணலும் | 73 | அறிஞருஞ் | 107 |
| அண்ணலு மது | 77 | அனையரா | 15 |
| அந்தணாளர் | 15 | அனையதன் | 24 |
| அந்தநற் | 133 | அனையரப்புனல் | 83 |
| அந்த | 88 | அன்னைய | 56 |
| அந்தண | 100 | அன்னவ | 5 |
| அப்படை | 109 | அன்பி | 40 |
| அம்முனி | 80 | அன்னவ | 78 |
| அயாவுயிர்த் | 128 | அன்றெனி | 106 |
| அரக்கர் | 24 | | |
| அரியவ | 128 | ஆ - (26) | |
| அரிந்தான் | 30 | ஆகசெய் | 88 |
| அரியதா | 74 | ஆகாத | 56 |
| அருந்ததி | 79 | ஆகொடி | 27 |
| அருத்தியி | 80 | ஆங்குவந் | 35 |
| அலங்கன் | 8 | ஆடவர் | 20 |
| அல்லலு | 81 | ஆடுகொடி | 112 |
| அல்லணை | 109 | ஆண்டகையம் | 56 |
| அல்லையாண் | 118 | ஆண்டகை | 98 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| ஆமெனி | 137 |
| ஆயதவ் | 9 |
| ஆயதோ | 33 |
| ஆயன | 36 |
| ஆய | 71 |
| ஆயகாலை | 92 |
| ஆயகாத | 122 |
| ஆய்தந்தவ | 53 |
| ஆலைபாய் | 83 |
| ஆவதற்கு | 15 |
| ஆவதுள்ளதே | 82 |
| ஆவு | 48 |
| ஆழ்ந்த | 19 |
| ஆழிசூ | 37 |
| ஆளான் | 48 |
| ஆறுகண்டன | 82 |
| ஆனவ | 92 |
| ஆன்றபே | 106 |
| **இ - (21)** | |
| இடிகொள் | 86 |
| இடிக்கு | 103 |
| இதவிய | 136 |
| இந்த | 27 |
| இப்பொழு | 37 |
| இயன்றதென் | 117 |
| இரந்தான் | 29 |
| இருவருந் | 56 |
| இருத்தியீண் | 73 |
| இருமையு | 125 |
| இலக்குவ | 126 |
| இளையானிது | 51 |
| இறப்பெனு | 6 |
| இறந்தான் | 97 |
| இனிய | 17 |
| இனைய | 86 |
| இன்னே | 28 |
| இன்னேபலவும் | 44 |
| இன்னணமிளை | 98 |
| இன்னண நெடும் | 108 |
| இன்னரின்ன | 124 |
| **ஈ - (1)** | |
| ஈண்டு | 39 |
| **உ - (13)** | |
| உண்டிடுக்க | 114 |
| உதிக்கு | 52 |
| உந்தையோ | 105 |
| உந்தைதீமை | 132 |
| உமைக்கு | 16 |
| உய்யா | 97 |
| உரைத்த | 25 |
| உரைசெய் | 103 |
| உருகு | 85 |
| உருளு | 15 |
| உவரி | 84 |
| உற்றுள | 81 |
| உற்றது | 4 |
| **ஊ - (3)** | |
| ஊணல | 101 |
| ஊருணி | 12 |
| ஊற்று | 72 |
| **எ - (26)** | |
| எந்தையே | 36 |
| எந்தையும் | 94 |
| எலியெல | 110 |
| எழுந்தன | 93 |
| எறிந்தன | 92 |
| எனக்கு | 22 |

| செய்யுள் | | | பக்கம் |
|---|---|---|---|
| என்பது | - | - | 138 |
| என்பத்தைக் | - | - | 118 |
| என்பு | - | - | 16 |
| என்புகழ் | - | - | 116 |
| என்றனன்மட | - | - | 80 |
| என்ற வாசகம் | - | - | 8 |
| என்றனனிள | - | - | 127 |
| என்றலு | - | - | 132 |
| என்றலுமே | - | - | 120 |
| என்றெழுந்த | - | - | 113 |
| என்று கூறி | - | - | 103 |
| என்றுன் | - | - | 98 |
| என்று காதலி | - | - | 82 |
| என்று கொண் | - | - | 38 |
| என்று சிந்தித் | - | - | 88 |
| எனையிவை | - | - | 116 |
| எனைத்துள | - | - | 126 |
| என்னக் | - | - | 121 |
| என்றெடுத்துப் | - | - | 129 |
| என்றலால் | - | - | 136 |

ஏ - (6)

| | | | |
|---|---|---|---|
| ஏங்கினன் | - | - | 95 |
| ஏண்பா | - | - | 30 |
| ஏயவு | - | - | 26 |
| ஏவம் | - | - | 30 |
| ஏவிய | - | - | 76 |
| ஏவிய குரிசில் | - | - | 62 |

ஐ - (2)

| | | | |
|---|---|---|---|
| ஐயனு | - | - | 34 |
| ஐயிரு | - | - | 76 |

ஒ - (5)

| | | | |
|---|---|---|---|
| ஒட்டிய | - | - | 5 |
| ஒருத்தலே | - | - | 10 |
| ஒள்ளியோ | - | - | 135 |
| ஒன்று | - | - | 30 |
| ஒன்றும் | - | - | 97 |

ஓ - (1)

| | | | |
|---|---|---|---|
| ஓதா | - | - | 97 |

க - (20)

| | | | |
|---|---|---|---|
| கங்கை | - | - | 69 |
| கங்கையாளொடு- | | - | 82 |
| கங்கையிரு | - | - | 113 |
| கங்கையே | - | - | 33 |
| கச்சொ | - | - | 72 |
| கட்டிய | - | - | 110 |
| கட்டினன் | - | - | 125 |
| கடிகமழ் | - | - | 14 |
| கண்டு | - | - | 9 |
| கண்ணு | - | - | 45 |
| கண்ணே | - | - | 28 |
| கரிய | - | - | 15 |
| கரும்பன | - | - | 54 |
| கரும்பலர் | - | - | 101 |
| கல்ல | - | - | 83 |
| கல்லுவென் | - | - | 78 |
| கள்ளவிழ் | - | - | 26 |
| கற்காணுங் | - | - | 133 |
| கன்றுயி | - | - | 101 |
| கன்னி | - | - | 70 |

கா - (7)

| | | | |
|---|---|---|---|
| காயுங் | - | - | 69 |
| கார்குலா | - | - | 74 |
| கார்ப்பொரு | - | - | 127 |
| கார்வான | - | - | 55 |
| காரெனக் | - | - | 117 |
| கால | - | - | 84 |
| காழ | - | - | 71 |

| செய்யுள் கி - (1) | பக்கம் |
|---|---|
| கிள்ளையொடு - | - 48 |
| **கு - (7)** | |
| குடையின - | - 80 |
| குரிசிலுங் - | - 107 |
| குருக்களை - | - 95 |
| குலமுதற் - | - 4 |
| குழுமி - | - 83 |
| குழைக்கின்ற - | - 38 |
| குற்றமொன் - | - 95 |
| **கூ - (1)** | |
| கூவா - | - 73 |
| **கெ - (1)** | |
| கெடுத்தொ - | - 23 |
| **கே - (1)** | |
| கேட்டனன் - | - 115 |
| **கொ - (5)** | |
| கொடியவெங் - | - 96 |
| கொம்பு - | - 71 |
| கொள்ளா - | - 28 |
| கொற்ற - | - 61 |
| கொன்றே - | - 98 |
| **கோ - (3)** | |
| கோதறத் - | - 127 |
| கோதைவிற் - | - 75 |
| கோளு - | - 16 |
| **சா - (1)** | |
| சான்றவ - | - 136 |
| **சி - (5)** | |
| சிங்கக் - | - 50 |
| சிங்கவே - | - 74 |
| சித்த - | - 41 |
| சிருங்கி - | - 72 |
| சிறந்தார் - | - 98 |

| செய்யுள் சீ - (4) | பக்கம் |
|---|---|
| சீரை - | - 61 |
| சீலமல்லன - | - 17 |
| சீலமுங் - | - 129 |
| சீற்றங் - | - 54 |
| **சு - (4)** | |
| சுமையா - | - 121 |
| சுழியுடைத் - | - 97 |
| சுற்றத்தார் - | - 119 |
| சுற்றமப்புற - | - 72 |
| **சூ - (2)** | |
| சூடின - | - 96 |
| சூது - | - 16 |
| **செ - (5)** | |
| செந்தழல் - | - 80 |
| செய்ய - | - 71 |
| செய்துடைச் - | - 57 |
| செல்லுஞ்சொல் - | - 53 |
| செவ்விய - | - 63 |
| **சே - (2)** | |
| சேணுயர் - | - 126 |
| சேணு - | - 31 |
| **த - (7)** | |
| தஞ்சமில் - | - 105 |
| தடக்கையா - | - 64 |
| தம்முயிர்க் - | - 4 |
| தழுவின - | - 115 |
| தழைத்ததண் - | - 100 |
| தனைய - | - 133 |
| தன்முன்னே - | - 113 |

| செய்யுள் தா - (10) | பக்கம் |
|---|---|
| தாதை | 10 |
| தாய்பசி | 100 |
| தாய்வர | 133 |
| தாய்பணித் | 136 |
| தாயுரை | 116 |
| தாருடை | 63 |
| தாளினி | 100 |
| தாளுறு | 100 |
| தானமுங் | 12 |
| தான்புனே | 56 |
| **தி - (6)** | |
| திக்கு | 59 |
| திசைத்தது | 27 |
| திரண்ட | 7 |
| திருநகர் | 75 |
| திருவரை | 59 |
| திருவுள | 78 |
| **தீ - (2)** | |
| தீய | 24 |
| தீயன | 95 |
| **து - (8)** | |
| துடிய | 71 |
| துண்ணெனுஞ் | 35 |
| துப்புறழ் | 81 |
| துறந்து | 60 |
| துறத்தலு | 129 |
| துன்புள | 78 |
| துன்னு | 103 |
| துறந்துபோயினு | 103 |
| **செய்யுள் தூ - (3)** | **பக்கம்** |
| தூண்டா | 117 |
| தூமகேது | 17 |
| தூய | 101 |
| **தெ - (2)** | |
| தெரிவை | 86 |
| தெருளுடை | 37 |
| **தே - (5)** | |
| தேக்கடைப் | 87 |
| தேவியு | 68 |
| தேற்றித் | 89 |
| தேனடைந்த | 128 |
| தேனுள | 76 |
| **தை - (1)** | |
| தையறன் | 65 |
| **தொ - (2)** | |
| தொகையி | 132 |
| தொழுதுயர் | 127 |
| **ந - (12)** | |
| நடந்த | 42 |
| நதியின் | 52 |
| நந்தா | 128 |
| நந்தியம் | 138 |
| நம்பியுமென் | 114 |
| நல்லவ | 107 |
| நலங்கொண் | 9 |
| நற்றுதை | 53 |
| நன்று | 25 |
| நன்சொற்க | 54 |
| நன்னெடுங் | 59 |
| நன்னெறி | 106 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| **நா - (4)** | | |
| நாக | - - | 26 |
| நாடி | - - | 24 |
| நாரிய | - - | 27 |
| நாற்கடற் | - - | 19 |
| **நி - (5)** | | |
| நிற்றியீண் | - - | 73 |
| நிறையு | - - | 81 |
| நின்மக | - - | 29 |
| நின்றவன் | - - | 36 |
| நினையுந் | - - | 84 |
| **நீ - (3)** | | |
| நீங்க | - - | 83 |
| நீயின | - - | 96 |
| நீருள | - - | 57 |
| **நு - (1)** | | |
| நுரைக்கொ | - - | 70 |
| **நெ - (3)** | | |
| நெருதற் | - - | 46 |
| நெடுங்கழைக் | - - | 87 |
| நெறியிடு | - - | 78 |
| **நை - (1)** | | |
| நைவீர | - - | 120 |
| **நோ - (1)** | | |
| நோவ | - - | 132 |
| **ப - (10)** | | |
| படருற | - - | 78 |
| படரொலாம் | - - | 121 |
| பண்டமா | - - | 46 |
| பணிமொழி | - - | 79 |
| பந்த | - - | 84 |
| பரத்தி | - - | 122 |
| பரவு | - - | 133 |
| பராவரும் | - - | 19 |
| பரிவி | - - | 60 |
| பற்றொரு | - - | 72 |
| **பா - (2)** | | |
| பாதுகம் | - - | 138 |
| பாலுடை | - - | 77 |
| **பி - (2)** | | |
| பின்னுந் | - - | 89 |
| பின்னும் | - - | 56 |
| **பு - (5)** | | |
| புக்கனன் | - - | 130 |
| புண்ணிய | - - | 129 |
| புல்லின | - - | 128 |
| புறத்து | - - | 7 |
| புனைந்திலன் | - - | 39 |
| **பூ - (6)** | | |
| பூண்டபே | - - | 63 |
| பூண்டமா | - - | 82 |
| பூணாரணியும் | - - | 46 |
| பூதல | - - | 26 |
| பூவி | - - | 103 |
| பூவிரி | - - | 109 |
| **பெ - (6)** | | |
| பெண்ணி | - - | 9 |
| பெண்ணினோக்கும் | - - | 69 |
| பெண்ணெனை | - - | 26 |
| பெண்ணை | - - | 72 |
| பெருமக | - - | 6 |
| பெறுவதன் | - - | 129 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| **பை - (1)** | |
| பைந்தொடி | 57 |
| **பொ - (6)** | |
| பொய்க்கரி | 100 |
| பொய்ம்முறை | 76 |
| பொருந்துநா | 14 |
| பொழியுங் | 69 |
| பொன்னூர் | 47 |
| பொன்னொடும் | 126 |
| **போ - (1)** | |
| போன | 112 |
| **ம - (12)** | |
| மங்கையர்க்கு | 69 |
| மங்கையம் | 39 |
| மஞ்ச | 85 |
| மண்ணுள் | 30 |
| மண்செய்த | 48 |
| மயிலுடைப் | 87 |
| மலங்கி | 134 |
| மறுவிறொல் | 101 |
| மன்னவ | 135 |
| மன்னவன் | 38 |
| மனைக்கொன் | 132 |
| மனையி | 69 |
| **மா - (6)** | |
| மாண்டன | 96 |
| மாதர்கள் | 32 |
| மாலைவந் | 87 |
| மாளவு | 96 |
| மாறு | 97 |
| மாறினி | 57 |
| **மீ - (1)** | |
| மீனீர் | 66 |
| **மு - (7)** | |
| முல்லை | 61 |
| முறைமை | 39 |
| முறைமையி | 4 |
| முறையும் | 133 |
| முன்னர் | 134 |
| முன்புநின் | 64 |
| முன்னுறப் | 137 |
| **மூ - (1)** | |
| மூண்டெழு | 92 |
| **மெ - (1)** | |
| மெய்யே | 29 |
| **மே - (1)** | |
| மேவிநில | 26 |
| **மை - (1)** | |
| மையறு | 99 |
| **யா - (1)** | |
| யாரொ | 16 |
| **வ - (14)** | |
| வஞ்சி | 70 |
| வடுவின் | 85 |
| வந்தவ | 36 |
| வந்து | 92 |
| வந்தெதிரே | 115 |
| வரதன்பகர் | 53 |
| வரதன்றுஞ் | 132 |
| வரனில் | 134 |
| வள்ளுறு | 105 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| ளகள் | 85 |
| றுத்து | 83 |
| வற்கலையி | 114 |
| வனத்தின் | 95 |
| வன்றெறு | 124 |
| **வா - (11)** | |
| வாக்கினைல் | 96 |
| வாங்கு | 82 |
| வாய்க | 22 |
| வாயான் | 44 |
| வாயொளி | 92 |
| வாய்தந் | 28 |
| வாரண | 35 |
| வாழ்வினை | 58 |
| வாள்புரை | 79 |
| வாளும் | 84 |
| வானோர் | 28 |
| **வி - (6)** | |
| விண்டொட | 34 |
| விண்ணுட்டவர் | 50 |
| விண்ணுநீர் | 130 |
| விம்மினன் | 138 |
| வில்லார் | 98 |
| வினைக்கரு | 64 |
| **வீ - (2)** | |
| வீந்தா | 31 |
| வீறு | 85 |
| **வெ - (6)** | |
| வெங்கணை | 70 |
| வெய்யோனொளி | 67 |
| வெயின்மு | 22 |
| வெவ்விட | 19 |
| வெவ்வினை | 58 |
| வெளிறு | 84 |
| **வே - (3)** | |
| வேத்தவை | 106 |
| வேதனைக் | 20 |
| வேறிட | 87 |
| **வை - (1)** | |
| வைய்ய | 16 |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 4 | இராமலக்குமவர் | இராமலக்குவர் |
| 5 | 1 | திருத்த | திருந்த |
| 14 | 13 | திருந்தில | திருந்திஞ |
| 16 | 4 | கேது | கோது |
| ,, | 6 | போரோ | போரொ |
| 19 | 6 | மேற்கிடற் | மேற்கிடங் |
| 24 | 14 | வர்ந்தார்ச் | வர்ந்ததார்ச் |
| 26 | 25 | மயிர்க்கு | மயர்க்கு |
| 28 | 9 | கொன்ளார் | கொள்ளார் |
| 35 | 11 | எண்ணெனுஞ் | பண்ணெனுஞ் |
| ,, | 15 | வந்த | வந்து |
| 36 | 26 | யியைவ | வியைவ |
| 37 | 14 | கெளிதோ | கெளிதே |
| ,, | 27 | னீங்க | னீக்க |
| 38 | 5 | என்னிதி | என்னினி |
| 39 | 15 | லன்றெனக் | லன்னெனக் |
| 40 | 16 | பொதிந்தவை | பொதிந்தனர் |
| 42 | 11 | கேகைய | கேகய |
| ,, | 13 | நெட்டுயிர் | கெட்டுயிர் |
| 47 | 12 | தோளாள் | தோளான் |
| ,, | 19 | மவருக் | மவளுக் |

| | | | |
|---|---|---|---|
| 51 | 23 | விளையா | வளையா |
| 58 | 8 | யிவடா | யவடா |
| ,, | 11 | வெவ்விதி | செவ்விதி |
| 59 | 13 | துயரினுள் | துயரினுன் |
| ,, | 23 | கண்டுழித் | கண்குழித் |
| 63 | 3 | ரன்பிறு | ரன்பி |
| ,, | 12 | தேவிலான் | தேர்வலான் |
| 64 | 17 | கானத் | கரணத் |
| ,, | 22 | துன்பம் | துன்பம்வந |
| 68 | 4 | பொறையாள் | செயலாள் |
| 71 | 16 | தாடிய | துடிய |
| 78 | 3 | னேடினேன் | னேடினெல் |
| 79 | 22 | தெழிவன | தெழுவன |
| 80 | 15 | னமசேரன் | னமரேசன் |
| 106 | 11 | நீத்திது | நீத்தது |
| 117 | 21 | தூண்டா | தூண்டர |
| 126 | 11 | தரித்து | தரிதது |
| 127 | 19 | மேலிகின் | மெலிகின் |
| 197 | 6 | காடுரன் | என் காடு |
| 201 | 14 | செங்சொற் | செங்கொற் |
| 202 | 19 | நள்ளுறு | நள்ளுறு |

அறுபதாம் பக்கத்தில் இரண்டு செய்யுட்களுக்கு 147 என்னும் எண் பிசகாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அறுபத்தோராம் பக்கத்தி லிருக்கும் செய்யுளுக்கு 147 (*a*) என்று கொடுக்க.

Printed at the "Aurora Press," Madras — 1927.